


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ மோகத்தைக் கொன்று விடு... ★ முத்துலட்சுமி ராகவன்




முத்துலட்சுமி ராகவன்
மோகத்தைக் கொன்று விடு...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ மோகத்தைக் கொன்று விடு... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ‘ மோகத்தைக் கொன்று விடு...’

## 1

அடித்துக் கொட்டும் அடை மழை..! வானம் கிழிந்து விட்டதோ என்று பயந்து போனாள் சசிரேகா..! கையிலிருந்த செல்போனை அடிக்கடி பார்த்துக் கொண்டவளின் கண்கள் கலங்கின..

"ப்ம்ச்.. இதானே வேண்டாம்கிறது.. இப்ப என்ன ஆச்சுன்னு கண்ணிலயும் மழையைக் கொட்டக் கிளம்பற..? அடிக்கிற மழை பத்தாதா..?" கடிந்து கொண்டாள் வத்சலா.

"மழை கொட்டறதைப் பார்த்தியா வத்ஸ்..?"

"எல்லாம் பார்த்தாச்சு.. எங்க பார்த்தாலும் வெள்ளக்காடு.. இதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கச் சொல்றியா..? பயமாயிருக்குடி.."

"தெரியுதில்ல.. அப்புறம் என்னப் பாத்து அதட்டி வைக்கிற..?"

"நான் அதட்டறதுக்கான காரணமே வேற.. உனக்கே அது தெரியும்.. வாயைப் பிடுங்காம பேசாம இரு.. நானே டென்சனில இருக்கேன்.."

நகம் கடித்துத் துப்ப ஆரம்பித்த வத்சலா அளவான உயரமும் சற்று சதைப் பிடிப்பான உடல்வாகுமாக இருந்தாள்.. சிவந்த மேனியும் அடர்ந்த கூந்தலுமாக இருந்தவளிடம் ஓர்வித வசீகரத்தன்மை இருந்தது..

அவளை நகத்தைக் கடித்துத் துப்ப வைத்துக் கொண்டிருந்த சசிரேகா ஒல்லியாக, உயரமாக கொடி போன்ற உடல்வாகுடன் இருந்தாள்.. சந்தனத்தை அரைத்துப் பூசியதைப் போன்ற நிறம்.. வத்சலாவைப் போல

இவளுக்கும் அடர்ந்த கருங்கூந்தலாக இருந்தாலும்.. இவளது கூந்தல் வத்சலாவைப் போல இடையைத் தொட்டதுடன் நில்லாமல் நீண்டு முழங்கால்களைத் தாண்டித் தொங்கிக் கொண்டிருந்தது.. மயக்கும் பேரழகுடன் இருந்தவள் அந்த அழகைப் பற்றிய பிரக்ஞை துளியும் இல்லாமல் இருந்தது அந்த அழகுக்கு அழகு சேர்த்தது.

அடித்துக் கொட்டிய மழைச்சாரல் நீண்ட அம்புகளாய் கண்ணாடி ஜன்னலில் மோதியதில் எழுந்த தடதடத்த சப்தம்.. ரயிலின் தடதட சப்தத்தையும் மீறி ஒலித்ததில் சசிரேகாவின் இதயம் தடதடத்தது..

"சொன்னாக் கேட்டாத்தானே.." சலித்துக் கொண்டாள் வத்சலா...

அவள் குற்றம் சாட்டிய சசிரேகா குற்றவாளியைப் போலப் பார்வையைத் தழைத்துக் கொள்ளாமல் தீர்க்கமாக நிமிர்ந்து பார்த்தாள்..

"நான் சொன்னதை நீயும்தான் கேட்கல.." என்றாள்..

"அடிச்சேன்னா பாரு.." கையை ஓங்கினாள் வத்சலா..

"எப்படிடீ கேட்க முடியும்..? கொட்டற மழையில கிளம்பித்தான் ஆகனும்னு அடம் பிடிச்சுக்கிட்டு நிக்கிற.. தனியாப் போடின்னு அனுப்பி வைக்க முடியுமா..?"

"தனியா நிற்கிறவ தனியாப் போனாத்தான் என்ன..?" சசிரேகாவின் குரலில் சோகம் ததும்பியது..

"உன்னைப் போல அப்பா.. அம்மா.. அண்ணன், தங்கைன்னு இருந்திருந்தா நான் தனியாப் போகப் பயந்திருப்பேனோ என்னவோ.. எனக்குன்னு யாருடி இருக்கா..?"

வத்சலாவுக்கு கோபம் வந்து விட்டது.. கையில் கிடைத்த புத்தகத்தால் சசிரேகாவின் தலையில் ஒரு போடு போட்டாள்.. சசிரேகாவுக்கு வலிக்கவில்லை.. வலித்தாலும்

அது சுகமான வலியாக இருக்கும் என்று நெகிழ்ச்சியுடன் அவள் நினைத்துக் கொண்டாள்..

எவரும் இல்லையென்று மருகும்போது உனக்காக நானில்லையா என்று ஒருவர் அடித்தால் அந்த அடி வலிக்குமா..?

"உனக்குன்னு நானில்லையா..?"

"வத்ஸ்.."

"போதும்.. பேத்தாதே.."

"மழையடிக்குதுடி.."

"அடிக்கட்டும்.."

"வெள்ளக்காடா இருக்கு.."

"இருக்கட்டும்.."

"டிரெயின் வழியிலே நின்னாலும் நின்னுடலாம்.."

"நிற்கட்டும்.. ஒருவகையில் அது உனக்கான விடுதலைதானே சசி..?"

"வத்சலா..?"

சசிரேகாவின் குரல் நடுங்கியது.. வத்சலாவின் பார்வையில் இருந்த இரக்கம் அவளை வாள் கொண்டு அறுத்தது.. அவள் வார்த்தைகளில் இருந்த உணமை அவளைச் சுட்டது..

"விடுதலையா..?"

'பின்னே இல்லையா..?' என்று கேட்டது சசியின் மனம்..

உயிர் துடிக்க சசி பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. வெள்ளிக் குத்தீட்டிகளாய் ரயிலின் ஜன்னல் கண்ணாடியில் இறங்கிய மழைத் தாரைகள் அவளை பயமுறுத்தின.. பயந்து போனவளாக வத்சலாவைப் பார்த்தாள்.. அவள் தோள்களைக் குலுக்கி.. கைகளை விரித்து..

"நான் மழையை வரச் சொல்லலை.. அது தானாக் கொட்டுது.." என்றாள்..

சசிரேகா பார்வையைச் சுழல விட்டாள்.. அவர்கள் இருந்த கம்பார்ட்மெண்டில் அதிகமான கூட்டமில்லை யென்றாலும் ஒரேயடியாக வெறிச்சோடியில்லாமல் இரண்டு சீட்டுகளுக்கு ஒருவர் என ஆள்கள் இருந்ததில் அவளுக்குப் பயம் சற்றுக் குறைந்தது.. அவர்களில் சில பெண்களும் இருந்ததில் சசிரேகா ஆறுதலடைந்தாள்..

"என்ன..? துணைக்கு எத்தனை பேர் இருக்காங்கன்னு பார்த்து வைச்சுக்கறியா..?" வத்சலா கேட்டாள்..

'இவள் பார்வைதான் எத்தனை கூர்மையானது..!' சசிரேகாவுக்குள் வியப்பு வந்தது..

வத்சலா அப்படித்தான்.. சசிரேகாவின் கண்களைப் பார்த்தே மனதை கண்டு பிடித்து விடுவாள்.. வாழ்க்கை சசிரேகாவின் மீது இரக்கப்பட்டுக் கொடுத்த வரங்களில் ஒன்று வத்சலாவின் நட்பு.. விதி வகுத்த பாதையிது என்று வெறிச்சோடிக் கிடந்த மனதுடன் காலத்தின் ஓட்டத்தோடு கலந்து ஓடிக் கொண்டிருந்த சசிரேகாவின் பாதையில் பாலைவனச் சோலையாக வந்தவள்தான் வத்சலா.. சசிரேகாவைப் பொருத்தவரை அவள் கற்பகத் தரு..! அன்பை அள்ளியள்ளி வழங்கும் அமுதசுரபி போன்றவள் வத்சலா..!

"டீ குடிக்கலாமா..?"

ஏதோவொரு நிலையத்தில் ரயில் நின்றது.. சூடான டீக்கப்புக்களைப் பார்த்தபடி கேட்டாள் வத்சலா.. மழையினால் பிளாட்பாரம் முழுவதும் ஈரமும் சகதியுமா யிருக்க.. அதைப் பற்றிக் கவலைப்படப் பொழுதில்லாமல் முகத்தில் மழைத்திவலைகள் படிந்திருக்க சூடான டீக்கப்புக்களைத் தட்டுக்களில் அடுக்கி ஏந்தியபடி ரயில் நிற்கும் ஐந்தாறு நிமிடங்களுக்குள் அவற்றை விற்றுத் தீர்த்து விட வேண்டுமே என்ற பதைப்புடன் ரயிலின் ஜன்னல்களுக்கு அருகே ஓடி வந்தவர்களைப் பார்த்தபடி சசிரேகா தலையை ஆட்டினாள்..

"வாங்கேன்.. அவங்களைப் பார்த்தாப் பாவமா இருக்கு.."

"இதிலயும் மத்தவங்க பாவத்தைத்தான் நீ பார்ப்பியா..? உனக்காக பாவம் பாருடி.. கொட்டற மழையில ஏஸி கம்பார்ட்மெண்டில உக்காந்திருக்கோம்.. உடம்பு சில்லுன்னு இருக்கு.. கொதிக்கிற டீயை உள்ளே ஊத்தினாக் கொஞ்சம் குளிர் குறையும்ன்னு நினைப்பியா.. அதை விட்டுட்டு கொட்டற மழையில டீ விக்கிறவன் பாவம்ன்னு நினைக்கிற.."

"தெரியாமச் சொல்லிட்டேன் தாயே..! ஆளை விடு.. இப்ப டிரெயின் கிளம்பறதுக்குள்ள டீயை வாங்கிட்டு வர்றயா..? உனக்கு புண்ணியமாப் போகும்.."

"அஃது.."

வத்சலா எழுந்து ஏஸி கம்பார்ட்மெண்டின் கதவைத் திறந்து வெளியே போனாள்.. இரண்டே நிமிடங்களில் சூடான டீக்கப்புக்களுடன் திரும்பி வந்தாள்.. அவள் சீட்டில் உட்காரவும் ரயில் நகரவும் சரியாக இருந்தது.. நகர்ந்து வேகமெடுத்த ரயிலில் கொட்டும் மழைத் தாரைகள் கண்ணாடி ஜன்னலில் கொட்டி இறங்குவதை ரசித்துப் பார்த்தபடி டீயைக் குடிப்பது சுகமான ஒன்றாக இருந்து..

"தேங்க்ஸ்.." என்றாள் சசிரேகா..

"எதுக்கு..?"

"டீக்கு.."

"பாருடா.. எனக்குத் தேங்க்ஸ் சொல்ல ஆரம்பிச்சேன்னு வைய்யி.. எத்தனை விசயங்களுக்குத் தேங்க்ஸ் சொல்லுவ..? ம்ம்ம்..?"

புருவங்களை உயர்த்தினாள் வத்சலா.. மௌனமாகிப் போன சசிரேகாவின் மனம் ஆமாம்தானே என்றது.. வத்சலாவின் உதவிகளுக்கு நன்றி சொல்வதாக இருந்தால் சசிரேகாவின் வாய்தான் வலித்து விடும்.. சொல்லித் தீராத நன்றிகளைக் கொண்ட உதவிகள் பலவற்றை வத்சலா சசிரேகாவிற்காகச் செய்திருக்கிறாள்.. அவற்றில்

முக்கியமானது.. புயலுடன் கூடிய அடை மழையின் வானிலை எச்சரிக்கையையும் பொருட் படுத்தாமல் சசிரேகாவுடன் அவள் கிளம்பிவந்திருப்பது..

எல்லாவற்றையும் விட மேலான அந்த உதவிதான் சசிரேகாவின் மனதை கொள்ளை கொண்டது..

"என்னடி.. பேச்சைக் காணோம்..?"

"ம்ம்ம்.. அதை மழை தூக்கிட்டு ஓடிருச்சு.."

சசிரேகா முல்லைப்பற்கள் மின்ன வெள்ளையாக சிரித்தாள்.. அந்த சிரிப்பின் அழகை ரசித்தாள் வத்சலா.. தோழியின் இந்த வெள்ளைச் சிரிப்பு என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமே என்று அவளுக்குக் கவலையாக இருந்தது..

"மழை எங்கேடி ஓடிருக்கு..? அது கொட்டிக் கிட்டில்ல இருக்கு.. நிக்கிற வழியைக் காணோமே.."

வத்சலா மழையைப் பார்த்தபடி சொன்னாள்.. சசிரேகாவின் சிரிப்பு நின்று விட்டது.. அவளும் மழையைப் பார்க்கலானாள்..

"பார்த்து என்ன ஆகப் போகுது..?" வத்சலா மெதுவான குரலில் கூறினாள்..

"எனக்கென்னவோ சசி.. உன் நிலைமையைப் பார்த்துத்தான் மழை இந்த ஊத்து ஊத்துதோன்னு தோணுது.."

"சும்மாயிரு.."

"சும்மாதானே இருக்கேன்.. போகாதே.. வேண்டாம்டின்னு சொன்னாக் கேட்டுக்கிற பிறவியா நீ..? அதனால வாயை மூடிக்கிட்டு சும்மாதானே இருக்கேன்..?"

"சம்மா இருக்கியா..? நீ சும்மா இருக்கியா..? கிளம்பினதில இருந்து என்னைப் போட்டுத் தாக்கிக்கிட்டே வர்ற.. நீ சும்மா இருக்கியாம்.. குட் ஜோக்..!"

"போட்டுத் தாக்கறது நானில்லைடிம்மா.. மழை..!"

"அது உனக்குத்தானே சப்போர்ட் பண்ணுது.."

"இல்லை.. உனக்குத்தான் சப்போர்ட் பண்ணுது.. அதை ஏத்துக்கத்தான் உனக்கு மனசில்லை.."

ஆழ்ந்த குரலில் சொன்னாள் வத்சலா.. உதட்டைக் கடித்தபடி மழையை வெறித்தாள் சசிரேகா.. இடியும் மின்னலுமான மழையுடன் கூடிய அந்த ரயில் பயணம் வழியிலேயே நின்று விடக் கூடும் என்ற அபாய எச்சரிக்கை அந்த ரயிலில் பயணித்த அனைவரின் மனதிலும் இருந்ததை அவர்களின் பேச்சு அறிவுறுத்தியது..

"எங்க பார்த்தாலும் வெள்ளக்காடு.."

"ஆமாண்டா ராமு.. எதுக்கும் வீட்டுக்கு ஒரு போனைப் போட்டு வைய்யி.."

"வழியிலே நின்னிருமோ.."

"யாருக்குத் தெரியும்..? எதுக்கும் நாம தயாரா இருந்துக்கிறது நல்லதுதானே..?"

"ஸ்டேசனில நின்னாப் பரவாயில்லை.. அத்துவானக் காட்டில நின்னிருச்சுன்னா..?"

"உன் வாயை வைச்சுக்கிட்டு இருக்க மாட்டியா..? அச்சாணியமாப் பேசி வைக்கிறயே.."

பக்கத்தில் நடந்த உரையாடல்களைக் கவனித்துக் கொண்டிருந்த வத்சலா மெல்லச் சிரித்தாள்..

"எதுக்குடி சிரிக்கிற..?"

"இல்ல.. அந்தம்மா அச்சாணியமாப் பேசலைன்னா ரயில் நிற்காம ஓடிருமா..?"

"இப்ப நீதாண்டி அச்சாணியமாப் பேசற.."

"உனக்குப் பிடிச்ச மாதிரிப் பேச எனக்கும் ஆசைதான்.. ஆனா அது பொய்யின்னு உனக்கும் தெரியும்.. எனக்கும் தெரியும்.. பொய்யான வார்த்தைகளை ஏன் பேசச் சொல்ற..?"

"வத்சலா.."

"விட்டுட்டேன்.. கூல் டவுன்.."

"ஏற்கனெவே படு கூலாத்தான் இருக்கு.."

சில்லிட்டுப் போயிருந்த உள்ளங்கைகளைத் தேய்த்து வெப்பமேற்றி கன்னத்தில் வைத்துக் கொண்டாள் சசிரேகா..

"இத்தனைக்கும் ஏஸியை ஆஃப் பண்ணிட்டாங்க.. இருந்தும் இப்படிக் குளிருது பாரேன்.." என்றாள் வத்சலா..

ரயிலின் மேற்கூரையில் பலர் சேர்ந்து ஓடுவதைப் போலத் தடதடத்த சப்தம் கேட்டது.. பக்கவாட்டிலும் அந்த சப்தம் சேர்ந்து கொண்டதில் சசிரேகாவின் மனதில் பயத்தின் குளிர் பரவியது..

"கொஞ்சம் ரிலாக்ஸா இரு சசி.."

"முடியலை வத்சலா.. பயம்மாய் இருக்கு.."

"எதுக்கு பயம்..?"

"ஒருவேளை ரயில் நின்னுட்டா..?"

"நின்னுட்டா.. இந்தக் கம்பார்ட்மெண்டில இருக்கிற மத்தவங்க என்ன செய்கிறாங்களோ அதையே நாமும் செய்வோம்.. நாம ஒன்னும் தனியா டிராவல் பண்ணலையே.."

"மத்தவங்களும் நானும் ஒன்னில்ல வத்சலா.. விடிகிறதுக்குள்ள நான் அன்ன வாசலிலே இருக்கணும்.."

"இல்லைன்னா..?"

வத்சலா அலட்டிக் கொள்ளாமல் கேட்ட கேள்வியில் ஆடிப் போனாள் சசிரேகா.. சீற்றத்துடன் வத்சலாவைப் பார்த்தாள்..

"இல்லேன்னா.. எனக்கு நன்றியில்லேன்னு அர்த்தமாகிரும் வத்சலா.. போதுமா..? அதுக்குத்தான் நீ ஆசைப்படறியா..?"

"நன்றிக் கடனைக் கழிக்கிறதுக்கு நீ உன் வாழ்வைப் பணயம் வைக்கக் கூடாதுன்னு ஆசைப்படறேன்.."

அமைதியாக சொன்னாள் வத்சலா.. சசிரேகாவின் சீற்றம் போன இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டது.. அவள் நிராதரவாக ஜன்னலின் கண்ணாடியில் சாய்ந்து கொண்டாள்.. மழையின் சில்லிப்பு அவள் கன்னத்தில் இறங்கி உடலில் ஊடுறிவியது.. அடர்ந்த மழைத் தாரைகளின் அடர்த்தியில் கடந்து போன மரங்களையும் ஊர்களையும் அவளால் பார்க்க முடியவில்லை..

"இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடலை சசி.. நாம அடுத்த ஸ்டேசனில் இறங்கிறலாம்.."

"இறங்கி..?"

"சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிறலாம்.."

"ஆகி..?"

"நம்ம வேலையைப் பார்க்க ஆரம்பிக்கலாம்.."

"பார்த்து..?"

"என்னடி.. கடுப்படிக்கிற..?"

"வேற என்ன செய்யச் சொல்கிற..? எங்கே ஓடி ஒளியச் சொல்கிற..? என் மனச்சாட்சி என்னைக் கேள்வி கேட்கும்.. அம்மா, அப்பா இல்லாத அநாதையா நீ தெருவில் நின்னயே.. அப்ப உன் பெரியப்பா உன்னைத் தன் பொறுப்பில் வளர்க்க ஆரம்பிக்கலைன்னா உன் கதி என்னவாகியிருக்கும்ன்னு கேட்கும் வத்சலா.."

"இதையே சொல்லி வாயை அடைச்சிரு.. தன் பொறுப்பில் ஏத்துக்கிட்டவராலே.. தன்னோட குழந்தை களுக்கு இணையா உன்னை வளர்க்க முடிந்ததாடி..?"

இல்லைதான்.. சசிரேகாவின் பெரியப்பா அங்குசாமியால் அதைச் செய்ய முடியவில்லைதான்..

அவர் பெற்ற பிள்ளைகளுக்குச் சமமாக சசிரேகாவை அவரால் வளர்க்க முடியவில்லை.. அவருடைய மனைவி

பானுகீதா அதை அனுமதிக்கவில்லை..

"தம்பியும் தம்பி பெண்டாட்டியும் போய் சேர்ந்துட்டா தலையை முழுகிட்டு வந்து சேர்ந்திருக்கனும்.. தாய், தகப்பனை முழுங்கிட்ட இந்த தறுதலையையும் கையில பிடிச்சுக்கிட்டா வரனும்..?" என்று சீறினாள்..

எடுத்த எடுப்பிலேயே கிடைத்த வரவேற்பில் மிரண்டு விட்டாள் எட்டு வயதான சசிரேகா.. அவளுடைய அம்மாவும் அப்பாவுமான தாரிணியும் ரங்கசாமியும் உயிருடன் இருந்த போது அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி விருந்தாட வந்து போகிறவள்தான் பானுகீதா.. அவளும் அவளுடைய புத்திர செல்வங்களும் அங்குசாமியை முன்னிருத்தி அவருடைய தம்பியின் வீட்டில் மாதக் கணக்கில் முகாமிடுவார்கள்.. சேலத்தில் செல்வாக்காய் வாழ்ந்து வந்த ரங்கசாமிக்கு ஏற்காடு மலையில் வீடிருந்தது.. அங்கு வந்து ஓய்வெடுப்பது என்றால் பானுகீதாவுக்கு அல்வா சாப்பிடுவதைப் போல இருக்கும்.. பதிலுக்கு அவள் வசிக்கும் அன்னவாசல் கிராமத்திற்கு ஓர் நாளாவது வந்து விட்டுச் செல்லும்படி ரங்கசாமியின் குடும்பத்தைக் கூப்பிட அவளுக்கு வாய் வராது.. இத்தனைக்கும் அன்னவால்தான் ரங்குசாமியின் பிறந்த ஊர்.. அங்கே அங்குசாமி அனுபவித்து வந்த விவசாய நிலங்களிலும், தோப்பிலும் ரங்கசாமிக்கும் பாதி உரிமை இருந்தது.. தாரிணியை விரும்பி மணந்தவருக்கு சேலத்தில் வேலை கிடைத்து விட..

அவர் ஏற்காட்டில் வீடு கட்டிக் கொண்டு அங்கேயே தங்கி விட்டார்..

அது பானுகீதாவுக்கு வசதியாகப் போய் விட்டது..

"என்ன செய்கிறதுப்பா..? உன்னையும் உன் குடும்பத்தையும் பார்க்கனும்ன்னா நாங்கதான் கிளம்பி வந்தாகனும்.. நீ வர முடியுமா..? நம்ம இனத்தில, சொந்த பந்தத்திலே, பெண் கட்டாம காதல்ன்னு சொல்லி அன்னியத்தில நீ பெண்ணைக் கட்டிட்ட.. தூரந் தொலைவில் குடித்தனத்தையும் வைச்சிட்ட.. உன்னால நம்ம ஊருப் பக்கம் வரமுடியாதுதான்.. வந்தா சொந்த

பந்தங்க முகத்தில முழிக்க யோசனையா இருக்கும்தான்.. அதனால என்ன இப்ப..? உனக்கு சொந்தம்ன்னு சொல்லிக்க நாங்க இல்லையா..? கால்பரிட்சை, அரைப்பரிட்சை, முழுப்பரிட்சைன்னு லீவு, விட்டிராங்க.. அதுகளும் சித்தப்பா, சித்தியைப் பார்க்கனும்ன்னு ஆளாப் பறக்குதுக.. உங்க அண்ணனும் தம்பி நம்மளையும், நம்ம குடும்பத்தையும் பாத்தாச் சந்தோசப் படுவானேன்னு எங்களைக் கூப்பிட்டுக்கிட்டு வந்திடராரு.. அப்புறம் என்ன உனக்கு..?"

இப்படியே பேசிப்பேசி ரங்கசாமியை அன்னவாசல் பக்கம் எட்டிப் பார்க்க விடாமல் எட்ட நிறுத்திவிட்ட கெட்டிக்காரிதான் பானுகீதா.. அப்போதெல்லாம் அவள் சசிரேகாவை 'தங்கம்'.. 'தங்கம்'.. என்றுதான் கொஞ்சுவாள்.. அந்தத் 'தங்கம்' என்ற அழைப்பு சசிரேகா பெற்றவர்களை இழந்து பெரியப்பனின் கையைப் பிடித்துபடி அநாதரவாக பானுகீதாவின் வீட்டுவாசல்படியில் நின்றபோது.. தறுதலையாக மாறிவிட்டது..

ஏற்காட்டிற்கு வரும்போது அன்னவாசல் நிலங்களில் விளைந்தது என்று ஒரு தேங்காயைக் கூடக் கையில் பிடித்து வராதவள் ஏற்காட்டை விட்டுக் கிளம்பும் போது அந்த மலையில் கிடைக்கும் அனைத்துப் பொருள்களையும் ரங்கசாமியிடம் சொல்லி வாங்கித் தரச்சொல்லி பைகளில் அடைத்துக் கொண்டுதான் கிளம்புவாள்..

ரங்கசாமியும் சும்மா இருக்க மாட்டார்.. இருக்கும் ஒரே சொந்தம் அண்ணன்தானே என்று தாராளம் தண்ணி பட்ட பாடாக கையிலிருக்கும் ஒட்டு மொத்தப் பணத்தையும் செலவளித்து அங்குசாமிக்கும், அவர் குடும்பத்திற்கும் புதுத்துணிகள், நகையென்று வாங்கிக்கொடுத்து அனுப்பி வைப்பார்.. அதைக் குறித்த நன்றி கொஞ்சம்கூட பானுகீதாவிடம் இருக்காது..

"நீ செய்கிறதா இருந்தா எங்களுக்குத்தானே செய்தாகனும்..? உனக்குன்னு வேற யாரு இருக்கா..?" என்பாள்..

அப்படிப் பிடுங்கி வாழ்ந்தவள்தான் அந்தக் கொழுந்தன் பெற்ற மகளைக் கண்டதும் வெறுப்பை உமிழ்ந்தாள்..

"இதை வளர்க்க என்னால ஆகாது.. ஏதாச்சும் அனாதை ஆசிரமம் இருந்தாச் சேர்த்து விட்டுட்டு வாங்க.. போங்க.." என்று கணவனை விரட்டினாள்..

"அடி அறிவு கெட்டவளே..!"

எட்டு வயதுக் குழந்தையை வாசலிலேயே நிறுத்தி விட்டு மனைவியைத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குள் போனார் அங்குச்சாமி.. அங்கே அவர் என்ன சொன்னாரோ.. ஏது சொன்னாரோ.. கொஞ்சநேரம் கழித்து வந்த பானுகீதா சசிரேகாவைப் பார்த்து..

"வந்து தொலை.." என்றாள்..

வேண்டாத விருந்தாளியாக அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததைத்தான் நன்றிக்கடன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள் சசிரேகா.. அந்த நன்றிக் கடனைக் கழிப்பதற்காகத்தான் கொட்டும் மழையில் அன்னவாசல் நோக்கிப் போய்கொண்டிருக்கிறாள்..

2

"கூக்கூ.." என்ற ரயிலின் ஓசையுடன்..

"ஊய்ய்.." என்ற மழையின் ஊதல் காற்றின் ஓசையும் சேர்ந்து கொண்டது..

சடசடத்துப் பெய்த மழை ஓய்வதாக இல்லை.. உயரமான மேட்டுப்பகுதியில் அமைந்திருந்த தண்ட வாளத்தில் ரயில் ஓடிக்கொண்டிருக்க.. அதன் இருபுறமும் மேட்டைத் தொட்டு எழும்பி கரை புரண்டு காட்டாற்று வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது மழைநீர்..

மழைக்காற்றின் ஈரப்பசையில் உடைகள் சில்லிட்டுப் போய் விட்டதில் கைகளை மடித்துக் கட்டிக் கொண்ட வத்சலா..

"வாடி உள்ளே போயிரலாம்.." என்றாள்..

ரயிலின் கதவருகே நின்று மழையைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த சசிரேகாவின் காதுகளில் வத்சலாவின் குரல் விழுகவில்லை..

"போதும்.."

வத்சலா அவள் தோளைத் தட்டினாள்.. உடல் தூக்கிப் போட திரும்பித் தோழியின் முகம் பார்த்த சசிரேகாவை இரக்கமாக பார்த்தாள்..

"உன் மனசெல்லாம் அன்னவாசலில் இருக்கு.. ரொம்பவும் மனசைப் போட்டு அலட்டிக்காதே சசி.. இது இறைவனா உனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற வாய்ப்புன்னு நினைச்சுக்க.. செய்ந்நன்றி கழிக்க நீ ஒன்னும் லேடி கர்ணன் இல்ல.. உன் பெரியப்பா ஒன்னும் உன்னை வாழ வைச்ச துரியோதனன் இல்லை.. உனக்கு அவர் செஞ்ச நல்லதுன்னு ஒன்னுகூட இல்லை.. தெரிஞ்சும் நீ பிடிவாதமா உன் வாழ்வை அழிச்சுக்கப் போய்க்கிட்டு இருக்க.."

சசிரேகா மழையை வெறித்தாள்.. அன்னவாசலில் அவளுக்காக எது காத்திருக்கிறது..? வாழ்வா..? இல்லை அழிவா..?

அது எதுவென்று தெரியாமல் அங்குசாமியின் வார்த்தையைக் காப்பாற்ற இவள் ஏன் ஓட வேண்டும்..?

"சொன்னாக் கேளுங்கடி.. இந்தத் தறுதலையை உங்கப்பா கையில பிடிக்கலைன்னா இவங்கம்மா

கூடப் பிறந்த அண்ணன்காரன் கையில பிடிச்சுக்கிட்டுப் போயிருப்பானாம்.. என் தம்பி உயிரோட இருக்கிற வரைக்கும் எட்டிக்கூடப் பார்க்காத உன்கூட என் தம்பிமகளை அனுப்ப மாட்டேன்டான்னு உங்கப்பா சண்டை போட்டு இவளைக் கையில பிடிச்சுக்கிட்டு வந்திருக்காரு.."

பானுகீதா தன் மகள்களிடம் விளக்கம் சொல்லிக் கொண்டிருந்ததை சசிரேகா ஓர்நாள் கேட்க நேரிட்டது.. அப்போது அவளுக்கு பத்து வயது.. விவரம் புரியாத வயதுதான் என்றாலும்.. பானுகீதாவின் வீட்டில் வேண்டாத

விருந்தாளியாக சமையலறையில் முடங்க வைத்த வாழ்க்கை அவளுக்கு மனிதர்களின் மறுபக்கத்தை இனம் காட்டியிருந்தது..

ஏற்காட்டுக்கு வரும் போதெல்லாம் சசிரேகாவைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொள்ளும் மலர்க்கொடியும், மாலதியும் அன்னவாசலில் அவளை வேலைக்காரியாக 'ஏய்ய்.. அதைச்செய்..' 'ஏய்.. இதைச்செய்..' என்று வேலை வாங்கிக் கொண்டிருக்கும் காலத்தின் கோலத்தைப் பார்த்தவள் அவள்..

இதுவும் விதிதான் என்று அவர்களின் ஏவல்களுக்குப் பணிந்து வாழ்ந்து கொண்டிருப்பவளுக்கு உலக நிலவரம் புரிய ஆரம்பித்திருந்தது..

"அப்படி இந்தத் கழுதையைக் கையில் பிடிச்சுக்கிட்டு வரனும்கிற அவசியமென்னவாம்..?"

தாரிணியிடமிருக்கும் நகைகளில் எதையாவது வாங்கிக் கழுத்தில் போட்டுக் கொண்டு அதைத் திருப்பிக் கொடுக்க மறந்தவளைப் போல அபகரித்துக் கொண்டு விடும் மலர்கொடி கேட்டபோது சசிரேகா விசனப் பட்டாள்.

"அதைச் சொல்லுக்கா.."

அது வேண்டும்.. இது வேண்டும் என ஒன்றும் தெரியாத சின்ன மழலையினைப் போல நகைக் கடையில் கண்ணில் பட்டதையெல்லாம் கை நீட்டி ரங்கசாமியை வாங்கிக் கொடுக்க வைத்து விடும் மாலதி கேட்டபோது சசிரேகாவின் மனம் நைந்தது..

"புரியாம பேசாதீங்கடி.. இந்த நிலபுலன், தோப்பு துரவு அத்தனையும் பரம்பரையா வந்த சொத்து.. உங்க அப்பா சம்பாரிச்சு வாங்கின சொத்தில்ல.."

"அதுக்கு..?"

"இதில உங்க சித்தப்பனுக்கும் பங்கிருக்குடி மலர்கொடி.."

அப்போதுதான் பெரியப்பாவின் பாசத்திற்கான காரணத்தை அறிந்து கொண்டாள் சசிரேகா..

ஆக.. சொத்திற்காகத்தான் அவளைத் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு அழைத்து வந்தாரா அவளுடைய பெரியப்பா..?

அந்தச் சொத்து இல்லாமல் இருந்திருந்தால்..?

"போய்த் தொலையட்டும்ன்னு அவளோட தாய்மாமன்கூட அவளைப் பற்றி விட்டு வந்திருப்பாரில்ல.."

பானுகீதாவின் குரல் கேட்டது.. ஏன் அப்படி நிகழாமல் போனது என்று துடித்துப் போனாள் சசிரேகா.. அவளது பிஞ்சுக் கையைப் பிடித்தபடி கடைசிவரை அங்குசாமியிடம் போராடிய தாரிணியின் அண்ணன் முகத்தை நினைத்துப் பார்த்தாள்.. புகை போல கலங்கிய வடிவுடன் முகம் தெளிவாகத் தெரியாமல் ஓர் உருவம் தெரிந்தது..

எங்கே..? அவளைத்தான் தாய் மாமனின் முகத்தைக் கூடப் பார்க்க விடாமல் அங்குசாமி இழுத்துக் கொண்டு வந்து விட்டாரே..

"அந்தத் தாரிணியோட அண்ணன்காரன் வக்கீலாம்.. தாரிணிமேல உயிராய் இருப்பானாம்.. அவன் நோண்டி நுழைஞ்சு கேட்க ஆரம்பிச்சா.. இத்தனை வருச விளைச்சல் பணத்திலயும் நாம பங்கு கொடுத்தாகனும்டி மாலதி.. அதனாலதான் உங்கப்பா கோர்ட்டுப் படியேறி இந்தக் கழுதையைப் பற்றிக்கிட்டு வந்து சேர்ந்தாரு.."

கொழுந்தனும், அவன் மனைவியும் உயிருடன் இருந்தபோது வருடத்தின் நான்கு மாதங்களை அவர்கள் வீட்டில் விருந்தாடுவதில் கழித்த பானுகீதாவும் அவள் மகள்களும் அவர்கள் இறந்து விட்ட செய்தியறிந்தவுடன் ஒதுங்கிக் கொண்டார்கள்..

"வயசானவங்கன்னா பரவாயில்லை.. இவங்க விசக் காய்ச்சல்ன்னு போய்ச் சேர்ந்திருக்காங்க.. அந்த சசிரேகாவும் ஸ்கூல் டூர்ன்னு போனதினால தப்பிச்சான்னு சொல்றீங்க.. எங்களுக்கு வரத் தோதுப்படாது.. நீங்க மட்டும் போயி தலையைக் காட்டிட்டு வந்திருங்க.."

இப்படிப்பட்ட நன்றி மறவாத உள்ளங்களிடம் நன்றிக்கடன் பட்டதைக் கழிப்பதற்காகத்தான் சசிரேகா புயலும் மழையும் கூடிய அந்த ரயில் பயணத்தை மேற் கொண்டிருக்கிறாள்..

"ஏற்காடு வீடு என்னாச்சாம்மா..?"

"அதானே.. அதை எம்பேருக்கு எழுதி வைக்கச் சொல்லுங்கம்மா.."

"ஏண்டி.. என் பேருக்கு எழுதி வைச்சா ஆகாதா..?"

சொத்துக்கு உடமைக்காரி பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருக்க.. ஊரான் வீட்டுச் சொத்திற்காக உரிமையில்லாத பிறவிகள் அடித்துக் கொண்டார்கள்..

"அந்தக் கொடுமையை ஏண்டிக் கேட்கிற..?"

அந்த உரிமையில்லாத பிறவிகளைப் பெற்று வளர்த்திருக்கும் பானுகீதா ஆற்றாற்றுப் போனாள்..

"என்னம்மா ஆச்சு..?"

"ம்ஹீம்.. எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்கனுமேடி.. அந்தத் தாரிணியோட அண்ணன்காரன் கோர்ட்டுக்குப் போயி ஸ்டே வாங்கிட்டானாம்.. இந்தக் கழுதை மேஜரான பின்னாலே இவ பெயருக்கு மாறுகிற வரைக்கும் அந்த வீடு கோர்ட்டோட பொறுப்பில இருக்கனுமுன்னு கோர்ட்டில தீர்ப்பாகிருச்சாம்.. அந்த வீட்டை வாடகைக்கு விட்டு வர்ற பணத்தை அவன் கோர்ட்டில கட்டிடறானாம்.."

"இப்படிக் கூடச் செய்ய முடியுமாம்மா..?"

"முடிஞ்சிருக்கே.. நல்ல வேளை.. அவன் அன்னவாசல் சொத்துப் பக்கம் வரலைன்னு உங்க அப்பா சந்தோசப்பட்டுக் கிட்டு இருக்கார்.. இவரால்தான் எல்லாமும்.."

"அப்பா என்னம்மா செஞ்சாரு..?"

"சும்மா இருக்காம ஏற்காட்டு வீட்டை விலை பேசியிருக்காரு.. அதுக்காகவே காத்திருந்த அந்த அண்ணன்காரன் கோர்ட்டுக்குப் போயிட்டான்.. இந்தக்

கழுதையை வளர்க்கிறதுக்குன்னு உங்க அப்பா சொன்னா.. உங்க சித்தப்பனோட பங்கு நிலம் என்னாச்சுன்னு அதையும் கோர்ட்டில இழுத்து விட்டிருவான்னு இவர் வாயை மூடிக்கிட்டு வந்துட்டாரு.."

'அப்படியா..?'

சசிரேகாவின் மனம் ஏதோ ஒரு விதத்தில் நிம்மதியடைந்தது.. எந்தையும், தாயும் மகிழ்ந்து குழாவி இருந்ததும் இந்நாடு என்பதைப் போல.. அவளுடைய தந்தையும் தாயும் மகிழ்ந்து குழாவி வாழ்ந்தது அந்த வீட்டில்தான்.. அவள் பிறந்த தளிர்நடை போட்டு வளர்ந்ததும் அந்த வீட்டில்தான்.. அவளின் மழலைப் பிராயத்தின் மலரும் நினைவுகள் அந்த வீட்டில் கொட்டிக் கிடக்கின்றன.. அது பறி போகாமல் மீட்டு விட்ட சந்தோசம் அவளுக்குள் குமிழியிட்டது..

"இப்ப என்னடான்னா நம்மளாலே இந்தச் சொத்துக் களையும் விக்க முடியாது.."

"நல்ல கதையாய் இருக்கே.. இது நம்ம சொத்தும்மா.." ஊரான் வீட்டுச் சொத்துக்கு ஆளாய் பறந்த பானுகீதாவின் மகள்கள்.. அவர்கள் வீட்டுச் சொத்து என்றதும் சிலிர்த்துப் பாய்ந்தார்கள்..

"அடக்கி வாசிங்கடி.. அம்புட்டும் நம்ம சொத்தில்ல.. இதில அந்தக் கழுதைக்கும் பங்கிருக்கு.."

"கொடுத்துட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்போம்.."

"கொடுக்காம இருக்கனுமுன்னு இப்போதைக்குச் சொத்தை விக்காம இருக்கிறதுதான் ஒரேவழி.."

"எப்படிம்மா.."

"விக்கனும்னு நாம நினைச்சாக்கூட அந்த அண்ணன் காரன் கோர்ட்டுக்குப் போயித் தொலைஞ்சிருவான்.. அந்தக் கோராமையை நாம ஏன் இழுத்துக்கனும்..? அடக்க ஒடுக்கமா விளைச்சலை மட்டும் அனுபவிச்சுக்கிட்டு வந்தாப் போதும்டி.."

"அப்புறம் எப்படிம்மா மொத்தச் சொத்தையும் கைப் பத்தறது..?"

"அதுக்கு ஒரு வழியிருக்குடி மாலதி.. இந்தக் கழுதை மேஜரானவுடனே காதும் காதும் வைச்சதைப் போல இவ பங்கு சொத்தை எழுதி வாங்கிரனும்.."

"அதோட ஏற்காட்டு வீட்டையும் எழுதி வாங்கிரனும்மா.. எப்பேற்பட்ட பங்களா அது.. ஒவ்வொரு தடவையும் லீவுக்குப் போகிறப்ப இது நம்ம வீடா இல்லையேன்னு கருவிக்கிட்டே வருவேன்.. இவ்வளவு அழகான பங்களா இந்த சசிக் கழுதைக்குத்தான் சொந்தமான்னு மனசு கிடந்து காயும்.. என் வயித்தெரிச்சல் தான் இவள அந்தப் பங்களாவில வாழ விடாம விரட்டியடிச்சிருக்கு.."

இப்படியும் மனிதர்கள் இருக்கக் கூடும் என்று உணர்த்தியவள்தான் மாலதி.. விருந்தோம்பலிலும் ஓர் அளவிருக்க வேண்டும் என்று பெரியவர்கள் ஏன் சொல்லி வைத்தார்கள் என்று அன்று சசிரேகாவிற்கு விளங்கியது..

ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும்.. விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பதெல்லாம் இது போன்ற வயிற்றெரிச்சல்களுக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத்தானோ..

"விட்டிருவேனாடி.. அந்த வீட்டோட மதிப்பில பாதி கூட இந்த அன்னவாசல் சொத்து வராதேடி.. அந்த வீட்டை விட்டுத் தரமாட்டேன்.. அது என்னோட சொத்து.."

என்னவோ.. பானுகீதாவின் அப்பனும் ஆத்தாளும் வாங்கி பானுகீதாவின் பெயருக்கு சாசனம் எழுதிக் கொடுத்த வீட்டைப் போல சூளுரைத்தாள் பானுகீதா..

சமையலறையின் சுவரோடு சுவராக ஒட்டி நின்ற பத்து வயதுச் சிறுமியினால் என்ன செய்ய முடியும்..? இப்பேற்பட்ட மனிதர்கள் வசிக்கும் வீட்டில் இருக்க முடியாது என்று வெளியேறி விட முடியுமா..? அங்குசாமிக்கே செக் வைக்கும் கில்லாடியான தாய்மாமனாலேயே அவளை அந்த வீட்டிலிருந்து மீட்க முடியவில்லையென்பதை

நினைவுபடுத்திக் கொண்ட பத்து வயதுச் சிறுமியான சசிரேகாவிற்குத் தெரியாது, அவள் நினைத்திருந்தால் அது முடிந்திருக்கும் என்பது..

அவள் அந்த வீட்டை விட்டு வெளியேறி தாய்மாமனிடம் அடைக்கலமாகியிருந்தால் அவளுடைய தாய்மாமன் கோர்ட்டை அணுகியிருப்பார்.. அங்குசாமியைப் போல அவருக்கும் ரத்த பந்தம் உள்ளதை சுட்டிக் காட்டி இருவரில் தாய் மாமன் வீட்டில் மட்டுமே சசிரேகாவிற்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்பதை நிருபித்திருப்பார்.. அன்னவாசல் சொத்துக் களையும் கைப்பற்றியிருப்பார்..

சின்னஞ்சிறுமிக்கு அதைப் பற்றி என்ன தெரியும்..? அங்குசாமியின் நிழலைத் தவிர அவளுக்கு ஒன்றிக் கொள்ள வேறு இடமில்லை என்ற பயத்தில் அவள் வேண்டாத பொருளாக.. வேலைக்காரியாக அவளுக்கும் பங்கிருக்கும் அன்னவாசல் வீட்டில் சமையலறையில் முடங்கிக் காலத்தைக் கழித்தாள்..

அந்த வீட்டில் அவளை மனிதப் பிறவியாக எவரும் கருதாதபோதும் மூன்று வேளை உணவும்.. உடுத்திக் கொள்ள உடைகளும் கிடைத்தன.. மலர்க்கொடி, மாலதியின் உடைகளைப் போல விலையுயர்ந்த துணிவகைகள் கிடைக்கவில்லையென்றாலும்.. விலை குறைவான துணிவகைகள் கிடைக்கத்தான் செய்தன.. அதற்கும் காரணம் இருந்தது என்பதை ஓர் அந்தி வேளையில் கேட்டறிந்தாள் சசிரேகா..

மொட்டை மாடியில் விச்ராந்தியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அங்குசாமிக்கும், பானுகீதாவுக்குமான காபித் தம்ளர்களை தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு போனாள் சசிரேகா.. பாதிப் படிகளிலேயே அந்தக் கணவன், மனைவியின் பேச்சுச் சப்தம் அவள் காதில் தெளிவாக விழுந்து விட்டது..

"ம்ஹீம்.. இருக்கிற செலவில இந்தக் கழுதைக்கும் சேர்த்து வடிச்சுக் கொட்ட வேண்டியதா இருக்கு.. மூணு வேளையும்

சாப்பாட்டைப் போட நாம என்ன அன்னவாசல் ஜமீன் பரம்பரையா..?"

இப்படிக் கேட்டவளுக்கு வருடத்தில் நான்கு மாதங்கள் ஏற்காட்டில் சசிரேகாவைப் பெற்றவர்கள் விருந்து ஆக்கிப் போட்டார்கள் என்பதை வசதியாக அவள் மறந்து விட்டாள்.. நினைவு வைத்திருந்த சசிரேகாவின் கண்கள் கலங்கின.. அப்படியே திரும்பிப் போய்விடலாமா என்று நினைத்தாள்.. அப்படிப் போய்விட்டால் அங்குசாமிக்கும் பானுகீதாவிற்கும் அவள் கலந்து கொண்டு வந்திருந்த மாலைக் காபியை யார் அவர்களிடம் கொடுப்பது..?

மாலதியும் மலர்கொடியும் முடியாது என்று சொல்லி விடுவார்களே.. அவர்கள் தன்னைப் பேணுகின்ற ரகம்..! பானுகீதாவின் வயிற்றில் பிறந்தவர்கள் வேறு எப்படி இருப்பார்கள்..?

கடமை சசிரேகாவை மாடிக்கு அழைத்தது.. நாகரிகம் அவளைத் தடுத்து நிறுத்தியது.. அவள் திணறியபடி மேலேயும் போக முடியாமல் கீழேயும் இறங்க முடியாமல் அப்படியே நின்று விட்டாள்.. அவளைப் பெற்ற தகப்பனின் கூடப்பிறந்த பிறப்பான அங்குசாமியின் பதில் அவள் காதுகளில் விழுந்தது..

"முட்டாளாடி நீ..? எனக்கு மட்டும் அந்த சசிரேகாவுக்கு மூணுவேளையும் சாப்பாட்டைப் போட்டுத் துணிமணிகளை எடுத்துக் கொடுத்து படிக்க வைக்கணும்னு வேண்டுதலா..?"

"பின்னே..?"

"புரியாம பேசாத பானு.. இவளோட தாய்மாமன் வில்லங்கம் பிடிச்சவன்.. என் தங்கச்சி மகள இந்த ஆளு பட்டினி போட மாட்டார்ன்னு என்ன நிச்சயம்ன்னு கேட்டாண்டி.. விவகாரம் கோர்ட்டுக்கு போயிருச்சு.. நம்ம வக்கீலுதான் தன் பிள்ளைகளைப் போல தம்பி பிள்ளையையும் வளர்ப்பாருன்னு வாதாடினாரு.."

"பரவாயில்லையே.. காசு கண்ணிய நிறையக் குடுத்திருந்தீங்களோ.."

"அடிச்சேன்னா பாரு.. முகரை பெயர்ந்துரும்.. அந்த மனுசன் காசுக்காக வாதாடலை.. கை சுத்தமானவரு.. உண்மையிலேயே என்னை அப்படியாப்பட்ட மனுசன்னு நம்பிக்கிட்டு இருக்கிறவரு அவரு.. ஏற்காட்டில இருக்கிற வக்கீலு எனக்கு எப்படி வேண்டப்பட்டவரா இருக்க முடியும்ன்னு நினைக்கிற..?"

"என்ன.. காசு கண்ணிய குடுத்து கரெக்ட் பண்ணியிருப்பீங்கன்னு நினைச்சேன்.. இல்லேன்னா அன்னவாசல் உழவர்மகனுக்கு ஏற்காட்டு வக்கீல் எப்படி வேண்டப்பட்டவரா இருக்க முடியுமாம்..?"

"அவரும் என் தம்பி ரங்கசாமியும் கூடப் படிச்ச சிநேகிதங்க பானு.. காதல் கல்யாணம் பண்ணிக்கிட்ட என் தம்பிய அவன் பெண்டாட்டி வீட்டில இருந்து யாரும் பார்க்க வந்து போகலை.. நாம மட்டும்தான போய் வந்தோம்..? அதனால நாம மட்டும்தான் சசிரேகா மேல பாசமா இருக்கோம்ன்னு நினைச்சிட்டாரு.."

"இது வேறயா..?"

"சசியோட தாய்மாமன் பேச்சை இவர் மறுத்துப் பேசி சசியை என் பொறுப்பில் வளர்க்கனும்னு அனுப்பி வைச்சிட்டாரு.. அப்பத்தான் அதைச் சொன்னாரு.."

"எதைச்சொன்னாராம்..?"

"சசிக்கு சாப்பாடு, துணிமணிக்கு குறைவில்லாம பார்த்துக்கங்க.. படிக்க பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்க.. இல்லேன்னா இதையே சாக்கா வைச்சு சசியோட தாய்மாமன் மல்லுக்கட்டுவான்னு சொன்னாரு.."

"ஓஹோ.."

பானுகீதாவின் 'ஓஹோ..'வில் ஒலித்த யோசனையில் இனி அந்த வீட்டில் சசிரேகாவிற்குக் கிடைக்கும் பழைய சோறுக்கு பங்கம் வராது என்பதை புரிந்து கொண்டாள் சசிரேகா.. அவளுக்குக் கிடைக்கும் கவனிப்பிற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் சுயநலத்தை நினைத்தபடி

மெதுவாகப் படியேறி மொட்டைமாடிக்குப் போய் காபித் தம்ளர்களை கொடுத்து விட்டு வந்து விட்டாள்..

அவள் மனம் துக்கம் கொண்டது.. அகதியாக ஓர் வீட்டில் வாழ நேர்வது கொடுமை.. அந்தக் கொடுமையை சின்னஞ்சிறு வயதில் அனுபவித்தாள் சசிரேகா.. அப்படி அவளை வளர்த்த நன்றிக்கடனை கழிப்பதற்காகத்தான் மழைகொட்டும் அந்த ரயில் பயணத்தை மேற் கொண்டிருக்கிறாள்..

"என்னடி.. பிளாஸ் பேக்கா..?" வத்சலா கேட்டாள்..

இல்லையென்று சொல்லாமல் மழையை வெறித்தாள் சசிரேகா..

"உன் பிளாஷ்பேக்கில என்ன மலரும் நினைவுகளா வந்து கொட்டப் போகுது..?"

"வத்சலா.. ப்ளீஸ்.."

"இப்பேற்பட்ட பெரியப்பாவோட வார்த்தையைக் காப்பாத்தத்தான் நீ இப்ப ஓடிக்கிட்டு இருக்க.."

"இல்ல வத்சலா.. நான் எங்க அப்பாம்மாவோட பொண்ணுங்கிறத நிரூபிக்க ஓடிக்கிட்டு இருக்கேன்.. என்னை எடுத்து வளர்த்த பெரியப்பா என்மேல நம்பிக்கை வைச்சு வாக்குக் கொடுத்திருக்கார்.. அதை நிறைவேத்த நான் போயாகனும்.. இல்லேன்னா என்னைப் பெத்தவங் களைத்தான் எல்லோரும் குறைவாய் பேசுவாங்க.. என்னால அதைத் தாங்கிக்க முடியாது.."

"எல்லாம் சரிதான்.. உன்னை உங்க பெரியப்பா எடுத்து வளர்த்தாருன்னு சொல்ற பாரு.. அதைத்தான் என்னால தாங்கிக்க முடியலைடி.. உன்னை அவர் வளர்த்தாரா..? கேட்கிறப்பவே ஹார்ட் அட்டாக் வருது.."

உதட்டைக் கடித்தபடி ஊமையானாள் சசிரேகா.. வத்சலா என்றில்லை.. சசிரேகாவைப் பற்றிய விவரம் அறிந்த எல்லோருமே ஒன்றுபட்ட மனத்தோடு இதே வார்த்தைகளைத்தான் சொல்லி வைத்தார்கள்.. அங்குசாமி

வளர்த்த லட்சணம் அப்படி.. அவர் பெற்ற மகள்கள் உயர்த்தி விலையில் துணிகளை அணிந்திருப்பார்கள்.. சசிரேகாவோ.. மலிவான விலையில் எடுக்கப்பட்ட துணிகளை அணிந்திருப்பாள்.. அவர்களின் கழுத்து, காது, கைகளில் தங்க நகைகள் மின்னும்.. சசிரேகாவோ பொட்டுத் தங்கம்கூட இல்லாமல் துடைக்கப்பட்ட வெங்கலச்சிலை போல இருப்பாள்.. வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு இந்த வித்தியாசங்களே அங்குசாமி சசிரேகாவை வளர்க்கும் லட்சணத்தை எடுத்துச் சொல்லி விடாதா..? வீட்டுக்குள் வரும் உறவினர்கள்தான் சசிரேகா வேலைக்காரி போல நடத்தப்படும் கொடுமையையும் சமையலறையில் தூங்கும் அவஸ்த்தையும் கண்ணெதிரே பார்த்து விடுவார்களே..

3

"தடக்.. தடக்.."

சீரான வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்த ரயிலின் சப்தத்தைக் கூர்ந்து கவனித்தாள் வத்சலா..

"ஏண்டி..?"

"உனக்கென்னம்மா..? நன்றிக்கடனைத் தீர்க்கிற கடமையை ஆற்றப் போகிறவ எதைப் பற்றியும் கவலைப் பட்டுக்க மாட்ட.. நான் அப்படியா.. உன்கூடப் பழகின பாவத்துக்கு துணைக்கு வரக் கிளம்பியிருக்கேன்.. கொட்டற மழையில ரயில் கவிழ்ந்திருச்சுன்னா என்ன பண்ணுவேன்..?"

"அடச்சீ.. உன் வாயில நல்ல வார்த்தையே வராதா..?"

"எனக்கும் நல்ல வார்த்தையாக் கொட்டிக் கவிழ்க்கனும்னு ஆசைதாண்டி சசி..! இருக்கிற சிச்சுவேசன் இப்படிப் பேச வைக்குதே.."

"வத்சலா.. உனக்குப் புண்ணியமாப் போகும்.."

"எதுக்கு இப்ப புண்ணியத்தை என் தலையில கட்டப் பார்க்கிற..?"

"கொஞ்சநேரம் வாயை மூடிக்கிட்டு வாயேன்.."

"நினைச்சேண்டி.. நீ இதைத்தான் சொல்லுவன்னு நினைச்சேண்டி.. வாயை மூடிக்கிட்டு வர்றதா..? நானா..? நெவர்.. உன் புண்ணியத்தை நீயே மூட்டை கட்டி முந்தானையில முடிஞ்சு வைச்சுக்க.. என் வாயை மூடவே மாட்டேன்.. போனாப் போறா.. பிரண்டாச்சேன்னு பார்த்தா.. அங்கே சுத்தி, இங்கே சுத்தி, கடைசியில என் பேச்சு சுதந்திரத்தில கையை வைக்கவா வர்ற..?"

வத்சலா முறைப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு.. அடுத்த பெட்டியில் இருந்த பெண்ணிடம் பேச ஆரம்பித்து விட்டாள்.. அவர்கள் இருவர் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் ரயில் அத்துவானக்காட்டில் அம்போ என நின்று விடுமா.. இல்லை கவிழ்ந்து விடுமா என்பதிலேயே இருக்க சசிரேகா நொந்து போனாள்..

அடைமழையைக்கூட நிறுத்தி விடலாம்.. வத்சலாவின் பேச்சை மட்டும் நிறத்தவே முடியாது என்பதில் ஜன்னலின் கண்ணாடியில் சோர்வாக சாய்ந்து வெளியே பார்க்க முயன்றாள்.. கனத்த மழையின் தாரைகள் கண்ணாடியில் வழிந்த கோடுகள்தான் தெரிந்தன.. அதைத் தாண்டி கும்மிருட்டு மட்டும் கண்களில் தட்டுப்பட சசிரேகாவின் அடிவயிற்றில் பயபந்து உருண்டது..

"இருட்டிருச்சா..?" வத்சலாவிடம் கேட்டாள்..

"இருட்டாம என்ன செய்யும்..?" வத்சலா பதிலுக்கு கேட்டாள்..

"ஏண்டி சண்டைக்காரியைப் போலவே பேசி வைக்கிற..?"

"பேசாம போயிரு.. நானே கடுப்பில இருக்கேன்.. கூடப் பழகின கொடுமைக்கு கொட்டற மழையில டிரெயினில இழுத்துக்கிட்டு வர்றவகிட்ட சிரிச்சுச் சிரிச்சு கதை பேசுவேன்னு நினைக்கறியா..?"

சசிரேகா வாயை மூடிக் கொண்டாள்.. அடுத்த பெட்டியிலிருந்த பெண்மணி சசிரேகாவைப் பார்த்துச் சிரித்தாள்.. பதிலுக்கு சிரிக்க முடியாத சசிரேகா லேசாக இதழ் பிரித்து வைத்தாள்.. அந்தப் பெண்மணி ஆச்சரியமாகி விட்டாள்..

"ஏம்மா வத்சலா.. இந்தப் பொண்ணு உன்னோட பிரண்டுதான..?"

"நீங்கன்னு இல்லை ஆண்ட்டி.. எங்க பிரண்ட்ஷிப் பைப் பத்தித் தெரிஞ்சவங்க அத்தனைபேரும் இந்தக் கேள்வியைத்தான் கேட்கிறாங்க.."

"கேட்காம என்ன செய்வாங்க.. நீ கலகலன்னு பேசிப் பழகற.. இந்தப் பொண்ணு என்னடான்னா சிரிக்கக் கூலி கேக்குது.."

"கூலி கொடுத்தாலும் இவ சிரிச்சுத் தொலைக்க மாட்டா.."

"ஏனாம்..?"

"அப்படி வரம் வாங்கிப் பிறந்திருக்காளாம்.."

சிரிக்காமல் வத்சலா சொன்னதில் அந்தப் பெண்மணி சிரித்து விட்டாள்.. கூடையிலிருந்த சில்வர் தூக்கைத் திறந்து வடைகளை எடுத்து நீட்டினாள்..

"சாப்பிடுங்கம்மா.."

"தேங்க்ஸ் ஆண்ட்டி.." வத்சலா முதல் ஆளாக வாங்கிக் கொள்ள..

"நோ.. தேங்க்ஸ்.." என்று மறுத்தாள் வத்சலா..

"இவ இப்படித்தான் ஆண்ட்டி.. நீங்க கண்டுக் காதீங்க.. இவ பங்கையும் என்கிட்டயே கொடுத்திருங்க.."

வத்சலா அந்த வடைகளையும் கைப்பற்றி 'ஸ்வாகா' செய்ய அந்தப் பெண்மணி சசிரேகாவை கூர்ந்து பார்த்தாள்.. சசிரேகாவுக்கு சங்கடமாக இருந்தது..

"எங்கே போறிங்க..?"

வடை கொடுத்த உரிமையுடன் அந்தப் பெண்மணி கேட்க.. இதற்குத்தான் வடையை வேண்டாம் என்றேன், நீ கேட்டாயா.. என்பதைப் போல வத்சலாவை முறைத்தாள் சசிரேகா.. அந்த முறைப்பை சட்டை செய்யாத வத்சலா வெகு சுவாதீனமாக..

"அன்னவாசலுக்குப் போறோம் ஆண்ட்டி.." என்றாள்.

"அங்கே சொந்தக்காரங்க.. இருக்காங்களா..?" விடாமல் அந்தப் பெண்மணி துளைக்க..

"சேச்சே.." என்று மறுத்தாள் வத்சலா..

"என்னது..? சொந்த பந்தம்ன்னு யாருமே இல்லாத ஊருக்கு ஏன் போறிங்க..?"

"நான் சொன்னா இவ கேட்கனுமே ஆண்ட்டி.. போய்த்தான் ஆகனும்னு ஒற்றைக்காலில நிற்கிறாளே.."

வத்சலா அலுத்துக் கொண்டாள்.. அந்தப் பெண் வத்சலாவை விட்டு விட்டு சசிரேகாவைப் பார்த்து வைத்தாள்.. அவள் ஒற்றைக் காலில் நிற்கிறாளா இல்லை ரெட்டைக் கால்களில் நிற்கிறாளா என்று பார்க்கிறாளோ என்று யோசித்தாள் சசிரேகா..

"ஏம்மா.. உன் பிரண்டுதான் வேண்டாம்ன்னு சொல்லியிருக்காள்ல.. இருந்தும் எதுக்காகம்மா இந்தக் கொட்டற மழையில அறியாத ஊருக்கு டிரெயினில போய்க்கிட்டிருக்க..?"

சசிரேகாவின் மௌனத்தைப் பொருட்படுத்தாமல் அந்தப்பெண்மணி கேட்டு வைக்க.. மெதுவான குரலில் பதில் சொன்னாள் சசிரேகா..

"அது அறியாத ஊரில்லை ஆண்ட்டி.."

"உன் பிரண்ட் அறியாத ஊர்ன்னு சொன்னாளோ..? அங்கே சொந்த பந்தம்ன்னு யாருமில்லைன்னு சொன்னாளே..?"

"அவளுக்கு அது அறியாத ஊர்தான் ஆண்ட்டி.. எனக்கு என்னோட அப்பா பிறந்த ஊர்.. அவளுக்கு அங்கே சொந்த

பந்தம்ன்னு யாருமில்லை ஆண்ட்டி.. எனக்கு அங்கே என்னோட அப்பாவோட அண்ணன் இருக்கிறார்.."

"அப்பாவோட அண்ணனா..? பெரியப்பான்னா சொல்ற..?"

அந்தப் பெண்மணி விளக்கம் கேட்க.. ஊடே புகுந்த வத்சலா..

"அப்பாவோட அண்ணனை பெரியப்பான்னுதான ஆண்ட்டி சொல்லனும்..? மாமான்னு சொல்ல முடியாதே.." என்று விளக்கம் சொன்னாள்..

அந்தப் பெண்மணியின் முகத்தில் குடம், குடமாக அசடு வழிந்தது.. அதை மறைக்க அவள் பேச்சை மாற்றினாள்..

"எங்களுக்குத்தான் அவதி.. இவரோட அம்மா படுத்த படுக்கையா இருக்காங்களாம்.. உடனே ஓடலைன்னா நாலுபேர் நாலு விதமாப் பேசுவாங்க.. உனக்கென்னம்மா அவதி..? சொந்த ஊருக்கு பெரியப்பாவைப் பார்க்கப் போகிற பொண்ணு மழையில்லாத காலத்தில போகக் கூடாதா..? இப்படியா கொட்டற மழையில அடிச்சுப் பிடிச்சுக்கிட்டுப் போவ..? நீ போகிறது பத்தாதுன்னு உன் பிரண்டையும் இழுத்தடிக்கிற.."

சசிரேகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அந்தப் பெண்மணியின் கேள்விக்குப் பதில் சொல்ல அவளால் முடியாது.. அதை அந்தப் பெண்மணி உணர்வாளா என்றிருந்தது அவளுக்கு.. இதுபோன்ற பஸ் பிரயாணங் களிலும், ரயில் பயணங்களிலும் உடன் பயணிப்பவர் களிடம் ஒரளவிற்கு மேல் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதை எப்படிச் சொல்வது..?

வத்சலாவிற்குத்தான் அதுபோன்ற வரையறைகள் இல்லையே..

"என்ன ஆண்ட்டி செய்யறது..? இந்தக் கொட்டற மழை ராத்திரியில இவடிராவல் பண்ணி ஓடினாத்தான் இவளோட அப்பாம்மா இவளை நல்லவிதமா வளர்த்திருக் காங்கிற பெயர் நிலைக்குமாம்.. இல்லேன்னா நீங்க சொல்ற அதே நாலுபேர் அதே போல நாலு விதமாக பேசி

வைப்பாங்களாம்.. அதுக்காகத்தான் இவ இந்த ஓட்டம் ஓடறா.."

"என்னது..?"

அந்தப் பெண்மணிக்கு ஒன்றுமே புரியவில்லை..

"ஏம்மா வத்சலா.. நீ நல்லாத்தானே பேசிக்கிட்டு இருந்த..? உனக்கும் உன் பிரண்டோட காத்து அடிச்சிருச்சா..? தெளிவாய் பதில் சொல்லாம இப்படி மொட்டைக் காத்தான் குட்டையில விழுந்தான்ங்கிற மாதிரி சொன்னா எனக்கு என்ன புரியும்..?"

"புரியற மாதிரி சொல்லனும்னா இவ நன்றிக் கடனைக் கழிக்கறேன் பேர்வழின்னு நீங்க சொன்ன அதே குட்டையில விழுக ஓடிக்கிட்டிருக்கா.."

"என்னது..?"

அந்தப் பெண்மணிக்கு தெளிவாக விவரத்தை அறியாவிட்டால் தலை வெடித்து விடும் போல ஆகி விட்டது.. சசிரேகாவின் முகம் சிவந்து விட்டது.. அவளுடைய சொந்தக்கதையை இப்படி அயலாரின் முன்னால் வத்சலா கடை பரப்புவதை அவள் கொஞ்சம் கூட விரும்பவில்லை..

"ஸ்ஸ்ஸ்.. வத்சலா.."

சிநேகிதியை அடக்க முயன்றாள்.. அதில் கதை கேட்டுக் கொண்டிருந்த பெண்மணியின் சுவராஸ்யம் அதிகரித்து விட்டது.. சசிரேகாவின் முகத்தைப் பார்த்தால் எதுவும் பெயராது என்பதால் அவள் வத்சலாவின் முகத்தை ஆவலோடு பார்த்தாள்.. அந்த ஆவலில் தூண்டப்பட்ட வத்சலா சசிரேகாவின் அடக்கு முறைக்கு அடி பணியாமல் தொடர்ந்து கதை சொல்ல ஆரம்பித்தாள்..

"ஆமாம் ஆண்ட்டி.. இவ எதுக்காக இந்த கொட்டற மழையில டிரெயினில டிராவல் பண்ணிக்கிட்டிருக்கான்னு நினைக்கறிங்க..?"

அதைக் கேட்கத்தானே இந்தப் பாடு படுகிறேன் என்று சலித்துக் கொண்ட அந்தப் பெண்மணி அதை மறைத்துக்

கொண்டு 'எதற்கு' என்று கேட்டு வைத்தாள்.

"இந்த சினிமாக்கள்லயும், சீரியல்கள்லயும் யூசுவலா ஒரு டயலாக் சொல்வாங்களே.."

"என்னன்னு..?"

"விடிஞ்சாக் கல்யாணம்.. விடிஞ்சாக் கல்யாணம்ன்னு சொல்லுவாங்களே ஆண்ட்டி.."

"அட..! ஆமாம்.."

அந்த டயலாக்கை இவள் ஏன் சொல்கிறாள் என்ற குறுகுறுப்புடன் ஆமாம் போட்டாள் அந்தப் பெண்மணி..

"அந்தக் கதைதான் இப்ப நடந்துக்கிட்டு இருக்கு ஆண்ட்டி.." என்றாள் வத்சலா..

"என்னம்மா சொல்ற..?"

"யெஸ் ஆண்ட்டி.. இவளுக்கு விடிஞ்சாக் கல்யாணம்.."

சசிரேகாவைப் காட்டி வத்சலா சொல்ல அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சசிரேகா.. அவள் முகத்தில் பல்வேறு உணர்ச்சி அலைகள் வந்து போயின.. அழுது விடக்கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.. திடமான மனதுடன் தெளிவான முடிவுடன் கிளம்பிய பின்னால் அழுகக் கூடாது..

"அப்படியா..?"

அந்தப் பெண்மணி சசிரேகாவின் முகத்தை கூர்ந்து பார்த்துவிட்டு..

"கல்யாணக் களையே இல்லையே.." என்றாள்..

"எப்படியிருக்கும்..?" என்று கேட்டு விட்டு சசிரேகாவின் கிள்ளலை வாங்கிக் கொண்ட வத்சலா வலி பொறுக்காமல்..

"இந்த மழையில கல்யாணக்களை எப்படி வரும் ஆண்ட்டி..? ஹி..ஹி.." என்று சிரித்து வைத்தாள்..

"என்னவோம்மா.. விடிஞ்சாக் கல்யாணம்ன்னு இருக்கிறப்ப கல்யாணப் பொண்ணு கொட்டற மழையில தன்னந்தனியா டிரெயினில டிராவல் பண்றதை இப்பத்தான் பார்க்கிறேன்.."

"கூட நானிருக்கேனே ஆண்ட்டி..?"

"நீயெல்லாம் ஒரு துணையாம்மா..?"

அந்தப் பெண்மணி கேட்டு வைத்த கேள்வியில் வத்சலாவின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போலக் கோணிக் கொண்டது..

"என்ன ஆண்ட்டி இப்படிச் சொல்லிட்டிங்க..?" பரிதாபமாக கேட்டாள்..

'உனக்கு வேணும்டி..' சசிரேகாவின் முறைப்பு வேறு அவளை உசுப்பி விட்டது..

"அட..! நான் அந்த அர்த்தத்தில் சொல்லலைம்மா.." என்று ஆரம்பித்தாள் அந்தப் பெண்மணி..

அது எந்த அர்த்தமாக இருந்தாலும் அதைப் புளி போட்டுத் தேய்த்து விளக்கி அவள் தெளிவாகச் சொல்லி விட்டால் தேவலை என்றிருந்தது வத்சலாவுக்கு..

போனால் போகிறது.. பேச்சுத் துணைக்கு இருந்தாளே.. வடையெல்லாம் கொடுத்தாளே என்று வத்சலா கதை சொல்லப் போனால் ஒரு மனுஷி இப்படியா கேட்டு வைப்பாள்..?

'இந்தப் பொம்பளைக்கு சசிரேகா மாதிரி ஊமைக் கோட்டான்கள்தான் லாயக்கு..' மனதுக்குள் தாளித்துக் கொண்டிருந்தாள் வத்சலா..

"விடிஞ்சாக் கல்யாணம்ன்னு இருக்கிறப்ப கல்யாணப் பெண்ணுக்குத் துணையா குடும்பத்தில இருக்கிற பெரியவங்க வர வேணாமா..? அதைத்தான் நான் சொன்னேன்.. நீயும் சின்னப் பொண்ணு.. இந்தப் பொண்ணும் சிண்ணப் பொண்ணு.. சின்னப்புள்ளைக கூடி வீடு கட்டினதப் போல இப்படி விடிஞ்சா நடக்கப் போற கல்யாணத்துக்குப் போறிகளே.. அதைச் சொன்னேன்.."

"அப்படியா ஆண்ட்டி..?"

வாயெல்லாம் பல்லானாள் வத்சலா.. அவளைப் பார்த்து அந்த ஆண்ட்டி 'சின்னப் பொண்ணு..' என்று சொல்லி விட்டதில் உடனடியாக கவுன் வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும் போல புளகாங்கிதப் பட்டுப் போனாள் அவள்..

'என்னைப் பார்த்தா.. 'சின்ன்ன்..னப்' பொண்ணு போல தெரியுதா..?'

அந்த சந்தோசத்தில் மிச்சம் கொச்சம் இருந்த மீதிக் கதையையும் கொட்டிக் கவிழ்க்க ஆரம்பித்து விட்டாள் வத்சலா..

"அதாகப்பட்டது ஆண்ட்டி.. இவளுக்கு அப்பா, அம்மா இல்லை.."

"ஐயோ பாவம்.."

ஆண்ட்டியின் இரக்கமான பார்வையைச் சந்திப்பேனா என்ற பிடிவாதத்துடன் மழையை வெறித்தாள் சசிரேகா.. கொட்டும் மழையைக்கூட நிறுத்தி விடலாம்.. கொட்டிக் கொண்டிருக்கும் வத்சலாவின் பேச்சை நிறுத்த முடியாது என்பதில் ஆயாசம் மேலிட்டது அவளுக்கு..

"இவளோட அப்பா கூடப் பிறந்த அண்ணன் வீட்டிலதான் இவ வளர்ந்தா.."

"பெரியப்பா வீட்டிலன்னு சொல்லு.."

"அப்படியும் சொல்லலாம்.."

என்னவோ பூவை 'பூ' என்றும் சொல்லலாம்.. 'புய்ப்பம்' என்றும் சொல்லலாம் என்ற ரீதியில் வத்சலா சொல்ல அவளை விசித்திரமாக பார்த்து வ¡த்தாள் ஆண்ட்டி.

"அந்தப் பெரியப்பா இவளுக்கு கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறாராம்.. அதுக்குத்தான் இவ ஓடிக்கிட்டு இருக்கா.."

"அந்த ஓட்டத்தை ரெண்டு நாளைக்கு முன்னால ஓடியிருக்கலாமே.. இப்படியா விடிஞ்சாக் கல்யாணத்தை

வைச்சுக்கிட்டு கொட்டற மழையில ஓடுவீங்க..?"

"தெரிஞ்சா ஓடியிருக்க மாட்டாளா ஆண்ட்டி..?"

"என்னது..?"

ஆண்ட்டி விழிகளை விரிக்க அவளை ஆசுவாசப் படுத்தினாள் வத்சலா..

"இதுக்கே அசந்தா எப்படி ஆண்ட்டி..? இன்னும் பல திடுக்கிடும் திருப்பங்கள் இருக்கே.."

"ஏம்மா.. இந்தப் பொண்ணுக்கு கல்யாணம்ன்னு இவளுக்கே தெரியாதா..?"

"இன்னைக்கு சாயங்காலம் வரைக்கும் தெரியாது.."

"அடக் கொடுமையே..! மாப்பிள்ளை யாருன்னா வாவது தெரியுமா தெரியாதா..?"

"அதுதான் முக்கியமாத் தெரியாது ஆண்ட்டி.."

"என்னது..?"

"நிறைய 'என்னது' களை ஸ்டாக் வைச்சுக்கங்க ஆண்ட்டி.. அடுத்தடுத்து எடுத்து விடவேண்டியிருக்கும்.. விடிஞ்சாக் கல்யாணம்ன்னு இவளுக்கு ஈவினிங்தான் நியூஸ் வந்துச்சு.. அந்த நியூஸில் மாப்பிள்ளை யாரு எவருன்னு சொல்லப்படலை.."

"அநியாயமா இருக்கே.. இந்தப் பொண்ணு கேட்கலையா..?"

"கேட்க சான்ஸ் கொடுத்தாத்தானே..? திடிர்ன்னு போன் வந்துச்சு.. விடிஞ்சா உனக்குக் கல்யாணம்மா.. சொந்த பந்தத்துக்கெல்லாம் பத்திரிக்கை வைச்சாச்சு..

ஊரே இங்கே கூடியிருக்கு.. விடியறதுக்குள்ள வந்து சேருன்னு ஒரு மனுசன் போன் பண்ணினா இவ என்ன செய்வா..?"

"என்னது..?"

"சொன்னேனில்ல.. இதுக்குத்தான் ஸ்டாக் வைச்சுக்கச் சொன்னேன்.."

"இந்தப் பொண்ணுக்கே தெரியாம கல்யாணம் பேசி முடிச்சு ஊருக்கெல்லாம் பத்திரிக்கை வைச்சிருக் காங்களா..?"

"அந்த வயித்தெரிச்சலைக் கேக்காதீங்க ஆண்ட்டி.. அதில ஒற்றைப் பத்திரிக்கையை இவளுக்கு அனுப்பி வைச்சா என்ன..? எந்தத் தேதியில, எந்த இடத்தில, எந்த நேரத்தில, யாருக்குக் கழுத்தை நீட்டப் போகிறோம்ன்னு இவளும் தெரிஞ்சு வைச்சிருப்பாள்ல..?"

வத்சலா நியாயம் கேட்க.. ஆண்ட்டி கூடுதலான பரிதாபத்துடன் சசிரேகாவைப் பார்த்தாள்.. அவளோ ஜன்னலின் கண்ணாடியில் பல்லி போல ஒட்டிக் கொண்டாள்..

"இப்படியாப்பட்ட கல்யாணத்துக்கு இந்தப் பொண்ணு போகாட்டித்தான் என்ன..?"

ஆற்றாமையுடன் ஆண்ட்டி சொல்ல..

"அதைத்தான் நானும் சொன்னேன் ஆண்ட்டி.. இவ கேட்கலை.. என் தம்பி நாணயம் தவறாதவன்.. அவன் பெத்த பொண்ணு நீ.. உன்னை நம்பி வாக்குக் கொடுத்து கல்யாணத்தை நிச்சயம் பண்ணிட்டேன்.. ஊரு, உறவு முன்னால என்னைத் தலைகுனிய வைச்சிராதேன்னு இவளோட பெரியப்பா போனில சொன்னாராம்.. இவங்கப்பாவோட பெயரைக் காப்பாத்தனும்.. பெரியப்பாவுக்கு நன்றிக்கடனைக் செழுத்தனும்னு கொட்டற மழையில டிராவல் ஏஜன்ஸிக்கு போன் பண்ணி டிரெயின் டிக்கெட்ட ஏற்பாடு பண்ணிட்டா.. தனியா அனுப்ப மனமில்லாம எனக்கும் டிக்கெட் போடச் சொல்லி நானும் கிளம்ப வேண்டியதாயிருச்சு.."

"நல்ல காரியம் பண்ணினம்மா.. உன் நல்ல மனசுக்கு நீ நல்லா இருப்ப.."

மனமார வத்சலாவை ஆசிர்வதித்தாள் ஆண்ட்டி.. இதுபோன்ற ஆசிர்வாதங்கள் ஏன் தனக்குக் கிடைக்க

வில்லையென்று வேதனை கொண்டாள் சசிரேகா.. அப்படிக் கிடைத்திருந்தால் இப்படியொரு இன்னல் அவளுக்கு வந்திருக்குமா..?

"நீங்க ரெண்டு பேரும் படிக்கறிங்களா..?"

"படிச்சு முடிச்சு வேலை பார்க்கிறோம் ஆண்ட்டி.."

"என்ன வேலைம்மா..?"

"ஐ.டி கம்பெனியிலதான்.. வேற எங்கே..? என்ஜினியரிங் சேர்ந்தப்ப எக்கச்சக்க சம்பளம் கொடுத்துக் கிட்டு இருந்தவங்க நாங்க என்ஜினியரிங்கை முடிச்சு வேலைக்கு வந்தவுடனே இத்துனூண்டு சம்பளத்தை கொடுக்கிறாங்க.."

"போதும்ங்கிற மனமே பொன் போன்றதும்மா.."

"பழமொழி..? இதை அங்கிள் சம்பளம் வாங்கிக் கொடுக்கிறப்ப சொல்லிக்கங்க.. இங்கே வேணாம்.."

"லேடிஸ் ஹாஸ்டலில் இருக்கீங்களா..?"

"இப்போதைக்கு கொட்டற மழையில டிரெயினில டிராவல் பண்ணிக்கிட்டு இருக்கோம் ஆண்ட்டி.."

இவளால் எப்படி இத்தனை சுவாதீனமாக ஜோக்கடித்துக் கொண்டு வர முடிகின்றது என்று பொறாமைப் பட்டுப் போனாள் சசிரேகா.. பிரச்னையின் உள்ளே இருப்பது அவள்தான்.. வத்சலா அல்ல.. என்ற உண்மை அவளுக்கு உறைத்தது.. பிரச்னைக்கு வெளியே இருப்பதினால்தான் வத்சலாவால் இலகுவாக இருக்க முடிகிறது..

ஏன் சசிரேகாவிற்கு மட்டும் இலகுவான மனம் கிடைக்கவில்லை..? எப்போதும் பாரம் சுமந்து கொண்டிருக்கும் மனநிலையுடன் வாழும் வாழ்க்கையை அவள் வாழ காலம் ஏன் கட்டாயப் படுத்துகிறது..? விதி ஏன் அந்தத் தலைவிதியை அவள் நெற்றியில் எழுதி வைத்தது..?

"சிரிக்கச் சிரிக்கப் பேசற வத்சலா.."

"வெளியூரில இருந்து சென்னைக்கு வேலை பார்க்கன்னு வந்து சேர்ந்திருக்கோம்.. லேடிஸ் ஹாஸ்டலை விட்டா

தங்கறதுக்கு வேற இடமே கிடைக்காதே ஆண்ட்டி.. ஸோ.. நாங்க ரெண்டு பேரும் லேடிஸ் ஹாஸ்டலிலதான் தங்கியிருக்கோம்.."

"சுயமா சம்பாதிச்சு சொந்தக் காலில நிக்கிற பொண்ணு கல்யாண விசயத்தில எதிர்த்து நின்னிருக்க வேணாமோ..?"

அதற்காகத்தான் அங்குசாமி இந்தத் திருமணத்தை முடிவு செய்திருப்பாரோ என்று ஐயம் கொண்டாள் சசிரேகா.. இந்த ஆறுமாத காலமாக பிடித்ததை உண்டு.. விரும்பிய உடைகளை உடுத்தி என்று சுதந்திரமாக அவள் சுய சம்பாத்தியத்தில் வாழ்ந்ததை பொறுக்க மாட்டாமல் தான் சிறையில் அவளை அடைக்க வழி செய்திருக்கிறாரோ..

"என்னத்தைச் சொல்ல ஆண்ட்டி.. எங்ககூட வேலை பாக்கிற ஒருத்தன்.. 'பிரவீன்' அப்படின்னு பேரு.. அழகா ஹேண்ட்சம்மா இருப்பான்.. வசதியானவன்.. இவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டு இவகிட்டக் கேட்டான்.."

"ஓகேன்னு சொல்லியிருக்கலாமே.."

"நானா இருந்தா சொல்லியிருப்பேன்.. இவ பெரிய நாணயவாதியாட்டம் எங்க பெரியப்பாவைக் கேட்கனும்னு சொல்லிட்டா.. அவனும் இவளோட பெரியப்பா வீட்டுக்கு பெண் கேட்டுப் போனான்.."

"என்னாச்சு..?"

"யாருக்குத் தெரியும்..? அந்த மனுசன்தான் அதைப்பற்றி எதுவும் பேசாம உனக்கு விடிஞ்சாக் கல்யாணம்.. கிளம்பி வான்னு போனைப் போட்டுட்டாரே.."

"அவன் பெண் கேட்டுப் போனதினாலதான் இந்த முடிவுக்கு வந்தாரோ..?"

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன் ஆண்ட்டி.. அதனாலதான் இவளுக்கு எந்தத் தகவலையும் சொல்லாம மறைச்சு வைச்சு வேலை பார்த்துட்டு பொழுது

விடிஞ்சாக் கல்யாணம்.. புறப்பட்டு வான்னு தகவல் கொடுத்திருக்காரு.."

"பாவம்.." இரக்கப் பட்டாள் ஆண்ட்டி..

சசிரேகாவின் முகம் கன்றியது.. அந்த பிரவின் மீது அவளுக்கு என்றுமே ஈர்ப்பு இருந்ததில்லை.. திருமணம் செய்து கொள்ள அவன் விருப்பம் தெரிவித்தான்.. இவள் பெரியப்பாவைக் கேட்கச் சொன்னாள்.. அவ்வளவுதான்.. அதற்கு மேல் பிரவீனுக்கு அவள் முக்கியத்துவம் கொடுத்ததில்லை..

அதற்காகவா அங்குச்சாமி இப்படியொரு முடிவை எடுத்தார்..?

எங்கேயாவது கண் காணாத இடத்திற்கு ஓடி விட்டால் என்ன என்ற வேகம் பிறந்தது அவளுக்கு.. அவளை அடிமைப்படுத்தப் போகும் திருமணத்திலிருந்து தப்பிக்க வேண்டும்.. எப்படி..?

அவள் மனம் அறிந்ததைப் போல ரயில் நின்றுவிட..

"சொன்னேனில்ல..?" என்றாள் வத்சலா..

ரயிலில் இருந்த ஆண்பிள்ளைகள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு கதவை இறுக மூடித் தாழிட்டார்கள்..

"எந்த நேரத்தில நீ வாய் வைச்சியோ.. ரயில் நிசமாவே அந்துவானக் காட்டில்தான் நிக்குது.." அலுத்துக் கொண்டாள் ஆண்ட்டி..

"சுத்திலும் வெள்ளக்காடு.." அங்கிள் நிலவரம் சொன்னார்..

"எப்படியோ தொலையுது.. இழுத்துப் போர்த்திக் கிட்டுப் படுங்க.. நாங்க கிளம்பித்தான் வந்தோம்.. அத்துவானக்காட்டில நடுராத்திரியில ரயில் நின்னுட்டா நாங்க என்ன பண்ணுவோம்..? எப்படி எங்களால வர முடியும்ன்னு சொல்லிக்கலாம்.." அங்கிளுக்கு வழி சொல்லிக் கொண்டிருந்தாள் ஆண்ட்டி..

"தப்பிச்சேடி நீ.." உற்சாகமாக சொன்னாள் வத்சலா..

"இந்தத் கதையை நாமும் சொல்லிக்கலாம்.. உனக்கும் மனச்சாட்சி உறுத்தாது.. ஓகேயா..?"

'ஓகேதான்..' என்றது சசிரேகாவின் மனது..

தளைகளற்ற வானம்பாடி போல தன்னை உணர்ந்தாள் அவள்.. நிம்மதியுடன் கம்பளியைப் போர்த்திக் கொண்டு படுத்தவள்.. சீக்கிரத்திலேயே தூங்கிப் போனாள்..

"சசி.. அம்மா சசி.."

சில்லிட்ட கைகள் கன்னத்தில் தட்டியதில் சிலிர்த்துப் போனவளாக கண் விழித்தாள் சசிரேகா.. ரயில் பெட்டியில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சத்தில் வெகு அருகாமையில் தெரிந்தது ஆண்ட்டியின் முகம்..

"என்ன ஆண்ட்டி..?" கண்ணைக் கசக்கினாள்..

"இவர் உன்னைத் தேடிக்கிட்டு வந்திருக்காரும்மா.."

ஆண்ட்டியின் வார்த்தைகளில் சசிரேகாவின் தூக்கம் பறந்தோடியது.. அரண்டு போனவளாக அவள் ஆண்ட்டியின் சுட்டு விரல் சுட்டிய திசையில் பார்த்தாள்..

உயரமாக.. வாட்ட சாட்டமாக.. அவளையே பார்த்தபடி.. 'அவன்..' நின்றிருந்தான்..

'யார் இவன்..?' திகைத்துப் போன சசிரேகா..

"வத்சலா.." என்று குரல் கொடுத்தாள்..

"நான் அப்பவே முழிச்சாச்சு.." வத்சலா எழுந்து உட்கார்ந்திருந்தாள்..

"யார் நீங்க..?" நடுக்கத்துடன் கேட்டாள் சசிரேகா..

"உங்க பெரியப்பா அனுப்பி வைத்திருக்கார்.." அவன் செல்போனை நீட்டினான்..

நடுங்கும் விரல்களுடன் அதை வாங்கிப் பார்த்தாள் சசிரேகா, அங்குசாமியின் செல்போன் நம்பர் அதில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.. காதில் வைத்தாள்..

"சசிதானே.. உன்னைக் கூப்பிட வந்திருக்கிறவர் கூடக் கிளம்பி அன்னவாசலுக்கு வந்திரு.. விடிஞ்சா நடக்கப் போற உன் கல்யாணம் தடையில்லாம நடந்தாகனும்.. உங்கப்பன் பேரைக் காப்பாத்து.." அதிகாரமாக உத்தர விட்டார் அங்குசாமி..

'தப்பிக்க முடியாதா..?' தொய்ந்து போனவளாக செல்போனை அவனிடம் நீட்டி விட்டு இயந்திரம் போல அவனைப் பின் தொடர்ந்தாள் சசிரேகா..

பரிதாபத்துடன் அவளைப் பார்த்த ஆண்ட்டியையும் அவள் பார்க்கவில்லை.. பிரமை பிடித்தவளைப் போல பைகளை எடுக்காமல் போனவளைப் பின் தொடர்ந்து பைகளுடன் ஓடி வந்த வத்சலாவையும் அவள் கவனிக்க வில்லை.. அவள் நினைவில் இருந்ததெல்லாம் தப்பிக்கும் மார்க்கம் இல்லாமல் அவள் விருப்பமில்லாத கல்யாணத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறாள் என்பதுதான்.. 'அவன்' காரோடு வந்திருந்தான்..

காரில் ஏறப் போனவள் தடுமாறி விழப் போன போது தாங்கிப் பிடித்தான்.. விலகி ஏறி அமர்ந்தவளின் மனதில் ஏதோ ஓர் மோகம் வந்து தொலைத்தது..

## 4

அடித்து ஊற்றிய மழை காரின் முன் பக்க, பின் பக்க கண்ணாடிகளிலும், ஜன்னல்களின் கண்ணாடிகளிலும் பட்டுத் தெளித்து சாரை, சாரையாக வழிந்து கொண்டிருந்தது.. காரின் பின்பக்கச் சீட்டில் சாய்ந்து கொண்ட சசிரேகாவின் மனதில் நல்ல வேளை, கார் வந்து விட்டது என்ற நிம்மதி வரவில்லை.. மாறாக இவன் ஏன் வந்தான் என்ற எரிச்சல் உண்டானது..

'இது நான்தானா..?'

விக்கித்துப் போனாள் சசிரேகா... அவளது அடிமனதின் ஆசையை அவளது அந்த உணர்வு உணர்த்தியதில் காரின் முன் பக்கக் கண்ணாடியில் வழிந்து கொண்டிருந்த

மழைநீர்த் தாரைகளை வெறித்துப் பார்த்தவளின் மனதில் இனித் தப்பிக்க முடியாது என்ற துக்கம் ஏற்பட்டது..

அவள் மனதில் தப்பித்து விட வேண்டுமென்ற ஆசை இருந்திருக்கிறது என்பதில் சோர்ந்து போனாள் சசிரேகா..

கொட்டும் மழை வெள்ளத்தில் நின்று விட்ட ரயிலைக் காரணம் காட்டி அன்றைய இரவுப் பொழுதை அன்னவாசலுக்குப் போகாமல் கடந்து விட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..?

அது முடியாமல் போய் விட்டது யாரால்..?

காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் முதுகை வன்மத்துடன் முறைத்துப் பார்த்தாள் சசிரேகா..

'எல்லாம் இவனால்தான்..' என்ற கோபம் பொங்கியது..

இவனை என்ன செய்தால் தகும் என்று பல்லைக் கடித்தபடி பார்வையை உயர்த்தியவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

அங்கே காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் கண்ணாடி வழியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளது பார்வையைச் சந்தித்ததும் புருவங்களை 'என்ன..?' என்று வினவும் பாவனையில் வேறு உயர்த்தி வைத்தான்..

'போடா..' பார்வையைத் தழைத்துக் கொண்ட வளுக்குள் சிலிர்ப்பு ஓடியது..

அவனது பார்வை அவளை ஏதோ செய்தது.. அவளை அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் சங்கடம் கொண்டாள் சசிரேகா.. இயல்பாக உட்கார்ந்திருக்க முடியாத எரிச்சல் அவளுக்கு வந்தது.. அதே சமயத்தில் இனம் விளங்காத ஓர் இன்ப உணர்வும் எழுந்து தொலைத்தது..

'நீயென்ன முட்டாளா..?' தன்னைத்தானே கடிந்து கொண்டாள் சசிரேகா..

அவன் ஒன்றும் அவளை உல்லாசப் பயணத்திற்கு அழைத்துக் கொண்டு போகவில்லை.. அவளை முகம்

தெரியாத எவனிடமோ திருமணம் செய்து கொள்

என்று ஒப்படைக்க அழைத்துக் கொண்டு போகிறான்.. மொத்தத்தில் அவன் சசிரேகாவின் பெரியப்பா அங்குசாமியின் கைத்தடி..! அவன் பார்வைக்கு சசிரேகா சிலிர்த்துப் போனால் அதைவிட கொடுமை வேறேதும் இல்லை..

மழையில் நனைந்திருந்த உடலும் உடையும் உலர்ந்து போயிருக்க இதமாக உணர்ந்தாள் சசிரேகா.. பக்கத்தில் உம்மென்று முகத்தை ஒரு முழ நீளத்திற்குத் தூக்கி வைத்துக் கொண்டு வந்தாள் வத்சலா.. அவளிடம் பேச முயன்ற சசிரேகாவை அவள் முறைத்துப் பார்த்ததில் அவளிடம் பேச வேண்டுமென்ற ஆசை அற்றுப் போனது சசிரேகாவிற்கு..

'இவள் ஒருத்தி..'

அலுப்புடன் முகம் திருப்பிக் கொண்டாள் சசிரேகா.. அவள் என்ன இந்தத் திருமணத்தை விரும்பியா அன்னவாசலை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறாள்..?

அந்தச் சூழலில் மூச்சு முட்டியவளுக்கு சூடாக ஒரு 'டீ' குடித்தால் தேவலையென்று தோன்றியது.. அவள் நினைத்து முடிப்பதற்குள் கார் நின்று விட்டது..

"ஹைப்பா..! கார் பிரேக்டவுன் ஆகிருச்சா..? அன்னவாசலுக்குப் போக முடியாதா..?" குதூகலத்துடன் கேட்டாள் வத்சலா..

காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் அவளை விசித்திரமாகப் பார்த்து வைத்தான்..

"இவன் ஏண்டி இப்படிப் பாக்கிறான்..?"

சசிரேகாவின் காதோரமாக முணுமுணுத்தாள் வத்சலா..

"என்னது..?"

சசிரேகா அவனைப் பார்த்தாள்.. அவன் பார்வை ஆக்டோபஸைப் போல அவளை இழுத்து வளைத்ததில்

அரண்டு போனவளாக பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.. அவள் உடல் நடுங்கியது..

'இது என்ன சோதனை..?' தவித்துப் போனாள்..

அவன் வத்சலாவுக்குத் தெரியாமல் அவளைப் பார்த்து இமைக்கும் பொழுதிற்குள் இமையைச் சிமிட்டியதில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டு விட்டது.. உள்ளுக்குள் எழுந்த உணர்வுப் பேரலைகளின் பிரவாகத்தில் அவள் கண்களில் கண்ணீர் ததும்பி விட்டது.

"ஒருவேளை சைட் அடிக்கிறானோ..?"

வத்சலாவின் கேள்வி அவளைக் கலங்கடித்தது.. அவன் சசிரேகாவை சைட் அடித்துக் கொண்டிருப்பதை வத்சலா எப்படிக் கண்டுபிடித்தாள்..?

"இருக்காதுடி.." அவசரமாக மறுத்தாள்..

"உனக்கெப்படி அது தெரியும்..?"

"எனக்குத் தெரியாம யாருக்குத் தெரியும்..?"

அவனுடைய ஆழ்ந்த பார்வைகளை நினைத்துப் பார்த்தபடி சொன்னாள் சசிரேகா.. அந்தப் பார்வைகளின் ஆழம் அவளை உள்ளே இழுக்கும் வேகத்தை வத்சலாவால் உணர முடியுமா என்றிருந்தது அவளுக்கு..

"எனக்குத்தான் தெரியும்.." குண்டைத் தூக்கிப் போட்டாள் வத்சலா..

"உனக்குத் தெரியுமா..?" சசிரேகாவுக்குப் புரியவில்லை..

"ஆமாண்டி.. அனுபவிக்கிறவளுக்குத்தானே அது புரியும்..?"

"அப்படின்னா..?"

"அறிவு கெட்டவளே..!"

அழகான வார்த்தைகளால் சசிரேகாவை அழைத்த அந்த அறிவுள்ளவள் தோழியின் காதுப்பக்கமாக சரிந்து..

"இவன் அப்போப்பிடிச்சு என்னையே உத்து உத்துப் பாத்துக்கிட்டு வர்றாண்டி.." என்று கிசுகிசுத்தாள்..

'இருக்குமோ..' சசிரேகாவிற்கு கோபம் வந்தது..

அது எப்படி அவளையும் உற்று உற்றுப் பார்த்து விட்டு அவளுடைய தோழியையும் அவன் பார்த்து வைப்பான்..?

அவனை முறைத்தாள் சசிரேகா.. எதனால் இந்தக் கோபம் என்ற பாவனையில் அவன் புருவங்களைச் சுருக்கியதில் வசீகரிக்கப் பட்டவளுக்கு கோபம் மறந்து போனது.. அவன் இயல்பாக வத்சலாவைப் பார்த்து வைக்க..

"பார்.. பார்.." என்று சசியின் கையைக் கிள்ளினாள் வத்சலா..

"என்னத்தடி பார்க்கச் சொல்ற..?"

"இப்படித்தாண்டி இவன் என்னை உத்து உத்துப் பாக்கறான்.."

'ஓ..! இந்தப் பார்வையைத்தான் இவ உத்து உத்துப் பாக்கிற பார்வைன்னு சொல்கிறாளா..?' சிரிப்பு வந்தது சசிக்கு..

அந்த நிலைமையிலும் சிரிக்க வைக்கும் அந்த ஆபத்பாந்தவனை (?) நோக்கினாள்.. அவளை மட்டும் பிரத்யேகமாய் அவன் பார்த்து வைத்ததில் அவளுக்குள் குளிர் பிறந்தது..

"டீ சாப்பிடலாமா..? மழை நேரத்தில சூடா டீக்குடிச்சா தெம்பா இருக்கும்.."

அவன் என்னவோ சசிரேகாவைப் பார்த்தபடிதான் சொன்னான்.. ஆனால் வத்சலா அவளைத்தான் அவன் பார்ப்பதாக சாதித்து வைத்தாள்..

"இவனுக்கு இருக்கிற கொழுப்பைப் பார்த்தியாடி.. நான் டீ குடிக்கனும்னு இவனுக்கு என்னடி இவ்வளவு அக்கறை..?"

அந்த அக்கறை வத்சலாவுக்கானதல்ல என்று அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று திணறிப் போனாள் சசிரேகா..

அந்தப் பார்வையும் அக்கறையும் சசிரேகாவுக்கானது என்பதில் அவள் மனதில் இன்பம் கலந்த துன்பம் வந்தது..

சூடாக 'டீ' குடித்தால் தேவலையென்று அவள் மனதில் நினைத்ததை அவன் எப்படி அறிந்தான்..?

அதையும் அவன் அறிந்தவனைப் போல அவள் விழிகளுக்குள் அவன் ஆழ்ந்து பார்த்ததில் நடுங்கிப் போனாள் சசிரேகா..

'இப்படிப் பார்த்துத் தொலைக்காதே..'

அவன் மனதை அவள் மனதில் வேண்டுகோள் எட்டவில்லை போல.. அவன் பார்வையைத் திருப்பாமல் அவளையே பார்த்தபடி கார்க் கதவைத் திறந்து விட்டான்

அந்த சின்னஞ்சிறு ஓட்டலின் தாழ்வாரப் பகுதியை ஒட்டி அவன் காரை நிறுத்தியிருந்ததால் சசிரேகாவும், வத்சலாவும் மழையில் நனையாமல் இறங்கிக் கொள்ள வசதியாக இருந்தது..

"சூப்பர் மேன்டி.. எல்லாத்தையும் யோசிச்சுச் செய்றான்.." சிலாகித்தாள் வத்சலா..

சசிரேகா அந்த சிலாகிப்பை விரும்பவில்லை.. அவள் மனதில் எழுந்த அதே சிலாகிப்பை அவளால் வாய் விட்டுச் சொல்லமுடியாமலிருக்கும் போது வத்சலா மட்டும் சொன்னால் அவளுக்கு எப்படியிருக்கும்..?

"இங்கே டாய்லெட் எந்தப் பக்கம் இருக்கு..?"

அவன் விசாரித்தான்.. அங்கே வேலை செய்து கொண்டிருந்த பையனின் சுட்டு விரல் சுட்டிக் காட்டிய பகுதிக்கு நடக்காமல் சசிரேகாவைப் பார்த்தான்.. பெண்களின் பாதுகாவலனாக இருப்பதற்கு இவனை விடச் சிறந்தவன் எவருமில்லையென்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா.. மனம் புரிந்து செயல் படுகின்றானே..

"நமக்குத்தான் ரோட்டோரம் இருக்கேன்னு நினைக்காம கூட வர்ற பெண்பிள்ளைகளைப் பத்தியும் நினைச்சுப்

பாக்கிறான் பாரு.. அங்கே நிக்கிறாண்டி அவன்.." என்றாள் வத்சலா..

"இல்ல.. இங்கேதான்.. நமக்கு எதிரேதான் நிற்கிறான்.." எரிச்சலுடன் சொன்னாள் சசிரேகா..

இப்படியுமா ஒருத்தி எல்லாவற்றிலும் முந்திரிக் கொட்டையாக முந்தித் தொலைப்பாள்..? அவனைப் பற்றிப் பாராட்டாக சசிரேகா நினைத்து முடிப்பதற்குள் அதை வாய் விட்டுச் சொல்லும் வத்சலாவின் சுதந்திரத்தின் மீது அவளுக்குப் பொறாமையாக இருந்தது..

அந்தச் சுதந்திரம் ஏன் சசிரேகாவிற்கு இல்லாமல் போனது..?

பெருமூச்சுடன் மழையை வெறித்தவளின் உள்ளுணர்வு உறுத்தியதில் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.. அவன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்தப் பார்வை அவள் மனதின் காயத்திற்கு ஒத்தடம் கொடுப்பதைப் போல இருந்ததில் அவள் நடுங்கிப் போனாள்.. கொட்டும் மழையின் குளிர் அவளது உடலைத் தாக்காமல் மனதைத் தாக்கியது.. மோகத் தீயைபற்ற வைத்த அவனது பார்வை அவளைச் சுற்றி முள்வேலியிட்டு வேடிக்கை பார்த்தது.. சசிரேகா மனம் தொய்ந்தாள்..

"வாடி பாத்ரூம் போயிட்டு வந்திரலாம்.."

வத்சலா என்னவோ அவளுக்காகத்தான் அவன் பாத்ரூமைப் பற்றி விசாரித்தான் என்பதைப்போல அவனைச் சொந்தத்துடன் பார்த்தபடி சசிரேகாவின் கையைப் பிடித்து இழுத்தாள்.. அவர்கள் திரும்பி வந்தபோது அவன் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்..

'இவனிடம் இந்தப் பழக்கம் இருக்கா..?' சசிரேகா முகத்தைச் சுளித்தாள்..

திரும்பிப் பார்ததவன் அவளது முகச் சுளிப்பைக் கவனித்து விட்டான்.. கையிலிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டு 'ஷீ' வால் அதை மிதித்துத் தேய்த்தான்..

"யூசுவலா நான் ஸ்மோக் பண்றதில்ல.. எப்போதாவது ஒருமுறை டென்சனா இருக்கறப்ப.. இதைப்போல குளிர் சமயங்களிலன்னு ஸ்மோக் பண்ணுவேன்.."

குற்றம் புரிந்து விட்டவனைப் போல அவன் விளக்கம் சொன்னதில் சசிரேகாவின் மோகம் அதிகரித்தது.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு கொட்டும் மழைநீரைத் துக்கத்துடன் பார்த்து வைத்தாள்.. அடிக்கும் மழைநீர் அவளைக் கரைத்து விட்டாலென்ன என்ற ஏக்கம் அவளைத் தாக்கியது.. அவளை ஈர்க்கும் அவனது ஒவ்வொரு செய்கையிலும் அவளது மனம் பதறியது.. எதற்காக அவளை அழைத்துப் போகிறான் என்பதை அவன் அறிவான்தானே.. அப்புறமும் ஏன் அவள் மனதை அசைத்துப் பார்க்கிறான்..?

'கொன்று விடு என்னை..'

வெறுப்புடன் அவனை முறைத்தாள் சசிரேகா.. அதீத மோகத்தினால் பிறந்த வெறுப்பு அது என்பதை உணராத அவன் திடுக்கிட்டுப் போனான்..

"இனி ஸ்மோக் பண்ணமாட்டேன்.."

அவளது விழிகளுக்குள் ஊடுறுவித் துளைப்பதைப் போலப் பார்த்தபடி வாக்குக் கொடுத்தான்.. அவன் பார்வை அவளிடம் மன்னிப்பை யாசித்தது..

"பாக்கிறதைப் பாரேன்.."

சசிரேகாவின் காதோரமாக வத்சலா கிசுகிசுத்ததில் சசிரேகா திடுக்கிட்டுப் போனாள்.. அவன் சசிரேகாவைப் பார்ப்பதை வத்சலா பார்த்து விட்டாளா..?

"அதில்லைடி.." பதட்டத்துடன் விளக்கம் சொல்ல முயன்றவளை கையமர்த்தி தடுத்தாள் வத்சலா..

"நீ ஒன்னும் இவனுக்காக வக்காலத்து வாங்க வேணாம்.. நம்மள பிக்-அப் பண்ணிக்கறேன் பேர்வழின்னு இவன் டிரெயினுக்கு வந்தப்ப இருந்து இப்படித்தான் பண்ணித்

தொலைக்கிறான்.. ஆல்ரெடி எனக்கு ஆள் இருக்குன்னு இவனுக்கு யார்டி சொல்றது..?"

'கிழிஞ்சது போ..' சசிரேகாவுக்கு அந்த இக்கட்டான நிலைமையிலும் சிரிப்பு வந்து தொலைத்தது..

'இதைத்தான் 'இடுக்கண் வருங்கால் நகுக'ன்னு வள்ளுவர் சொல்லி வைத்தாரா..?'

அந்த இடுக்கண் எது என்பதை நினைத்துப் பார்த்தவளுக்கு வந்த சிரிப்பு தொலைந்து போனது..

வத்சலாவுக்கு ஆள் இருப்பதைத்தான் அவன் அறிய மாட்டான்..

சசிரேகாவிற்காக காத்திருக்கும் ஆளைப் பற்றியுமா அவன் அறிய மாட்டான்..?

அவளுக்காக சூடான 'டீ' கப்பை ஏந்தி வந்தவனின் சொந்தமான பார்வை இல்லையென்று சொன்னதில் கொதித்துப் போனாள் சசிரேகா.. அவளது மனதை வருடிய அவனது பார்வை அவளுக்குள் கனன்று கொண்டிருந்த மோகத்தீயைக் கிளறி விட்டதில் அவள் சாம்பலாகி விடுவோமோ என்று பயந்து போனாள்..

'இவன் என்ன எனக்குள் மோகத்தீயைப் பற்ற வைத்து அதில் குளிர் காய நினைக்கிறானா..?'

வெறுப்பு நிரம்பிய அவளது பார்வையில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன.. 'என்ன' என்று வினவும் பாவனையில் அவனது புருவங்கள் ஏறி இறங்கியதில் வசீகரிக்கப்பட்ட சசிரேகாவிற்கு இவையெல்லாம் விடியும் வரைதான் கிடைக்கும் என்று துன்பமாக இருந்தது..

"கொதிக்குது.." அவன் 'டீ'க்கப்பை நீட்டினான்..

'என் மனதை விடவா கொதிக்கப் போகுது..?' சசிரேகா மௌனமாக 'டீ'க் கப்பை வாங்கிக் கொண்டாள்..

அவன் விரல்மீது அவள் விரல் பட்டதில் தீப்பிடித்ததைப் போல இருந்தது அவளுக்கு.. லேசான ஸ்பரிசம்கூட

அவளை இந்த அளவுக்கு படுத்தி வைக்குமா..?

"ரொம்பத்தான் அக்கறை.." நொடித்தபடி 'டீ'க் கப்பை வாங்கிக் கொண்டாள் வத்சலா..

"என்னங்க செய்கிறது..? கூட வந்திருக்கீங்களே.." என்றான் அவன்..

சசிரேகாவுடன் அவள் வந்திருப்பதை அவன் சுட்டிக் காட்ட.. வத்சலாவோ வேறு விதமாக அர்த்தம் சொன்னாள்.

"இருந்தாலும் இவனுக்கு இத்தனை கொழுப்பு ஆகாதுடி.. நான் இவன்கூட வந்திருக்கேணாம்.. நினைப்புத்தாண்டி இவனுக்கு."

'இவள் கொஞ்சம் நேரம் வாயை மூடிக் கொண்டிருந்தால் தேவலை..' அலுப்பாக இருந்தது சசிரேகாவிற்கு..

எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளும் வாழ்க்கை வாய்க்கப் பெற்ற பாக்கியசாலி இவள்.. என்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா.. வத்சலாவிற்கு சசிரேகாவின் மனப் போராட்டத்தைப் பற்றித் தெரியாது..

சின்னஞ்சிறு வயதில் அவளுக்காக பார்த்துப் பார்த்துச் செய்த பெற்றோர் எட்டு வயதில் சசிரேகாவை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்கள்.. அதன் பின்னால் கேட்பாரில்லாத அனாதையாக அங்குசாமியின் வீட்டில் 'இடிசோறு' சாப்பிட்டு வளர்ந்தவள் அவள்.. அவளுக்கான படிப்புக்கூட எங்கே அவளுடைய தாய்மாமன் அதைக் காரணமாக சொல்லி கோர்ட்டை அணுகி அவளைக் கைப்பற்றிக் கொண்டு போய் விடுவானோ என்பதற்காக தடை விதிக்கப் படாமல் அவளுக்குக் கிடைத்ததுதான்.. அந்தச் சூழலில் அவள் என்னத்தைப் படித்துக் கிழிக்கப் போகிறாள் என்றுதான் பானுகீதா நினைத்தாள்.. அருமையான குடும்பச் சூழலைக் கொடுத்தும் அவள் பெற்ற மலர்கொடியும், மாலதியும் பிளஸ்-டூவைக் கூடத் தாண்டவில்லையே.. அப்படியிருக்கும் போது வீட்டில் ஏவும் வேலைகளைச் செய்யும் வேலைக்காரியாக இருக்கும்

சிறுமி.. சமையலறை மூலையில் ஒண்டியபடி என்னத்தைப் படிக்க முடியும்..?

சசிரேகா படித்தாள்.. மலர்கொடியும், மாலதியும் தாண்டாத பிளஸ்-டூவைத் தாண்டினாள்.. கல்லூரியில் காலடி வைத்தாள்.. நெஞ்சுவலி வந்த பானுகீதா அதற்கு விடமாட்டேனென்று ருத்ரதாண்டவம் ஆட.. அங்குசாமி அன்னவாசலின் சொத்து என்ற அங்குசத்தைக் கொண்டு அந்த ருத்ரதாண்டவத்தை அடக்கி நிறுத்தினார்..

"விவரம் தெரிஞ்ச வயசுல இருக்கற பொண்ணுடி.. நீ பாட்டுக்கு படிப்பை நிறுத்தினேன்னு வைய்யி.. அந்தக் காட்டத்தை மனசில போட்டுக்கிட்டு இவ மேஜரானவுடன் தாய்மாமன் பின்னாலே போயிட்டான்னா என்னடி செய்யறது.. அவ அப்பன் கூடப்பிறந்த அண்ணன்.. ரத்த சம்பந்தம்.. அது இதுன்னு சொல்லி அவ மனசை கரைச்சு வைச்சிருக்கேன் பானு.. கெடுத்துப்புடாதே.."

"படிக்க வைச்சா மட்டும் இவதாய்மாமன் பின்னால போகாம இவ நின்னுடுவாளா..?"

"நன்றிக்கடன்னு சொல்லி நம்ம காலடியில விழுக வைச்சிர மாட்டேனா..?"

சொன்னதைச் செய்து விட்டார் அங்குசாமி என்ற நினைவில் மனம் கசந்தாள் சசிரேகா.. நிமிர்ந்தபோது அவள் முகத்தில் தெரியும் உணர்வுகளை அவதானித்தபடி அவளையே அவன் பார்த்துக் கொண்டிருப்பது அவள் விழிகளில் பட்டது..

அவளது அந்தரங்க மனதில் அவன் எட்டிப் பார்ப்பதைப் போல உணர்ந்தவளுக்கு எரிச்சல் வந்தது..

'எல்லாம் இவனால்தான்..'

அவளது அனைத்துக் துன்பங்களுக்கும் அவனைக் காரணமாக்கி முறைத்தாள் அவள்..

"நானென்ன செய்தேன்..?"

எங்கோ பார்த்தபடி சன்னக்குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும்படி அவன் விசாரித்த விதத்தை அவளுக்குப் பிடித்துத் தொலைத்திருந்தது..

'இந்தச் சொந்தம் நிலைக்காத சொந்தம்..'

அவளுக்குள் வலி உண்டானது.. இழப்பைக் குறித்த நிச்சயம் மிகுந்த வலி அது.. இந்த மோகத்திற்கு எதிர்கால மில்லை என்பதை உணர்ந்திருந்தால் வந்த வலி அது..

இதோ.. அவளுடைய முகம் பார்த்து அவளுக்கான தேவைகளை கண்டுணர்ந்து பார்த்துப் பார்த்துச் செய்கிறவன் அந்த இரவுப் பயணம் முடிந்து விடியல் வரும்போது அவளுக்கு யாரோ ஒருவனாக விலகிச் செல்லப் போகிறான்..

எத்தனையோ வருடங்களுக்குப் பின்னால் அவளுக்காக யோசித்து செயல்படவும் ஓர் உயிர் இருக்கிறது என்று அவளுக்கு உணர்த்தியவன் அவன்.. அவளுக்குள் மோகத்தீயை பற்ற வைத்தவன்.. தகிக்கின்ற அந்தத் தீயைப் பற்றி உணராமல் அவளை அவளுடைய பெரியப்பாவின் காலடியில் தள்ளப் போகிறான்..

'இந்தப் பார்வையும்.. சொந்தமும் அதுவரைக்கும் தான்..'

சசிரேகா அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் காரில் ஏறி விட்டாள்.. வத்சலா அவனை மிதப்பாக பார்த்தபடி சசிரேகாவின் பக்கத்தில் உட்கார்ந்து.. அவன் வத்சலாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பதாக புகார் சொன்னாள்..

'இவ வேற.. நேரம் காலம் புரியாம காமெடி பண்ணிக்கிட்டு..'

கொட்டும் மழையில் வத்சலாவைத் தள்ளி விட்டால் என்ன என்ற கொலைவெறி மிகுந்தது சசிரேகாவிற்கு.. அது புரியாமல் தொணதொணத்துக் கொண்டிருந்த வத்சலா சசிரேகாவின் பார்வையைக் கண்டதும் அரண்டு போனவளாக..

"என்னடி..?" என்றாள்..

"பேசாம வாயை மூடிக்கிட்டு வரப் போறியா.. இல்லியா..?" சசிரேகா சீறினாள்..

மாட்டேன் என்று வத்சலா சொல்வாளா என்ன..? அந்த கும்மிருட்டு மழையில் சசிரேகா அவளைத் தள்ளி விடத் தயங்கவும் மாட்டாள் என்று வத்சலாவின் உள்ளுணர்வு அவளை எச்சரித்ததில் அவள் வாயை பசை போட்டு ஒட்டியதைப் போல இறுக்கமாக மூடிக் கொண்டாள்..

சசிரேகாவையே தீர்க்கமாக பார்த்தபடி டிரைவிங் சீட்டில் உட்கார்ந்தவன் கண்ணாடியை சரி செய்ததில்..

'வியு பார்க்கிறான்..' என்று பல்லைக் கடித்தாள் சசி..

அது அவளுக்குப் பிடித்தமானதாக ஆகித் தொலைத் திருந்ததில் அவளது மனம் ரணமானது..

இதுபோன்ற தருணத்தில்தானா அவள் மிக நுண்ணிய காதல் உணர்வுகளை நுகர வேண்டும்..?

இரக்கமற்ற விதியை எண்ணி நொந்து போனாள் சசிரேகா.. வாழ்க்கை குரூரமானது என்று அவளுக்குத் தோன்றியது.. காலம் கடந்த பரிசுகளால் யாருக்கு என்ன லாபம் ஏற்படப் போகிறது..?

கண்ணாடியில் தெரிந்த அவன் முகம் அந்த மழையிருட்டின் இடையே கடந்து போகும் வாகனங்களின் ஒளி வெள்ளத்தில் ஏற்படும் சிறு வெளிச்சத்தில் அவள் முகத்தைத் தேடிப் பார்த்துக் கொண்டிருந்ததில் மனம் வதங்கிப் போனாள் சசிரேகா..

அவன் அவள் உணர்வுகளுடன் விளையாடுகிறான் என்று தோன்றியது அவளுக்கு..

அவளைப்பற்றி அவன் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்ற சினம் அவளுக்குள் உண்டானது.. கண்களை இறுக மூட முயன்றாள் அவள்.. மூடிய கண்களுக்குள் வசீகரமாக புருவங்களை உயர்த்தியபடி அவன் வந்து நின்றான்.. சட்டென விழி திறந்து விட்டாள் சசிரேகா.. கடந்து போன காரின் வெளிச்ச

வெள்ளத்தில் அவன் முகம் தெரிய திரும்பவும் விழிகளை மூடிக் கொண்டாள்..

"இந்தத் துன்பம் கொள்ள..

என்ன காரணம்..?"

காரின் சிடி பாடலில் கேட்டது.. போய் அவனிடமே கேள் என்று கோபத்துடன் நினைத்துக் கொண்டாள் சசிரேகா..

அவளுடைய துன்பம் என்னவென்பதை அறிந்தவன் தானே அவன்..

5

"கண்ணா..! உன்னைத்

தேடுகின்றேன்.. வா..

காதல் குயில்

பாடுகின்றேன் வா..

உன்னோடுதான் வாழ்க்கை..!

உள்ளே ஒரு வேட்கை..!"

வேட்கை ததும்பும் அவன் பார்வையில் தொய்ந்து போனாள் சசிரேகா..! இது கொடுமை..! கண்ணுக்கு முன்னால் அவள் தலைகீழாய் பாய வேண்டிய பள்ளத்தாக்கு காத்திருக்கிறது.. அவள் கை பிடித்து இழுக்கும் காதல் வரிகள் காதில் கேட்டுத் தொலைக் கின்றன.. எதற்காக இந்தப் பாடல்..? எதற்காக இந்தப் பாடு..?

'இவன் குரூரமானவன்..'

உள்ளே கிளரும் மோகத்தீயில் கருகிச் சருகாகும் அவளது காதல் மனதைப் பற்றிக் கவலைப்படாமல் கிடைத்திருக்கும் சிறுவாய்ப்பில் அவள் மனதில் தீ மூட்டிப் பார்க்கிறான்.. அது வெறும் தீயல்ல.. மோகத்தீ..! கொழுந்து விட்டு எரியும்

அந்தத்தீயில் அவள் விழுந்து மடிவதைப் பற்றிய கவலையேதும் அவனிடம் இல்லை.

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நினைக்கிறேன்.." என்ற மிதப்பான வார்த்தைகளுடன் பிரவீன் அவள் மனதில் வந்தான்..

அவனால் இத்தகைய மோகத்தீயை அவள் மனதில் மூட்ட முடியவில்லையே... அது ஏன்..?

சசிரேகாவிற்கு காரணம் விளங்கவில்லை.. பிரவீனிடம் ஒரு கர்வம் தென்பட்டது.. அவளுடைய நிராதரவான நிலைமையைப் பற்றி அவன் அறிந்திருந்தான். அவளுக்கு வாழ்க்கைப் பிச்சை போடும் தயாளன் போல முகத்தை வைத்துக் கொண்டு அவளைத் திருமணம் பண்ணிக் கொள்ளலாம் என்று அவன் முடிவெடுத் திருப்பதாக அறிவித்தான்.. வெறும் வாய் வார்த்தைக்குக் கூட என்னைத் திருமணம் பண்ணிக்கொள்ள உனக்கு விருப்பமா என்று அவன் கேட்கவில்லை..

காலத்தின் ஓட்டத்தில் சசிரேகா நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொண்டிருந்தாள்.. விதி வகுத்த பாதையில் போனால் போகிறது என்று அவளுக்குக் கிடைத்த கல்விப் பிச்சையை இறுகப் பற்றிக் கொண்டு வாழ்க்கையில் மேலே ஏறும் வித்தையை வரமாகப் பெற்றிருந்தாள்..

இரக்கத்துடன் கூடிய பார்வைகளை அவள் விரும்புவதில்லை.. அவற்றை உதாசீனப்படுத்தி விட்டு நகர்ந்து விடுவாள்..

பிரவீனிடமும் அதைத்தான் செய்தாள்..

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நீங்க நினைச்சா மட்டும் போதாது.."

"வேற யார் நினைக்கனும்..? நீ நினைக்கனுமா..?"

அவனுடைய எகத்தாளமான கேள்வியில் நீ நினைக்காமல் என்ன செய்யப் போகிறாய் என்ற கேள்வி தொற்றி நின்றது..

'என்ன ஒரு ஆணவம்..' கொதித்துப் போனாள் சசிரேகா..

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியும்.. அப்பா, அம்மா இல்லையாமே.. சொந்தக்காரங்க தயவில படிச்சியாமே.."

இப்படிப்பட்ட பின்புலம் உள்ள சசிரேகாவை அவன் திருமணம் செய்து கொள்வது என்பது மிகப் பெரிய விசயம் என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டு அவன் பேசி வைத்தான்..

எடுத்த எடுப்பிலேயே அவளை 'நீ, வா, போ..' என்று ஏக வசனத்தில் அவன் அழைத்ததை நினைத்துப் பார்த்தாள்..

எதனால் அப்படி அழைத்தான்..? உரிமையினாலா.. இல்லை இவளுக்கு இந்த மரியாதை போதும் என்ற அலட்சியத்தினாலா..?

சசிரேகாவிற்கு என்னவோ முன்னதை விடப் பின்னது தான் காரணமாக இருக்க முடியும் என்று தோன்றியது..

"என் பெரியப்பா நினைக்கனும்.." அவள் கண்டிப்புடன் சொன்னாள்..

அவளது கண்டிப்பை விரும்பாத சிடுசிடுப்பு அவன் முகத்தில் வந்தது இன்னமும் சசிரேகாவின் நினைவில் இருக்கிறது..

"என்ன நீ..! அநாதையா வளர்ந்தவளுக்கு அடைக்கலம் கொடுக்கலாம்ன்னு பெரிய மனசு பண்ணி பெருந்தன்மையா உன்கிட்டச் சொல்ல வந்தா.. நீ 'ஆஹா'.. நமக்கு இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்கப் போகுதேன்னு மகிழ்ந்து எனக்கு நன்றி சொல்லாம பெரிய இவ மாதிரி பெரியப்பா, சித்தப்பான்னு சுத்தி விடற.. என்ன..? மனசுக்குள்ள பெரிய ரதின்னு நினைப்பா..? இல்ல.. இப்படி சுத்தி விட்டாத்தான் உனக்கு மதிப்புங்கிற எண்ணமா..? நீ யாருன்னு எனக்குத் தெரியாதா..?" அடிக்குரலில் அவளிடம் சீறினான்..

அவனுடைய சீற்றத்தை சசிரேகா சட்டை பண்ணவேயில்லை.. போடா நீயுமாச்சு.. உன் கோபமாச்சு

என்ற அலட்சியத்துடன் நிமிர்ந்து நின்றாள்.. அவளுடைய அந்த நிமிர்வை பிரவின் கொஞ்சம் கூட விரும்பவில்லை என்பதும் அவள் நினைவில் இருந்தது..

"நான் யாரா..? நான் சசிரேகா..! இதுகூடத் தெரியாமலா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்னு வந்து நிற்கறிங்க..?"

"சசிரேகா..!"

"யெஸ்..! இதுதான் நான்.. நான் பெரிய 'இவ' இல்லை.. பட்.. நீங்க மட்டும் பெரிய 'இவரா..'?"

"மைண்ட் யுவர் வெர்ட்ஸ்.."

"இதை நான் சொல்லனும்..? ஒரு பெண்ணிடம் எப்படிப் பேசனும்கிற பேசிக் கர்ட்டசி கூட உங்ககிட்ட இல்லை.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு நான் மகிழ்ந்து போய் உங்க காலில் விழுகனுமா..? நினைப்புத்தான் உங்களுக்கு.. நான் அநாதையாய் வளர்கிறேன்.. இல்லை.. ஆள், அம்புன்னு வளர்கிறேன்.. அது என்னோட பிரச்சனை.. அதைப்பத்தி உங்களுக்கு என்ன வந்தது..? நீங்க யார் என்னைப் பத்திப் பேச..?"

"ஏய்.. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க நினைச்சேன்.."

"யாரைக் கேட்டு நினைச்சீங்க..?"

சசிரேகா நிதானமாக கேட்டதில் அவன் திகைத்துப் போனான்.. 'நினைத்தது ஒன்று.. நடந்தது ஒன்று.. அதனால் விழிக்குது அய்யாக் கண்ணு..' சசிரேகாவுக்குள் எரிச்சல் கலந்த சிரிப்பு வந்தது..

'இப்ப முழி..' அவள் பல்லைக் கடித்தபடி தாளித்தலைத் தொடர்ந்தாள்..

"இந்த 'ஏய்' ன்னு கூப்பிடறதையெல்லாம் என்னிடம் வைத்துக்காதீங்க.. வா, போன்னும் கூப்பிடாதீங்க.. எனக்குப் பிடிக்காது.. மரியாதை கொடுத்து மரியாதை

வாங்கிக்கனும்.. நீங்க வா, போன்னு பேசினா நானும் அப்படியே பேச வேண்டியிருக்கும்.."

"நான் எவ்வளவு பெரிய ஆள்ன்னு தெரியுமா..?"

"இருந்துட்டுப் போங்க.. அது உங்க மட்டுக்கு.. எனக்கு என்ன வந்தது.. இன்னைக்கு உங்க பக்கம் இருக்கிற காலம் என் பக்கம் வந்து நின்னா என் தலைவிதியே மாறிரும்.. அதனால அதிகமா ஆடாதீங்க சார்.. அடங்குங்க.. வாழ்க்கை எனக்கும் வசமாகும்.."

அவனை அவள் அடக்குவதா..?

'என்ன திமிர்..!' அவன் முகம் கருத்தான்..

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவன் நான்.. வா, போன்னு பேசக் கூடாதா..?"

"அதைக் கல்யாணம்ன்னு ஒன்னு உங்ககூட எனக்கு நடந்தாப் பாத்துக்கலாம்.. இப்பப் பார்த்துப் பேசிப் பழகுங்க.."

நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையுமாக சசிரேகா அகன்றுவிட.. தான் அவமானப்படுத்தப் பட்டு விட்டதாக கொதித்துப் போனான் பிரவீன்.. அவனுக்கு அடி பணியாத சசிரேகாவை அடக்கி அவன் காலடியில் அடி பணிய வைக்க வேண்டும் என்பதற்காகவே அவள் கழுத்தில் கட்டாயம் தாலிகட்டி விட வேண்டுமென்ற வெறி அவனுக்கு உண்டானது.. அந்த வேகத்துடன் அவன் அங்குசாமியைத் தேடிப் போனான்.. போகும் போது சசிரேகாவிடம் சூளுரைத்து விட்டுத்தான் போனான்..

"போறேன்.. உனக்கு ஓசிச்சோறு போட்ட அந்த ஆள்கிட்ட உன்னைப் பெண் கேட்டுப் போறேன்.. ஒற்றைப் பைசா செலவில்லாம உன்னைத் தள்ளிவிட அவனுக்கு வழி கிடைச்சா அந்த ஆள் வேண்டாம்ன்னா சொல்லப் போறான்..? அப்புறம் இருக்கு உனக்கு.."

'அப்படியும் நடந்து விடுமோ..' சசிரேகா நடுங்கித்தான் போனாள்..

அப்படி ஏதும் நடக்கவில்லை.. மாறாக அதை விடவும் மோசமாக விடிந்தால் கல்யாணம்.. விடிவதற்குள் வந்து சேர்.. என்ற தகவல்தான் வந்து சேர்ந்தது..

"குளிருதா..? ஏஸியைக் குறைக்கவா..?"

கண்ணாடி வழி அவளைப் பார்த்தபடி கேட்டான் அவன்.. சசிரேகா முறைத்தாள்.. அரைத் தூக்கத்துடன் சரிந்திருந்த வத்சலா அதைக் கவனிக்கவில்லை.. அவளது முறைப்பை அவனது ஆழ்ந்த பார்வை எதிர் கொண்டதில் கலவரமாகிப் போனாள் சசிரேகா..

"நான் உங்க எதிரியில்லை.." சன்னக் குரலில் முணுமுணுத்தான் அவன்..

சசிரேகா வத்சலாவைப் பார்த்தாள்.. அரைத் தூக்கம் முழுத் தூக்கமாகிவிட அவள் ஜன்னலோரமாக சரிந்து தூங்க ஆரம்பித்திருந்தாள்.. சீரான அவளுடைய சுவாசம் அவள் ஆழ்நிலைத் தூக்கத்திற்குப் போய் விட்டதை அறிவுறுத்த..

"நீங்க எனக்கு நண்பனுமில்லை.." என்று மெல்லிய குரலில் சிடுசிடுத்தாள் சசிரேகா..

"இத்தனை கோபம் எதுக்குங்க..?"

"அதைத் தெரிஞ்சுக்கிட்டு உங்களுக்கு ஆகப் போகிறது எதுவுமில்லை.."

"அப்படி நீங்களா நினைச்சுக்கிட்டா எப்படி..? உங்களுக்கும் எனக்கும் ஆகாமப் போகக் கூடாது பாருங்க.."

"என்ன தேவைக்கு..?"

"என் தேவைக்குன்னு வைத்துக்கங்களேன்.."

அவனது ஆழ்ந்த பார்வை மீண்டும் அவள் மீது படிந்தது.. அவள் பேச்சிழந்து போனாள்.. துளைக்கும் அவன் பார்வை குளிருக்கு இதமாக ஓர் போர்வை போல அவள் மேனி முழுவதும் பரவி வருடி அவளுள் இறங்கியது.. மோகத்தீ அவள் மனதில் மூண்டது.. அரண்டு போனவளாக அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. அவன் பார்வையைச்

சந்திக்கும் திராணி அவளிடம் இல்லை.. சக்தி முழுவதும் வடிந்தவளாக எதிர்க்கும் தெம்பின்றி நிராயுதபாணியாக மனதுக்குள் மறுகினாள்..

'வேண்டாம்..' அரற்றினாள்..

'என்னை இப்படிப் பார்த்துத் தொலைக்காதே.. மோகத்தை மூட்டும் இப்பார்வையினால் யாதொரு பிரயோசனமும் இல்லை.. நான் வீழ்வதற்காகப் பயணித்துக் கொண்டிருப்பவள்.. உன் பார்வையினால் என் மனதில் இற்றுப் போயிருக்கும் நுண்ணிய உணர்வுகளை பற்ற வைக்க முயலாதே.. எரிக்கும் அந்தத் தீயின் வெப்பத்தில் நான் அழிந்து விடுவேன்..'

மூடிய இமைகளைத் தாண்டிக் கண்ணீர் வழிந்தது..

'இது நானா..?'

திடுக்கிட்டுப் போனாள் சசிரேகா.. எந்தவொரு தருணத்திலும் கண்ணீர் விடாதவள் அப்போது கண்ணீர் விடுகிறாளா..? எதற்காக..?

எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல் ஓர் துறவியைப் போன்ற மனநிலையுடன்தானே அவள் கிளம்பி வந்தாள்..?

ரங்கசாமி பெற்ற மகள் பெரியவர்களின் பேச்சை மீற மாட்டாள் என்பதை உற்றார், உறவினர் முன்னால் நிருபிக்க வேண்டும் என்றுதானே அவள் கிளம்பி வந்தாள்..?

அப்படியிருக்க எதற்காக அவள் அழுகிறாள்..?

அவளது கன்னத்தில் படிந்த வெப்பமான விரல்களின் கடினமான ஸ்பரிசத்தில் பதறிப் போய் இமை திறந்தாள் சசிரேகா..

மின்வெட்டும் நேரத்துக்குள் அவள் கன்னத்தில் படிந்திருந்த கண்ணீரைத் துடைத்து விட்டு விலகிக் கொண்டன அவனது விரல்கள்.. அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.. அவன் விரல் பட்ட இடங்கள் நடந்த நிகழ்வை நினைவு படுத்தியதில் சூடாகிப் போனாள் அவள்..

"என்ன இது..?" சீறினாள்..

"அழுகாதீங்க.. ப்ளீஸ்.." மென்மையாக அவன் சொன்னதில் அவளது தேகத் தகிப்பு அதிகமானது..

"அதுக்காக என்னைத் தொடுவீங்களா..?"

"கண்ணீரைத் துடைத்தேன்.."

"கன்னத்தைத் தொட்டுத் துடைத்தீங்க.."

"கன்னத்தைத்தானே தொட்டேன்..?"

சன்னமாக அவன் கேட்டு வைத்ததில் அவள் தடுமாறிப் போனாள்.. இது போன்ற உரையாடல்கள் அவளுக்குப் பழக்கமில்லை என்பது ஒர்புறமிருக்க.. அவன் கேட்ட கேள்வியில் அவளுக்குள் பட்டாம்பூச்சிகள் பறப்பதைப் போன்ற நூதன உணர்வு எழுந்து அவளை ஆட்டிப் படைத்தது..

'இவனை ஏன் நான் பார்த்துத் தொலைத்தேன்..?'

மறுகினாள் சசிரேகா.. எது அவளை அவன் பக்கமாக ஈர்த்து என்று யோசித்துப் பார்த்தாள்.. யோசிக்க.. யோசிக்க.. அவள் அவனைப் பார்த்த முதல் பார்வையிலேயே விழுந்து விட்டாள் என்பது புரிந்து தொலைத்தது.. எல்லையற்ற வசீகரத்துடன் அவள் விரும்பும் ஆண் மகனின் வடிவாக அவள் முன்னால் வந்து தொலைத்திருந்தவனை அவள் விரும்பத் தொடங்கி விட்டதை அவள் உணர்ந்தாள்..

"சசி.. உனக்கு எப்படிப்பட்ட ஹஸ்பெண்ட் வேணும்..?"

லேடிஸ் ஹாஸ்டலில் ஓர் பௌர்ணமி நிலாச்சோறு விருந்தின் போது வட்டமாக உட்கார்ந்திருந்த பெண்கள் வாயடித்தார்கள்.. யாருக்கு எப்படிப்பட்ட தோற்றத்துடன் கணவன் வாய்க்க வேண்டும் என்று அவர்கள் கலந்துரையாட ஆரம்பித்த போது ராதிகா சசிரேகாவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டாள்..

"ம்ம்ம்.."

யோசித்த சசிரேகா.. கண்களை மூடி அவள் மனதுக்குள் பிடித்த ஆண்மகனைக் கற்பனையில் கொண்டு வந்து நிறுத்தி ஒவ்வொன்றாக பட்டியலிட்டாள்..

"உயரமா இருக்கனும்.."

"பலே..! நெக்ஸ்ட்..?"

"வாட்ட சாட்டமா இருக்கனும்.."

"பாருடா.. இந்தப் பாப்பாவும் சைட் அடிக்குமான்னு இருந்துக்கிட்டு இவ போட்டுத் தாக்கறதை.. மேலே சொல்லு..."

"பெண்களை மதிக்கிறவனா இருக்கனும்.."

இப்படி அவள் பட்டியலிட்ட அத்தனை அம்சங்களும் ஒன்று சேர ஒருவன் அவள் எதிரில் வந்து ஒர்நாள் நிற்பான்.. அப்படி வந்து நிற்பவன் வேறு ஒருவன் கட்டப் போகும் தாலியை கழுத்தில் வாங்க அவளை அழைத்துக் கொண்டு போகிறவனாக இருப்பான் என்று அவள் கனவா கண்டாள்..?

"இப்படியொரு ஹீரோ எவளுக்குமே கிடைக்க மாட்டான்.. உனக்கு எப்படிக் கிடைப்பான்..?"

இப்படித்தான் அன்று ராதிகா சொன்னாள்.. அப்படியொரு ஹீரோவை சசிரேகா நேரில் பார்த்தும் அவன் அவளுக்கு எட்டாக் கனியாக நிற்பது பெரும் துயரம்..!

"என்னிடம் இப்படிப் பேசாதீங்க.." நிறைவேற முடியாத ஆசைகளைத் தேக்கி வைத்திருந்த சசிரேகா நிராசையுடன் அவனை முறைத்தாள்..

"வேற யார்கிட்டப் பேசச் சொல்றீங்க..?" அவன் வேடிக்கைபோலக் கேட்டு வைத்து அவள் கோபத்தை அதிகப் படுத்தினான்..

"இதோ.. தூங்கிக்கிட்டிருக்கா பாருங்க.. இவளை வேணும்னா எழுப்பி விடறேன்.. நீங்க பேசனும்னு

நினைக்கிறதையெல்லாம் இவகிட்ட ஆசை தீரப் பேசுங்க.." வத்சலாவை எழுப்பப் போனாள் சசிரேகா..

"உங்களுக்கு நான் என்னங்க கெடுதல் பண்ணினேன்..? இப்படிப் பழி வாங்கறிங்களே.. வேண்டாங்க.. நான் தாங்க மாட்டேங்க.."

கெஞ்சுதல் போல் அவன் பேசிய விதம் அவளை வசீகரித்தது.. அவளிடம் மட்டும் அவன் பேச முயல்வதில் ரகசிய சந்தோசம் கொண்டாள் அவள்.. இருள் பரவிய காருக்குள் அவனது பார்வை அவளைப் பார்ப்பதை அவள் தெளிவாக பார்த்துக் கொண்டிருந்தாள்.. எங்கிருந்தோ ஓர் மயக்கம் வந்து அவளை ஆட் கொண்டது.. சசிரேகா அவளது நிலைமையை மறந்தாள்..

"தேவதையைப் போல இருக்கீங்க.."

கிசுகிசுப்பான அவனது குரலில் இருப்பது கிறக்கமா இல்லை பாராட்டா என்று கணிக்க முடியாமல் மனம் தடுமாறினாள் சசிரேகா.. அவனது குரல் அவளுக்கும் அவனுக்குமான ரகசிய உலகுக்கு பாலமிட்டு அவளை அழைத்துச் சென்றது..

"உங்களை நேரில் பார்த்ததும் அசந்துட்டேன்.. ஹப்பா..! என்ன மாதிரியான அழகு..! ஆளை அடிச்சுப் போடற அழகு.."

'நீ அடிபட்டாயா..?' கேட்க விரும்பினாள் அவள்..

விரும்பியதெல்லாம் நிறைவேறவா செய்கிறது..? மௌனம் அவள் வாய்க்குப் பூட்டுப் போட.. அவன் பேசுவதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தாள்.. அதுவே போதும் என்று அவளுக்குத் தோன்றியது.. அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் அவன் பேசும் ரகசியப் பேச்சுக்கள் அவளுக்கானவை என்பதில் அவள் மனம் தித்தித்தது..

"உங்களை வீட்டில வைச்சுப் பூப்போடனும் போலத் தோணுச்சு.." அவன் குரல் நெகிழ்ந்தது..

'உன்னால் அது முடியுமா..?' விசனத்துடன் அவள் நினைத்துக் கொண்டாள்..

இப்படிப் போற்ற நினைக்கிறவன் கொட்டும் மழையில் எதற்காக அவளை அழைத்துக் கொண்டு போக வேண்டும்..? அப்படியொரு நேர்த்திக் கடனா அவனுக்கு..? அவன் விரும்பும் பெண்ணை மாற்றானின் காலடியில் கொண்டு தள்ள எப்படி அவனுக்கு மனம் துணிகின்றது..?

## 6

பூக்கள் சொறிவதைப் போல மழை பூச்சாரலாய் சொறிந்து கொண்டிருந்தது.. அடித்துக் கொட்டிய மழை வேகம் தணித்ததில் 'அப்பாடா' என்ற ஆறுதல் தோன்றி விடவில்லை சசிரேகாவிற்கு..

தலைக்கு மேல் வெள்ளம் போய் கொண்டிருக்கிற போது இனி சாண் போனால் என்ன.. முழம் போனால் என்ன.. என்ற விரக்தி மனநிலையில் அவள் இருந்தாள்..

"மழை நின்னுருச்சு.. தூறல்தான்.."

அதே கிசுகிசுப்பான தொனியில் அவன் சொல்லி வைத்தான்.. அந்தத் தொனி சசிரேகாவின் ஆழ்மனதை உசுப்பியதில்..

'இதைக்கூட ரகசியமாகத்தான் சொல்லித் தொலைக்கனுமா..?' என்று அவள் எரிச்சலடைந்தாள்..

"மழை நேரமே ஒரு சுகம்தான்.."

அனுபவித்து ரசித்து அவன் சொன்ன விதத்தில் ஈர்க்கப்பட்டாள் சசிரேகா.. அவன் பேசிய அனைத்துமே அவளை ஈர்க்கத்தான் செய்தன.. என்ன பேசுவது என்று வார்த்தைகளைத் தேடாமல்.. ஏதாவது ஒன்றைப் பற்றி வார்த்தைகளைக் கோர்த்து அவன் பேசும் விதம் அலாதியான ஒன்றாக இருந்தது.. மழையிலிருந்து.. அந்த

இரவு நேரத்துப் பயணம் வரை அத்தனையையும் அவன் ரசித்துச் சொன்னான்..

அதுபோன்ற ஆழ்ந்த உரையாடல்களை அவள் செவி மடுத்ததில்லை..

சின்னஞ்சிறு வயதில் ரங்கசாமியும், தாரிணியும் அவளைக் கொஞ்சிப் பேசிய இதமான உரையாடல்கள் பசுமரத்தாணி போல அவள் மனதில் ஆழமாக பதிந்திருந்தன.. அவற்றில் அன்பும் பாசமும் கொட்டிக் கிடந்தன.. ஆழ்ந்த உரையாடல்கள் இல்லை.. சின்னஞ் சிறுமியிடம் ஆழ்ந்து உரையாட முடியுமா..? கொஞ்சத் தானே முடியும்..?

எட்டு வயதுக்குப் பின்பு அவள் வாழ்வில் உரையாடல்களே இன்றி தொலைந்து போய் விட்டன.. அங்குசாமி மனைவி, மகள்களுடன் உரையாடுவார்.. சசிரேகாவை ஒரு மனிதஜீவனாக நினைத்துக் கூடப் பார்க்க மாட்டார்.. பானுகீதாவைப் பற்றியும் அவள்

பெற்ற அருமந்தப் புதல்விகளைப் பற்றியும் சொல்லவே வேண்டியதில்லை.. வேலை ஏவ மட்டுமே அவள்.. கூடிப்பேச இல்லை.. என்ற மனோபாவத்துடன் அவர்கள் இருந்தார்கள்..

பள்ளியில் பழகும் சிநேகிதிகள் பேச வருவார்கள்.. சசிரேகா ஒதுங்கிப் போய் விடுவாள்.. பள்ளிக்கூடத்திற்குச் சென்றோமா.. வாயை மூடிக்கொண்டு படித்தோமா என்றிருக்க வேண்டும்.. அதை விட்டுவிட்டு கூடப் படிக்கும் பிள்ளைகளிடம் வீட்டில் நடப்பதைச் சொல்லி வைத்தால் கால் முறிக்கப்படும் என்று சசிரேகாவை பானுகீதா அரட்டி வைத்திருந்தாள்.. கால்கள் முறிவதைப் பற்றிக்கூட சசிரேகா கவலைப்படவில்லை.. அப்படி நடந்து விட்டால் பள்ளிக்கூடம் செல்ல இயலாதே என்று வாயிருந்தும் ஊமையாக மௌனித்து விடுவாள்..

'அப்படிப் போராடி படித்த படிப்பு இது..' சசிரேகாவின் மனம் விம்மியது..

எதற்காக அவள் படித்தாள்..? கல்வியும், கல்வி மூலமாக கிடைக்கும் தன்னம்பிக்கையும், வேலையும் அவளை சிறை மீட்டு விடும் என்ற நம்பிக்கையில்தானே படித்தாள்..? அது நிகழ்ந்ததா..? படித்த படிப்புக்கு வேலை கிடைத்தது.. அவளும் அங்குசாமியின் வீடு என்ற சிறையிலிருந்து விடுபட்டு தன் காலில் நின்றாள்.. என்ன பிரயோசனம்..? இதோ.. நன்றிக்கடன் என்ற போர்வையில் அவளை மறுபடியும் அங்குசாமி சிறைபிடித்து விட்டாரே..

"நெஞ்சுக்குள் பெய்திடும்..

மாமழை..!"

காரின் சிடி பாடியது.. தூக்கக் கலக்கத்தில் இருந்த வத்சலா அந்தப் பாட்டைக் கேட்டதும் லேசாக கண் திறந்து பார்த்து விட்டு இமைகளை மூடிக் கொண்டாள்..

'இவள் ஒருத்திதான் நான் பேசினாலும் பேசாட்டியும் அதைப்பத்திக் கவலைப் படாம லொடலொடன்னு வாயடிப்பா..' சசிரேகா நெகிழ்ச்சியுடன் நினைத்துக் கொண்டாள்..

சசிரேகா பதில் சொல்கிறாளா இல்லையா என்று வத்சலா கவனிக்கவே மாட்டாள்.. ஒதுங்கிப் போகிறவளை இழுத்து வைத்துப் பேசுவாள்.. காலப் போக்கில் நத்தை

தன் கூட்டிலிருந்து வெளியே வருவதைப் போல சசிரேகாவும் தனது மௌனக் கூட்டிலிருந்து வெளியே வந்தாள்.. வத்சலாவுக்கு இணையாக பேசிப் பழக ஆரம்பித்தாள்..

"இப்படி வாயடிக்கிறவ எதுக்காகடி ஊமை வேசம் போட்ட..?" வத்சலா ஆற்றாற்றுப் போவாள்..

அவளும் கூட ஆழ்ந்த பேச்சுக்களைப் பேச மாட்டாள்.. அதை சசிரேகாவிற்கு முதன் முதலாக உணர்த்தியவன் அவன்தான்..

"அருமையான பாட்டில்ல..?"

ரகசியக் குரலில் சிலாகித்த அவன் சிலாகிப்பு அவளையும் உடன் சிலாகிக்கச் சொல்லி அழைத்தது..

'இது ஒன்னுதான் குறைச்சல்..' வேதனையில் வெம்பியது சசிரேகாவின் மனம்..

அவளை மீளாச் சிறையில் தள்ள அழைத்துப் போகிறவன் எதற்காக ரகசியப் பார்வைகளும்.. ஆழ்ந்த உரையாடல்களுமாக அழைத்துப் போக வேண்டும்..?

"பசிக்குது.. நைட் டிபனை இந்த டவுனில் முடிச்சுரலாமே.."

அபிப்ராயம் கேட்காமல் முடிவாக அவன் சொல்லியதில்.. இதை எதற்காக என்னிடம் சொல்கிறாய் என்று அவனை முறைத்தாள் சசிரேகா.. அவளுடைய அபிப்ராயம் தேவையே இல்லையா..?

"இல்லை.. இதற்கடுத்து பெரிய டவுனா எதுவும் இல்லை.. சின்ன ஊர்களிலும் ஹோட்டல்களை இழுத்து மூடியிருப்பாங்க.. ராத்திரி பத்து மணியாகிருச்சு.. இங்கே விட்டா எங்கேயும் நைட் டிபன் கிடைக்காது.."

அவளது முறைப்பிற்கு தழைந்த குரலில் அவன் விளக்கம் சொன்னது ஏதோ ஒரு வகையில் அவளைச் சமாதானப் படுத்தியது..

"எனக்குப் பசிக்கலை.." என்றாள்..

"இவங்களுக்குப் பசிக்காதா..?"

அவன் வத்சலாவை கை காட்டியதை அவள் விரும்பவில்லை..

"அவ்வளவு அக்கறையிருந்தா இவளை எழுப்பிச் சாப்பிடக் கூப்பிட்டுக்கிட்டுப் போங்க.." சிடுசிடுத்தாள்..

அவன் நிதானமாக அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான்.. ஓட்டலின் முன் பக்க விளக்குகளின் பிரகாசமான ஒளி வெள்ளத்தில் அவனுடைய துளைக்கும் பார்வை அவள் முகத்தை மொய்த்து மனதுக்குள் இறங்கி வைத்தது..

'இப்படிப் பார்த்துத் தொலைக்காதே..' அவளுக்கு அழுகைவந்தது..

உதட்டைக் கடித்து அழுகையை அடக்கிக் கொண்டவளைப் பார்த்தவனின் புருவங்கள் சுருங்கின.. ஏதோ சொல்ல வாயெடுத்தவன் தலையைக் குலுக்கிக் கொண்டு வேறு சொன்னான்..

"அக்கறைதான்.. நீங்க சாப்பிடலைன்னா இவங்களும் சாப்பிட மாட்டாங்கங்கிற அக்கறைதான்.."

அவனது ஆழ்ந்த பார்வை அவளை அள்ளி உண்டது.. வத்சலாவை முன்னிருத்தி அவளை சாப்பிட அழைக்கும் அவனது யுக்தி புரிந்ததில் அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்..

அவனது அக்கறை சசிரேகாவின் மீதானது என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கும் அவன் பார்வையைச் சந்திக்கும் சக்தி சசிரேகாவிற்கு இல்லை..

அதற்குள் காரின் ஓட்டம் நின்று போனதை உணர்ந்தவளாய் கண்களை கசக்கியபடி விழித்துப் பார்த்தாள் வத்சலா..

"என்னாச்சுடி.. டயர் வெடிச்சுருச்சா..?" சந்தோசமாக விசாரித்தாள்..

"இல்லை.." எரிச்சலுடன் சொன்னாள் சசிரேகா..

"ம்ப்ச்.. ரயில் பயணம் போல கார் பயணமும் புட்டுக்குச்சோன்னு சந்தோசப்பட்டுப் போனேன்.. அதுவும் இல்லையா..? என்னடி வரம் வாங்கிப் பிறந்திருக்க..? டயர் வெடிக்கலைன்னா எதுக்காக கார் நின்னிருக்கு..? கார் ஓடினாத்தானேடி தொட்டிலில படுத்திருக்கிறதைப் போல நான் ஜாலியாத் தூங்கிக்கிட்டே வர முடியும்..?"

"உனக்கு உன் பிரச்னை..!"

தப்பிக்க முடியாத பிரச்னையில் மாட்டியிருந்த சசிரேகா பொறாமையுடன் சொன்னாள்..

"உன் பிரச்னையை 'உஃப்'ன்னு ஊதறதுக்கு ஒரு வழி சொல்றேன் கேட்கிறயா..?"

"வேண்டாம்.."

"இப்படிப் பிடிவாதமா கண்ணைக் கட்டிக்கிட்டு மலையுச்சியில இருந்து குதிச்சுத்தான் தீருவேன்னு நீ ஒத்தைக் காலில நின்னா நான் என்னடி பண்றது..?"

"எதுவும் பண்ண வேண்டாம்.. ஹோட்டலில வந்து நைட் டிபனைக் கொட்டிக்க.."

"இது பேச்சு.."

காரை விட்டு இறங்கினாள் வத்சலா.. லேசான தூறலை கை நீட்டி ஏந்தியபடி ஹோட்டலை நோக்கி நடந்தாள்.. காரை விட்டு இறங்காமல் உட்கார்ந்திருந்தாள் சசிரேகா.. அவளுக்காக கார்கதவை திறந்து விட்ட 'அவன்' குனிந்து காருக்குள் பார்த்து..

"வாங்க.." என்றான்..

'வேறு வழியில்லை..' பெருமூச்சுடன் காரை விட்டு இறங்கிய சசிரேகா காருக்குள் ஏறும்போது தடுமாறியதைப் போல தடுமாறி விழப் போனாள்..

"பார்த்து.." சட்டென அவளை அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்..

காரில் ஏறும் போது தாங்கிப் பிடித்ததை விட இந்தப் பிடி இறுக்கமான பிடியாக இருந்தது.. அவளது இடையில் ஓர் கரத்தைக் கொடுத்து.. மறுகரத்தால் அவள் தோளைப் பற்றி இழுத்தவன் அணைத்துக் கொண்டதில் சசிரேகா மூச்சுத் திணறி விட்டாள்..

அவள் அதை எதிர்பார்க்கவில்லை.. ஓர் ஆண்மகனின் நெருக்கமான முதல் ஸ்பரிசம்..!

அவளது உடல் நடுங்கியது.. அவனிடம் உணர்ந்த இதமான நறுமணம் அவளது நாசியை வருடி நுழைந்ததில் அவள் கிறங்கிப் போனாள்.. அவளது இடையில் அழுந்தப்

பதிந்திருந்த வலிமையான அவனது கரத்தின் வெப்பம் அவளது உடலுக்கு இடம் மாறியது..

சாலையில் சென்ற பஸ் ஒன்றில் கேட்ட பேச்சுக்குரலில் தன்னுணர்வுக்கு மீண்ட சசிரேகா அவசரமாக விலகிக் கொண்டாள்.. அவனது தொடுகையில் அவளுக்குள் மூண்டு விட்டிருந்த மோகத்தீ அவளை பொசுக்க ஆரம்பித்திருந்தது.. உல்லாசமான அவனது உரிமைப்பார்வை கட்டிக் கொண்டவனைப் போல சொந்தம் பாராட்டியதில் அவள் வெகுண்டாள்..

'எவ்வளவு தைரியமிருந்தா இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக கூப்பிட்டுக்கிட்டுப் போகிற பொண்ணை இவன் கட்டிப் பிடிப்பான்..?'

விருவிருவென அவள் வத்சலாவிடம் போய் விட்டாள்.. நிதானமாக அவர்களை நெருங்கி வந்தவனின் பார்வை ஏதோ ஓர் செய்தியைச் சொன்னது.. என்ன அது என்று மனம் குழம்ப முடியாமல் சற்று முன் நடந்த ஆலிங்கனத்திலேயே மனம் லயித்திருந்ததில் சசிரேகா அவன் முகம் பார்க்காமல் உள்ளே நடந்தாள்..

"என்ன வேணும்..?"

தனித்த ஏஸி ஹாலில் உட்கார்ந்தவன் சசிரேகாவைப் பார்த்துக் கேட்டான்.. அவள் எவருக்குக் கொடுக்கப்படும் விருந்தோ என்று விட்டத்தைப் பார்த்தாள்.. என்னைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் களத்தில் நான் இறங்குவேன் என்று வத்சலா..

"மெனு கார்டு எங்கே..?" என்று தேடினாள்..

"இதோ.. இங்கே இருக்கு.."

அப்போதும் அந்த மெனுகார்டை சசிரேகாவிடம் தான் அவன் நீட்டினான்.. அவள் வாங்கிக் கொள்ளாமல் முறைக்க.. வத்சலா அதைப் பறித்தாள்..

"நான் வெஜ் ஹோட்டல்தானே..?" அவனிடம் கேள்வி வேறு கேட்டாள்..

"மெனு கார்டைப் பார்த்தீங்கன்னா தெரிஞ்சுருமே.." முகம் மாறாமல் அவன் சொன்னான்..

"இந்த சிச்சுவேசனில உனக்கு நான்வெஜ் அயிட்டம் கேட்குதா..?" கொதித்தாள் சசிரேகா..

"ஏன்..? இந்த சிச்சுவேசனுக்கு என்ன..?"

அவன் புருவங்களைச் சுருக்கியதில் அவனுடைய முன்னுச்சி முடியைப் பிடித்து இழுத்து நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற வெறி கிளர்ந்தது சசிரேகாவுக்கு..

'பாவி.. ரயில் நின்னு போச்சு.. நானென்ன செய்வேன்னு தப்பிக்க வழியில்லாம தேடி வந்து கடத்திக் கிட்டு வர்றவன் கேட்கிற கேள்வியைப் பாரு..'

"அதானே.." வத்சலாவும் அவனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டாள்..

"உனக்கு நான்-வெஜ்ஜை வெட்டியாகனும்.. அதுக்கு என்ன வேணும்னாலும் சொல்லுவ.." என்ற சசிரேகா அவளுக்கு இரண்டு இட்லிகளை மட்டும் ஆர்டர் செய்தாள்..

அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத வத்சலா மெனுகார்டில் அச்சடிக்கப் பட்டிருந்த ஒவ்வொரு அயிட்டத்திலும் ஒரு 'பீஸ்' கொண்டுவரச் சொல்லிக் கொண்டிருந்தாள்..

அதிசயத்திலும் அதிசயமாக அவனும் சசிரேகாவைப் போல இரண்டு இட்லிகளுடன் நிறுத்திக் கொண்டான்..

"ஏன் சார்..?" என்ற வத்சலாவிடம்..

"ஹெவியா சாப்பிட்டா டிரைவ் பண்ண முடியாது.." என்று விளக்கம் சொன்னான்..

ஆனால் அவன் சசிரேகாவைப் பார்த்த பார்வை நீ எவ்வழியோ.. நானும் அவ்வழி என்றது..

சசிரேகாவுக்குள் இதமான இம்சை கிளர்ந்தது..

இரண்டு இட்லிகளைப் பிட்டுப்பிட்டு.. என்னவோ இருநூறு இட்லிகளைச் சாப்பிடுவதைப் போல படு நிதானமாக சசிரேகா மென்று கொண்டிருக்க.. அந்த ஹோட்டலில் தயாராகியிருந்த அத்தனை அசைவ பதார்த்தங்களிலும் ஒரு பிளேட்டை ருசி பார்த்து உள்ளே தள்ளி ஏப்பம் விட்ட வத்சலா கை கழுவ எழுந்து விட்டாள்..

"இன்னுமாடி சாப்பிடற..?"

வேற்றக்கிரகவாசியைப் பார்ப்பதைப் போல விசித்திரமாக வத்சலா பார்த்த விதத்தில் மீதமிருந்த இட்லியை ஒரே வாயில் உள்ளே தள்ளி விட்டு எழுந்தாள் சசிரேகா..

காருக்குத் திரும்பியபோது வத்சலா அடம் பிடித்தாள்..

"பாருடி சசி.. டிரெயின்னா பர்த் இருக்கும்.. நிம்மதியாத் தூங்கிக்கிட்டுப் போகலாம்ன்னு பார்த்தேன்.. அதுக்கு வழியில்லாம இவர் காரில தூக்கிப் போட்டுக்கிட்டு வந்துட்டார்.."

"அதுக்கு..?"

"பகல்ல டிராவல் பண்ணினாலே எனக்குத் தூக்கம் சொக்கும்.. இந்த லட்சணத்தில நைட் டிராவல் வேற.. கேட்கணுமா..? நான்வெஜ் அயிட்டங்கள் உள்ளே தள்ளினதில நீட்டி நிமிர்ந்து படுத்துத் தூங்கச் சொல்லி என் உடம்பு கெஞ்சுதுடி.."

"என்னதாண்டி சொல்ல வர்ற..?"

"நான் பின்சீட்டில படுத்துத் தூங்கிக்கிட்டே வருவேனாம்.. நீ சமத்தா முன் சீட்டில உட்கார்ந்துக்கு வியாம்.."

சசிரேகாவின் பதிலை எதிர்பார்க்காமல் வத்சலா காரின் பின் சீட்டில் கட்டையை சாய்த்து விட்டாள்.. செய்வதறியாமல் நின்ற சசிரேகாவிற்கு காரின் முன்பக்கக் கதவை திறந்து விட்டான் அவன்.. சசிரேகா நடுக்கத்துடன் அவனை ஏறிட்டாள்.. அவனுடைய கள்ளச் சிரிப்பும்.. சங்கேதம் கலந்த பார்வையும் அவளை ஏதோ செய்தன.. பின் சீட்டில் இருந்த போதே அவளுக்குள் மோகக் கனலை

மூட்டி விட்டவன் அவன்.. பக்கத்திலேயே உட்காரப் போகிறாள் என்ன நடக்கப் போகிறதோ..

படபடக்கும் மனதோடு உட்கார்ந்தவளின் மீது அவனது விரல்கள் உராய்ந்து மீண்டன.. பற்றிக்கொண்ட மோகத்தீயில் அவள் போராடிக் கொண்டிருக்க அவன் எதுவுமே நடக்காததைப் போலச் சன்னமான விசிலுடன் காரைக் கிளப்பினான்..

என்னதான் அவள் ஒடுங்கி உட்கார்ந்தாலும் அவன் ஹேண்ட் பாரை வளைக்கும் சாக்கில் அவள்மீது பட்டுக் கொண்டே இருந்தான்.. ஒரு கட்டத்துக்கு மேல் அவளால் ஒடுங்க முடியவில்லை.. அவள் மனதுக்குப் பிடித்ததைப் போன்ற உருவம் கொண்ட ஆண்மகனின் ஸ்பரிசத்தை அவள் மனம் விரும்பி வரவேற்கத் தொடங்கி விட்டது..

மூண்டு விட்ட மோகத்தீயில் அவள் விழுந்து விட்டாள்.. அவள் தேகத்தின் மீது அவனது முழங்கை அழுந்தி உராய்ந்த அந்த நொடிகளில் கிளர்ந்தெழுந்த அவள் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் கண்மூடி சரிந்தாள்..

"ஏதோ மோகம்.. ஏதோ தாகம்..

நேத்து வரை நினைக்கலியே..

ஆசை விதை மொளைக்கலையே..

சேதி என்ன..? வனக்கிளியே..!"

காரில் ஒலித்த பாடல் அவளது மோகம் தூண்டப்பட்டது.. இப்போது அவனது முழங்கை தைரியமாக அவளது இடுப்புப் பிரதேசத்தில் ஊன்றி அழுந்தியது.. சசிரேகா துடித்துப் போனாள்.. விலகவும் முடியாமல்.. அவன்மீது சரியவும் முடியாமல் தத்தளித்தாள்..

அங்குசாமியின் வீட்டில் அகதியாக அவள் வளர்ந்த காலத்தை மறந்தாள்.. நன்றிக்கடன் என்ற பெயரில் அவளை மீளாச்சிறையில் தள்ளிவிட அவர் அழைத் திருப்பதை மறந்தாள்.. அதற்காகத்தான் அவன் அவளை

அழைத்துக் கொண்டு போகிறான் என்பதையும் மறந்தாள்.. விடிந்தால் ஊர், பெயர், முகம் தெரியாத ஒருவனுக்கு அவள் கழுத்தை நீட்டப் போகிறாள் என்பதையும் மறந்தாள்..

அவளை கொன்று தின்று கொண்டிருந்த மோகத்தீயில் அனைத்தையும் மறந்துவிட்டு சசிரேகா அமிழ்ந்து விட்டாள்..

## 7

பாலைவனத்தின் சுடு மணலில் நடந்து கொண்டிருப்பவளின் கண் முன்னால் குளிர் நிழல் நிரம்பிய பாலைவனச்சோலை தென்பட்டால் அவள் என்ன செய்வாள்..? இளைப்பாற மாட்டாளா..?

சசிரேகாவும் அதைத்தான் செய்தாள்.. அவளுக்காக காத்திருக்கும் காராக்கிருகத்தை மறந்து இதமான மோகத்தீயில் இளைப்பாற முயன்றாள்..

காரின் வேகம் குறைந்தது.. அவன் அவளது தோளில் தலை சாய்த்தான்.. அவனது வெப்ப மூச்சுக்காற்றில் அவளுடைய ஈர மூச்சுக் காற்று நடுநடுங்கியது..

"தாழம்பூவு ஈரமாச்சு..

தலையில் சூட நேரமாச்சு..

சூடுகண்டு ஈரமூச்சு

தோளைச் சுத்தக் காயமாச்சு.."

அவளது நடுக்கத்தை உணர்ந்தவன் மென் சிரிப்புடன் தலையை விலக்கிக் கொண்டதில் அவளது தேகம் அதிர்ந்தது.. காரை ஓட்டியபடி அவன் அவளையே பார்த்தான்.. இருளிலும் ஊடுறுவிய அவனது லேசர் பார்வையில் அவள் கிளர்ந்தாள்.. அவனது பார்வைக்கு பதில் பார்வையை அளிக்காமலிருக்க அவளால் முடியவில்லை..

மௌனம்..! வார்த்தைகளற்ற மௌனம்..! வார்த்தைகள் தேவைப்படாத மௌனம்..!

இதுபோன்ற தருணங்களும் தன் வாழ்வில் வரக்கூடும் என்று அன்றுவரை அறிந்திராத அவளது பிஞ்சு மனம் அவனது அண்மையில் தான் பெண் என்பதை உணர்ந்தது..

"பார்வையாலே நூறு பேச்சு..

வார்த்தை இங்கே மூர்ச்சையாச்சு..

போதும்.. போதும்.. காமதேவனே..!

மூச்சு வாங்குதே ரெண்டு ஜீவனே.."

பாடல் பரிந்துரை செய்தாலும் காமதேவன் அதைக் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை.. மன்மதன் விடுத்த மலர்க்கணைகள் அவள் நெஞ்சினில் தாக்கின.. அவன் காரை ஓட்டியபடி அவளது தோளைச் சுற்றிக் கை போட்டு இறுக்கிக் கொண்டான்.. சசிரேகா விலக மனமில்லாமல் அவன் தோள்மீது சாய்ந்து விட்டதில் அவன் குனிந்து அவளது உச்சந்தலையில் முத்தம் பதித்து விட்டான்..

'ஹ..!..' மோகத்தீயின் சுழற்சி சுழன்று எழுந்து சசிரேகாவின் மீது வீழ்ந்தது..

"பொண்ணுக்கென்ன ஆச்சு நேத்து..?

நெஞ்சுக்குள்ளே சாரக்காத்து..

தொட்டபாகம் தொட்டுப் பார்த்து

சாய்வதென்ன கண்கள் பூத்து.."

இதமான இன்னிசை அந்த இரவுப் பொழுதின் மோகத்தை அதிகரித்து வைத்தது.. பின்சீட்டில் படுத்திருந்த வத்சலா சீரான சுவாசத்துடன் ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து விட்டிருந்தாள்.. இப்போது அவளது தூக்கத்தைப் பார்த்து சசிரேகா பொறாமைப் படவில்லை.. நிம்மதியடைந்தாள்.. எந்தவித இடையூறும் இல்லாமல் அவனது கரம் அவளது தோள் தடவி இறங்கி கன்னங்களை வருடியதில் கிறங்கிப் போனவளாக கண்களை மூடிக் கொண்டாள்..

"அக்கம் பக்கம் சுத்திப் பார்த்து..

தலைக்கு மேலே தண்ணி ஊத்து..

விடியச் சொல்லிக் கோழி கூவுது..

இந்த வேளையில் நெஞ்சு தாவுது.."

சசிரேகாவின் மனம் குழுங்கியது.. விடியச் சொல்லிக் கோழி கூவுது என்ற வரியில் நிலைத்தவள் சட்டென்று விலகி அமர்ந்தாள்.. அவன் முகம் சுளித்தான்..

"என்ன..?"

விலக்கத்தை விரும்பாத வேட்கையின் கோபம் அவனது குரலில் ததும்பியது..

"வேண்டாம்.."

"ஏன்..?"

அவள் சினத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவளை கொன்றுதின்று கொண்டிருந்த மோகத்தைத் தூண்டி விட்ட அந்த இரக்கமில்லாத அழகிய அசுரனை வெறித்தாள்..

"ஏனா..? உங்களுக்குத் தெரியாதா..?"

வத்சலாவிற்கு கேட்டு விடக்கூடாது என்று அடிக்குரலில் சீறினாள்.. அவனும் அதைப் போலவே பதிலுக்கு சீறினான்..

"தெரியலை.."

"தெரியாது... எப்படித் தெரியும்..? நீங்க ஆம்பளையாச்சே.." அவள் குமுறினாள்.

"ஆம்பளைக்கும், பொம்பளைக்கும் மனசுங்கிறது ஒன்னுதான்.."

"மனசைப் பத்தி நீங்க பேசக்கூடாது.."

"ஏனாம்..?"

"உங்களுக்கு அந்தத் தகுதியில்லை.."

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்.."

"மனச்சாட்சி இருக்கிறவங்கதான் மனசைப் பத்திப் பேசனும்.."

"எனக்கு மனச்சாட்சி இல்லேங்கறியா..?"

அவன் மரியாதையைக் கைவிட்டு ஒருமையில் கேள்வி கேட்டதில் மனம் சுணங்கிப் போனாள் சசிரேகா.. இது அவள் கொடுத்த தைரியத்தினால்தானே..

"உங்களைச் சொல்லிக் குற்றமில்லை.."

"உன்னைச் சொல்லியும் குற்றமில்லை.. இன்னும் சொல்லப் போனா இதில் குற்றம்ன்னு எதுவுமே இல்லை.."

"என்னது..?"

அவள் வெறி பிடித்தவளைப் போல விதிர்த்துப் பார்த்ததில் அவன் பேசாமல் காரை ஓட்ட ஆரம்பித்தான்.. ஜன்னல் பக்கமாக உடலைச் சுருக்கி ஒடுங்கிக்

கொண்டாள் சசிரேகா.. அவளைப் பார்க்காமல் அவன் காரை ஓட்டுவதில் மட்டுமே கவனமாக இருந்ததும் அவளை பாதித்து வைத்தது..

'இவ்வளவுதானா..?' மனம் முரண்டியது..

ஒருகடுமையான வார்த்தையில் அவன் விலகிப் போய் விடுவானா..?

லேசாக முகம் திருப்பி அவனை அவள் பார்த்த அதே நொடியில் அவனும் அவளைப் பார்த்து வைக்க அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள் சசிரேகா.. அவன் முகத்தில் தவழ்ந்த இளநகையை மெல்லிய வெளிச்சம் கலந்த அந்த இருளில் கண்டு கொண்ட சசிரேகாவிற்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

'என்னைப் பத்தி என்னன்னு நினைப்பான்..' லஜ்ஜையில் கண்கலங்கி விட்டாள் சசிரேகா..

"சசி.." மென்மையாக அழைத்தான் அவன்..

அவள் பெயரைச் சொல்லி அவன் அழைத்ததில் அவளுக்குள் திரும்பவும் மோகம் வந்து உட்கார்ந்தது..

"ம்ம்ம்..." அவளையுமறியாமல் முணுமுணுத்து விட்டாள்..

"எதுக்கு இந்தக் கோபம்..?"

"நீங்க என் மனசை பலவீனமாக்கறிங்க.."

"ஹா..ஹா.."

"அதில் குளிர் காயப் பார்க்கறிங்க.."

"ஈஸிட்..?"

மிகப்பெரும் நகைச்சுவையை அவள் சொல்லி விட்டதைப் போல ரசித்துக் கேட்டவன் அவள் பக்கமாக சரிந்தான்.. அவன் மீது இருந்த அவனுடைய பிரத்யேக நறுமணத்தை நுகர்ந்தவளின் மனம் மயங்கித் தடுமாறியது..

"ஆக்சுவலா சசி.. இந்தக் குற்றச்சாட்டுக்களை யெல்லாம் நான்தான் உன்னைப் பார்த்துக் சொல்லனும்.."

"வாட்..?"

"யெஸ் மை டியர்..! நீதான் என்னைப் பலவீன மாக்கற.. நிமிர்ந்து நிற்கிற நான் உன்னைப் பார்த்ததும் 'எண்ணிக்க'ன்னு சொல்லி தோப்புக்கரணம் போடற அளவுக்கு வந்திருக்கேன்னா நீ எந்த அளவுக்கு என்னை 'அபெக்ட்' பண்ணியிருக்கேன்னு நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சுக்கனுமா..?"

"சும்மா எதையாவது பேசனும்னு பேசக்கூடாது.."

"இல்லேங்கிறதை உன் மனசு சொல்லும்.. நான் பேசறதெல்லாம் உண்மைன்னு உனக்கே நல்லாத் தெரியும்.."

"ம்ப்ச்.."

"எதுக்கு இந்த அலுப்பு..?"

"விடிஞ்சாக் கல்யாணம்.. இப்ப லவ் டயலாக்கா..?"

சசிரேகா தன்நிலைமையை தனக்குத்தானே நினைவு படுத்திக் கொண்டபடி அவனுக்கும் நினைவூட்டினாள்.. அவனோ அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல்..

"ஸோ வாட்..?" என்று கேட்டுவைத்தான்..

"ஸோ வாட்டா..?" சசிரேகாவுக்கு கோபம் வந்து விட்டது..

ஏன் சொல்ல மாட்டான்..? கொட்டுகிற மழையில் அவனைப் போன்ற கண்ணியவானை நம்பி காருக்குள் ஏறியிருக்கிறாளே.. அப்படிப்பட்ட முட்டாளைப் பார்த்து அவன் இதுவும் சொல்வான்.. இன்னமும் சொல்வான்..

"மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கத்தான் செய்யும்.." கோபத்தில் மூச்சிரைத்தாள்..

"ஊஹீம்..?" அவன் புருவங்களை உயர்த்தியது எதிரே வந்த காரின் வெளிசத்தில் தெரிந்து அவளை இம்சையுடன் வசீகரித்தது..

"மாற்றான் தோட்டத்து மல்லிகை மட்டுமில்லை.. என் வீட்டுத் தோட்டத்தோட மல்லிகையும் மணக்கத்தான் செய்யும்.."

"என்ன ஒரு கண்டுபிடிப்பு..!"

"இந்தக் கண்டுபிடிப்போட தூண்டுதலே நீதான்.. அதனால் எல்லாக் கிரெடிட்டும் உனக்கே உனக்குன்னு வைத்துக்க.."

"அதுக்கென்ன.. சார் சொல்லிட்டா அப்பீல் ஏது..? சாரு யாரு..?"

அவளது கிண்டல் கலந்த கேள்வியில் அவளைத் திரும்பிப் பார்த்தவனின் விழிகளில் இருந்த தீட்சண்யத்தில் அவள் குழம்பிப் போனாள்.. விசித்திரமான வகையில் அவனது பார்வை அவளிடம் ஏதோ சேதி சொல்ல முயன்று கொண்டிருந்தது..

"நான் யாருன்னு உனக்குத் தெரியுமா..?"

"ஏன் தெரியாது..? நம்பிக் காருக்குள்ள ஏரியிருக்கிறவ மனசைக் கலைக்கப் பார்க்கிற புண்ணியவான்.."

"ஓ..! அதான் இந்தக் கோபமா..?"

அவன் இலகுவாக சிரித்து வைத்து அவளது எரிச்சலைக் கிளப்பி விட்டான்.. பேசாமல் காரின் கதவைத் திறந்து குதித்து விடலாமா.. என்று யோசித்தாள் சசிரேகா.. இப்படி கடமைக்கும், மோகத்துக்கும் இடையில் அல்லாட வேண்டிய துன்பமில்லாமல் செத்து விடலாம்..

நினைத்ததை செயல்படுத்த அவள் காரின் கதவைத் திறக்க முயன்றாள்.. அது திறக்கவில்லை..

"எப்படித்திறக்கும்..? இதென்ன அந்தக் காலத்து காருன்னு நினைச்சியா..? லாக் என் கையில் இருக்கு.. நான் நினைச்சாத்தான் நீ வெளியிலகுதிக்க முடியும்.." என்றான் அவன்..

'நான் மனசில நினைச்சதை இவன் எப்படி கண்டுபிடிச்சான்..?'

பல்லைக் கடித்தபடி அவனை வெறித்தாள் சசி.. அவன் இமை சிமிட்டி சிரித்ததில் அவள் மனதில் மோகம் பொங்கித் ததும்பியது.. அவனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்போல இருந்தது..

'வேண்டாம்.. என் உணர்வுகளுடன் விளையாடாதே..' அவள் உடல் நடுங்கியது..

'இவன் அனைத்தும் அறிந்தவன்.. என் மனதையும் அறிந்தவன்.. இவனுக்கா எதுவும் தெரியாது..?'

செயல்பட முடியாத துக்கத்தில் அவளுக்கு கண்ணீர் வந்தது.. இதிலிருந்து விடுபட முடியாதா என்று அவள் தவித்துக் கொண்டிருந்தபோது அவளைக் காக்க வந்த ரட்சியாய்..

"ஹாவ்..!" என்ற கொட்டாவியுடன் எழுந்து உட்கார்ந்தாள் வத்சலா..

'அப்பாடி..' சசிரேகாவின் மனதில் ஏமாற்றம் கலந்த நிம்மதி பரவியது..

"ஹலோ டிரைவர்.."

விரல் சொடுக்கி வத்சலா அழைத்ததில் சசிரேகாவின் மனதில் தோன்றியது கோபமா இல்லை சந்தோசமா..?

'இவனைப் பார்த்த நொடியில இருந்துதான் என் மனசு எனக்கே பிடிபட மாட்டேங்குதே..'

சசிரேகாவிற்கு முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. எதில் முட்டிக் கொள்வது என்று தெரியாமல் அவள் மௌனமானாள்.. அதை அறிந்தவனைப் போல அவன் திரும்பி சசியை மௌனப் பார்வை பார்த்தான்..

"கூப்பிட்டது அவ.." சசிரேகா முகத்தைத் திருப்பிக் கொண்டு சன்னக் குரலில் முணுமுணுத்தாள்..

"தெரியுது.." அவனும் முணுமுணுத்தான்..

"தெரிஞ்சு என்ன பண்ண..? கேட்கனும்.."

"நான் செவிடில்ல.."

அவன் மிதப்பாக சொல்லிக் கொண்டிருந்த போதே அடுத்த சொடக்கொலி வத்சலாவிடமிருந்து கிளம்பியது..

"ஹலோ டிரைவர்..! உங்களைத்தான்.."

அவன் காரின் வேகத்தைக் கூட்டி பின் பக்கம் திரும்பாமல்..

"நான் டிரைவரில்ல.." என்றான்..

"என்னது..? டிரைவரில்லையா..? என்னடி சசி இது.. இவரு இப்படிச் சொல்றாரு.."

"என்கிட்டக் கேட்காதே.."

"பின்னே..?"

"காரை ஓட்டிக்கிட்டு இருக்கிறவர்கிட்டக் கேளு.."

சசிரேகா ரோட்டைப் பார்த்தபடி சொன்னாள்.. அவன் அவளைப் பார்த்தான்.. கூர்மையான அவனது பார்வையில் அவளுக்குள் மோக அலை அடித்துத் தொலைத்தது.. அவள் பல்லைக் கடித்தாள்..

"காரை ஓட்டறவங்க எல்லாம் டிரைவரில்ல.."

"வேற யாராம் வத்சலா..? விஞ்ஞானியா..?"

"யாருக்குடி தெரியும்.. மெய்ஞானியாக் கூட இருக்கலாம்.."

"அப்படிங்கற..?"

"ஆமாங்கறேன்.."

தோழிகள் இருவரும் தாக்கிய தாக்கலை கண்டு கொள்ளாமல் அவன் காரோட்டுவதிலேயே கவனமாக இருந்தான்..

"இது வேலைக்கு ஆகாதுடி சசி.." என்றாள் வத்சலா.

"தெரியுதில்ல.. வாயை மூடிக்கிட்டு வா.."

"அதுக்கு சூடா 'டீ' வேணுமே.."

வத்சலா அலுத்துக் கொள்ள அவன் காரின் வேகத்தைக் குறைத்து..

"இதுதான் உங்க பிரச்னையா..! இதை அப்பவே சொல்கிறதுக்கு என்ன..?" என்று கேட்டான்..

"அதுக்குத்தானே உங்களை சொடக்குப் போட்டு ஹலோ டிரைவர்ன்னு கூப்பிட்டேன்..?"

"நான் டிரைவரில்ல.."

"அப்படிங்களா ஆபிசர்..? எங்களுக்குத் தெரியாதுங்க ஆபிசர்.. இனிமே ஆபிசர் உங்களைக் கூப்பிடனும்னா ஆபிசர்.. டிரைவர்ன்னு கூப்பிட மாட்டோம் ஆபிசர்.. ஆபிசர்ன்னே கூப்பிடறோம் ஆபிசர்.."

வத்சலா அடுக்கிய 'ஆபிசர்'களில் சசிரேகா வாய் விட்டு சிரித்தாள்.. துளைக்கும் அவன் பார்வையில் அவளது சிரிப்பு நின்றாலும் முழுவதும் மறையவில்லை.. வாயைத் துடைப்பதைப் போன்ற பாவனையுடன் சிரிப்பை மறைத்துக் கொண்டாள்..

கார் சாலையோர காபி ஷாப்பருகே நின்றது.. வத்சலா காரை விட்டு இறங்கி நெட்டி முறித்து விட்டு பூஞ்சாரலாய் தூவிக் கொண்டிருந்த மழைச்சாரலில் கை நீட்டி ரசித்தாள்..

"மழை நின்னிருச்சில்ல.."

அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் வானத்தில் மின்னல் வெட்டி இடி இடித்தது.. சடசடவென்று மழை வலுத்ததில் அவள் ஓடோடிப் போய் காபி ஷாப்பிற்குள் அடைக்கலம் புகுந்தாள்.. பின்னால் வந்தவன் அவளைப் பார்த்து சிலாகிப்பாக..

"அருமையான வாய்..!" என்று மெச்சிப் போனான்..

சசிரேகாவுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது..

"நீ என்னடி ஸேம் சைடு கோல் போடற..?" வத்சலா சண்டைக்கு வந்தாள்..

சசிரேகா பதில் சொல்வதற்குள் காபி ஷாப்பிலிருந்த பெரியவர் ஒருவர்..

"ஏம்மா.. வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்கலா மில்ல.. அடிச்சுக் கொட்டின மழை இப்பத்தான் கருணை காட்டி நின்னுச்சு.. உனக்கு அது பொறுக்கலையா..? உன்னை யாரும்மா மழை நின்னிருச்சில்லன்னு மகிழ்ந்து போகச் சொன்னது..?" என்று வத்சலாவிடம் சண்டைக்கு வந்தார்..

"தேவைதாண்டி உனக்கு..!" சசிரேகா முணு முணுத்தாள்..

"நான் என்னடி பண்ணினேன்..? நின்னு போன மழையை வா.. வா.. ன்னு நானா வெத்தலை பாக்கு வச்சு அழைச்சேன்..?" அழ மாட்டாத குறையாக வினவினாள் வத்சலா..

"இதை அந்தப் பெரியவர்கிட்டேயே கேளு.."

"எதுக்குடி வம்பை விலை கொடுத்து வாங்கச் சொல்ற..?"

"நீ விலையில்லாமலே வாங்குகிறவளாச்சே.."

பேசியபடியே காருக்கு அருகே வந்த சசிரேகா.. இயல்பாக வத்சலாவுடன் பின் சீட்டில் உட்கார்ந்து விட்டாள்.. அவன் முகம் மாறினான்.. அவளை உறுத்துப் பார்த்தான்.. சசிரேகா கண்டு கொள்ளாமல் வத்சலாவுடன் பேசிக் கொண்டிருப்பதைப் போல பாவனை செய்தாள்.. காரில் ஏறிக் கதவைச் சாத்தியவனின் கோபம் 'படார்..'

என்ற சப்தத்தில் வெளிப்பட்டது.. வத்சலா அவனைப் பார்த்துவிட்டு சசிரேகாவின் காதருகே ரகசியம் பேசினாள்..

"எதுக்குடி கதவைப் போட்டு உடைக்கிறான்..?"

"எனக்கென்ன தெரியும்..? அவன் கிட்டேயே கேளு.."

"கேட்கவா..?"

"கேட்டாலும் சொல்லிட்டுத்தான் வேற வேலை பார்ப்பான்.. அந்த காபி ஷாப்பில நீ இழுத்து வைத்த பஞ்சாயத்தை நினைச்சு காண்டாகிட்டானோ என்னவோ.."

"இவன் எங்கேடி பஞ்சாயத்து பண்ண வந்தான்..? அந்த கிழவன் திட்டறத சந்தோசமா வேடிக்கை பார்த்துக் கிட்டில்ல இருந்தான்.."

"விடுடி.. இவன் காரு.. இவன் உடைச்சுட்டுப் போறான்.."

"அப்ப.. ஆபிசரு டிரைவரில்ல.. காருக்கு ஓனர்ங்கிற..?"

"இருக்கலாம்.."

"அதென்ன 'இருக்கலாம்'ங்கிற..? தெரியாம எதையும் சொல்லக்கூடாது.."

'இவனைப் பற்றி எனக்கென்ன தெரியும்..?'

சசிரேகாவின் மனம் கேட்டது.. எதுவும் தெரியாமல் அவன் மீது மோகம் கொண்ட மணித்துளிகளை நினைத்துப் பார்த்த போது அவளது நெஞ்சம் அதிர்ந்தது..

"என்னவோ போடி.. உன்னோட அங்குசாமி பெரியப்பா சரியான ஆளைப் பிடிச்சுத்தான் உன்னைக் கைப்பற்றிக்கிட்டு வர அனுப்பி வைச்சிருக்காரு.."

'ஆமாம் இவன் என்னைக் கைப்பற்றிக்கிட்டுப் போயி வேற ஒருத்தன் கையைப் பிடிக்க வைக்கப் போறான்..' சசியின் மனம் குழுங்கியது..

வேறு எவர் இதைச் செய்தாலும் இவன் செய்யக் கூடாதென்று அவள் மனம் மருகினாள்.. அவன் பார்வையை நினைத்துக் கொண்டாள்..

'எப்படி இவனால் என்னை அப்படியொரு பார்வை பார்க்க முடிந்தது..?'

அனிச்சையாய் அவள் பார்வை உயர்ந்தபோது அவன் கண்ணாடி வழியாக அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள்.. முடிவில்லாத தொடர்ச்சியான அந்தப் பார்வைக்கான எதிர்காலம் எத்தகையது என்பதை இவன் அறிவான்தானே.. இருந்தும் ஏன் இப்படிப் பார்த்து வைக்கிறான் என்று சினம் கொண்டாள்..

'சசிரேகா கிள்ளுக்கீரைன்னு நினைத்து விட்டானா..?'

தன்னிரகத்தில் அவள் மனம் தளும்பியது.. வத்சலா வேண்டிய மட்டும் தூங்கி விட்டாள் போல.. தொண தொணத்துக் கொண்டே வந்தாள்.. சசிரேகா அவளது தொணதொணப்பைக் கவனிக்காமல் வேகம் குறைந்திருந்த மழையை வேடிக்கை பார்த்தவண்ணம் மௌனமாக இருந்தாள்.. தூரத்தில் அன்னவாசலின் விளக்குப் புள்ளிகள் தெரிந்தன..

விடியலுக்கு அறிகுறியாய் கீழ்வானம் வெளுக்க ஆரம்பத்திருந்தது.. அவள் வாழ்வில் இருள் நெருங்கி விட்ட நிதரிசனத்தில் சசிரேகாவின் மனம் நடுங்கியது..

"ஊர் வந்திருச்சுடி.." கவலையுடன் சொன்னாள்..

எந்தவிதக் கவலையுமின்றி தொணதொணத்துக் கொண்டிருந்த வத்சலாவின் பேச்சு நின்று விட்டது.. ஒரு பெருமூச்சுடன்..

"நீ பேசாம அந்த பிரவீன்கூட ஓடிப் போயிருக்கலாம்.." என்று சொன்னாள்..

சாலையில் ஓடிக் கொண்டிருந்த கார் நின்று விட்டது.. அவன் புருவங்கள் முடிச்சிடத் திரும்பிப் பார்த்தான்..

"பிரவீனா..? யார் அது..?" வத்சலாவிடம் கேட்டான்..

"எல்லாம் இவளோட காதலன்தான்.." இயல்பாகச் சொன்னான் வத்சலா..

சசியைக் காதலித்தவன் என்பதற்கும் சசியின் காதலன் என்பதற்கும் மலையளவு வித்தியாசம் உண்டு.. அது தெரியாமல் வத்சலா வாய் விட்டுவிட.. அதை உணராமல் சசிரேகா எதிர் கொள்ளப் போகும் இடரை நினைத்து மனம் கலங்கிக் கொண்டிருந்தாள்.. அவனது தீர்க்கமான பார்வை அவளைத் துளைப்பதை அவள் அறியவில்லை..

"காதலன்னா..?"

"காதலன்னா காதலன்தான் ஆபிசர்..! இவ மேலே உயிராய் இருந்தவன் கல்யாணம் பண்ணிக்கலாம் வான்னு கூப்பிட்டா இவ பின்னாடி ஓடியிருக்கனுமா வேணாமா..? அதை விட்டுவிட்டு பெரியப்பாகிட்டக் கேளுங்கன்னு அனுப்பி வைச்சா.. பெரியப்பா ஆப்பு வைச்சிட்டார்.. ஒருவேளை இப்படியாகும்ன்னு தெரிஞ்சிருந்தா பிரவீன் கூப்பிட்டப்பவே அவன்கூட ஓடிப் போயிருப்பாளோ என்னவோ.."

"ஓ...!"

ஒற்றை எழுத்தை ஒரு கோடி உணர்ச்சிகளுடன் உச்சரித்தான் அவன்.. சசிரேகாவின் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.. வத்சலாவுக்கும் அவனுக்குமான கலந்துரையாடலைக் கவனிக்காமல் காத்திருக்கும் திருமணத்தைப் பற்றிய பயத்தில் அவள் உறைந்து போயிருந்தாள்..

"நீங்க எதுக்கு ஆபிசர் 'ஓ' போடறீங்க..?"

வத்சலாதான் அவனிடம் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தாள்.. எங்கோ தொலை தூரத்தின் தொடுவானத்தை வெறித்துக் கொண்டிருந்த சசிரேகாவை வெறித்துப் பார்த்த 'அவன்' சொன்னான்..

"காதலிக்கிறவனை விட்டுவிட்டு யாரோ ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டப் போய்க்கிட்டிருக்கிற உங்க பிரண்டை பார்க்கிறப்ப புல்லரிக்குதுங்க.. அதான்.. என்னையறியாம 'ஓ' போட்டுட்டேன்.."

"நக்கல்..? ஆம்பளையாய் பிறந்துட்டிங்கள்ல.. நக்கல், நையாண்டியெல்லாம் இருக்கத்தான் செய்யும்.. இவளுக்கு மட்டும் பிடிக்காத ஆளுக்கு கழுத்தை நீட்டனும்னு வேண்டுதலா என்ன..? இவளோட பெரியப்பாதான் நன்றிக்கடன்ங்கிற பெயரில இவளை அடிமைப்படுத்தி வைச்சிருக்காரே.."

"ஆக.. அந்த நன்றிக் கடனைக் கழிக்கத்தான் அம்மணி பிடிக்காத ஆளுக்கு கழுத்தை நீட்டப் போறாங்கன்னு சொல்றீங்க.."

"ஆமாம் ஆபிசர் ஆமாம்.. இதைவிட புளி போட்டுத் தேய்த்து விளக்கமா 'செப்ப' முடியாதுன்னு நினைக் கிறேன்.. 'மனசிலாயி..?' அதனால 'மாட்டாடுறத' விட்டுப்புட்டு ஜரூரா வண்டியப் பத்துங்க வாத்தியாரே.."

"வண்டியா..?"

"பின்னே இல்லையா..? வெறும் வண்டி இல்ல ஆபிசர்.. கட்டை வண்டி..! காரா இது..? முதுகெல்லாம் வலிக்குது.. இப்படியா நடந்து போகிறவன்கூட ஓவர்டேக் பண்ற மாதிரி மெதுவா ஊர்ந்துக்கிட்டுப் போகும்..? விரட்டுங்க ஆபிசர்.."

அவனிடமிருந்த குறும்பு மறைந்து சிந்தனை அவன் முகத்தில் படிந்திருந்தது.. வத்சலாவின் பேச்சுக்கு விரட்டிட்டாப் போச்சு என்று சொல்லாமல் காரைக் கிளப்பினான்.. எதுவும் பேசாமல் ஓட்டிக் கொண்டிருந்தவன் திடிரென்று திரும்பிப் பார்த்துக் கேட்டான்..

"அந்த பிரவீன் எப்படி..?"

"எப்படின்னா..? என்னத்தைச் சொல்றது..? பார்க்கிறதுக்கு ஹீரோ போல ஹேண்ட்சம்மா இருப்பான்.. பணக்காரன்.."

"ஓ..."

"திரும்பவும் 'ஓ' போட்டுட்டிங்களா..? உங்க மனசில என்ன பெரிய 'சிய்யான்' விக்ரம்ன்னு நினைப்பா ஆபிசர்..?"

அவன் பதில் சொல்லவில்லை.. கார் ஊர் எல்லையைத் தொடப் போகும் போது தனக்குத்தானே சொல்லிக் கொள்பவனைப் போலச் சொன்னான்..

"கல்யாணத்தை கல்யாணமா பண்ணிக்காம தியாகமா பண்ணிக்கப் போறாங்க போல உங்க பிரண்ட்.."

"ஆமா.. அப்பத்தானே இவளுக்கு 'தியாகி' பட்டம் கிடைக்கும்..? அன்னவாசல் கிராமத்தில இவளுக்கு சிலை வைப்பாங்க..?"

"....."

"என்ன ஆபிசர் இதுக்கு 'ஓ' போடாம இருக்கீங்க..?"

"....."

"என்னாச்சு ஆபிசர்..! இவ கூட கூட்டுச் சேர்ந்துக்கிட்டிங்களா..?"

அந்த வார்த்தைகளில் உயிர் துடிக்க சசிரேகா அவனைப் பார்த்தாள்.. அதே நொடியில் அவளைப் பார்த்தவனின் பார்வையில் தெரிந்த ஒட்டாத தன்மையில் அவள் மனம் வெறுத்துப் போனது..

'வேசக்காரன்..! என்னைக் கடத்திக் கொண்டு வந்து பெரியப்பா வோட கால்களில என்னைத் தள்ளிட்டான்ல்ல.. வேலை முடிஞ்சாச்சுன்னு ஒட்டாத பார்வை பார்க்கிறான்.. பழைய பார்வையைப் பார்த்தா இவன் போட்டிருந்த கண்ணியவான் வேசம் கலைஞ்சு போயிரும்ல்ல..'

அவள் விழிகளில் தெரிந்த வெறுப்பில் அவன் முகம் சுருங்கியது.. ஊர் எல்லையில் கொட்டு மேளத்துடன்

காத்திருந்த ஆள்கள் வாத்தியங்களை வாசிக்க ஆரம்பித்தார்கள்.. சசிரேகா மனம் உடைந்தாள்..

8

'இனித் தப்பிக்க மார்க்கம் இல்லை..'

பதுமை போல கண்ணாடி முன்னால் அமர்ந்திருந்த சசிரேகா நினைத்துக் கொண்டாள்.. ஈரக் கூந்தல் உலர்வேனா என்று அடம் பிடித்துக் கொண்டிருக்க.. அவளது முகத்திற்கு கடமையே கண்ணாக ஒப்பனை செய்து கொண்டிருந்தாள் ஒரு பெண்..

"எங்கே பியூட்டி பார்லர் வைச்சிருக்கீங்க..?" வத்சலா விசாரித்தாள்..

"பக்கத்து டவுனில.."

"அதானே பார்த்தேன்.. அன்னவாசலில பியூட்டி பார்லரான்னு அசந்துட்டேன்.."

"கொஞ்ச நாளில இங்கேயும் வந்திரும்.. ஊர் முன்னேறிக்கிட்டு இருக்கு.."

"என்னத்தை முன்னேறி என்ன பண்ண..?"

"ஏங்க அலுத்துக்கறிங்க..?"

"கல்யாண மாப்பிள்ளையைக் கண்ணிலகூட காட்டாம கட்டாயப் கல்யாணம் பண்ணி வைக்கப் போறாங்க.. இதுதான் முன்னேற்றமா..?"

"என்னது..?"

அந்தப் பெண் சசிரேகாவை ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

"இவங்க மாப்பிள்ளையைப் பார்த்ததே இல்லையா..?"

"இல்லைப்பா.."

"சரியாப் போச்சு போங்க.. இப்படியா இருப்பீங்க..?"

"என்னவோ இருக்கோம்.."

"மாப்பிள்ளை யார்ன்னு நினைச்சீங்க..?"

"எவனோ ஒரு இரக்கமில்லாத இதயமில்லாத ராட்சசன்னு நினைக்கிறோம்.. இதயமிருக்கிறவன் பிடிக்கலைன்னு சொல்ற பொண்ணு கழுத்தில தாலி கட்ட நினைப்பானா..?"

அந்தப் பெண் எதையோ சொல்ல வந்து விட்டு நமக்கென்ன என்ற ரீதியில் தோள்களைக் குலுக்கி விட்டு வேலையில் ஆழ்ந்தாள்.. சசிரேகாவின் மனம் முந்தைய இரவுப் பயணத்திலேயே நிலைத்திருந்தது..

'ஏன் அப்படிப் பார்த்தான்..? எதனால் என் மனதை கலைத்தான்..?'

அவளை ஏமாற்றி அழைத்து வரும் யுக்தியோ என்று குன்றிப் போனாள் சசிரேகா..

தப்பிக்கும் நினைவு வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.. அவளை மோக வலையில் சிக்க வைத்து கடத்தியிருக்கிறான்..

'உனக்கு வேறு வழியே தெரியலையாடா..?' சசியின் மனம் வலித்தது..

உலர்ந்தும் உலராமலும் இருந்த கூந்தலைப் பின்ன ஆரம்பித்த அந்தப் பெண் தன் போக்கில்..

"கல்யாண மாப்பிள்ளையை பிடிக்கலைன்னு இவங்க சொல்கிறாங்களா..? ஆச்சரியமா இருக்கு.." என்றாள்..

"ஏனாம்..? அவரு பெரிய மன்மதனோ.." வத்சலா எகத்தாளமாக கேட்டாள்..

"இந்தப் பக்கத்தில அவருக்கு அப்படித்தான் பேர் இருக்குங்க.."

"மன்மதன்னா..?"

"ம்ம்ம்.."

"ஜோக்கடிக்காதீங்கப்பா.. மைனர்ன்னு பேர் இருக்கு மாயிருக்கும்.. நீங்க மன்மதன்னு சொல்கிறீங்க.."

"மைனரா..? இவரா..? நீங்க வேற.. பொண்ணுக கிட்ட அனாவசியமா ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டார்.. பொண்ணுகதான் இவருகூடப் பேசப் போட்டா போட்டி போடுவாக.."

"ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை போல.."

"அவர் இந்த ஊர்க்காரரர் இல்லேங்க.. பக்கத்து டவுனுக்காரர்.."

"நீங்கதானேம்மா இந்தப் பக்கம்ன்னு சொன்னீங்க..?"

"இந்தப் பக்கம்ன்னுதான சொன்னேன்..? இந்த ஊர்க்காரர்ன்னா சொன்னேன்..?"

அந்தப் பெண் புருவங்களை வில் போல உயர்த்தி விட்டு சசிரேகாவின் பின்னலை அலங்கரிக்கத் தொடங்கினாள்..

"இது ஒன்னுதான் குறைச்சல்.." அலுப்புடன் சொன்னாள் சசிரேகா..

"உங்களுக்கு ஒரு குறைவும் இல்லேம்மா.." என்றாள் அந்தப்பெண்..

"பாருடி.. இந்தப் பெண் என்னவோ குற்றாலக் குறவஞ்சி போல ஜோசியம் சொல்றத.. கையில தங்க முலாம் பூசின பிரம்புதான் இல்லே.. மத்தபடி குறி சொல்கிற குறவஞ்சி போலதான் தெரியறாங்க.."

வத்சலாவின் 'பாருடி..'க்கு ஸ்லோ மோசனில் விழியுயர்த்தி பார்த்து வைத்தாள் சசிரேகா..

"ஏன்டி டக்குன்னு பார்க்கச் சொன்னா இப்படியாடி பார்த்து வைப்ப..? இதுதானாடி உன்னோட 'டக்கு..'?"

வத்சலாவின் கேள்விக்கு அந்தப் பெண் சிரித்து வைக்க சசிரேகா மௌனத்தாரகையாக விட்டத்தை வெறித்து வைத்தாள்..

"விட்டா காவியக் கட்டிக்கிட்டு சாமியாராப் போயிருவாங்க போல.. இத்தனை விரக்தி தேவை யில்லைங்க.. சூப்பர் மாப்பிள்ளைக்கு வாக்கப்படப் போறீங்க.." அந்த பெண் தைரியம் சொன்னாள்..

எவருக்கு சொல்லப்படும் தைரியமோ என்று சசிரேகா விட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த பல்லியைப் பார்க்க..

"பொண்ண அழைச்சுட்டு வாங்கம்மா.." என்று அறைக்கு வெளியே சத்தம் கேட்டது..

"ஆச்சா..?" என்றபடி உள்ளே வந்த பானுகீதா சசிரேகாவைப் பார்த்த பார்வையில் வண்டி வண்டியாய் துவேசம் கொட்டிக் கிடந்தது..

'இது ஏன் இப்படிப் பார்க்குது..?' சசிரேகாவுக்கு புரியவில்லை..

அத்தனை காலமாக பட்ட துயருக்கு விடிவு வந்து விட்டது என்று நிம்மதியாக சென்னையில் வேலை

பார்த்துக் கொண்டிருந்தவளை இழுத்து வந்து பிடிக்காத வாழ்க்கையில் தள்ளி விடப் போகிறவள் பானுகீதா.. கொழுந்தன் மகளின் தலைவிதியை சரியாக விடமாட்டேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவளுக்கு எதற்காக இந்த காழ்ப்புணர்ச்சி..?

'அதான் உன் புருசனைத் தூண்டி விட்டு நினைச்சதைச் சாதிச்சிட்டியே..'

வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சசிரேகா.. அதில் முகம் கடுத்துப் போன பானுகீதா.. சசிரேகாவின் தலை அலங்காரத்தை சரி செய்கிறவள் போல குனிந்து சன்னக்குரலில்..

"என்னடி..? குளிர் விட்டுப் போச்சா..? கழுத்தில் தாலி ஏறப் போகுதுங்கிற ஆணவமா..?" என்று அதட்டினாள்..

'அடிமை சாசனம் வாங்கப் போகிறவளுக்கு ஆணவம் எங்கேயிருந்து வரும்..?'

சசிரேகா முகத்தைச் சுளித்தபடி எழுந்து கொண்டாள்.. பானுகீதாவின் முகரையைப் பார்ப்பதை விட பிடிக்காத திருமணம் நடக்கப் போகிற மேடைக்குப் போய் விடுவதே சாலச் சிறந்தது என்று அவளுக்குத் தோன்றி விட்டது..

தெரியாத பல முகங்கள் அந்த திருமண வீட்டில் தென்பட்டன.. சசிரேகாவை மேடைக்கு அழைத்துக் கொண்டு போன பெண்மணிகளில் ஒருத்தியைக் கூட சசிரேகா அதற்கு முன்னால் பார்த்ததில்லை.. பட்டும், வைர நகைகளுமாக மங்களகரமான முகத்துடன் காட்சியளித்தவர்களைப் பார்த்து இவர்களுக்கும் அங்குசாமி வகையாறாவுக்கும் என்ன சொந்தபந்தம் இருக்கக்கூடும் என்று குழம்பிப் போனாள் அவள்..

மணமேடைக்குப் போகும் வழியில் மலர்கொடியும், மாலதியும் நின்றிருந்தார்கள்.. அவர்களின் விழிகளில் வழிந்த பொறாமையில் சசிரேகா திகைத்துப் போனாள்..

'இதுகளோட அம்மா என்னடான்னா.. வெட்டுவேனா இல்லே குத்துவேனாங்கிறதைப் போல பார்த்து வைக்குது.. இதுக என்னடான்னா இதுகளோட சொத்து கொள்ளை போகப் போறதைப் போல முறைச்சு வைக்குது.. என்னதான் நடக்குது..?'

எதுவும் புரியாமல் மணமேடையை நோக்கி நடந்தாள் அவள்.. படிகளில் ஏறிய போது 'அவன்..' நினைவில் பாதம் தடுமாறியது..

"பார்த்தும்மா.."

கூட வந்த பெண்களில் ஒருத்தி சிநேகிதப் புன்னகையுடன் கை கொடுத்தாள்.. அவளது தோழமையான சிரிப்பு சசிரேகாவின் புண்பட்ட மனதிற்கு ஒத்தடம் கொடுப்பதைப் போல இருந்தது..

இதயம் கனக்க.. கால்கள் பின்ன மணமேடையில் ஏறியவளை மாலையும் கழுத்துமாக உட்கார்ந்திருந்த மாப்பிள்ளையின் பக்கத்தில் உட்கார வைத்தார்கள்..

மாப்பிள்ளையின் முகத்தைக் கூடப் பார்க்காமல் சசிரேகா குனிந்த தலை நிமிராமல் உட்கார.. அவள் பக்கத்தில் தோழிப் பெண்ணாய் நின்றிருந்தாள் வத்சலா.. இப்படி கட்டாயக் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் அந்த வில்லாதி வில்ல மாப்பிள்ளையின்

திருமுகம் எந்த லட்சணத்தில் இருக்கிறதென்று பார்த்து விடவேண்டு மென்ற மனத்துடிப்புடன் மாப்பிள்ளையை பார்த்து வைத்தாள்..

பார்த்த விழி பார்த்திருக்க 'ஆ' வென்று வாய் பிளந்தவள்..

"சசி..!" என்று குனிந்தாள்.. அதற்குள்

"கெட்டிமேளம்..! கெட்டிமேளம்..!" என்று யாரோ ஒருவர் குரல் கொடுக்க கெட்டி மேளம் ஒலிக்க ஆரம்பித்து விட்டது..

சசிரேகாவின் கழுத்தில் மாங்கல்யக் கயிறு படிந்தது.. அவள் அதிர்ச்சியுடன் விழியுயர்த்தி பார்த்த போது அவளையே பார்த்தபடி 'அவன்..' அவள் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்தான்..

'இவனா..?'

அவளின் ஆனந்த அதிர்வை கண்டு கொள்ளாமல் பாறை போல இறுகிய முகத்துடன் அவன் தாலி கட்டி முடித்துவிட்டு நகர்ந்து உட்கார்ந்து கொள்ள.. இவள் நடுக்கத்துடன் வத்சலாவின் கையை இறுக்கிப் பிடித்தாள்..

"வத்சு.."

"நான் அப்பவே கவனிச்சுட்டேன்.. இவன்தான் கல்யாண மாப்பிள்ளைன்னு மூச்சுக்கூட விடலை பார்த்தியா.. சரியான கல்லுளி மங்கன்டி.."

ஆக.. அவன் கண்ணியவான் வேடம் போடவில்லை.. இன்னொருவனுக்காக அவளைக் கடத்திக் கொண்டு வரவில்லை.. மாற்றானுக்கு மாலையிடப் போகிறவளின் மோகத்தீயைத் தூண்டி விட்டுக் குளிர் காயவில்லை.. அவனுக்குச் சொந்தமாகப் போகிறவளிடம் தான் சொந்தம் கொண்டாடியிருக்கிறான்..

சசிரேகாவின் மனதில் அமைதி விரவியது... அது அவன்தான் அவளுக்கு தாலி கட்டியிருக்கிறான் என்பதினால் வந்த அமைதியா.. இல்லை.. அவன் கண்ணியவான் போல வேடம் போடவில்லை என்ற உண்மை புரிந்ததினால் வந்த அமைதியா என்று புரியாவிட்டாலும்.. அதுவரை அனுபவித்து வந்த மன வேதனையிலிருந்து விடுபட்டாள் சசிரேகா..

அவன் கையைப் பிடித்துக் கொண்டு அக்கினியை வலம் வந்தபோது அவளது உள்ளம் குளிர்ந்தது..

"ஆனாலும் ஆபிசர் இத்தனை அழுத்தக்காரராக இருக்கக் கூடாதுடி.."

வத்சலா அங்கலாய்த்த போதுதான் சசிரேகா அதை உணர்ந்தாள்..

ஓர் இரவு முழுவதும் பயணம் செய்திருந்தாலும்.. அவன் பெயரை அறியாமல் அவள் பயணித்திருக்கிறாள்..

அந்த உண்மையில் அவள் மனம் படபடத்தது..

இவன் பெயர் என்னவாக இருக்கக்கூடும் என்று அவள் யோசித்தாள்..

'பெயரில்லாதவளுக்கு 'அனாமிகா'ன்னு பெயர் வைச்சுக்கறதைப் போல.. இவன் 'அனாமிகன்'ன்னு சொல்லிக்குவானோ..'

அவன் முகம் பார்த்தாள்.. உணர்ச்சிகள் துடைக்கப் பட்டிருந்த அந்த முகத்தைக் கண்டு குழப்பமடைந்தாள்..

'ஏன் இப்படியிருக்கான்..? எனக்குத்தான் இவன் மாப்பிள்ளைன்னு தெரியாது.. இவனுக்கு என்னைத் தெரியுமே.. நைட் ஜர்னியில நல்லாத்தானே பேசிக்கிட்டு வந்தான்..'

அவனுடைய பேச்சுக்களையும்.. பார்வைகளையும் நினைத்துப் பார்த்தவளின் நெஞ்சம் இனித்தது.. அவன் மீதான மோகத்தீ அணைக்க வேண்டிய அவசியமின்றி கொழுந்து விட்டு எரிந்தது..

"பெரியவங்ககிட்ட ஆசிர்வாதம் வாங்கிக்க கருணா.."

சசிரேகாவிடம் சிநேகிதமாய் சிரித்த அந்தப் பெண் உரிமையுடன் கூறினாள்..

'இவன் பெயர் கருணாவா..?'

அவன் பெயரை மனதில் பதிய வைத்துக் கெண்டாள் சசிரேகா.. பெரியவர்களின் கால்களில் விழ வேண்டும் என்றால் அங்குசாமியின் கால்களிலும் விழ வேண்டுமே என்றிருந்தது அவளுக்கு.. அவர் பெரியவரா..? வயதாகி விட்டால் மட்டும் அவர் பெரியவராகி விடுவாரா..?

"தேவையில்லை.."

அவன் மறுத்ததில் ஓர் விடுதலையுணர்வை உணர்ந்தாள் சசிரேகா..

'ஆஹா..!' என்று மகிழ்ந்து போனாள்..

அங்குசாமியின் கால்களிலும் பானுகீதாவின் கால்களிலும் விழ வேண்டிய கொடுமையை தவிர்த்து விட்டானே..

அதிலும் அவன் மறுத்ததும் அங்குசாமியின் முகம் கருத்து விட்டது.. அதைப் பார்க்க அவளுக்கு ஆனந்தமாக இருந்தது..

"நான் தாலிகட்டும்போதே பெரியவங்க எல்லாம் அட்சதையைத் தூவி ஆசிர்வாதம் பண்ணிட்டாங்கக்கா.. புதுசா ஆசிர்வாதம் வாங்கத் தேவையில்லை.."

அவன் விளக்கம் சொன்னான்.. அவன் அக்கா என்று அழைத்த பெண் அவனுடைய உடன்பிறந்த அக்காவா இல்லை உறவு முறையில் அக்காவா என்று சசிரேகாவுக்கு தெரியவில்லை.. பாலும், பழமும் சாப்பிட என்று புதுமனத் தம்பதிகளை உட்கார வைத்த போது அந்த அக்காவே அதற்கான விடையை அளித்தாள்..

"நான் கவிதா.. கருணாகரனோட அக்கா.."

சசிரேகாவின் கன்னம் தடவி அவள் சொன்ன போது நெகிழ்ந்து போனாள் சசிரேகா.. அது போன்ற பாசத்தை

அவளுடைய பெற்றோர் இறந்த பின்னால் அவள் அனுபவித்ததில்லை.. உண்மையான பாசத்தை விழிகளில் பிரதிபலித்த கவிதாவின் கைகளை பிடித்துக் கொண்டாள்.. கவிதாவின் விழிகளில் பிரியம் கொட்டிக் கிடந்தது..

"கவிதா.." என்று அழைத்தபடி உள்ளே வந்தவனைக் காட்டி..

"இவர்தான் உன் அண்ணா.." என்று அறிமுகம் செய்து வைத்தாள்..

"அண்ணாவா..?" மெய் சிலிர்த்தாள் சசி..

"அண்ணாதான்.. என் புருசன் உனக்கு அண்ணாதானே.."

பாசத்துடன் சிரித்தவளின் தலையில் குட்டினான் கவிதாவின் கணவன்..

"திடிர்ன்னு பாசமலரை வளர்க்கச் சொன்னா தங்கச்சி என்ன பண்ணும்..? பாவம்.. மெது மெதுவாகத்தான் நம்ம பக்கத்து சொந்தங்க இதுக்குப் பழக்கமாகும்.."

கவிதாவை விடவும் இதமாகப் பேசியவனின் பெயர் தியாகராஜனாம்.. அவர்களின் குட்டிக் குழந்தை 'ரகுராம்' ஓடி வந்து சசிரேகாவின் மடியில் ஏறி கழுத்தைக் கட்டிக் கொண்டது..

"அத்தை.." என்று கொண்டாடியபோது சசிரேகாவின் காதுகளில் அமுதும், தேனும் பாய்ந்தன..

சிறுவனை கட்டியணைத்து முத்தமிட்டவளின் மனதில் கருணாகரனின் குடும்பத்தில் ஒருத்தியாகி விட்ட சொந்தம் வந்திருந்தது..

## 9

திருமணம் முடிந்த கையோடு கார மங்களத்துக்கு கிளம்ப வேண்டும் என்று சொல்லி விட்டானாம் கருணாகரன்..

"காரமங்களமா..? என்னடி ஊர்பேரே காரமா இருக்கு..?" என்றாள் வத்சலா..

"காரம்ன்னா உறைப்பு மட்டுமில்லங்க.. கெட்டியான பிடிப்புக்கும் அதே அர்த்தம்தான்.. எங்க ஊர்தான் இந்த சுத்துப்பட்டி ஊர்களுக்கே பெரிய டவுன்.. ரெண்டு

ஆர்ட்ஸ் காலேஜ், ஒரு என்ஜினியரிங் காலேஜ், நாலு மெட்ரிகுலேசன் ஸ்கூல்க.. ரெண்டு ஹையர் செகண்டரி ஸ்கூல்கன்னு படிப்புக்கு பெயர் வாங்கின டவுன்ங்க எங்க டவுன்.." என்றபடி வந்தாள் மேனகா..

பியூட்டி பார்லர் பெண்ணின் பெயர் மேனகா என்பதை கண்டுணர்ந்த சாமர்த்தியம் வத்சலாவுடையது..

"ஏன்ப்பா.. உங்க பேர் என்ன ரம்பா, ஊர்வசி, திலோத்தமையா..?" என்று அவள்தான் கேட்டாள்..

"ஏங்க.. ஒருத்தங்களுக்கு மூணு பேரு இருக்க முடியுங்களா..?" என்று அந்தப் பெண் வத்சலாவை வாரி வைத்தாள்..

ஒரு மார்க்கமாக திருதிருத்த வத்சலாவைப் பார்த்ததும் சசிக்கு சிரிப்புத்தான் வந்தது..

"ஏண்டி சிரிக்க மாட்ட.. நேத்து வரைக்கும் விரக்தியோட விளிம்பில இருந்துக்கிட்டு சிரிக்கக் கூலி கேட்ட.. இன்னைக்கென்னடா மொக்கை ஜோக்குக்குக் கூட சிரிச்சு மகிழ்ந்து போகிற.. நேரம்டி.." வத்சலா முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்..

"அதை விடுங்க.. நீங்க எதுக்காக இந்தப் பேர்கள என்னோட பேரான்னு கேட்டிங்க..?" அந்தப் பெண் ஊடே வந்தாள்..

"பக்கி மாதிரி இருக்கிற மூஞ்சிகளக்கூட.." வத்சலா சொல்ல ஆரம்பிக்கும் போதே..

"அதாவது இவளோட மூஞ்சி மாதிரி இருக்கிற மூஞ்சிகளக்கூடன்னு எக்ஸாம்பிள் சொல்றா.." என்று எடுத்துக் கொடுத்து வத்சலாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டாள் சசிரேகா..

"இப்ப அவங்க உன்கிட்ட விளக்கம் கேட்டாங் களா..?" என்று சசியின் முதுகில் நான்கு அப்பு அப்பினாள் வத்சலா..

"விடுங்க.. கல்யாணப் பொண்ணு.. பாவம்.. முதுகு வலிக்கப் போகுது.." அந்தப் பெண் பரிந்து கொண்டு வந்தாள்..

"ஆர்டினரி மூஞ்சியக்கூட அப்சரஸ் மாதிரி மாத்தி விடறிங்களே.. அதனால உங்க பேரு ரம்பா, ஊர்வசி, திலோத்தமைன்னு மூணில ஒன்னாத்தான் இருக்கும்ன்னு ஒரு கெஸ்ஸிங்.." தலையை சாய்த்து கருட பார்வை பார்த்தாள் வத்சலா..

"இந்த மூணும் இல்லாம மேனகான்னு இருக்கக் கூடாதா..? மூணோடு சேர்த்து அவங்க நாலாவது

அப்சரஸ், ஆச்சே.." என்று தன் பெயரை தானே சொன்னாள் மேனகா..

இப்படிப் போட்டு வாங்குகிறேன் பேர்வழியென்று தலையாலே தண்ணீர் குடித்து வத்சலா கண்டறிந்த பெயர்தான் மேனகா..

"கார மங்களத்தைச் சொன்னா நீங்க எதுக்காக காரசாரமா சண்டைக்கு வர்றீங்க..?" என்று கேட்டாள் வத்சலா..

"எங்க ஊரைப் பத்திச் சொன்னாக் கேட்டுக்கிட்டு சும்மா போவேனா.." மேனகா வாசல் பக்கம் பார்க்க..

"இதுக்கேங்க அடியாள்களைக் கூப்பிடறீங்க..? வாய்ப் பேச்சு வாய்ப்பேச்சா இருக்கனும்.." என்று ஜகாவாங்கினாள் வத்சலா..

"அடியாள்களைக் கூப்பிடலைங்க.. என்னோட பார்லர் ஆள்களைக் கூப்பிடறேன்.. கொண்டு வந்திருக்கிற பைகளை எடுத்துட்டுப் போகனுமில்ல.." சிரித்தாள் மேனகா..

"அப்பச்சரி.." நிம்மதியான வத்சலா..

"உங்க ஊரில படிப்பபத்தவிர வேற எதுவும் இல்லையா..?" என்று கேட்டு வைத்தாள்..

"ஏன் இல்ல..? சென்னையிலதான் ஷாப்பிங்மால் இருக்கா..? எங்க ஊரிலயும் இருக்கு.." மேனகா அறிவித்தாள்..

"பாருடா... சசி.. உங்க ஊரு ஷாப்பிங் மாலுக்கு ஒருநாள் விசிட் அடிக்கனும்டி.." என்றாள் வத்சலா..

"அவங்க ஊரு ஷாப்பிங் மாலா..? அதுக்கும் மேலே.." மர்மக்குரலில் சொன்னாள் மேனகா..

"என்னடி சசி..! உங்க ஊரு பொண்ணுககூட 'ஐ' பட விக்ரம் போல அசத்தறாங்க.." மூக்கின் மேல் விரலை வைத்தாள் வத்சலா..

"சூப்பர் மார்க்கெட்.. ஆறுசினிமா தியேட்டர்.. பதினைந்து கோவில்கள், பொழுது போக நாலு தெருவுக்கு ஒரு பூங்கா.. ஊருக்குப் பக்கத்திலே ஏரி.. அதில போட் ஹவுஸ்ன்னு சொல்லிக்கிட்டே போகலாம்.. கேட்கத்தான் உங்களுக்கு ஒருநாள் போதாது.." பெருமையாக முகத்தை வைத்துக் கொண்டாள் மேனகா..

"விட்டா 'ஒருநாள் போதுமா..?'ன்னு பாட்டுப் பாடி பயமுறுத்திருவா போல இருக்குடி சசி.." பம்மினாள் வத்சலா..

சசிக்கு எல்லாமே பிடித்திருந்தது.. ஒரே ஒரு மழையிரவில் அவள் வாழ்வு வண்ணமயமாக மாறி விட்ட விந்தையில் அவள் திகைத்துக் கொண்டிருந்தாள்.. எல்லாமே புதிதாக இருந்தன..

'நீர் புதிது.. நிலம் புதிது..

நிலத்தோடு உறவாடும்

கானும் புதிது..

வான் புதிது.. நிலவு புதிது

வண்ண மயமான

வாழ்வும் புதிது..

காற்று புதிது.. கனவு புதிது..

கனவுகளை எனில் விதைக்கும்

மோகத்தீயும் புதிது..'

அவள் மனது கவிதை எழுதியது.. காலம் அவளை கை விட்டு விடவில்லை.. படைத்த பிரம்மதேவன் அவள் தலைவிதியை கோணலாக எழுதி விடவில்லை என்று அவள் நெஞ்சம் நன்றியுணர்வுடன் விம்மியது..

"உன்னோட 'ஆள்..' உடனே கிளம்பனும்னு அவசர ஆணையை பிறப்பிச்சிருக்காராம்.. அங்குசாமித் தாத்தா மூஞ்சியைத் தூக்கி வைச்சுக்கிட்டு உக்காந்திருக்காரு.." வத்சலா அறிவித்தாள்..

"அங்குசாமி தாத்தாவா..?" அதற்கும் சிரிப்பு வந்தது சசிக்கு..

"போதும்டி.. இத்தனை நாளா அழுது வடிஞ்சதுக்கு ஒட்டு மொத்த சிரிப்பையும் இன்னைக்கே சிரிச்சுத் தீர்த்துடுவ போல இருக்கு.. கொஞ்சம் ஸ்டாக் வை.. மிச்ச நாள்களுக்கும் வேணுமில்ல.. முக்கியமா இன்னைக்கு ராத்திரிக்கு வேணாமா..?" கண்சிமிட்டினாள் வத்சலா..

"ச்சீ.." சசிரேகாவின் முகம் குங்குமமானது..

"வெட்கம்..? ம்ஹீம்.. நடத்து.. நடத்து.. எனக்கென்னவோ சசி.. மிஸ்டர் அங்குசாமியோட

நரை முடியையும்.. லொடுக்கு முதுகையும்.. டொபுக்கு நடையையும் பார்த்தா அவரைக் கொள்ளுத்தாத்தான்னு தான் கூப்பிடத் தோணுது.."

"அடிப்பாவி..!"

"ஸோ.. அவரை தாத்தான்னு சொல்றதே அதிகம்ன்ன வாயை மூடிக்க.. பெரியப்பான்னு சொல்லச் சொன்னே.. இங்கே ஒரு கொலையே விழுந்திரும்.."

வத்சலா மிரட்டி வாய் மூடுவதற்குள்..

"கொலை விழுந்திருச்சும்மா.." என்றபடி வாசல் பக்கமிருந்து வந்தான் ஒருவன்..

"ஹையோ.. நானில்ல நானில்ல.." சசியின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்தாள் வத்சலா..

அவளை விசித்திரமாக பார்த்த அந்த ஆள்..

"வாழைக்குலைம்மா.." என்று கையில் பிடித்திருந்த வாழை மரத்துடன் கூடிய குலையைக் காட்டினான்..

"இம்புட்டுத்தானா..?" நிம்மதிப் பெருமூச்சுடன் வெளியே வந்த வத்சலாவைப் பார்த்து..

"ஆனாலும் உனக்கு இம்புட்டுத் தைரியம் ஆகாதுடி.. கொலை விழ வைக்கிற மூஞ்சியைப் பாரு.." என்று கிண்டலடித்தாள் சசி..

"என் மூஞ்சியை விட்டுத் தள்ளிட்டு உன் மூஞ்சியை பிரஷ்ஷாக்கிக்கிற வழியைப் பாரு.. உன் புகுந்த வீட்டுக்குக் கிளம்பனுமாம்.. ஜல்தி.. ஜல்தி.."

"ஏண்டி பறக்கிற..?"

"பானுகீதா பாட்டியோட மூஞ்சியைப் பார்க்கிற கொடுமையிலிருந்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் தப்பிச்சாகனும் சசி.. மூஞ்சியா அது..? நசுங்கிப் போன பித்தளை அண்டா மாதிரி இருக்கு.."

"கடவுளே..! பெரியம்மா காதில விழுந்திரப் போகுதுடி.."

"அந்தக் கிழவியையெல்லாம் என்னால பெரியம்மான்னு கூப்பிட முடியாது.. இதுதான் இப்படின்னா.. இது பெத்து வைச்சிருக்கிற சூனியக்கார ஆண்டிக ரெண்டும் இதுக்கு மேலே இருக்குதுக.."

"ஆண்டிகளா..?"

"பின்னே..? அக்காக்களா..? போடி போ.. போய் பிரஷ் ஆகிட்டு வா.. ஓடிப் போயிரலாம்.."

"உன்கூடவா..?"

"என்கூட ஓடி வர என்னோட 'ஆள்' காத்துக்கிட்டு இருக்கான்.. நீ உன் ஆள் கூட ஓடிப்போ.."

வத்சலா கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக சசிரேகாவை விரட்டினாள்.. கருணாகரனின் கையைப் பிடித்து ஓடிப் போகப் போகும் சுகமான நினைவுகளுடன் கண்ணில் தென்பட்ட அறைக்குள் போனாள் சசிரேகா.. அது அங்குசாமியின் அறை என்பதும்.. அதுவரை அந்த அறையில் அவள் காலடி வைத்ததில்லை என்பதும் அவளுக்கு மறந்து விட்டது..

திருமணப் பெண்ணுக்கு கிடைக்கும் சிறப்புச் சலுகைகளில் ஒன்றாக அந்த அறையில் அவளை தங்க வைத்திருந்தார்கள்.. விடியலில் வந்து இறங்கிய சசிரேகா உடனடியாக குளித்து பட்டுப்புடவை உடுத்தி மணப் பெண்ணுக்கான ஒப்பனைகளை பண்ணி முடிக்க அந்த அறைதான் தோது என்று அனைவரும் அபிப்ராயப் பட்டதால் வேறு வழியின்றி அந்த அறையை சசிரேகா உபயோகப் படுத்திக் கொள்ள அனுமதித்திருந்தாள் பானுகீதா..

அந்த அனுமதியின் எல்லைக் கோடு ஒப்பனை முடியும்வரைதான் என்பதை அறியாதவளாய் சசிரேகா அந்த அறையின் பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாழ் போட முனைந்த அதே நேரத்தில் அந்த அறைக்குள் மகள்கள் பின்தொடரவந்த அங்குசாமியும், பானுகீதாவும் அறைக் கதவைத் தாழிட்டார்கள்..

'இது பெரியப்பாவோட ரூமில்ல..?'

சசி அப்படியே நின்று விட்டாள்.. அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.. அவர்கள் அறைக்குள் இருக்கும் போது பாத்ரூமை உபயோகப்படுத்துவது உசிதமானதல்ல என்று தோன்றியதால் வேறு அறைக்குப் போய் முகம் கழுவி சீர் செய்து கொள்ளலாம் என்றுஅவள் கதவைத் திறக்க முனைந்த போது அங்குசாமி குடும்பத்தினரின் பேச்சு வார்த்தை ஆரம்பமானது..

"என்னால தாங்கிக்கவே முடியலைப்பா.. இவளுக்குப் போயி இப்பேற்பட்ட மாப்பிள்ளையா..?" பொருமினாள் மலர்கொடி..

சசிரேகா தேங்கி நின்றாள்.. அவள் பாத்ரூமைவிட்டு வெளிப்பட்டால் ஒட்டுக் கேட்க ஒளிந்திருந்தாயா என்று மலர்க்கொடி அவள்மீது பாய்ந்தாலும் பாய்வாள் என்று தோன்றியதால் என்ன செய்வது என்று புரியாமல் கைகளைப் பிசைந்தாள்..

"ஆமாம்ப்பா.. இந்தப் புதுப்பணக்காரன் மேலே நிறையப் பொண்ணுகளுக்கு ஒரு 'இது' இருக்குதுப்பா.."

வெட்கமில்லாமல் சொன்ன மாலதியின் குமுறல்.. அவளுக்கு கருணாகரனின் மீது அந்த 'இது' இருப்பதை அப்பட்டமாக அறிவித்தது..

"திடிர்ன்னு வந்தவன் கார மங்களத்தையே ஒரு கலக்கு கலக்கிட்டான்.. இந்த சுத்து வட்டாரத்தில பெரிய மனுசனாவும் ஆகிட்டான்.. நம்ம வீட்டில பொண்ணு கேட்டு வந்தப்ப நம்ம மகள்களில ஒருத்தியத்தான் கட்டிக் கொடுக்கப் போகிறோம்ன்னு சந்தோசப் பட்டேன்.. கடைசியில பாத்தா இந்த அப்பன் ஆத்தா இல்லாத அநாதைக்கு யோகம் அடிச்சிருச்சு.." பல்லைக் கடித்தாள் பானுகீதா..

"என்னைக் கட்டிக்க வந்த மாப்பிள்ளைன்னு தான்ம்மா நானும் நினைச்சேன்.." பொங்கினாள் மலர்க்கொடி..

"நான் என்னைக் கட்டிக்க வந்த மாப்பள்ளைன்னுல்ல நினைச்சேன்.." அக்காவுடன் போட்டி போட்டாள் மாலதி..

இப்படிப்பட்ட மகள்களைப் பெற்று வைத்திருக் கிறோமே என்று தலையில் அடித்துக் கொண்டாள் பானுகீதா..

'ரெண்டும் ரெண்டு அகப்பை..! ரெண்டுமே கழண்ட அகப்பை..!'

அவள் விட்ட பெருமூச்சின் அனலில் அந்த அறையே தகிக்க ஆரம்பித்தது..

"அடங்குங்கடி.. அதான் உங்க ரெண்டு பேரில ஒருத்திக்கும் கிடைக்காம அந்த அநாதைக்கு அவன் கிடைச்சுத் தொலைச்சிட்டானே.. இன்னும் என்ன கழுதைக்கு அடிச்சுக்கறீங்க..?" மகள்களை அதட்டினாள்..

அங்குசாமி மகள்களை முறைத்ததில் அவளது ஆத்திரம் அதிகமானது..

"எதுக்கு இதுகளை முறைக்கறிங்க..? பொம்பளைப் புள்ளைகளைப் பெத்து வைச்சிருக்கிற மனுசன் இப்படியா தானா வந்த மாப்பிள்ளையை தம்பி மகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துட்டு நிற்பான்..? உங்களைச் சொல்லிக் குத்தமில்லைங்க.. இப்படியாப்பட்ட மனுசனுக்கு ஆக்கிப் போட்டு குடும்பம் நடத்தி ஒன்னுக்கு ரெண்டா பொம்பளைப் புள்ளைகளைப் பெத்துப் போட்டிருக்கேன் பாருங்க.. என்னைச் சொல்லனும்.." காளி அவதாரம் எடுத்தாள் பானுகீதா..

அதிர்ந்து போன சசிரேகா அப்படியே நின்று விட்டாள்..

## 10

கருணாகரனைத் திருமணம் செய்து கொள்ள அங்குசாமியின் மகள்கள் ஆசைப்பட்டார்களா..? பானுகீதா வயிற்றெரிச்சல் படுகிற அளவுக்கு அவன் பெரிய பணக்காரனா..?

ஆமாம் என்பதை வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டிருந்த அங்குசாமியின் மனைவியும் மகள்களும் சசிரேகாவிற்கு புரிய வைத்தார்கள்..

"எந்தக் கூட்டத்தில் அவன் வந்து நின்னாலும் முதல் மரியாதை அவனுக்குத்தான் கிடைக்குது.. தொட்ட தெல்லாம் துலங்குது.. நம்மள மாதிரி ஆளுகளுக்கு இப்படியாப்பட்ட பணக்காரங்கள எட்ட நின்னு பார்க்கிறதே பெரிய விசயம்.. அவன் கிட்டக்க வந்தா கோழிய

அமுக்கறாப்புல ஒரே அமுக்கா அமுக்கி நீங்க பெத்து வைச்சிருக்கிற பொண்ணுகள்ல ஒருத்திய அவன் தலையில கட்டி வைச்சிருந்தா நீங்க புத்திசாலி மனுசன்னு பெருமைப் பட்டிருப்பேன்.. உங்களுக்கு வாக்கப்பட்டு குடும்பம் நடத்தி புள்ளைகளைப் பெத்துக்கிட்டதில சந்தோசப் பட்டிருப்பேன்.. எங்கே..? அதுக்கெல்லாம் எனக்கு குடுப்பினை இருக்கா..?"

"அதைச் சொல்லுங்கம்மா... மூத்தவளாப் பொறந்திருக்கிற என்னையில்ல அவனுக்கு கட்டிக் கொடுத்திருக்கனும்..?"

"அப்படி எதுவும் சட்டமிருக்கா மலர்க்கொடி..? ஏன்..? இளையவளான என்னைக் கட்டிக் கொடுத்திருக்கலாமில்ல..?"

"எதிலதான் போட்டிக்கு வர்றதுன்னு விவஸ்தை யில்லையாடி உனக்கு..?"

"இல்லேங்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

அடித்துக் கொண்ட அக்கா தங்கைகளை ஆளுக்கு நான்கு அப்பு அப்பி அடக்கி வைத்தாள் பானுகீதா..

"இப்ப அவன் பொண்ணு கேட்டு நம்ம வீட்டு வாசல்ல வந்து நிக்கிறானாடி..? அறிவில்லாம அடிச்சுக்கறீங்களே.."

"வந்தான்ம்மா.. அப்பாதான் அவனை அந்த அநாதைக்கு விட்டுக் கொடுத்திட்டார்.. இல்லேன்னா அவன் என் கழுத்திலதான் தாலியைக் கட்டியிருப்பான்.."

"இல்லவே இல்லை.. என் கழுத்தில்தான் கட்டியிருப்பான்.."

"மூத்தவ நான்தான்டி.."

"இளையவதான் என்னைக்கும் ஸ்பெசல்.."

"மூத்தவ இருக்கிறப்ப இளையவளை கட்டிக் கொடுப்பாங்களா..?"

"அப்படின்னா ரெண்டு பேருமே அவனைக் கட்டிக்கலாம்.. என்ன சொல்ற..?"

"அடிப் பாவிகளா.."

கையில் கிடைத்த தலையணையால் மகள்களை வாங்கு வாங்கென வாங்கிய பானுகீதாவிற்கு தலைவலியே வந்து விட்டது..

"இம்புட்டு அழும்பும் உங்களாலே.." அவள் கணவனிடம் சண்டைக்குப் போனாள்..

"என்னை என்னடி பண்ணச் சொல்ற..? அவனுக்கு சசியைக் கட்டிக் கொடுக்கலைன்னா நம்ம சொத்து நம்ம கிட்ட நிலைக்காதுடி.." அலுத்துக் கொண்டார் அங்குசாமி.

"இது என்ன புதுக்கதையா இருக்கு..? நம்ம சொத்துக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்..?"

"ஒரு சம்பந்தமுமில்லைடி பானு.. ஆனா நம்ம சொத்தப் பத்தின அத்தனை ரகசியமும் அவன் கையில இருக்கு.."

"என்னங்க சொல்கிறீங்க.."

"ஆமாண்டி பானு.. இவன் என்னைப் பார்க்க தோப்புக்கு வந்தப்ப நான் நம்ம மகள்கள்ல ஒருத்தியை இவனுக்கு கட்டிக் கொடுத்திரனும்னுதான் ஆளாப் பறந்தேன்.. பயபுள்ள எம்புடாம கட் அண்ட் ரைட்டா டீலைப் பேசிட்டாண்டி.."

"டீலா..?"

"இது நமக்கு 'நோ டீல்'டி பானு.. ஒரு சமயம் ரங்கசாமிக்கு ஏற்காட்டுப் பக்கத்தில நிலம் வித்த பணம் வந்துச்சு.. ஞாபகம் இருக்கில்ல..?"

"மறக்குமா..? அந்தப் பணத்த அபேஸ் பண்ணித்தானே கார மங்களத்தில வீட்டை வாங்கிப் போட்டோம்.."

"லட்சக் கணக்கான பணம்.. கடனாக் கேட்டாத் திருப்பிக் கொடுக்கணும்.. பணமுடைன்னு கேட்டா பத்தாயிரம் இருபதாயிரம் கிடைக்கும்.. முள்ளங்கிப் பத்தை போல அறுபது லட்சமும் ஒட்டு மொத்தமா கைக்கு கிடைச்சிருக்குமா..? அதுக்காகத்தானே அந்த வேலையைப்

பண்ணியேன்..? சிறுகச்சிறுக விவசாயத்துக்காக வாங்கின கடன் வட்டியோட ஒன்னாச்சேர்ந்து அறுபது லட்சத்துக்கு வந்து நிக்குது.. என்பங்கு சொத்தயும் உன் பேருக்கே எழுதிக் கொண்டு வந்திருக்கேன்.. இதை வைச்சுக்கிட்டு பணத்தைக் கொடுன்னு கேட்டேன்.. வாங்க மாட்டேன்னு சொன்னவன்கிட்ட வம்படியா பத்திரத்த திணிச்சுட்டு பணத்த கைப்பத்திக்கிட்டு வந்தேன்.."

"தெரியாதவகிட்டச் சொல்றதப் போல என்கிட்ட கதை சொல்றீங்களே.. இந்த யோசனையைச் சொல்லிக் கொடுத்தவளே நான்தானே.. பத்திரம் எங்கே போகப் போகுது.. அதான் வருசத்தில பாதி நாளு ஏற்காட்டிலதான நாம விருந்தாடப் போகப் போறோம்.. அப்பச் சமயத்தில அந்தப் பத்திரத்த அபேஸ் பண்ணிட்டு வந்திரலாம்ன்னு திட்டம் போட்டேன்.. எங்கே..? அதுக்குள்ளதான் உங்க தம்பி மண்டையைப் போட்டுட்டானே.."

பாத்ரூமில் நின்றிருந்த சசிரேகாவின் ரத்தம் கொதித்தது.. அவளுடைய தந்தைக்கு எதிராக என்னவெல்லாம் சதித்திட்டம் தீட்டியிருக்கிறார்கள்..? இது ஏமாற்றுகிறவர்களுக்கான காலமா..? உண்மையான நேசத்துடன் இருக்கின்ற ஒருவரை வாழ்க்கையில் பார்க்கவே முடியாதா..? காலம் அப்படி எவரையும் கை காட்டவே காட்டாதா..? பாசம் வைத்த கொடுமைக்காக அனைத்தையும் இழக்க வேண்டுமென்பதுதான் தலைவிதியா..?

நிற்க முடியாமல் கால்கள் தொய்ந்து போக.. பற்றுக் கோடாய் சுவரைப் பிடித்துக் கொண்டு அதில் சாய்ந்து நின்றாள் சசிரேகா..

"ஏற்காட்டு வீட்டில இருந்தப்ப அந்தப் பத்திரத்த தேடோ தேடுன்னு தேடினேன்.. கைக்கு அகப்படல.. அதுக்குள்ள தாரிணியோட அண்ணன்காரன் கோர்ட்டுக்குப் போயிட்டான்.. வீடு கோர்ட்டோட பொறுப்பில போயிருச்சு.."

"இப்பத்தான் இந்தக் கழுதைக்கு இருபத்தியொரு வயசு முடிஞ்சுருச்சில்ல.. மேஜர்ன்னு கோர்ட் இவ பொறுப்பில

வீட்டைக் கொடுத்திருச்சுல்ல.. உடனடியா எழுதி வாங்கியிருக்க வேண்டியதுதான..? அத விட்டுட்டு கங்கு கரையில்லாம பணம் கொழிக்கிறவனுக்கு கல்யாணத்தை பண்ணி வைச்சுட்டில்ல நிக்கறிங்க..? இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்லுவேன்..?"

"நானே வயிறெரிஞ்சு போயி கிடக்கிறேன்.. நீயும் ஏண்டி தூண்டி விடறதைப் போலப் பேசற..? எனக்குமட்டும் இந்தக் கழுதையை அந்தப் பணக்காரனுக்கு கட்டிக் கொடுக்கனும்னு ஆசையா..? அப்படி எதுவும் நேர்த்திக்கடனா நேர்ந்துக்கிட்டு இருக்கேன்..? இல்லேடி பானு.. அந்த பிரவின்பய பொண்ணு கேட்டு வந்தப்பவே.. எனக்கு அடிவயிறு கலங்கிப் போச்சு.. கழுதைக்கு கல்யாண வயசாச்சு.. நம்ம கையை எதிர்பார்க்காம சுய சம்பாத்தியத்தில காலை ஊண்டி நின்னுட்டா.. நாளைக்கே கூட வேலை பார்க்கிறவன் எவனையாவது கோவில்ல வைச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டு மாலையும் கழுத்துமா வந்து நின்னாலும் நிப்பா.. அந்த பிரவின்பய நல்லவனா இருக்கப்போயி வீடு தேடி வந்து பொண்ணு கேட்டான்.. நாமளும் விரட்டி விட்டோம்.. எல்லாரும் அப்படியே இருப்பாங்களான்னு யோசிச்சுத்தான் ஏற்காடு வீடு முதற்கொண்டு அன்னவாசல் சொத்து வரைக்கும் அத்தனை சொத்தையும் என் பேருக்கு மாத்தி எழுதி வாங்கிடனும்னு பிளான் போட்டிருந்தேன்.. அதுக்குள்ள இந்தக் கருணாகரன் வந்து நின்னுட்டான்.."

"வந்தா என்னங்க..? அவனே நம்ம பொண்ணுகள பொண்ணு கேட்டு வரலைங்கிறப்ப அவனை எதுக்காக உக்கார வைச்சுப் பேசினீங்க..?"

"என்னத்தன்னு சொல்லுவேன் பானு..? அவன் கையில நான் ரங்கசாமிக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் இருந்துச்சுடி.."

"என்னது..?"

"ஆமாண்டி பானு.. ஏற்காடு வீடு எங்கேயோ கண்காணாத இடத்தில இருக்கு.. அது இல்லாம போனாலும் மனசைத்

தேத்திக்கலாம்.."

அங்குசாமி சோகத்துடன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த சசிரேகாவிற்கு 'என்னடா உலகம் இது..' என்று வெறுத்துப் போய் விட்டது..

யாருடைய சொத்தை யார் உரிமை கொண்டாடுவது..? ஏற்காடு வீட்டிற்காக ஒற்றைச் செங்கலையாவது அங்குசாமி எடுத்து வைத்திருப்பாரா..? அதை உரிமைக்காரியான சசிரேகாவிடம் இழந்து விட்டதற்காக அவர் மனதைத் தேற்றிக் கொள்வாராம்..

'என்ன கொடுமை இது..!'

"அன்னவாசல் சொத்து அப்படியில்லைடி பானு.. ஆத்தோரப் பாசனம்.. தோப்பும் துரவும் வயலும் வாழ்வுமா இந்த ஊரில பெயர் சொல்கிற அளவுக்குப் பொழைச்சுக் கிட்டு இருக்கோம்.. இந்தச் சொத்த இழந்துட்டா எங்கேடி போறது..? நம்மால அதைத் தாங்கிக்க முடியுமா..?"

"கடன்காரன்.. ரங்கசாமிக்கு நீங்க எழுதிக் கொடுத்த பத்திரம் அவன் கைக்கு எப்படி வந்துச்சாம்..?"

"எப்படியோ வந்துச்சு.. அதைப்பத்தி உங்களுக் கென்னன்னு கேட்டான்.. வாயை மூடிக்கிட்டேன்.. சசிரேகாவ அவனுக்குக் கட்டிக் கொடுத்தா பத்திரத்த

என் கையில கொடுத்திட்டு சசிரேகாவ கல்யாணம் பண்ணிக்கிறதாச் சொன்னான்.. வேற வழியில்லாம மனசே இல்லாம இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சேண்டி.."

"அப்படியே அந்த ஏற்காட்டு வீட்டையும் எழுதிக் கொடுக்கச் சொல்ல வேண்டியதுதானே.."

"சொல்லாம இருப்பேனா..? பார்ப்போம்ன்னு சொல்லியிருக்கான்.."

'பார்ப்பானா..? எதைப் பார்ப்பான்.. சசி பிறந்து வளர்ந்த வீட்டை.. அவளுடைய பெற்றோர் வாழ்ந்த வீட்டை.. அங்குசாமியைப் போன்ற கயவன் பெயருக்கு அவள்

மாற்றிக் கொடுப்பதை பார்ப்பானா..? யார் சொத்துக்கு யார் வாக்குறுதி கொடுப்பது..?'

சசிரேகாவின் முகம் ரத்தமென சிவந்தது.. அன்னவாசல் சொத்தைப் பற்றி அவளுக்கு யாதொரு கவலையும் இல்லை.. அவளுடைய அன்னை வந்து செல்லாத அன்னவாசலின் சொத்துக்களை என்றைக்குமே அவள் பெரிதாக நினைத்ததில்லை.. ஆனால் ஏற்காடு வீடு..? அதில் அவளைப் பெற்றவர்களின் உயிர் மூச்சு நிறைந்திருக்கிறதே.. அதை அவள் அங்குசாமியின் கைகளில் தூக்கிக் கொடுப்பாளென்று எந்த தைரியத்தில் கருணாகரன் வாக்குக் கொடுத்தான்..

யார் சொத்தை யார் யாருக்கு தானம் கொடுப்பது..?

அவளது மார்பில் புரண்ட தாலிச்சரடு இப்போது உறுத்தியது.. அதை எடுத்துப் பார்த்தவளின் கண்களில் வெறுப்பு அப்பிக் கொண்டது.. சற்று முன் இதே தாலிச்சரடுதான் அவளை இன்பமயமான எண்ணங் களுக்குள் இழுத்துச் சென்று நினைவுகளையெல்லாம் இனிக்க வைத்தது..

'இதை என் கழுத்தில் கட்ட அவன் விலை வைத்திருக்கிறானா..?'

சசிரேகா திருமதி கருணாகரனாக ஆக வேண்டு மானால் அவளுடைய பெற்றோர் வாழ்ந்த வீட்டை அங்குசாமிக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்.. அன்னவாசலில் அவளுக்கு இருக்கும் சொத்தின் பாகத்தை அங்குசாமியின் பெயருக்கு எழுதிக் கொடுத்து விட வேண்டும்..

'இவன் யார் இதை நிர்ணயிப்பதற்கு..?'

"அதிக நேரம் அவன் பார்வையில் படாம இருந்தா என்ன சதித்திட்டம் தீட்டறிங்கன்னு கேட்டு வைப்பான்டி.. அவனையும் அந்த சசிரேகாக் கழுதையையும் வழியனுப்பி வைச்சுட்டு வந்து பேசலாம்.."

பாத்ரூமுக்குள் உயிர் துடிக்க சசிரேகா நின்றிருப்பதை அறியாதவர்களாக அங்குசாமியின் குடும்பம் அறையை

விட்டு வெளியேறி விட்டது.. சசிரேகா முகத்தில் தண்ணீரை ஓங்கி அடித்துக் கழுவினாள்.. சோர்வு நீங்கவில்லை..

உடல்சோர்வாக இருந்தால் நீங்கியிருக்கும்.. மனச் சோர்வு எப்படி நீங்கும்..?

தளர்ந்த நடையுடன் அறையை விட்டு வெளியே வந்தவளைத் தேடி வந்த கவிதா..

"என்னம்மா.. இவ்வளவு நேரமா எங்கேயிருந்த..? உன்னைக் காணோம்ன்னு நாங்கள்ளாம் தேடிக்கிட்டு இருக்கோம்..." என்றாள்..

"நைட்டெல்லாம் கண்முழிச்ச அசதி அண்ணி.. கண்ணைக் கட்டிக்கிட்டு வந்துச்சு.. படுத்துட்டேன்.." அவள் முகம் பார்க்காமல் பதில் சொன்னாள் சசிரேகா..

"அடடா..! தலையை வலிக்குதா..?"

கவிதாவின் அக்கறையில் சசிரேகாவின் கண்கள் கலங்கி விட்டன.. நேற்றுவரை அவளைப் பற்றிக் கவலைப் பட யாருமில்லை.. இன்று கவிதாவைப் போல ஒரு தாய்மையுள்ளம் கொண்ட நாத்தனார் கிடைத்திருக்கிறாள்..

ஆனால் இந்த உறவுக்காக சசிரேகா கொடுக்கப் போகும் விலை என்ன..?

"வாம்மா.. நேரமாகிருச்சுன்னு கருணா கத்திக்கிட்டு இருக்கான்.."

'ஏன் கத்த மாட்டான்..? கண்ணி வைச்சு வலையில் சிக்க வைச்சிருக்கானில்ல.. கத்தத்தான் செய்வான்..'

மௌனமாக கவிதாவைப் பின் தொடர்ந்தாள் சசிரேகா.. காத்திருந்த கருணாகரனின் விழிகள் அவளை உறுத்துப் பார்த்தன..

ரத்தமெனக் கலங்கிச் சிவந்திருந்த சசிரேகாவின் விழிகளைக் கண்டதும் அவன் புருவங்கள் முடிச்சிட்டன.. அவன் பார்வையைச் சந்திக்காமல் சசிரேகா தவிர்த்ததில் அவன் முகம் இறுகிப் போனது..

"கிளம்பலாம்.."

அவன் பொத்தாம் பொதுவாகச் சொன்னதும் அங்கிருந்தவர்கள் விரைந்து கிளம்பினார்கள்.. காத்திருந்த பஸ்ஸிலும் கார்களிலும் அவனுடைய உறவுக்காரர்கள் ஏறிக்கொள்ள அவை வரிசையாக கிளம்பின..

"ஹப்பா..! ஒரு அரசனைப் போல இருக்காருடி.." வத்சலா கைகளை கன்னங்களில் வைத்து அதிசயித்தாள்..

"எவர்..?" எரிச்சலுடன் கேட்டாள் சசிரேகா..

"உன் ஹஸ்பெண்ட்தான்.."

"அவரா..? அவன், இவன்னுதான பேசுவ..?"

"அது அப்ப.. இது இப்ப.."

"இப்ப என்ன ஆகிப் போச்சாம்.."

"சாரு யாருன்னு தெரிஞ்சு போச்சுல்ல.."

"யாராம்..?"

"ஹி மேன்.."

அப்படியா என்பதைப் போல அருகில் வந்தவனை வெறித்துப் பார்த்தாள் சசிரேகா.. அவனோ புருவச் சுளிப்புடன் காரில் ஏறினான்.. வத்சலா உந்தித் தள்ளியதில் வேறு வழியில்லாமல் காரில் ஏறி அவன் பக்கத்தில் உட்கார்ந்த சசிரேகா இடைவெளி விட்டு விலகி அமர்ந்தாள்..

"தள்ளி உட்காருடி.. எனக்கு இடம் வேணாமா..?"

வத்சலா சசியை இடித்துக் கொண்டு உட்கார்ந்ததில் ஏறக்குறைய கருணாகரனின் மடிமீது விழுந்தாள் சசி.. ஒருவரையொருவர் உராய்ந்து கொண்ட அந்த நொடியில் முதல்நாள் இரவுப் பயணத்தைப் பற்றிய நினைவு இருவர் மனதிலும் வந்து தொலைத்தது.

"வலது காலை எடுத்து வைச்சு உள்ளே வாம்மா.."

ஆரத்தி எடுத்து சசிரேகாவின் நெற்றியில் குங்குமம் இட்ட கவிதா அன்புடன் அழைத்தாள்.. வலது காலை எடுத்து வைத்து அந்த வீட்டிற்குள் பிரவேசித்த சசிரேகாவிற்கு அது வீடா இல்லை அரண்மனையா என்ற சந்தேகம் எழுந்தது.. அது போன்ற மாளிகைகளை அவள் திரைப்படங்களில்தான் பார்த்திருக்கிறாள்.. முதன் முறையாக நேரில் பார்க்கிறாள்.. அந்த வீடுதான் அவள் வாழப்போகும் வீடு என்பதில் ஏன் அவள் மனதில் மகிழ்வும் பிரமிப்பும் வரவில்லை..?

"பூஜையறையில் விளக்கேத்தும்மா.."

கவிதா பொறுப்பாக வாழ வந்திருக்கும் மருமகள் செய்ய வேண்டிய வழிமுறைகளையும் நியதிகளையும் செய்ய வைத்தாள்..

சசிரேகா பூஜையறையில் விளக்கேற்றி விட்டுத் தரையில் மண்டியிட்டு குனிந்து தெய்வங்களை வணங்கி எழுந்தாள்.. கருணாகரனின் பக்கத்தில் அவளை உட்கார வைத்துப் பாலும், பழமும் சாப்பிட வைத்தார்கள்.. உறவினர்களின் கேலி அவர்கள் இருவரின் மனதிலும் ஒட்டவில்லை.. கருணாகரன் எழுந்து மாடிக்குப் போய் விட்டான்.. தனித்து நின்ற சசிரேகாவின் காதைக் கடித்தபடி இருந்தாள் வத்சலா..

"நீங்க ரெண்டு பேரும் ரெஸ்ட் எடுத்துக்கங்க.." கவிதா சொல்லி வாய் மூடுவதற்குள்..

"எங்கே.. எங்கே.." என்று பறந்தாள் வத்சலா..

"ஏன்..?"

"உங்களுக்குத் தெரியாதுங்க.. இவளுக்கு தோழிப் பெண்ணாக் கிளம்பி வந்தாலும் வந்தேன்.. முதுகு ஒடிஞ்சு போச்சு.. கொஞ்ச நேரத்துக்கு கட்டையை சாய்த்தினாத் தேவலைன்னு நான் ஏக்கப்பட்டுக்கிட்டு இருந்தப்ப நீங்க இந்த வார்த்தையைச் சொன்னீங்க பாருங்க.. எங்கேயோ போயிட்டிங்க.. நீங்க நல்லா இருக்கனும்.."

"சசி உன் பிரண்டு சிரிக்கச் சிரிக்கப் பேசறா.."

கவிதா சிரித்தபடி கை காட்டிய அறைக்குள் நுழைந்து கட்டில்களில் சரிந்த தோழிகள் இருவரும் தூங்கிப் போனார்கள்.. மாலையில் காபி பலகாரத்துடன் அவர்களை எழுப்பி விட்டாள் கவிதா..

"இப்பத்தான் ரிலாக்ஸா இருக்குதுங்க.." காபிக் கப்பையும் பலகாரத் தட்டையும் வாங்கிக் கொண்ட வத்சலா..

"டின்னர் முடிஞ்சதும் நான் கிளம்பறேண்டி.." என்று சசிரேகாவிடம் சொன்னாள்..

"எங்கே..?"

"சென்னைக்குத்தான்.."

"என்னை விட்டுட்டா..?"

பதட்டத்துடன் கேட்ட சசிரேகாவை விசித்திரமாகப் பார்த்தாள் வத்சலா..

"என்னடி ஆச்சு உனக்கு..? இது உன் வீடு.. என்னோட வேலை சென்னையிலதான் இருக்கு.. கூடவே என்னோட ஆளும் அங்கேதான் இருக்கான்.. உன் லைஃப் இனி இங்கேதான்.. என்னோட லைஃப் அங்கேதான்.. நாம 'குட்பை' சொல்லிக்க வேண்டிய நேரம் வந்தாச்சு சசி.."

"வேண்டாம் வத்சலா.. என்னைத் தனியா விட்டுட்டுப் போகாதே.."

வத்சலாவின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் சசிரேகா.. அவளது விரல்கள் நடுங்கிய நடுக்கத்தில் வத்சலா கவலையானாள்.. கவிதாவைப் பார்த்தாள்.. அவள் 'பொறு' என்று விழிகளால் சமிக்ஞை செய்து விட்டு மாடிக்குப் போனாள்.. சற்று நேரத்தில் கனத்த காலடியோசை கேட்டது..

"உன் ஆள் வர்றாரு.." கண் சிமிட்டினாள் வத்சலா..

எதிர்பார்ப்பும் வெறுப்பும் சேர்ந்த நெருப்பு சசிரேகாவின் மனதில் பற்றிக் கொண்டது.. அறைக்குள் வந்த

கருணாகரனுக்கும் அப்படித்தான் இருந்தது

போல.. சசிரேகாவை முறைத்துப் பார்த்தான்.. சசி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அவனது கண்கள் சிவந்தன..

"நைட்டே ஊருக்குக் கிளம்பனும்னு சொன்னீங் களாமே.." வத்சலாவிடம் விசாரித்தான்..

"யெஸ் ஆபிசர்.." குறும்புடன் சொன்னாள் அவள்..

அவன் முகம் இளகியதில் சசிரேகா பொறாமை கொண்டாள்..

"நாளைக்குப் போகலாம்.."

"முடியாதே ஆபிசர்.. உங்க காரமங்களம் டவுனில இருந்து சென்னைக்குப் போக நைட்டிலதான் டிரெயின் இருக்காமே.."

"நான் காரில அனுப்பி வைக்கிறேன்.."

"உங்களுக்கு எதுக்கு சிரமம்..?"

"இதில சிரமப்பட என்ன இருக்கு..? எங்க கல்யாணத்துக்காக நீங்க இவ்வளவு சிரமப்பட்டு வந்திருக்கிறப்ப.. உங்களை பத்திரமா அனுப்பி வைக்கனும்னு நான் நினைக்கிறது ஒரு சிரமமா..?"

"தூள் ஆபிசர்.. இந்தப் பேச்செல்லாம் நேத்து நைட் எங்கே போயிருந்துச்சு ஆபிசர்..? அப்படியே வில்லனைப் போலவே மூஞ்சியை வைத்துக்கிட்டு இருந்தீங்களே ஆபிசர்.."

"ஹீரோவா இருக்கனும்னு ஆசைதான்.."

சசிரேகாவைப் பார்த்தபடி சொன்னான் கருணாகரன்.. அவள் முகம் கடுத்தாள்.. அவளுடைய அப்பா அம்மா வாழ்ந்த வீட்டை ஏலம் போட முயலும் இவன் ஹீரோவா..?

'வில்லன்..!'

அவள் விழிகள் வெறுப்பைக் கக்கியதில் அவனது புருவங்கள் சுருங்கின.. அவளையே பார்த்தான் அவன்..

"வில்லனா இருந்தாத்தானே வேலை நடக்குது.." என்று வத்சலாவிடம் சொன்னான்..

இது சசிரேகாவுக்கான பதில் என்பதை புரிந்து கொண்டவள் உதட்டைக் கடித்தாள்.. அவன் பார்வை கூர்மையாக அவளது இதழ்களில் படிந்ததில் அவளுக்குள் மோகத்தீ மூண்டது..

முள்ளிலே நெருஞ்சி முள் மோகமுள்தான்.. அதை தைத்தவர் பிடுங்கினாலொழிய அதன் வலி குறையாது.. அந்த வலியை அனுபவிக்கும் சாபம் சசிரேகாவுக்கு ஏன் வாய்த்தது..?

அவளது நெஞ்சத்தினை நெருடும் நெருஞ்சி முள்ளான மோக முள்ளை அவளுக்குள் விதைத்தவன் அவன்தானே.. அவன் தைத்த முள்ளை நீக்க அவன் முன் வரலாம்.. சசிரேகாவினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா..?

அதைவிட நெருஞ்சி முள்ளின் நெருடல் ஏற்படுத்தும் குருதி கொப்பளிக்கும் மோக வலியினைத் தாங்கிக் கொள்வதே சாலச்சிறந்தது என்று அவள் துயரத்துடன் நினைத்துக் கொண்டாள்..

"பஸ்.. பஸ்.. எதுக்கு இந்த வில்லன் வேலை..? முறைப்பெல்லாம் வேண்டாம் ஆபிசர்.. அதான் நீங்க நினைச்ச வேலையை முடிச்சிட்டிங்களே.. கல்யாணம் பண்ணிக்கப் போகிறவளைக் கொட்டற மழையிலயும் தேடி வந்து கூப்பிட்டுக்கிட்டு வந்து தாலி கட்டிட்டிங்களே.. இனி வில்லன் வேசத்தைக் கலைக்க வேண்டியது தானே..?"

வத்சலா சிரித்தாள்.. சசிரேகா கூடச் சேர்ந்து சிரிக்க வில்லை என்பதை அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் நெற்றியில் ஆழ்ந்த சிந்தனை ரேகைகள் படர்ந்திருந்தன..

'போடி பைத்தியக்காரி..! இப்ப இவன் கட்டியிருக் கிறதுதான் ஹீரோ வேசம்டி.. இவன் ஒரிஜினல் டிரேட் மார்க் வில்லன்டி..'

பொருமிக் கொண்டிருந்த சசிரேகா அவனைக் கவனிக்கவில்லை.. அவள் தன் துயரத்தில் ஆழ்ந்திருந்தாள்..

"நான் வேசம் போட்டதே இல்லைங்க.. ஒரிஜினலா எப்படி இருக்கேனோ அப்படியேதான் இருக்கேன்.. காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்ன்னு என்னைப் பாக்கிறவங்க பார்வையைப் பொறுத்துத்தான் எல்லாமே மாறுதுங்க.."

குத்தலாகச் சொன்னான் கருணாகரன்... இமையுயர்த்தி அவனைப் பார்த்த சசிரேகாவின் விழிகளில் முந்தைய இரவின் நிழல் அடையாளங்கள் ஏதும் மீதமிருக்கின்றதா என்று அவன் பார்வை கூர்மையாகத் தேடியது.. கசப்புடன் விழி திருப்பிக் கொண்டவளை சினத்துடன் பார்த்தான் அவன்..

"என்னவோ போங்க ஆபிசர்.. இந்த கலர் கலரான பழமொழிக்கெல்லாம் எனக்கு அர்த்தம் விளங்கித் தொலைக்காது.. எது சொல்றதா இருந்தாலும் நேரடியாச் சொன்னாத்தான் என் மண்டையில உறைக்கும்.."

"டியூப்லைட்டுன்னு சொல்லுங்க.."

"தேவைதாங்க எனக்கு.. உங்க பெண்டாட்டிக்குத் துணையா கொட்டற மழையில ரயிலேறி வந்து.. நடுக்காட்டில ரயில் நின்னு.. அதுக்கப்புறமா அவளைக் கடத்த வந்த உங்களை ஃபாலோ பண்ணின இவ பின்னால ஓடிவந்து.. இவ பட்ட கஷ்டத்த நானும் சேர்ந்து பட்டுன்னு.. நேத்து நைட் பூராவும் அல்லாடினேன் பாருங்க.. அதுக்கு இந்தப் பட்டம் மட்டும் போதாதுங்க ஆபிசர்.. இன்னும் ரெண்டு, மூணு பட்டத்தையும் யோசிச்சு நிதானமா சேர்த்துக் கொடுங்க ஆபிசர்.."

"நேத்து நைட் இவ பட்ட கஷ்டத்த நீங்களும் பட்டிங்களா..? இல்லையே.. தூக்கம் வருதுன்னு இவளை முன்சீட்டுக்கு பற்றி விட்டுட்டு பின்சீட்டில ஹாயா டிரெயினில ஏஸி பர்த்ல தூங்கிக்கிட்டு வர்றதைப் போல காலை நீட்டித் தூங்கிக்கிட்டில்ல வந்தீங்க.. மறந்துட்டிங்களா..?"

அவனுடைய துளைக்கும் பார்வை சசிரேகாவின் முகத்தையே அவதானித்துக் கொண்டிருந்தது.. வத்சலாவிடம் அவன் பேசும் ஒவ்வொரு பேச்சிற்கும்

அவள் முகம் மாறுவதையும்.. உணர்வுகளை அவள் முகம் துல்லியமாக பிரதிபலிப்பதையும் அவன் கணக்கெடுத்துக் கொண்டுதான் இருந்தான்..

பின்சீட்டில் வத்சலா படுத்துறங்கி விட்டதை அவன் நினைவு படுத்திய நொடியில் சசிரேகாவின் உதடுகள் துடித்ததை கண்டு கொண்ட அவன் கண்கள் மின்னின.. அவன் முகத்தைப் பார்த்து விடாமல் சர்வ ஜாக்கிரதையாக வேறு திசையில் பார்த்த சசிரேகாவின் செயலில் அவன் பல்லைக் கடித்தான்..

"ஆஹா..! ஆபிசர் பாயிண்டப் பிடிச்சிட்டாரே.. அதெப்படி ஆபிசர் மறக்கும்..?"

"இல்லே.. சிலபேரு நடந்ததையெல்லாம் மறந்துடறாங்க.. அதான் கேட்டேன்.."

அடிபட்டவளைப் போல சசிரேகா அவனைப் பார்த்து வைக்க.. காத்திருந்த அவன் பார்வை அவள் பார்வையைக் கவ்விக் கொண்டது.. ஒரு நொடி பார்வையை விலக்க முடியாமல் திணறிப் போனாள் சசிரேகா.. ஆளை விழுங்கும் அவனது பார்வையின் ஆழத்தில் அவளுக்கு மூச்சுத் திணறியது.. மோக வெள்ளத்தின் சுழலில் அவள் மாட்டிக் கொண்டதைப் போல உணர்ந்தாள்..

'தாம்.. தரிகிடோம்.. தீம்.. தீம்..'

அவள் மனதில் சிந்தா நதியின் சுழல் சுழன்றது.. இன்னது என்று வரையறுக்க முடியாத சிந்தா நதியின் சுழல்..! ஆழம் காண இயலா அதன் லாவகம்.. மூழ்கடிக்கும் மோக வெள்ளத்தில் சிந்தா நதியின் சுழலும் இணைந்து விட்டால் அவள் என்னவாகிப் போவாள்..?

"மத்தவங்களை விடுங்க ஆபிசர்.. நான் மறக்க மாட்டேன்.."

"நன்றிங்க.. அதென்ன இன்னமும் ஆபிசர்ங்கிற அடைமொழியை போட்டுக்கிட்டு..? அழகா அண்ணான்னு கூப்பிடலாமே.."

"என்னது..?"

வத்சலா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வலியில் துடிப்பவளைப் போல பாவனை செய்தாள்..

"ஏய்ய்..! அடங்குடி.." எரிச்சலுடன் முணுமுணுத்தாள் சசிரேகா..

"எதுக்கு இந்த அடாவடி..?" கருணாகரன் விசாரித்தான்..

"சசி எனக்குக் கூடப் பிறந்தவளைப் போல ஆபிசர்.."

"அதுக்கு..?"

"அவளோட ஹஸ்பெண்ட் எனக்கு அத்தான் முறையாயில்ல ஆகனும்.. அண்ணன் முறை சொன்னா என் மனசு தாங்குமா..?"

கருணாகரனுக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.. அவன் இதுபோன்ற அதிரடிப் பதிலை எதிர் பார்த்திருக்கவில்லை.. தாடையைத் தடவியபடி சசிரேகாவின் முகத்தைப் பார்த்தான்.. அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன..

"அத்தான் முறையில்ல ஆகனும்..?" என்று வத்சலாவின் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டாள்..

"ஆ..." வத்சலாவுக்கு வலி தாங்கவில்லை..

"எதிலதான் வாயடிக்கிறதுன்னு விவஸ்தை யில்லை..? குரங்கே..!" சசியின் முகம் சிவந்திருந்தது..

"அதுக்காக இப்படியா அடிப்ப..?"

"அடிக்கிறதோட நிறுத்திக்கிட்டேனேன்னு சந்தோசப்படு.. உன்னை கொன்னிருக்கனும்.."

கோபத்தோடு திரும்பியவள் கருணாகரனின் ஆழ்ந்த பார்வையைக் கண்டதும் உதட்டைக் கடித்தபடி மௌனமாகி

விட்டாள்..

"எல்லாம் உங்களாலே ஆபிசர்.." வத்சலா பாய்ந்தாள்.

"நானென்னங்க செய்தேன்..?"

"உங்களை யாரு ஆபிசர் அண்ணன் முறை சொல்லி பாசப்பயிரை வளர்க்கச் சொன்னது..?"

"ஏதோ சொந்தத்தில சொன்னதுங்க.. அது ஒரு தப்பா..?"

"தப்புத்தான்.. என் புருசன்தான், எனக்கு மட்டும் தான்ங்கிற பொஸசிவ் பிடிச்ச பொண்டாட்டிய பக்கத்தில வைச்சுக்கிட்டு என்னை மாதிரி யதார்த்தமா பேசறவளோட வாயைக் கிளறினா அது தப்புத்தான்.. இப்பப் பாருங்க.. என் முதுகு பழுத்திருச்சு.. உங்க பொண்டாட்டி டின் கட்டி விட்டுட்டா.."

வத்சலா 'பொண்டாட்டி.. பொண்டாட்டி..' என்று சொல்லும் போதெல்லாம் இனம் புரியாத ஓர் நூதன உணர்விற்கு ஆளானாள் சசிரேகா.. அந்த உணர்வு இதமானதொரு இம்சையை அவளுக்குள் விதைத்தது.. கருணாகரனின் ஆழ்ந்த பார்வைகள் வேறு அவளை அலைக்கழித்தன..

"ஒரு டவுட்டுங்க.."

"இந்த நிலைமையில உங்க டவுட்டை நான் கிளியர் பண்ணியாகனுமா ஆபிசர்..?"

"ஆமாங்க.."

"இரக்கம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்பீங்க போல.. கேளுங்க.. கேளுங்க.."

"ஆல்ரெடி உங்களுக்கு 'ஆள்' இருக்காருன்னு நேத்து நைட் காரில வந்தப்ப உங்க பிரண்டுகிட்ட சொல்லிக்கிட்டு வந்தீங்களே.."

"என்னது..? அதை நீங்க கேட்டுட்டீங்களா..?"

அவன் அதை மட்டும்தான் கேட்டானா.. அதற்கு மேலும் கேட்டானா என்று அதிர்ச்சியானாள் வத்சலா..

"ஒரே காரில டிராவல் பண்ணினோம்.. பின் சீட்டில நீங்க பேசினது முன்சீட்டில காரோட்டிக்கிட்டு இருந்தவன் காதில விழுந்திருக்காதா..?"

"நான் ரகசியமால்ல பேசினேன்..?"

"உங்க ரகசியக் குரலைப் பத்தி வெளியில சொல்லிராதீங்க.." கருணகாரன் தோள்களைக் குலுக்கினான்..

## 12

வத்சலாவுக்கு லஜ்ஜையாகி விட்டது.. கருணாகரன் அவளையே பார்க்கிறான் என்று சசிரேகாவிடம் அவள் பினாத்தியதையும் அவன் கேட்டு விட்டானா என்ற வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது.. சசியைப் பார்த்தாள்.. அவள் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டாயா என்று முறைத்து வைத்தாள்..

"நீங்க ரகசியமாப் பேசினதே எட்டு ஊருக்கு கேட்குது.. சாதாரணமாப் பேசினா இந்த சுத்து வட்டாரத் துக்கே கேட்கும் போல இருக்கு.. எதுக்கும் நீங்க அக்கம் பக்கம் யாருமே இல்லாத நேரம் பார்த்து ரகசியம் பேசறது பெட்டர்ங்க.." கருணாகரன் சிரிக்காமல் யோசனை சொன்னான்..

"அக்கம் பக்கம் ஆளில்லாதப்ப எதுக்காக ஆபிசர் ரகசியம் பேசனும்.. ஸ்ட்ரெயிட்டா விசயத்துக்கு வந்திர வேண்டியதுதானே.."

"அதையும் செய்யலாம்.."

"நீங்க எதையோ செய்ங்க.. என்னோட ஆளை எதுக்காக இழுத்தீங்க.."

"நான் ஆம்பளைங்க.. இழுத்தா ஒன்னும் தப்பில்லை.."

"இதுவேறயா..? முடியல சாமி.."

"இல்லே.. நீங்க மட்டும் என் ஆளுதான் எனக்கு மட்டும்தான்னு நினைக்காம தாராள மனதோட உங்க ஆளை தண்ணி தெளிச்சு விட்டு விடுவீங்களா..?"

இதையும் சிரிக்காமல்தான் கேட்டு வைத்தான் கருணகாரன்.. வத்சலா அவனை தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்து விட்டுத் தோழியைப் பார்த்தாள்.. சசிரேகாவின் மனதிற்குள் பரவாயில்லையே, வத்சலாவையே பேச்சில் மடக்குகிறானே.. கில்லாடிதான் என்ற பாராட்டு தோன்றத் தான் செய்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இதற்குத்தான் வாயை அடக்கு என்றேன், கேட்டாயா என்ற பதில் பார்வையை பார்த்து வைத்தாள்..

"இன்னைக்கு காலைல வரைக்கும் இவளும் நானும் ஒன்னு.. நீங்க மட்டும் வேறங்கிற மாதிரி சிச்சுவேசன் இருந்துச்சு.. இப்ப டோட்டலா நிலைமை தலைகீழா மாறிப் போயி இவளும் நீங்களும் ஒன்னு, நான் மட்டும் வேறங்கிற மாதிரி ஆகிப் போயிருச்சில்ல.. புருசனும், பெண்டாட்டியும் கூட்டணி போட்டுக்கிட்டு என்னை வாரத்தான் செய்வீங்க.." வத்சலா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்..

சசிரேகாவிற்கு வருத்தமாகி விட்டது.. அவளுக் கென்று இருக்கும் ஒரே துணை வத்சலா மட்டும்தான் என்பதில் அவள் மனம் இளகி விட்டது..

"விடுடி.. விளையாட்டுப் பேச்சை சீரியஸா எடுத்துக்கிட்டு.." தோழியை சமாதானம் செய்தாள்..

"உன் புருசன் பேசினா அது விளையாட்டுப் பேச்சு.. அதுவே நான் பேசினா அது வினையா..?"

"அப்படின்னு யார் சொன்னது..?"

"உன் ஆருயிர் கணவர்தான்.."

"அதெல்லாமில்ல.. நீ இன்னைக்கு நைட்டே ஊருக்குக் கிளம்ப வேணாம் வத்சலா.. நாளைக்குப் போ.."

"எதுக்கு..? உன் புருசன் என்னை மட்டம் தட்டறதை வேடிக்கை பார்க்கிறதுக்கா இருக்கச் சொல்ற..?"

"இல்லைடி.. எனக்குத் துணையா இருக்கச் சொல்றேன்.. எனக்குன்னு யாருடி இருக்கா..? நீ ஒருத்திதான் இருக்கிற.. நீயும் கிளம்பிப் போயிட்டியின்னா எனக்கு வெறிச்சுன்னு ஆகிரும் வத்சலா.." சசி ரேகாவின் குரல் தழதழத்தது..

"இருடின்னு சொன்னா இருந்துட்டுப் போறேன்.. அதுக்காக அழுவாச்சியாத்தான் பேசனுமா..?" தோழியை கட்டிக் கொண்டாள் வத்சலா..

அவள் உடனடியாகக் கிளம்பப் போவதில்லை என்பதில் சசிரேகாவின் மனதிலிருந்த தனிமையுணர்வு குறைந்தது.. வத்சலாவின் விரல்களோடு விரல்களைப் பிணைத்தபடி கருணாகரனைப் பார்த்தவள் திகைத்துப் போனாள்.. அவன் முகத்தில் கடுமை பரவியிருந்தது.. பிணைந்திருந்த தோழிகளின் கைகளை உறுத்துப் பார்த்தவன் எழுந்து போய் விட்டான்..

சசிரேகாவின் மனதில் விடுதலையுணர்வும் ஏமாற்றமும் ஒன்று சேர்ந்து தோன்றின.. அவளுக்கு அழ வேண்டும் போல இருந்தது.. வத்சலாவின் மடியில் முகம் புதைத்து அழ வேண்டும்.. மனதில் உள்ள பாரத்தை கண்ணீரில் கரைத்து விட வேண்டும்...

முடியவில்லை.. மனம் விட்டு அழுவதற்கும் வரம் வாய்த்திருக்க வேண்டும்.. அதை மறைத்து எதுவும் நடக்காததைப் போல சிரித்துப் பேசி வாழ வேண்டிய சூழலில் அவள் மனம் உழன்றாள்..

சும்மாவா சொல்லி வைத்தார் கண்ணதாசன்..?

'சொல்லி அழுதால்

தீர்ந்து விடும்

அதைச் சொல்லத்தானே

வார்த்தையில்லை..'

என்று எழுதி வைத்தாரே.. மனித மனங்களின் பாரம் சுமக்கும் துயரைப் பற்றி அவர் அறிந்திருந்தாரா..?

"என்னடி..?"

சசியின் முகத்தை உள்ளங்கையில் ஏந்தி அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்து வத்சலா கேட்டாள்..

"ஒன்னுமில்லையே.." சோகையாக சிரிக்க முயன்றாள் சசிரேகா..

"ஒன்னுமில்லாததுக்கா உன் முகம் வாடியிருக்கு..? ம்ம்ம்..?"

தோழியின் அதட்டலில் பொலபொலவென கண்ணீர் உகுத்தாள் சசிரேகா.. பதறிப் போனவளாக தோழியை அணைத்துக் கொண்டாள் வத்சலா.. சசிரேகாவின் மனபாரம் குறைவதைப் போல இருந்தது..

"உன்னைக் கேட்காம முடிவு பண்ணின கல்யாணம்.. கஷ்டமாத்தான் இருக்கும்.. ஏத்துக்க முடியாதுன்னுதான் தோணும்.. ஆனா சசி.. இந்த கருணாகரன் ஹீரோ ரேன்ஜீக்கு இருக்கிறாரேடி.. அப்புறமும் எதுக்காக அழுகற..?"

அதைச்சொல்ல முடியாமல் மௌனக் கண்ணீர் விட்டாள் சசிரேகா.. வத்சலா யோசனையானாள்..

"ஒருவேளை பிரவினைக் கல்யாணம் பண்ணிக்க முடியலைன்னு அழுகறியாடி..? அவன் புரபோஸ் பண்ணினப்பவே ஓகேன்னு சொல்லி கல்யாணம் பண்ணியிருந்திருக்கணும்.. அப்பக் கோட்டை விட்டுட்டு இப்ப அழுது என்னடி பிரயோசனம்..? கிடைக்காததை நினைத்து ஏங்குவதற்குப் பதில் கிடைச்சதை இறுக்கிப் பிடிச்சு வாழப் பழகிக்க சசி.. அதுதான் புத்திசாலித்தனம்.."

வத்சலா கூறிய தேறுதலில் சசிரேகாவிற்குத் தூக்கிவாரிப் போட்டது..

'இவ என்ன சொல்கிறா..? பிரவீனை நினைச்சு நான் ஏங்கறேனா..? கடவுளே..!'

சசிரேகா மறுத்துப் பேச வாய் திறந்தபோது அறை வாசலில் நிழலாடியதைப் போல இருந்தது.. எட்டிப் பார்த்தாள்.. கருணாகரன் போய் கொண்டிருந்தான்..

'இவன் இங்கேயா நின்னுக்கிட்டு இருந்தான்..? அப்போதே போனானே..'

சசிரேகாவிற்கு 'திக்'கென்று இருந்தது.. வத்சலா பேசியதை அவன் கேட்டிருப்பானோ என்ற சஞ்சலம் அவள் மனதில் நிம்மதியை வதைத்துக் கொண்டிருந்தது..

'கேட்டாக் கேட்கட்டும்..' மனதுக்குள் வீம்பு எழுந்தது..

'இவன் யோக்கியவானா..? என்னோட அப்பாம்மா வாழ்ந்த வீட்டை அங்குசாமி பெரியப்பாவுக்கு தாரை வார்த்துக் கொடுக்கிறதா ஆசை காட்டி என் கழுத்தில் தாலி கட்டினவன்தானே இவன்..!'

சசிரேகா வத்சலாவிடம் வந்தாள்.. என்னவென்று வினவியவளுக்கு ஒன்றுமில்லையென்று பதில் சொன்னாள்..

"வேலையைப் பத்தி என்ன முடிவு பண்ணியிருக்க சசி..?" வத்சலா கேட்டாள்..

"தெரியலை.. யோசிக்கணும்.."

"நம்ம லேடிஸ் ஹாஸ்டல்ல உன்னோட டிரஸ்ஸஸ் திங்க்ஸ்ன்னு நிறைய இருக்கே.. ரூமை வெகேட் பண்றதைப் பத்தி ஹாஸ்டலில் நீ சொல்லலை.."

"சொல்கிற மாதிரியா சிச்சுவேசன் இருந்துச்சு..?"

"அதுக்கு என்ன செய்யப் போற..?"

"பார்க்கலாம்.."

சசிரேகா விரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி சிந்தனையாக இருந்தாள்.. வத்சலா ஏதோ சொல்லிக் கொண்டிருக்க சிந்தனையுடன் தலையை அசைத்து வைத்தாள்.. அவர்களைத் தேடி வந்த கவிதா..

"சாப்பிட்டிருங்கம்மா.. அப்புறமா குளிச்சுட்டு தயாராகனுமில்ல..?" என்று சசிரேகாவிடம் சொன்னபோது அவளுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"எதுக்குத் தயாராகனும்..?" என்று கவிதாவிடம் கேட்டுவைத்தாள்..

"அதுவா..?" கவிதா சிரித்தபடி சசிரேகாவின் கையைப் பிடித்து எழுப்பினாள்..

"இவ மண்டுங்க.. நான் விளக்கம் சொல்றேன்.." என்ற வத்சலாவிடம்..

"அதை அப்புறமா எடுத்துச் சொல்லும்மா.. இப்ப சாப்பிடப் போகலாம்... உங்களுக்காக எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க.." என்று சொன்னாள் கவிதா..

அவர்கள் சாப்பிடப் போனபோது உண்மையாகவே டைனிங் ஹாலில் இருந்தவர்கள் அவர்களுக்காக காத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார்கள்..

நீண்டிருந்த டைனிங் டேபிளில் இருபக்கமும் நாற்காலிகள் போடப் பட்டிருந்தன.. அப்படிப்பட்ட டைனிங் ரூமை சசிரேகா அப்போதுதான் பார்க்கிறாள்.. ஒரு வீட்டின் பரப்பளவு கொண்ட மிகப் பெரிய ஹாலை டைனிங் ஹால் என்று பணக்காரர்கள் சொல்வார்கள் என்பதை அன்று கண்டுணர்ந்தாள் அவள்..

"கருணா பக்கத்தில உட்காரும்மா.."

கவிதா சசிரேகாவின் தோள்களைப் பிடித்து அமுத்தினாள்.. கருணாகரனின் பக்கத்தில் உட்கார்ந்த சசிரேகாவின் மனம் படபடத்தது.. வத்சலா எங்கே உட்காருகிறாள் என்று பார்த்தாள்.. அவளுக்கு எதிரே சற்றுத் தள்ளியிருந்த நாற்காலியில் வத்சலாவை உட்காரச் சொல்லிக் கொண்டிருந்தாள் கவிதா.. தோழிக்கும் அவளுக்குமான இடைவெளி அதிகரிப்பதைப் போல தோன்றியது சசிரேகாவிற்கு.. அவள் மனதில் பதுங்கியிருந்த தனிமையுணர்வு தலை தூக்கியது..

சுற்றிலும் பார்த்தாள்.. எங்கு பார்த்தாலும் தெரியும் செல்வச்செழுமையில் அவள் மனம் ஒட்டவில்லை..

'இதற்கான விலை.. எனது தாயும், தந்தையும் வாழ்ந்த வீடா..?' என்று மனம் கசந்தாள்..

டைனிங் ஹாலை நிறைந்திருந்த உறவினர்கள் அவளை அன்போடு பார்த்தார்கள்.. யார் எவர் என்று தெரியாமல் விழித்தாள் சசிரேகா.. ஒவ்வொருவரையும் அறிமுகப் படுத்தி வைத்தால் விடிந்து விடும் என்பதால் பொத்தாம் பொதுவாக பேசிச் சிரித்தபடி பணியாள்களை பரிமாறச் சொல்லி விட்டு கருணாகரனுக்கும், சசிரேகாவிற்கும் மட்டும் தானே பரிமாற ஆரம்பித்தாள் கவிதா..

விருந்து அருமையாக இருந்தது.. அறுசுவை உணவு என்பது இதுதான் போல என்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா..

அருகிலிருந்த கருணாகரன் தாழ்ந்த குரலில் கூட அவளிடம் பேச முனையவில்லை.. இந்த லட்சணத்தில் அவனுடைய உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி.. அவன் தண்ணீர் குடிக்க குனிந்ததைப் பார்த்து விட்டு..

"நம்ப கருணா அதுக்குள்ள பொண்டாட்டிகிட்ட ரகசியம் பேச ஆரம்பிச்சுட்டாப்புல.." என்று கேலி பண்ணி வைத்தாள்..

சசி முதல்நாள் இரவுப் பயணத்தை நினைத்துக் கொண்டாள்.. கிடைத்த சின்னச் சின்னச் சந்தர்பங்களையும் விடாமல் பற்றிக் கொண்டு அவள் மனதில் மோக நெருப்பை மூட்டி விட்டவன் இவன்தானா என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள்..

"உங்க வீட்டு டின்னர் சூப்பர்டி சசி.. இந்தச் சாப்பாட்டை ஒரு பிடி பிடிக்கறதுக்காகவே அடிக்கடி இங்கே வந்து போகலாம் போல இருக்கே.."

விருந்து முடிந்து வந்தவுடன் வத்சலா சொன்னாள்.. சசிரேகா பதிலேதும் சொல்லவில்லை..

"குளிச்சுட்டு வாடி.." என்று வத்சலா பாத்ரூமுக்குள் அவளைத் தள்ளி விட்ட போது அவளுக்கு எதுவும் தோன்றவில்லை..

இரவுக் குளியல் அவளுக்குப் பழக்கம்தான் என்பதால் இயல்பாக அதை எடுத்துக் கொண்டாள்.. காலையிலிருந்து திருமண மேடையின் ஹோமப்புகை.. திருமணச் சடங்குகள்.. புகுந்த வீட்டிற்கு வந்தது.. அது, இது என்று அலைச்சலாக இருந்ததில் அவளுக்கு கசகசவென்று இருந்தது.. குளித்து முடித்து நைட்டிக்கு மாறியவளுக்கு கண்கள் சொக்கியது..

"வெண்ணீர் குளியல்.. சுகமாய் தூக்கம் வரும்.. நீயும் தூங்குடி.."

வத்சலாவிடம் சொல்லியபடி கட்டிலில் விழுந்து போர்வையை போர்த்திக் கொண்டவளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டாள் வத்சலா.. சசிரேகாவின் போர்வையைப் பிடித்து இழுத்து அவளை எழுப்பி உட்கார வைத்தாள்..

"உயிரைக் குறைக்காதே சசி.. என்னால முடியல.."

"ஏண்டி..?"

"நீ இன்னொஸென்டுன்னு தெரியும்.. இத்தனை இன்னொஸென்டுன்னு தெரியாது.. நீ பாட்டுக்குத் தூங்கப் கிளம்பற..?"

விசித்திரமாக சசிரேகாவைப் பார்த்தபடி கேட்ட வத்சலாவை அதைவிட விசித்திரமாக பார்த்தாள் சசிரேகா..

"என்னடி ஆச்சு உனக்கு..?"

"நீ..? என்னைக் கேட்கிறயா..? நேரம்டி சசி.."

"நேத்து நைட்டு நீ தூங்கிட்ட.. ஒரு பொட்டுக்கூட நான் கண்ணை மூடல.. தூக்கம் சொக்குதுடி வத்சலா.. தூங்க விடு.."

"அப்படியே அடிச்சேன்னா பாரு.. தூங்கறதுக்கு எந்த ராத்திரியை செலக்ட் பண்ணியிருக்கிற..?"

"ஏன்..? இந்த ராத்திரிக்கென்ன..?"

"என்னவா..? சசி.. உனக்குக் காலையிலே கல்யாணம் ஆகியிருக்கு.."

"அதுக்கு..?"

"இன்னைக்கு நைட் உனக்கு பர்ஸ்ட் நைட்டில்லையா..?"

'கடவுளே..!..' வியர்த்துப் போனாள் சசிரேகா..

இப்படி ஒன்று இருக்கிறதா..? இதை ஏன் சசிரேகா மறந்து போனாள்.. கருணாகரனை எவனோ ஒருவனைப் போலப் பார்த்தபடி ஒதுங்கி வாழ்ந்துவிட அவளால் முடியுமா..?

"அசமஞ்சம் போல நிக்காம இந்த டிசைனரி சேலையைக் கட்டிக்க.. இந்த விசேசத்துக்குன்னே

பார்த்துப் பார்த்து எடுத்த சேலையாம்.. உன் நாத்தனார் கொடுத்தாங்க.."

சசிரேகாவின் கைகளில் அந்தப் புத்தம் புது சேலையைத் திணித்தாள் வத்சலா.. மிகமிக அழகாக இருந்த சேலையின் வேலைப்பாடுகளில் மனதைச் செழுத்த முடியாமல் விதிர்த்துப் போய் நின்றாள் சசிரேகா..

'இதிலிருந்து தப்பிக்க முடியாதா..?'

"ஆக்சுவலா உன்னோட ரூம் மாடியில இருக்கிற உன் புருசனோட ரூம்தானாம்.. நல்ல நேரம் பார்த்து உன்னை அந்த ரூமுக்குள்ள அனுப்பனும்னு இங்கே தங்க வைச்சாங்களாம்.. உன் நாத்தனார்தான் சொன்னாங்க. இன்னையில இருந்து நீ உன் புருசன் ரூமிலதான் இருந்தாகனும்.. புரிஞ்சதா..?"

சசிரேகா மிரண்டாள்.. அவள் மிரட்சியை புதுமணப் பெண்ணின் மிரட்சி என்று எடுத்துக் கொண்டாள் வத்சலா.. அவளே சசியின் கையிலிருந்த புடவையைப் பிடுங்கி கட்டி விட்டாள்.. தலை வாரித் தழையப் பின்னலிட்டு அதில் மொட்டுக்களாக நெருக்கிக் கட்டப் பட்டிருந்த மல்லிகைப் பூச்சரத்தை வைத்து விட்டாள்.. அதிக நகைகளைத் தவிர்த்த எளிமையான அலங்காரத்தில் சசிரேகா தேவைதையைப் போல மிளிர்ந்தாள்..

"மயக்கறேடி.. ஆபிசர் உன்னைக் கண்டதும் அல்வா சாப்பிடறதைப் போல அலேக் பண்ணப் போறார் பாரேன்.." வத்சலா திருஷ்டிகழித்தாள்..

"ரெடியா..?" கவிதா வந்து விட்டாள்..

அவளும் வத்சலாவும் சசிரேகாவை மாடியறையின் வாசலில் கொண்டு போய் நிறுத்தினார்கள்..

"போடி.." என்று வத்சலா நெட்டித் தள்ளினாள்..

சசிரேகாவின் கால்கள் பின்னின.. முதல்நாள் அவள் உணர்ந்த அவனது ஸ்பரிசங்களின் நினைவில் அவளுக்குள் மோகத்தீ மூண்டது.. தள்ளி நிற்க வேண்டிய கட்டாய மில்லை என்பதை அவள் கழுத்தில் புரண்டு கொண்டிருந்த கனத்த தாலிச்சரடு சொல்லியது.. அடிவயிறில் பந்து உருள அவள் கருணாகரனின் அறைக்குள் பிரவேசித்தாள்..

## 13

அறையில் கருணாகரன் இல்லை.. சசிரேகாவின் சுவாசம் சீரானது.. ஜன்னலோரமாக நின்று திரையை விலக்கி வானத்தைப் பார்த்தாள்.. நட்சத்திரங்களுடன் கண் சிமிட்டிய வானம் முதல்நாள் இரவு நானா மழையைப் பொழிந்தேன் என்று கேட்டது..

கட்டிலைச் சுற்றித் தொங்கிக் கொண்டிருந்த மலர்ச்சரங்களின் நறுமணம் அறையை நிரப்பியிருந்தது.. சசிரேகாவின் மனம் மயங்கியது.. மோகத்தீயின் நாக்குக்கள் அவளைச் சுற்றி வளைத்தன.. முதல்நாள் இரவில் அவள் உணர்ந்த அவனது பிரத்யேக நறுமணத்தை நுகர அவள் மனம் விழைந்தது..

'நான் சொன்னா அவன் கேட்டுக்க மாட்டானா..? அங்குசாமி பெரியப்பாவுக்கு சொத்து வேணும்னா அன்னவாசல் பங்கை மட்டும் எடுத்துக்கட்டும்.. ஏற்காடு வீடு நான் பிறந்து

வளர்ந்த ஞாபகங்களை சுமந்து நிற்கிற வீடு...! என் அம்மா, அப்பா வாழ்ந்த வாழ்க்கைக்கு சாட்சியா நிற்கிற வீடு..! அதைக் கொடுக்க வேண்டாம்ன்னு எடுத்துச் சொன்னா மாட்டேன்னா சொல்லிறப் போறான்..?'

அவள் மனம் வாதாடியது.. அவனுடன் சமரசமாகப் போகத் தேவைப்படும் அனைத்து விவாதங்களையும் முன் வைத்தது.. முதல்நாள் இரவில் அவன் மூட்டி விட்ட மோகத்தீயை அணைத்து.. அவளைக் காக்க அவன் எப்போது வருவான் என்று ஏங்கித் தவிக்க ஆரம்பித்தாள் சசிரேகா.. கட்டிலின் அருகேயிருந்த டீப்பாயில் இருந்த அவனது செல்போனை கையில் எடுத்தாள்..

"தீ.. தீ.. தித்திக்கும் தீ..

தீண்டத் தீண்ட சிவக்கும்..

தேன்.. தேன்.. கொதிக்கும் தேன்..

தேகம் எங்கும் மினுக்கும்.."

செல் போனில் பதிந்து வைத்திருந்த பாடல் ஒலித்தது.. அப்படியே தரையில் சரிந்து உட்கார்ந்து அந்தப் பாடலைக் கேட்க ஆரம்பித்தாள் சசிரேகா.. தகித்த அவளது தேகம் கருணாகரனின் அணைப்புக்காக காத்திருந்தது..

"ஒருவிரல் தொட்டு வைத்ததே..

உயிர்வரை சுட்டு வைத்ததே.."

அவன் விரல் தீண்டிய அனுபவத்தை மனதில் நினைத்து அந்த நினைவில் சுகித்தாள் சசிரேகா.. முதல்நாள் இரவில் அவளது பெண்மையைத் தொட்டு எழுப்பி அவளை மோகத்தீயென்னும் மீளா நெருப்புக்குள் தள்ளி விட்டவன் அவளை மீட்க வந்து விடுவான் என்று எதிர்பார்த்தாள்.. அவளைக் கொன்று தின்னும் மோகத்தை வெல்ல அவன்தான் ஆவன செய்ய வேண்டும் என்று உடல் தகிக்க மோகித்திருந்தாள்..

"கண்ணுக்குள் தீயிருந்தும்..

உன்னை எரித்துக் கொண்டு

ராகம் என்ன..?

கற்பூர தேகம்தான்

காதல் வெப்பம் பட்டுக்

கரைவதென்ன..?"

அவள் மனதைக் கூறுவதைப் போல ஒலித்துக் கொண்டிருந்த பாட்டில் அவள் கரைந்து போனாள்.. அவன் தொட்டுவிட்டால் பாகாய் உருகி விடுவாள் என்பதில் அவள் மனதில் தோல்வியை உணர்ந்தாலும் அவனை வெல்ல வேண்டுமென்று அவளுக்குத் தோன்ற வேயில்லை.. அது எதனால் என்றும் புரியவில்லை..

இத்தனை பிரியத்தை கண்களில் தேக்கி அவனிடம் உரைக்காமல் ஏன் மறைத்து வைத்தாள் என்று தன்னைத் தானே நொந்து கொண்டாள் சசிரேகா..

அவன் பார்க்கும் போதெல்லாம் முறைத்து.. முகம் திருப்பி... என்று அன்று முழுவதும் அவனை புறக்கணித்ததை நினைத்துப் பார்த்தவளுக்கு எத்தனை இனிமையான தருணங்களை நழுவ விட்டு விட்டோ மென்ற துக்கம் மனதுக்குள் பொங்கியது..

அவனை நோக்கி அவள் காலடி எடுத்து வைக்க முடியாமல் அவளை தடை செய்தது எது..?

முதல்நாள் இரவில் அவன்மீது மோகம் கொண்ட போது விடிந்தால் அவளுக்குத் திருமணம் என்ற கட்டுப்பாடு அவளைத் தடுத்து நிறுத்தியது..

அவள் கழுத்தில் தாலியைக் கட்டி.. அவளுக்காக காத்திருந்த மணாளன்தான் அவள் மனதில் மோகத்தீயை பற்ற வைத்தான் என்பதை அவன் உணர்த்தியபோது தடைகளற்ற.. மனத்தளைகளற்ற உற்சாகத்தை அவள் பெற்றாள்..

கட்டுப்படுத்தி வைத்திருந்த காட்டாற்று வெள்ளமான காதலுடன் அவன் காலடியில் சரிந்து விட அவள் துடித்த போது அங்குசாமி பெரியப்பா அவள்

காதலை கோடாரி கொண்டு வெட்டிச் சாய்த்து வீழ்த்தி விட்டார்..

அவளுடைய உயிர் மூச்சான ஏற்காட்டு வீட்டை அங்குசாமி பெரியப்பாவிற்கு அவன் தாரை வார்த்துக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறான் என்பதை அறிந்த போது அவளுக்குள் பொங்கிய மோகத்தின் வேகம் தணிந்து விட்டது.. அவள் மனதில் பெருகிய பிரியம் மலைத்துப் போய் தேங்கி நின்று விட்டது..

தடைகளற்ற காதலுடன் அவனால் உண்டாக்கப்பட்ட மோகத்தீயை அவனைக் கொண்டு அணைக்கச் செய்ய வேண்டும் என்று கிளர்ந்தவளுக்கு தடை வந்து விழுந்தது..

"பின்னோக்கி உன் கால்கள்..

நடப்பதென்ன..?

பிரியத்தை மறைப்பதென்ன..?

என்னாரும் ஏதாகும்

என்று அஞ்சி

இதயத்தை துவைப்பதென்ன..?"

சசிரேகா கண்மூடி சுவரில் தலை சாய்த்துக் கொண்டாள்.. இது தாயின் மடியென்று அவளுக்குத் தோன்றியது.. தலை சாய்த்துக் கொள்ளக் கொடுக்கப்படும் அனைத்து தோள்களும் சுவர்களும் தாயின் மடிகள்தான்..

'அவன் எப்போது வருவான்..?'

ஏக்கத்துடன் வாசல் பார்த்தாள்.. அவனது கம்பீர அழகை அள்ளிப் பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போல அவளுக்கு இருந்தது..

'அவனிடம் வாக்குவாதம் பண்ணக்கூடாது.. எதை கேட்பதாக இருந்தாலும் இனி வரும் நாள்களில் கேட்டுக் கொள்ளலாம்..' இன்றைக்கு கேட்கக் கூடாது..

அடுத்தடுத்த தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டே இருந்தது அவள் மனம்.. பரபரப்பு உடலெங்கும் பரவ ஆரம்பித்தது.. காத்திருக்கும் ஒவ்வொரு வினாடிகளையும் யுகம் போல உணர ஆரம்பித்தாள்..

"அழகே..! அழகே..!

இதயத்தில் இன்று

கலந்து போவோம்..

நீ யார் நான் யார்

இனம் மொழி இடம்

மறந்து போவோம்.."

அவன் தொட்ட இடங்களில் ஸ்பரிச உணர்வுகளை நினைத்தபடி பாடலை ரசித்துக் கொண்டிருந்தாள் சசிரேகா.. அவனுடன் அவள் கழிக்கப் போகும் அந்த

முதல் இரவின் அனுபவங்களின் மீதான அவளின் அனுமானங்களில் அவள் மனதில் மூண்டிருந்த மேகாத்தீ பற்றி எரிய ஆரம்பித்தது..

"புவியீர்ப்பு மையத்தைக்

கடந்து போவோம்..

புதுலோகம் பறந்து போவோம்..

முத்தத்தின் சத்தத்தில்

உடைந்து போவோம்..

முக்திநிலை அடைந்து போவோம்.."

பாடலில் மூழ்கி பரவச நிலையில் ஆழ்ந்திருந்தவளை கனத்த காலடி சப்தம் தட்டி எழுப்பியது..

அது அவனது காலடி சப்தம்தான் என்பதை அறிந்திருந்தவள் அவசரமாக செல்போனை அனைத்து டீப்பாயின் மீது வைத்தாள்..

ஒதுங்கி ஜன்னலில் சாய்ந்து நின்றாள்..

அறைக்குள் வந்த கருணாகரனின் பார்வை அவளைத் துளைத்தது.. சுளித்த புருவங்களுடன் அறைக் கதவை மூடித் தாழிட்டான்.. அவளைப் பார்த்தபடி கட்டிலில் உட்கார்ந்தான்.. அவளருகில் வருவான் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்த சசிரேகாவின் முகம் மாறியது.. கட்டிலில் உட்கார்ந்தவன் சுவரை ஏன் பார்க்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை..

'அங்கே என்ன இருக்கு..?'

அவளும் சுவரைப் பார்த்து வைத்தாள்.. ஒரு மண்ணும் இல்லை.. என்ன முதலிரவு இது என்று சலித்துக் கொண்டாள்..

"ஜன்னல் வழி குதிச்சு ஓட முடியாது.."

திடிரென்று மௌனம் கலைத்தவன் பேசிய வார்த்தைகளில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது..

'இவன் என்ன சொல்கிறான்..?'

புரியாமல் விழித்தாலும் அவன் பேசிய வார்த்தைகளுக்குப் பதில் பேசாமல் இருக்க அவளால் முடியவில்லை..

"எனக்கு ஓடிப் பழக்கமில்லை.."

வெடுக்கென்ற வந்த பதிலில் அவன் சுவரைப் பார்ப்பதை விட்டு விட்டு அவளைப் பார்த்தான்.. தீர்க்கமான அவனது பார்வையின் பிண்ணனிக்குப் பொருள் புரியாமல் திகைத்தாள் சசிரேகா..

'இந்தப் பார்வையை நானில்ல பார்க்கனும்.. இவன் பார்த்து வைக்கிறானே..'

குற்றமற்றவன் குற்றவாளியைப் பார்ப்பதைப் போன்ற அவன் பார்வையில் அவளுக்கு சுவரில் முட்டிக்

கொள்ளலாம் போல இருந்தது..

"இதுவரை ஓட வேண்டிய அவசியமில்லாமல் இருந்திருக்கலாம்.. இனிமே தோணலாமில்ல..?" நிதானமாக அவன் கேட்டதற்கு..

"பார்த்துப் பேசுங்க.. கழுத்தில தாலியைக் கட்டிட்டோம்ங்கிறதுக்காக எதை வேண்டும்ன்னாலும்

பேசி விடலாம்ன்னு நினைச்சீராதீங்க.." என்று சீறினாள் சசிரேகா..

"அப்படித்தான் நானும் நினைச்சேன்.. கழுத்தில் தாலி விழலைங்கிறதுக்காக என்கிட்ட இருந்து நீ தள்ளிப் போகப் பார்த்தேன்னு நினைச்சேன்.. என்னைப் பிடிச்சிருந்தும் விடிஞ்சா வேற ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டப் போகிறோம்ங்கிற கட்டுப் பாட்டோட நீ விலகிப் போகிறன்னு நினைச்சேன்.. அது எனக்குப் பிடிச்சிருந்தது.. கலங்காதேடி.. உன் கழுத்தில் நான்தான் தாலியைக் கட்டப்போறேன்னு சொல்ல என் மனது துடிச்சது.. ஆனாலும் உன்கூட விளையாடிப் பார்க்க ஆசைப்பட்டேன்.. காலையில உன் கழுத்தில தாலியைக் கட்டினப்ப இந்த ராத்திரியை எப்படியெல்லாம் கொண்டாடனும்ன்னு

நான் கனவு கண்டேன் தெரியுமா..? அந்த ஆசைகள வேரோடு பிடுங்கி எறிய வைச்சிட்டியேடி.. பாவி.." அவன் குமுறினான்..

"பாவியா..? நானா..?" அவள் வெகுண்டாள்..

"ஆமாம்.. நீ பாவிதான்.. யாருடி அந்த பிரவீன்..?"

"என்னது..?"

அவனது கோபத்தின் காரணம் பிடிபட்டு விட்டதில் நிலைகுலைந்து போனாள் சசிரேகா.. அவளுடைய பெற்றோர் வாழ்ந்த வீட்டை அவளிடமிருந்து பறித்து அங்குசாமிக்கு தாரை வார்த்துக் கொடுக்க நினைத்த அவனுடைய அநியாயத்தைக் கூட அவளால் மன்னிக்க முடிந்தது.. ஆனால் பிரவீனை மனதில் நினைத்துக்

கொண்டு கருணாகரனின் மீது அவள் மோகம் கொண்டாள் என்று அவன் வைத்த குற்றச்சாட்டை அவளால் மன்னிக்கவே முடியவில்லை..

'என்னை என்னவென்று நினைத்து விட்டான்..?'

"என்ன..? உன் மனசில இருக்கிறது எனக்கு எப்படித் தெரிஞ்சன்னு முழிக்கிறயா..? அதான் உன்னோட உயிருக்குயிரான பிரண்ட் வத்சலா பிட்டுப் பிட்டு வைச்சிட்டாளே.."

"என்ன சொன்னா..?"

"அந்த பிரவீன் அழகனாம்.. பணக்காரனாம்.. உன்னோட காதலனாம்.. என்ன..? என்னை விட அவன் அழகனா..? பணக்காரனா..?"

"அசிங்கமாப் பேசாதீங்க.. அவன் ஒன்னும் என்னோட காதலனில்ல.."

"இப்ப இப்படிச் சொல்றவ.. நேத்து நைட்டு உன் காதுபட அந்த பிரவீன்தான் உன்னோட காதலன்னு வத்சலா சொன்னப்ப மறுத்து ஒற்றைச் சொல்லை சொல்லலையே.. ஆமாம்ன்னு ஒப்புக்கிறதைப் போல கேட்டுக்கிட்டுத்தான இருந்த.. இப்ப நடிக்கிறயா..?"

"நடிக்கிறேனா..? நானா..?"

"நீதாண்டி.. அவன் உன்மேல உயிராய் இருக்கானாமே.. கல்யாணம் பண்ணிக்கலாம் வான்னு கூப்பிட்டானாமே.. ஏண்டி போகலை..?"

கருணாகரனின் எகத்தாளத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத சசிரேகா பட்டென்று..

"போயிருக்கனும்.." என்று சொல்லி விட்டாள்..

"ஓ..." அவன் கண்கள் சிவந்தன..

"போகாம விட்டது என் தப்புத்தான்.."

"தப்பைத் திருத்திக்க நினைச்சிட்டா என்ன செய்யறதுன்னுதான் ஜன்னல் வழியா குதிச்சு ஓடிப் போக முடியாதுன்னு சொன்னேன்.." அவன் விளக்கம் சொன்னான்..

'இவன் மீதா மோகம் கொண்டேன்..?' அவனை வெறித்துப் பார்த்தாள் சசிரேகா..

அவளை கொன்று தின்ற அவன் மீதான மோகத்தைத் கொன்று விட வேண்டும் போல அவளுக்குள் வெறி கிளர்ந்தது..

"அவனை மனசில நினைச்சுக்கிட்டு எனக்குக் கழுத்தை நீட்டியிருக்கிறவதானேடி நீ..? நீ 'தியாகி' பட்டம் வாங்க நான்தான் உனக்குக் கிடைச்சேனா..?"

"இல்லே சார்.. நீங்க வள்ளல் பட்டம் வாங்க நான் உங்களுக்குக் கிடைச்சேன்.."

இடக்காக பதில் சொன்னாள் சசிரேகா.. அவனது புருவங்கள் உயர்ந்து அவளை வசீகரிக்க முயன்றன.. போடா.. என்று முகத்தை வைத்துக் கொண்டாள் அவள்..

"வள்ளல் பட்டமா..?"

"வள்ளல் பட்டமேதான்.. எவனோ ஒருத்தன் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தானாம்.. அந்தத் கதையாயில்ல இந்தக் கதை இருக்கு.. என் கழுத்தில தாலியைக் கட்ட என்னோட சொத்தையும் ஏற்காட்டு வீட்டையும் அங்குசாமி பெரியப்பாவுக்கு எழுதிக் கொடுக்க வைக்கிறேன்னு வாக்குக் கொடுத்திருக்கிறவர்தானே நீங்க..?"

அவள் கேட்ட கேள்வியில் அவன் முகம் இறுகியது..

"இது உனக்கு எப்படித் தெரியும்..?" என்று விசாரித்தான்..

"தில்லுதான் சார் உங்களுக்கு.. செய்கிறதையும் செய்துட்டு அது எனக்கு எப்படித் தெரியும்ன்னு கேள்வி கேட்கறிங்க பாருங்க.. உங்களுக்கு முன்னாடி நான் ஒன்னுமே இல்லை சார்.."

"அங்குசாமி சொல்லியிருக்க மாட்டார்.."

"சரியாத்தான் கணக்குப் போடறிங்க.. அவர் சொல்ல மாட்டார்தான்.. ஆனாப் பாருங்க.. அவர் சொல்லித்தான் எனக்கு உங்களோட 'டீலா.. நோ டீலா..?'ங்கிற மேட்டரே தெரிஞ்சது.."

"சசி.."

"என்னை அப்படிக் கூப்பிடாதீங்க.. அதுக்கான அருகதை உங்களுக்கு இல்லை.."

ஒற்றை விரலை உயர்த்தி கண்ணீரும் ஆவேசமுமாக அவனை எச்சரித்தாள் சசிரேகா.. அந்த ஆவேசத்தில் அவன் யோசனையானான்.. அவளையே பார்த்தான்..

## 14

"எனக்கு அருகதையில்லையா..?"

புயலை உள்ளடக்கிய குரலுடன் அவன் வினவினான்.. சிவந்திருந்த கண்கள் அவனுடைய ரௌத்ரத்தை உணர்த்தின.. சசிரேகா அஞ்சவில்லை.. அவனுடைய ரௌத்ரத்திற்கு குறையாத ரௌத்ரத்துடன் அவனுடன் மோதினாள்..

"ஆமாம்.. உங்களுக்கு அருகதையில்லைதான்.."

"நீ யார்கிட்டப் பேசறேன்னு தெரியுமா..?"

"ஏன் தெரியாது..? தாய், தகப்பனில்லாத பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக அவளைப் பெத்தவங்க வாழ்ந்த வீட்டைத் தாரை வார்த்துக் கொடுக்கறதா வாக்குக் கொடுத்திருக்கிற ஒரு கண்ணியவான்கிட்ட பேசறேன்னு எனக்கு நல்லாவே தெரியுமே.."

"சசிரேகா.."

"இது பேச்சு.. இதை விட்டுட்டு 'சசி..'ன்னு எதுக்காக கூப்பிடனும்..? அந்த உரிமையெல்லாம் இங்கே வேணாம்.."

"ஓ..!"

அவன் கண்கள் இடுங்க ஒரு தினுசான குரலில் சொல்லிய போதே ஏதோ வில்லங்கமாகச் சொல்லப் போகிறான் என்று அவளுக்குத் தெரிந்து விட்டது.. என்னதான் சொல்கிறான் என்று கேட்போமே என்று பொறுமையை இழுத்துப் பிடித்தபடி காத்திருந்தாள்..

"நான் உரிமையெடுத்துக்கக் கூடாதுதான்.."

அவனது இடுங்கிய கண்கள் அவள் கழுத்திலிருந்த தாலிச் சரட்டில் படிந்தன.. அவள் அலட்சியமாக உதட்டைச் சுழித்தாள்.. அவனது இடுங்கிய கண்கள் மேலும் இடுங்கின..

'தாலியைக் கட்டிட்டா நான் இவனுக்கு அடிமையா..?'

அவளது விழிகளின் சீற்றத்தில் அவன் அவளை உற்றுப் பார்த்தான்.. சீற்றம் குறையாத அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்தபடி அழுத்தமான குரலில் கேட்டான்..

"வேற யாரு உரிமையெடுத்துக்கனும்னு நினைக்கிற..? அந்த பிரவீனா..?"

செந்தணலாய் கொட்டிய வார்த்தைகளில் அவள் துடித்துப் போய் விடவில்லை.. மாறாக.. "ஹ.." என்று உதட்டை ஏளனமாக வளைத்தபடி கோபத்துடன் நகைத்தாள்..

"நினைச்சேன்.."

"யாரை..? அந்த பிரவினையா..?"

"இப்படியாப்பட்ட கீழ்த்தரமான பேச்சு வரும்ன்னு நினைச்சேன்.."

"ஓ..."

"இந்த 'ஓ' போடற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம்.."

"அப்போ என்னடான்னா உன்னை 'சசி'ன்னு கூப்பிடற உரிமையெல்லாம் இங்கே வேண்டாம்ன்னு சொன்ன.. இப்ப என்னடான்னா 'ஓ' போடற வேலையெல்லாம் உன்கிட்ட

வேண்டாம்ன்னு சொல்ற.. மொத்தத்தில என்னதான் சொல்ல வர்ற..? என்கிட்ட இருந்து 'எது'வுமே உனக்கு வேண்டாமா..?"

'எதுவுமே..' என்று அவன் அழுத்தம் கொடுத்த விதத்தில் சசியின் முகம் ரத்தமென கன்றி சிவந்து விட்டது.. அவனைப் போல பேச அவளால் முடியவில்லை.. அந்தப் பேச்சுக்கு பதிலடி கொடுக்க முடியாமல் உதட்டைக் கடித்தபடி முகம் திருப்பிக் கொண்டாள்..

அவன் முகத்தில் லேசான இளக்கம் வந்தது.. முதல் நாள் இரவில் அவன் விரல் பட்ட ஸ்பரிசங்களைத் தாங்க முடியாமல் வெடவெடத்து நடுங்கிய மலரைவிட மெல்லிய அவளது தேகம் அவன் நினைவில் வந்து மோகத்தைத் தூண்டியது..

ஜன்னல் வழி வந்த மழைகால குளிர் காற்று அவன் மனதின் மோகத்தீயை கொழுந்து விட்டு எரிய வைத்தது.. அறையெங்கும் நிரம்பியிருந்த மலர்களின் நறுமணமும்.. சசிரேகா சூடியிருந்த மல்லிகையின் மணமும் ஒன்று சேர்ந்து அவனை மயக்கத்தில் ஆழ்த்தின..

அவன் தொட்டவுடன் அவள் உருகித் தவித்த அந்த நொடிகளை அவன் நினைத்துக் கொண்டான்.. அவன் மீதிருந்த மோகமும்.. இன்னொருவனுக்கு மாலையிடப் போய் கொண்டிருக்கும் சூழலும் சேர்ந்து தன் உணர்வுகளுடன் அவள் போராடிய நிலையை அவன் நினைத்துப் பார்த்தான்..

அவளின் அந்த மனப்போராட்டத்தை அவனுக்குப் பிடித்திருந்தது.. சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளாமல் தவித்து விலகி..

'நீ என்னை பலவீனமாக்கி அதில் குளிர் காயப் பார்க்கிறாய்..' என்று அவள் சுட்டு விரலை நீட்டி அவனைக் குற்றம் சொன்ன விதத்தைப் பிடித்திருந்தது..

அந்த நேரத்தில் அவன் கற்பனை செய்து பார்த்தான்.. விடிந்ததும் அவன் கட்டும் தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொள்ளப் போகிறவளின் முகம் எத்தனை சந்தோசத்தைப் பிரதிபலிக்கும் என்று.. மறுநாளின் முதலிரவில் அவன் அவளைத் தொடும் போது மறுப்பேதும் சொல்லாமல் முதல் நாள் இரவின் தடைகள் நீங்கிய சந்தோச வேகத்துடன் அவனை அவள் எப்படி இறுக்கிக் கட்டிக் கொள்வாள் என்று..

அந்த சந்தோசங்களை அனுபவிக்க வேண்டும் என்றுதான் அவன் யார் என்பதை சொல்லாமல் மறைத்தான்..

'ஒருவேளை நான் அதைச் சொல்லியிருந்தா..?'

இப்போது நினைத்துப் பார்த்தவனுக்கு ஏன் அதை சொல்லாமல் மறைத்துத் தொலைத்தான் என்ற வேதனை உண்டானது..

அதைச் சொல்லியிருந்தால் அந்த மழையிரவின் மணித்துளிகளில் அவனிடம் ஒன்ற முடியாமல் தவித்த சசிரேகா மனமார ஒன்றியிருப்பாள்.. அவன் காதிலும் பிரவீனைப் பற்றிய பேச்சு விழுந்து தொலைந்திருக்காது.. அதைப் பற்றிய விவரத்தைத் தெரியாமல் மனம்

முழுக்க காதலுடன் சசிரேகாவின் கழுத்தில் தாலியைக் கட்டியிருப்பான்..

'ஏன் அப்படி நடக்காமல் போனது..?'

அவன் கண்களை இறுக மூடித் திறந்தான்.. மயக்கும் மோகினியாய் எதிரில் நின்ற சசிரேகாவை கட்டி அணைக்க முடியாமல் கைகளை கட்டிப் போட்டு விட்ட விதியின் குரூரத்தை மனதுக்குள் நிந்தித்தான்..

எவளைக் கண்டதும் மோகித்து அவள் கழுத்தில் தாலியைக் கட்டி ஆளப் போகும் காலத்திற்காக காத்திருந்தானோ.. அந்தக் காலம் எதிரில் வந்து நின்ற போது ஏன் அவன் அவளை விட்டு விலகி நிற்கிறான்..?

வாழ்க்கையானது இத்தனை வன்மத்துடன் அவனை வஞ்சிக்கக் கூடும் என்று அவன் நினைத்தும் பார்த்த தில்லை.. அவன் கேட்டதெல்லாம் கிடைத்தது.. தொட்ட தெல்லாம் துலங்கியது..

காற்றில் முந்தானைச் சேலை படபடக்க.. எளிய அலங்காரத்துடன் எழில் மிகும் தேவதையாய் நின்ற சசிரேகாவை வேட்கையுடன் வெறித்துப் பார்த்தான்..

அவளது முந்தானைச் சேலையைப் பற்றியிழுத்து அவனுக்கு மட்டும் சொந்தமான அவளது மேனியை ஏன் அவனால் தொட முடியவில்லை..

"பதில் சொல்லுடி.."

மோகத்தீயை அணைத்து அணைக்க முடியாத கொதிப்புடன் அவன் சீறினான்.. அதே கொதிப்புடன் இருந்த சசிரேகாவும் பதிலுக்குச் சீறினாள்..

"உங்களுக்கு இப்படித்தானே பேச வரும்..?"

"வேற எப்படிப் பேசனும்னு நினைக்கிற..? இல்ல.. இப்படியாப்பட்ட பேச்சையெல்லாம் யாரு உன்கிட்டப் பேசனும்னு நினைக்கிற..?"

அவளைத் தொட முடியாத தாபத்தில் அவளைக் காயப்படுத்தி விட வேண்டுமென்ற வெறியுடன் அவன் கேட்டபோது..

"ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்.." என்று அவள் கத்தினாள்..

"மெதுவாப் பேசு.." என்று எச்சரித்தான்..

"ஏன் மெதுவாப் பேசனும்.. சத்தமாகத்தான் பேசுவேன்.."

"என் கோபத்தை தூண்டாதே.. எதைப் பேசினாலும் இந்த நான்கு சுவர்களைத் தாண்டாத மாதிரிதான்

பேசனும்.. வெளியே இருக்கிறவங்களுக்கு எதுவும் கேட்கக் கூடாது.."

"ஏன் கேட்கக்கூடாது..? கேட்கட்டுமே.. அவங்களும் உங்களோட யோக்கியதை என்னன்னு தெரிஞ்சுக்கட்டுமே.."

"ஏய்ய்.."

அவன் அவளை நெருங்கி அவள் கழுத்தில் விரல்களைப் பதித்து விட்டான்.. மூச்சுத் திணறிய சசிரேகா அவன் கைகளை இறுப் பிடித்துக் கொண்டாள்.. கோபத்துடன் இருந்த அவன் விழிகளும் அவள் விழிகளும் பார்த்துக் கொண்டன.. அவள் கழுத்தில் படிந்திருந்த அவன் விரல்கள் தளரத் தொடங்கின.. அவனது வலிமையான முரட்டுக் கைகளை இறுக்கிப் பிடித்திருந்த அவளது பஞ்சு போன்ற உள்ளங்கைகளின் ஸ்பரிசத்தில் அவனது வேகம் குறைந்து விட்டது.. அவளது கழுத்தில் படிந்திருந்த விரல்கள் வழுக்கி இறங்கியதில் சசிரேகா நிலை குலைந்தாள்.. அவன் கைகளைத் தட்டி விட்டு தள்ளி நின்றாள்..

"ஏண்டி..? உன் கற்பு பறி போயிடுமா..?" காட்டத்துடன் அவன் கேட்டான்..

'இவன் இப்படித்தான் பேசி வைப்பான்..' அவளுக்குத் துன்பமாக இருந்தது..

அவளை மதிக்காதவன்.. பிரவினைக் காதலித்து விட்டு வேறு ஒருவனை மணப்பதற்காக கிளம்பி வந்தவள் என்று அவளை எடை போட்டவன்.. இடைபட்ட நேரத்தில் அவனுடைய அருகாமையில் சலனப்பட்டவள் என்று எளிதாக அவளை நினைத்தவன்.. அவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக அவளுடைய பெற்றோர் வாழ்ந்த வீட்டைத் தானமாகத் தரத் துணிந்தவன்..

அப்படிப்பட்டவன் தொடும் போது அவள் உருகிக் கரைவதா..? அனைத்தையும் மறந்துவிட்டு அவனுடன் கட்டிலில் சரிவதா..? அது அவளுடைய பெண்மையை அவமானப் படுத்துவதாக ஆகாதா..?

"கற்புங்கிறது பெண்களுக்கு மட்டும் சொந்தமில்லை.. ஆண்களுக்கும் சொந்தம்தான்.. ஆனானப்பட்ட பாரதியாரே

கற்பு நெறியை இரு கட்சிகளுக்கும் பொதுவில் வைப்போம்ன்னு கவிதை எழுதியிருக்கார்.."

"இரு கட்சியா..? எந்தெந்த கட்சி.. அரசியல் கட்சிகளை ஏண்டி அவர் வம்புக்கு இழுத்தாரு..?"

அக்கறையாக அவன் வினவிய விதத்தில் அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவன் வம்பு வளர்ப்பது அவளுக்குப் புரியத்தான் செய்தது.. அதிலும் ஒன்றும் அறியாத சின்னக் கண்ணன் போல முகத்தை வைத்துக் கொண்டு அவன் பேசும் கிண்டல் பேச்சுக்களில் அவள் வசீகரிக்கப்பட்டாள்..

'வாயைத் திறந்தாலே வம்பிழுக்கிற பேச்சுத்தான்..'

அவன் முதுகில் நான்கு மொத்துக்களை மொத்த வேண்டும் என்று அவளுக்கு ஆசையாசயாக இருந்தது..

"இந்தக் கட்சி அரசியல் கட்சியில்ல.. ஆம்பளை, பொம்பளைங்கிற ரெண்டு கட்சி.."

"ஓஹோ.." அவன் தாடையைத் தடவியதில்..

'உனக்கு இது தெரியாதாக்கும்.. இதை நான் நம்பனுமாக்கும்..' என்று அவன் காதைப் பிடித்துத் திருகி விடலாமா என்று அவள் யோசித்தாள்..

"அதுசரி.. இப்ப எதுக்காக பாரதியார் கவிதையை சாட்சிக்கு இழுக்கிற..?"

"பாரதியார் பெண்களை எப்படி மதிக்கனும்னு பாட்டுப்பாடி வைச்சுட்டுப் போயிருக்கார்.. திருந்தாத உள்ளங்களெல்லாம் அதைக் கேட்டுட்டு திருந்தட்டு மேங்கிற அக்கறையிலதான் சாட்சிக்கு இழுத்தேன்.."

"ஸோ.. என் உள்ளம், திருந்தாத உள்ளம்..?"

"ஆமாம்.."

"அப்படி என்னடி திருந்தாம இருக்கேன்..? குடிக்கிறேனா..? இல்லை.. ஒன்னுக்கு பத்தா சின்ன வீடுகளை செட்டப் பண்ணி வைச்சுக்கிட்டு எதுக்குப் பொண்டாட்டி.. என்னைச்

சுத்தி வப்பாட்டி.. எக்கச்சக்கமாகிப் போச்சு எனக்குன்னு இருக்கேனா..?"

அவன் பட்டியலிட்டதில் அவள் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்து வைத்தாள்.. அந்த பார்வை ஈர்த்த ஈர்ப்பில் அவன் மனம் பற்றிக் கொண்டது.. அவன் அவளை விடவும் பல மார்க்கமாக அவளை பார்வையிட்டு வைத்ததில் அவள் மனம் மோகத்தீயில் மாட்டிக் கொண்டது..

"மனசுக்குள்ள இருக்கிற அத்தனை ஆசைகளையும் பட்டியலிடறாப்புல இருக்கு.." கிண்டலாக அவள் சொன்னாள்..

"ஆசைதாண்டி.. ஒட்டு மொத்த ஆசையை கட்டின பொண்டாட்டிக்கிட்டக் கொட்டிக் கவிழ்த்துப் புடனும்னு தான் காத்திருந்தேன்.. எங்கே..? நான் கட்டிக்கிட்டவ 'தியாகி..' பட்டத்துக்காக இல்ல எனக்கு கழுத்தை நீட்டி வைச்சிருக்கா.."

"இங்கே மட்டும் என்ன வாழுதாம்..? என் கழுத்தில தாலியைக் கட்டினவங்க என்னைப் பெத்தவங்க வாழ்ந்த வீட்டைப் பிடுங்கிக் கொடுக்கறேன்னு வாக்குக் கொடுத்துட்டுல்ல தாலியைக் கட்டியிருக்காங்க..?" பதிலுக்கு அவளும் வெடித்தாள்..

"அங்குசாமி சொல்லியிருக்க மாட்டார்ன்னு அப்பவே சொல்லிட்டேன்.. இதை யார் உனக்குச் சொன்னது..?"

"யார் சொன்னா உங்களுக்கென்ன..? இந்த விசயம் பொய்யின்னு உங்களாலே சொல்ல முடியுமா..?"

"இது உனக்குத் தேவையில்லாதது.."

"நல்லா இருக்குங்க உங்க நியாயம்.. என்னைப் பெத்தவங்க வாழ்ந்த வீடு எனக்குத் தேவையா தேவையில்லையான்னு நான் தீர்மானிக்கனும்.. நீங்க யார் அதைத் தீர்மானிக்க..?"

"நான் யாரா..? உன் கழுத்தில கிடக்கிற தாலியைக் கேட்டுப் பாரு.. அது சொல்லும்.."

"என்னன்னு..?" சசிரேகா வேண்டுமென்றே அந்தக் கேள்வியைக் கேட்டாள்..

அவன் இமைக்காமல் அவளைப் பார்த்து வைத்ததில் முகம் சிவந்து போனவள் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

"உன் புருசன்னு.."

அவளையே பார்த்தபடி அவன் சொன்னதும் அவள் இமைகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. ஒரு நொடி அனைத்தையும் மறந்து அவன் பார்வை அவள் பார்வையை கவ்விக் கொண்டது.. விழியோடு விழி கலக்க இடையில் இருந்த மனப் போராட்டங்களை மறந்து அவர்கள் சிலையாக உறைந்து நின்றார்கள்..

"சசி.."

அவன் கைகளை விரித்து அவளை அழைத்தான்.. விரித்த கைகளுக்குள் புகுந்துவிட சசிரேகா துடித்தாள்.. ஓரடி எடுத்து முன்னேறியவளை தாகத்துடன் அவன் பார்த்தான்..

'நில் சசி..' அவளுடைய புத்தி அவளைத் தடுத்தது..

சசிரேகா கண்களை இறுகமூடியபடி பின் வாங்கினாள்.. தலையை ஆட்டி அவனை மறுத்தாள்.. கோபம் கொண்ட கருணாகரனின் முகம் பயங்கரமாக மாறியது..

"ஏண்டி..? உன் புருசனா நான் நிக்கறேன்னு வர மாட்டேங்கறியா..? இதுவே அந்த பிரவீன் நின்றிருந்தா மாட்டேன்னு சொல்லியிருப்பியா..?" வெறுப்புடன் வார்த்தைகளை உமிழ்ந்தான்..

சசிரேகா காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. அவளுடல் நடுங்கியது..

"பிரவீன்.. பிரவீன்.. பிரவீன்..! அவன் பெயரைச் சொல்லி உங்க பித்தலாட்டத்தை நியாயப் படுத்தப் பார்க்கறிங்களா..?"

"கத்தாதே.."

"நீங்க கத்த வைக்காதீங்க.. யாருங்க நீங்க..?"

"உன் புருசன்.."

"இப்பத்தான் என் புருசன்.. இதுக்கு முன்னாலே எனக்கு நீங்க யாரு..?"

அவன் அசையாமல் அவளைப் பார்த்தபடியே நின்றான்.. புரிபடாத அவன் பார்வையிலே குழம்பிப் போனாலும் கேட்க வேண்டிய கேள்விகளை சசிரேகா அடுக்க ஆரம்பித்தாள்..

"இதுக்கு முன்னாலே உனக்கு நான் யாரோதான்.. அதுக்கு இப்ப என்ன..?"

"அப்படியிருக்கிறப்ப எந்த உரிமையில என் வீட்டைத் தானம் கொடுக்க நீங்க துணிஞ்சீங்க..? தானம் கொடுக்கிறதா இருந்தா உங்க பொருளைக் கொடுக்கனும்.. அடுத்தவங்க பொருளைக் கொடுக்கறேன்னு வாக்குக் கொடுக்கக் கூடாது.."

"நீ அடுத்தவ இல்லை.. என் பெண்டாட்டி.."

அந்த நிலையிலும் அந்த வார்த்தை இனித்துக் தொலைத்தது.. அவளைக் கவிழ்க்கவென்று வேண்டு மென்றே அந்த வார்த்தையை அழுத்தமாக உச்சரிக் கிறானோ என்று அவளுக்கு சந்தேகமாக இருந்தது..

"உங்க பெண்டாட்டியா இருந்தா அவ உங்களுக்கு அடிமையாகிருவாளா..?"

"உரிமையாகிருவா.."

விடாமல் அவன் பேசிய விதத்தில் அவளுக்கு வெறி வெறியாக வந்தது.. எங்கிருந்து இவன் வந்தான் என்று அவள் வெகுண்டாள்.. அவளுக்கான கல்யாணம்

சிறைமீட்பாக இல்லாமல் இன்னொரு சிறையாக இருப்பதா..?

"அப்படி அவளோட சொத்துக்களை உரிமை கொண்டாடத்தான் அவ கழுத்தில தாலியைக் கட்டி பெண்டாட்டியா ஆக்கிக்கிட்டிங்களா..?" வேகத்துடன் அவள் கேட்டாள்..

"ஆமாண்டி.. எனக்கு சொத்து சுகம் இல்லை.. உன் கழுத்தில தாலியைக் கட்டி உன்னோட ஓட்டை உடைசல் வீட்டைச் சொந்தம் கொண்டாடத்தான் நான் திட்டம் தீட்டினேன்.. எனக்கு இருக்க வீடில்லை பாரு.. வந்துட்டா நியாயம் பேச.. இதையெல்லாம் எவன்டி உன் காதில ஓதினது..?"

"எங்க வீடொன்னும் ஓட்டை உடைசல் வீடில்லை.."

"ரோசத்துக்கு வராம நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..."

"உங்க தங்க அங்குசாமி மாமனார்தான் செப்பினார்.."

"நான் நம்ப மாட்டேன்.."

"ஏனுங்க..? அவரென்ன அப்படியாப்பட்ட உத்தம புத்திரருங்களா..?"

இமைகளை அவள் கேட்ட விதத்தில் அவன் கவரப் பட்டான்.. அப்படியே அவளைக் கடித்துத் தின்று விடலாம் போல அவனுக்கு இருந்தது..

'இவ பண்ற அழும்புக்கு..' அடி உதட்டை மடித்துக் கடித்தபடி ஆழ்ந்து பார்த்து வைத்தான்..

சசிரேகாவின் முகம் சிவந்தது.. அவளை ஆகர்ஷிக்கும் அவனது ஒவ்வொரு செய்கையும் அவளது மன உறுதியைக் குலைப்பதாகவே இருந்ததில்..

'இவன் வேண்டுமென்றே செய்கிறான்..' என்று அவள் கோபம் கொண்டாள்..

"உத்தம புத்திரர் வெளியே சொல்லிருவார்.. இவரைப் போல அடுத்தவங்க சொத்துக்கு ஆளாப் பறக்கிற மனுசர் சொல்ல மாட்டார்.."

"பரவாயில்லையே.. மனுசங்களைச் சரியாத்தான் எடை போட்டு வைச்சிருக்கீங்க.." அவள் பாராட்டினாள்..

"வஞ்சகப் புகழ்ச்சியா..?" நம்பாத குரலுடன் அவன் கேட்டான்..

"இதென்னங்க வம்பாப் போச்சு..? உங்க திறமையைப் பாராட்டினா அது குத்தமாங்க..?" போலியாக அவள் அலுத்துக் கொண்டாள்..

"நீ சொல்வதும் சரிதான்.."

"பார்த்தீங்களா.. நீங்களே ஏத்துக்கிட்டிங்க.."

"நான் மனுசங்களை எடை போடறதில் திறமை சாலிதான்.."

அவன் கண்கள் இடுங்கின..

'ஆஹா..! மாப்பிள்ளை ஏதோச் சொல்லப் போறான்..' அவளது அனுமானம் சரியாக இருந்தது..

"உன்னை எடை போடறதிலதான் நான் சொதப் பிட்டேன்.." என்று அவன் திருவாய் மலர்ந்தருளினான்..

"அப்படி என்னத்தை சொதப்பிட்டிங்க மச்சான்..?" என்று அவளும் கேட்டு விட்டாள்..

"மச்சானா..?" அவன் கள்ளூரும் போதையுடன் பார்த்து வைக்க.. அவள் ஒற்றை விரலை உயர்த்தி..

"பேச்சு பேச்சா இருக்கனும்.." என்று முன் ஜாக்கிரதையாக எச்சரித்து வைத்தாள்..

"இல்லேன்னா.. என்னடி செய்வ..? அடிச்சுருவியா..?"

"டிராக் மாறாதீங்க.. என்னை எப்படி எடை போட்டிங்க.. பிரவீனைக் காதலிச்சுட்டு.. வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணி தியாகி பட்டம் வாங்கப் போய்க்கிட்டு இருந்தவ வழியில உங்களைப் பார்த்ததும் ஜொள்ளு விட்டேன்னுதானே எடை போட்டிங்க..?" அவள் பட்டவர்த்தனமாக போட்டுத் தாக்கி விட்டாள்..

"சசி.." அவன் ஏதோ சொல்ல முனைந்தான்..

"ஊஹீம்.." ஒற்றை விரலை ஆட்டி மறுத்தவள்..

"சசின்னு கூப்பிடாதீங்க.. இவ்வளவு மட்டமா என்னை எடை போட்டுட்டு சசின்னு கூப்பிட உங்களுக்கு எப்படி வாய் வருது..?" என்று குமுறினாள்..

"உன் பிரண்டுதான் சொன்னாள்.."

"என்னன்னு..?"

"பிரவீன் உன் காதலன்னு.. உன் முன்னாலேதான் சொன்னாள் நீயும் அதை மறுக்கலை.."

"சொல்லுவீங்க சார்.. இதை மட்டுமா சொல்லுவீங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவீங்க.. நேத்து ராத்திரி காரில டிராவல் பண்ணினப்ப நான் குத்துயிரும் குலையுயிருமா இருந்தேன்.. அவ என்ன சொன்னான்னு கவனிக்கிற நிலைமையில நானில்ல.."

"அந்த பிரவீனுக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லைங்கறியா..?"

"அதுக்கான விளக்கத்தை உங்களுக்குச் சொல்லனும்கிற அவசியம் எனக்கில்லைங்கறேன்.. என் பிரண்டு சொன்னாளாம்.. இவர் அதைக் கேட்டாராம்.. நீங்ககூட அவளையே உத்து உத்துப் பாத்தீங்களாம்.. சைட்டடிச்சீங்களாம்.. ஜொள்ளு விட்டீங்களாம்.. இதையும் அவதான் சொன்னா.. உங்க முன்னாலதான், காருக்குள்ள வைச்சு என் காதில சொன்னா.. நீங்க அதை மறுக்கலைன்னு நான் சொல்லவா..?"

"சேச்சே..! வத்சலா என் தங்கை மாதிரி.."

"அவ உங்களை அத்தான் மாதிரின்னு சொன்னாளே.. அது உங்களுக்கு மறந்து போச்சா..?"

"நீ வேணும்னே விதண்டாவாதம் பேசற.."

"உண்மையைத்தான் பேசறேன்.. இங்க கிளம்பி வர்றதுக்காக முகம் கழுவிக்க அங்குசாமி பெரியப்பாவோட ரூமில இருக்கிற பாத்ரூமுக்குப் போனேன்.. நான் உள்ளே

இருக்கிறது தெரியாம ரூமுக்குள்ளே நுழைந்து பெரியப்பாவும் பெரியம்மாவும் பேசிக்கிட்டது என் காதில விழுந்து தொலைச்சுச்சு.. தெள்ளத் தெளிவா பெரியப்பா சொன்னார்.. அன்னவாசல் சொத்துக்கள என் தம்பி பேருக்கு பத்திரம் போட்டுக் கொடுத்துப் பணம் வாங்கி கார மங்களத்தில வீட்டை வாங்கிப் போட்டேன்.. அந்தப் பத்திரம் எப்படியோ கருணாகரனோட கைக்குப் போயிருச்சு.. அதைத் திருப்பிக் கொடுக்கனும்னா இந்த அநாதைக் கழுதையை அவனுக்குக் கட்டித் தரனும்னு சொல்றான்னு சொல்லிக்கிட்டு இருந்தார்.."

"அப்படியா சொன்னார்..? என்ன தைரியம்..? என் முன்னாலே சொல்லியிருக்கனும்.. உண்டு இல்லைன்னு ஒரு வழி பண்ணியிருப்பேன்.."

"நீங்க சொல்லாததையா அவர் சொன்னார்..?"

"அதைச் சொல்லலை.."

"வேற எதைச் சொன்னீங்க..?"

"உன்னை அநாதைக் கழுதைன்னு சொல்லி யிருக்காரே.. அதைச் சொன்னேன்.."

"நான் அநாதைதானே..?" துக்கத்துடன் அவள் கேட்டாள்..

"சசி.." அவன் விழிகளில் அதிர்வு வந்தது..

"என்னைப் பெத்தவங்க மட்டும் உயிரோடு இருந்திருந்தா எனக்கு இந்த நிலைமை வந்திருக்குமா..?" தன்னிரகத்தில் அவள் அழுது விட்டாள்..

"ஏய்ய்.. உனக்கு நானில்லையா..?" கருணாகரன் அவளை இழுத்து அணைத்துக் கொள்ள முயன்றான்..

"தொடாதீங்க.." அவன் கையைத் தட்டி விட்டு அவள் நகர்ந்து போனாள்..

"ஏய்ய்.. நான் உன் புருசன்டி.."

"எங்கப்பாம்மா உயிரோடு இருந்திருந்தா இப்படியொரு புருசனுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்

கொடுத்திருக்க மாட்டாங்க.."

"சசி.."

"ஏற்காடு வீட்டையும் உங்க பேருக்கே மாத்தித் தரேன்னு கருணாகரன் சொல்லியிருக்கான்னு பெரியப்பா சொல்றாரு.. ஆஹான்னு பெரியம்மா மகிழ்ந்து போகிறாங்க.. அன்னவாசல் சொத்துக் கூட பெரிசில்லை.. என்னோட அப்பாம்மாவே உயிரோடு இல்லை.. அந்தச் சொத்து எனக்கெதுக்கு..? ஆனா ஏற்காடு வீடு..? அது சொத்தில்லைங்க.. என் உயிர்..! எங்கப்பாம்மா வாழ்ந்த இடம்.. அவங்க மூச்சுக்காத்து நிறைந்திருக்கிற கோவில்..! உங்களுக்கு வேணும்னா அது ஓட்டை உடைசல் வீடா இருக்கலாம்.. நீங்க மாளிகையில் வாழ்கிறவர்.. பெரிய பணக்காரர்.. எனக்கு அதுதாங்க பொக்கிசம்.."

"சசி.."

"வேண்டாம்ங்க.. என்னை அப்படிக் கூப்பிடாதீங்க.. சசிரேகான்னே கூப்பிடுங்க.. இப்படிப்பட்ட புருசனோட வாழ்கிற வாழ்க்கை எனக்கு வேணாம்.. நான் போறேன்.."

அழுது சிவந்திருந்த முகத்தைத் துடைத்தபடி உறுதியுடன் சசிரேகா சொன்னாள்.. கருணாகரனின் முகத்திலிருந்த குற்ற உணர்வு மறைந்து கோபம் வந்து சேர்ந்தது..

"எங்கே போற..?"

"சென்னைக்கு.."

"என்ன..? அங்கே என்ன இருக்கு..?"

"என் வேலையிருக்கு.."

"கூடவே பிரவீனும் இருப்பானே.."

சசி கருணாகரனை முறைத்துப் பார்த்தாள்.. அவன் கோபத்தை அடக்கிக் கொள்ள பிரயத்தனங்களை

மேற் கொண்டிருப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஆனாலும் அவள் முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை..

"இப்படிப்பட்ட நினைப்பை வைச்சிருக்கிறவர் கூட என்னால வாழ முடியாது.."

"முடியலைன்னா விடு.. நானும் உன்னை அழைக்கலை.. அதுக்காக சென்னைக்குப் போறேன்னு ஆரம்பிச்ச.. நான் நானா இருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்.."

"இந்த வீட்டில உங்ககூட இருந்தா நானும் நானாக இருக்க மாட்டேன்தான்.."

"ஏய்ய்.."

அவன் திரும்பவும் அவள் கழுத்தில் கையை வைக்க அவள் தள்ளி நின்று விட்டாள்..

"கொன்னு புதைச்சிருவேன்.. பேசாம படு.."

"இந்தக் கட்டிலிலேயா..? நான் மாட்டேன்.."

சசிரேகா போர்வையையும், தலையணையையும் உறுவி தரையில் விரித்துப் படுத்து விட்டாள்.. கருணாகரன் வந்து தலையணையை உதைத்த வேகத்தில் அது விட்டத்தை நோக்கிப் பறந்தது..

"என்ன..? ரௌடித்தனம் பண்றீங்களா..?" சசிரேகா கொதிப்புடன் கேட்டாள்..

"நான் ரௌடித்தனம் பண்ணினேன்னு வைய்யி.. நீ தாங்க மாட்ட.. பஞ்சு.. பஞ்சா பறந்திருவ.. பாவம்.. சின்னப் பெண்ணாச்சேன்னு நான் அடக்கி வாசிக்கிறதினால தப்பிச்சிருக்கடி.. எழுந்திரு.."

"எதுக்கு..?"

அவள் சந்தேகமாக நகர்ந்து உட்கார்ந்ததில் அவளைத் துவம்சம் பண்ணி விடும் வெறி அவனுக்குள் வந்தது.. அவளைச் சூறையாடக் காரணம் தேடி அவள் மீதான அவனது மோகம் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.. அதை அறியாமல் தகராறு செய்து கொண்டிருந்த சசிரேகாவை என்ன செய்வது என்று பற்களை நறநறத்தான் கருணாகரன்..

"ம்ம்ம்.. உன்கூட குடும்பம் நடத்தறதுக்கு.. வர்றியா..?"

சசிரேகாவின் விழிகளில் திகிலுடன் கூடிய எதிர்பார்ப்பு வந்தது.. வேட்டையாடப் படுவதை விரும்பும் புள்ளி மான்களை படுக்கையறையில் மட்டுமே பார்க்க முடியும்.. ஆண்சிங்கம் மானை வெறித்தபடி பக்கத்தில் வந்தது.. சசிரேகா பதறி நகர்ந்ததில் அப்படியே நின்று விட்ட கருணாகரன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு கட்டிலுக்குத் திரும்பினான்..

'அப்பாடி.. போயிட்டான்..' ஏமாற்றத்துடன் கூடிய நிம்மதி சசிரேகாவின் மனதில் வந்தது..

மலர்ச்சரங்கள் தொங்கிய இரட்டைக் கட்டிலை அணுகிய கருணாகரன் அவளைத் திரும்பிப் பார்த்தான்..

'வந்திருவானோ..' ஸ்தம்பித்துப் போன சசிரேகாவின் இதயம் ஓர்நொடி நின்று மறுநொடியில் வேகமாக அடித்து வைத்தது..

அவள் பயந்ததைப் போலவே கருணாகரன் அவளருகில் வந்தான்.. குனிந்தான்.. அவள் இடுப்பில் கை கொடுத்துக் தூக்கி விட்டான்.. கட்டிலை நோக்கி நடந்தான்..

"விடுங்க.. என்னை விடுங்க.."

அவள் திமிறினாள்.. இரும்புப் பிடியாக அவன் பிடி இருந்தது.. அவளைக் கட்டிலில் போட்டவன் அவள் மேல் கவிழ்ந்தான்.. அவள் கட்டிலின் மறு கோடிக்கு புரண்டாள்.. அவன் வாகாக காலை நீட்டிப் படுத்து கட்டிலின் தலைமாட்டிலிருந்த விளக்கை அணைத்து விட்டு..

"தூங்குடி.." என்றபடி கண்களை மூடிவிட்டான்..

சற்று நேரத்தில் சீரான சுவாசம் அவனிடமிருந்து கிளம்பியது.. கட்டிலின் மறுகோடியிலிருந்த சசிரேகா மட்டும் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள்..

குளிர்ந்த தண்ணீரில் முகம் கழுவினாள் சசிரேகா.. இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்ததில் கண் இமைகள் வீங்கி கண்கள் சிவந்திருந்தன.. விடியும்

போது தூங்கி விட்டவளை தூங்கட்டும் என்று விடாமல் இரக்கமின்றி எழுப்பி விட்ட கருணாகரனை எரிச்சலுடன் திட்டினாள்..

"இவன் குறட்டை விட்டுத் தூங்கியிருந்தா மத்தவங்களும் அப்படித்தான் தூங்கியிருப்பாங்கன்னு நினைச்சுக்கிறதா..? மடையன்..! இப்பத்தான் தூங்க ஆரம்பிச்சேன்.. அதுக்குள்ள எழுப்பி விட்டுட்டான்.."

மூடியிருந்த பாத்ரூமின் அறைக்கதவைத் தைரியமாக பார்த்தபடி இன்னும் கொஞ்சம் திட்டித் தீர்த்து விட்டு கதவைத் திறந்து வெளியில் வந்தாள்.. ஈரமுகத்துடன் இருந்தவளை கழுகு பார்வை பார்த்தபடி டவலை நீட்டினான் கருணாகரன்..

'நான் கேட்டேனா..?'

முகத்தைச் சுளித்தபடி அவளுடைய பெட்டியெங்கே என்று தேடினாள் சசிரேகா..

"ஷெல்பில் இருக்கு..." டவலைத் தூக்கிப் போட்டபடி கருணாகரன் அறிவித்தான்..

அவனை முறைத்தபடி சுவரோடு பதிக்கப் பட்டிருந்த மர அலமாரியைத் திறந்தாள்.. உள்ளே அவளுடைய பெட்டி இருந்தது.. திறந்து டவலை எடுத்து முகத்தைத் துடைத்தாள்.. அதற்குள் ஈர முகம் உலர்ந்திருந்ததில் அவன் கேலியாக அவளைப் பார்த்தான்.. அவள் 'போடா' என்பதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

"காபி வந்திருக்கு.. அதான் உன்னை எழுப்பினேன்.. இல்லேன்னா உன்கிட்ட மடையன்னு திட்டு வாங்கனும்னு எனக்கு ஆசையா என்ன..?"

அவளை அடிக் கண்ணால் பார்த்தபடி டீப்பாயி லிருந்த காபிக் கப்பை அவன் காட்டினான்..

'பாத்ரூமில தாழ்ப்பாள் போட்டுட்டுத்தான இவனைத் திட்டினேன்..? அதையும் தாண்டி இவன் காதில விழுந்து தொலைச்சிருக்கா..? மடையன்ங்கிற வார்த்தை மட்டும் தான் கேட்டுச்சா.. இல்ல.. ஒட்டு மொத்தமா நான் திட்டித் தீர்த்த அத்தனையும் கேட்டுச்சிருச்சா..'

"எல்லாமே கேட்டிருச்சு.." அவன் நிதானமாக காபியை உறிஞ்ச ஆரம்பித்தான்..

அவளால் அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை.. புறமுதுகு காட்டியபடி காபியைக் குடிக்க ஆரம்பித்தாள்..

'காபியைக் குடிச்சுட்டு கட்டில்ல விழுந்திரனும்..'

லேடிஸ் ஹாஸ்டலில் இருக்கும்போது மற்ற நாள்களில் விட்ட தூக்கத்தை ஞாயிறு முழுவதும் தூங்கி சரிசெய்து விடுவாள் சசிரேகா.. அந்த நினைவில் காரமங்களத்திலும் தூக்கம் போட்டு விடலாமென்று அவள் திட்டம் தீட்டி முடிப்பதற்குள் அறைக்கதவு தட்டப்பட்டது..

'யாரா இருக்கும்..'

அவள் புறமுதுகு காட்டுவதை கைவிட்டு அவன் பக்கம் திரும்பி முகம் பார்த்தாள்.. அவன் அறைக் கதவை கைகாட்டி..

"திற.." என்றான்..

"நானொன்னும் உங்க வேலைக்காரி இல்லை.." கடுமையாக சொன்னாள்..

"அட..! வேலைக்காரிக்கா நான் காபியை ஆற்றி வைச்சுக்கிட்டு காத்திருக்கப் போறேன்..? நீ என் வீட்டுக்காரிடி.. அதான் காபிக்கப்ப கையில வைச்சுக்கிட்டு உன்னை எழுப்பி விட்டேன்.. முகம் துடைக்க டவலைக் கொடுத்தேன்.. இன்னும் கை, காலை அமுக்கி விடனுமா..? சொல்லு.. அதையும் செய்றேன்.. இதையெல்லாம் வீட்டுக்காரிக்குத்தாண்டி செய்ய முடியும்.." அவன் அடுக்கியதில்..

"போதுமே.." என்று முகம் சிவந்து விட்டாள் சசிரேகா..

அந்த முகச்சிகப்பை ரசனையுடன் பார்த்தவனுக்கு மழை நாளின் இரவுப் பயணம் நினைவுக்கு வந்தது..

'அப்பவும் இப்படித்தான் முகம் சிவந்தா.. இவ வெட்கப்படறப்ப தக்காளிப்பழம் போல கன்னம் சிவந்திருதே.. எப்படி..?'

செண்பகப் பாண்டியன் தனது பட்டத்து ராணியின் கூந்தலில் இருந்து வந்த நறுமணத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியதைப் போல கருணாகரன் அவன் மனைவியின் வெட்கச் சிவப்பைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டான்..

"கருணா.."

கதவுக்கு வெளியே கவிதாவின் குரல் கேட்டதில்.. 'நீ போ, நான் போ..' என்று வழக்கடித்துக் கொண்டிருந்த சசிரேகா 'கப்..சிப்..'பென்று அடங்கிப் போனவளாக கதவை நோக்கி விரைந்தாள்..

அவளை குறுஞ்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் கருணாகரன்.. கதவருகே போனவள் அவனது குறுஞ்சிரிப்பைப் பார்த்து விட்டாள்.. அவளையுமறியாமல் அவள் நாக்கைத் துருத்தி அழகு காட்டி விட அவன் கண்களில் மின்னல் வந்தது..

சசிரேகா கதவைத் திறந்ததில் உள்ளே வந்த கவிதா தம்பி மனைவியை ஆதுரத்துடன் பார்த்தாள்.. அவள் பார்வை சசிரேகாவின் பாதாதிகேசம் முதல் அளவிட்டதில் சசிரேகா கூச்சம் கொண்டாள்.. கருணாகரனுக்கோ சிரிப்பு வந்தது..

"அவளை ஏன் முறைக்கிற..?"

கவிதாவின் கவனத்தை அவன் திசை திருப்பியதில் சசிரேகா நன்றியுடன் அவனைப் பார்க்க அவன் கண்களில் மறுபடியும் மின்னல் வந்தது..

"உன் பெண்டாட்டியை சும்மா பார்த்தாக்கூட முறைக்கிறதா நீ கதை கட்டி விடுவியா..?"

கருணாகரனை செல்லமாக கடிந்து கொண்டவள் சசிரேகாவை அன்புடன் பார்த்தபடி..

"குளிச்சுரும்மா.." என்றாள்..

'அதுக்குள்ளேயா..? நான் தூங்கனுமே..' சசிரேகா ஏக்கத்துடன் கட்டிலைப் பார்த்தாள்..

'சரியாப் போச்சு..' கருணாகரனுக்கு மறுபடியும் சிரிப்பு வந்து விட்டது..

முதல் இரவு முடிந்த மறுநாள் காலையில் அதற்குள் குளிக்க வேண்டுமா என்ற தயக்கத்துடன் புதுமணப் பெண் கட்டிலை ஏக்கத்துடன் பார்த்தால் அதைப்

பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்வார்கள்..?

'இவளுக்கு இதுகூட தெரியலையே..'

அந்த அறியாமை அவனை வசீகரித்தது.. கவிதா சங்கடத்துடன் சிரித்தபடி..

"கோவிலுக்குப் போகனும்மா.. இல்லைன்னா உங்க ரெண்டு பேரையும் நான் தொந்தரவு செய்திருப்பேனா..?" என்றாள்..

"கோவிலுக்குப் போகனுமா..? எந்தக் கோவிலுக்கு..?" சசிரேகா கேட்டாள்..

"நம்ம குலதெய்வம் கோவிலுக்கும்மா... அதுக்குத்தான் உன்னை சீக்கிரமா குளிச்சு ரெடியாகச் சொன்னேன்.. கோவிலுக்குப் போயிட்டு வந்த பின்னாலே நீ தொந்தரவில்லாம கருணாகரன் கூடப் பேசிக்கிட்டு இருக்கலாம்.."

கவிதா தயக்கத்துடன் சொன்னாள்.. அவளது தயக்கமும் சங்கடமும் எதற்காக என்று தெரியாமல் விழித்தாள் சசிரேகா.. அதிலும் அவள் கருணாகரனுடன் தொந்தரவில்லாமல் பேசிக் கொண்டிருக்கலாமா..?

'என்ன அலுவலுக்கு..?'

எரிச்சலுடன் நினைத்தவளின் புத்தியில் மணியடித்தது..

'அடக்கடவுளே..! இவனுடன் நான் சல்லாபிக்க ஆசைப்படுவதாக அண்ணி நினைத்துக்கிட்டாங்களா..?'

திருதிருத்தபடி கருணாகரனைப் பார்த்தாள்.. அவன் நமட்டுச்சிரிப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவள் நிலைமையை அவன் வேடிக்கை பார்ப்பதை புரிந்து கொண்டவள் அவனை முறைத்தாள்..

'இவனுக்கு எல்லாம் தெரிந்திருக்கு..'

சொல்லித் தொலைத்திருந்தால் என்ன என்று அவள் சைகையில் கேட்டாள்.. என்ன தேவைக்கு என்று அவன் பதிலுக்கு சைகை செய்தான்.. உன்னுடைய அக்காதானே என்று இவள் சைகை செய்தாள்.. ஆனால் பிரச்னை உன்னுடையதுதானே என்று அவன் தோளைக் குலுக்கினான்..

இருவரும் இந்த லட்சணத்தில் சைகை செய்து கொண்டிருந்ததைப் பார்த்த கவிதாவின் சங்கடம் கூடியது..

"சரி..சரி.. நீங்க ரெண்டு பேரும் சீக்கிரமா குளிச்சுட்டுக் கிளம்பி வாங்க.. எனக்கு வேலை நிறைய இருக்கு.." என்று அவர்கள் முகத்தைப் பார்க்காமல் கூறியபடி அவசரமாக ஓடி விட்டாள்..

பின்னங்கால் பிடறியில் பட ஓடியவளை விசித்திரமாக பார்த்து வைத்த சசிரேகா..

"ஏன் இப்படி ஓடறாங்க..?" என்று கருணாகரனிடம் விளக்கம் கேட்டாள்..

"உனக்கு நாத்தனாரா ஆகிற வரம் வாங்கியிருக் காங்கள்ல.. அதான் அப்படி ஓடறாங்க.." அவனும் விளக்கம் சொன்னான்..

"அப்படியில்ல சாரே.. உங்களப் போல ஒரு தம்பிக்கு அக்காவா பிறந்திருக்கும் வரம் வாங்கியிருக்காங்கள்ல.. அதான்.. அப்படி ஓடறாங்க.." என்றாள் அவள்..

"என்னவோ ஒன்னு.. ஆனா இப்போ அக்காவை துரத்தினது நானில்லை கண்ணு.. நீதான்.." என்றான் கருணாகரன்..

"நானா..?"

"நீயேதான்.."

"நானென்ன பண்ணினேன்..?"

"குளிச்சுட்டு வான்னு சொன்னா கட்டிலை ஏண்டி ஏக்கமா பார்த்து வைச்ச..?"

கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. எதற்காக இப்படிச் சிரிக்கிறான் என்று விளங்காமல் அவள் விழித்தபடி..

"இதென்ன வம்பாப் போச்சு.. நேத்து நைட்டு பூராத் தூங்கலை.. இப்பவாவது தூங்கலாமேன்னு நினைச்சுக் கட்டிலைப் பார்த்தேன்.. அது ஒரு குத்தமா..?" என்று கேட்டாள்..

அவன் அவளையே குறுகுறுவென்று பார்த்தான்.. அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது..

'என்ன அலுவலுக்கு இப்படிப் பார்த்து வைக்கிறான்..?' முகம் சிவக்க வேறு பக்கம் வெறித்து வைத்தாள்..

"நீ எப்பவாவது இப்படி இருப்பியா..? இல்ல.. எப்பவுமே இப்படித்தான் இருப்பியா..?" நிதானமாக கேட்டான் அவன்..

"எப்படி இருக்கேனாம்..?" ரோசத்துடன் சண்டைக்குப் போனாள் சசிரேகா..

"டியூப் லைட்டா இருக்கே.."

"என்னது..?"

"இந்த ரோசத்துக்கொன்னும் குறைச்சலில்ல.. ஏண்டி.. பர்ஸ்ட் நைட் முடிஞ்சவ நைட்டெல்லாம் தூங்கலை.. தூக்கம் தூக்கமா வருதுன்னு சொன்னா கேட்கிறவங்க என்னன்னு நினைப்பாங்க..?"

"என்ன நினைப்பாங்க..?"

அவனிடமே அவள் சந்தேகம் கேட்டு வைக்க, அவன் ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்து வைத்தான்.. அவளுக்கு விளங்கி விட்டது..

'அடக்கடவுளே..! நிஜமாவே நான் டியூப் லைட்டுதான்..'

அவளுக்கு முகத்தை மூடிக்கொண்டு அங்கிருந்து ஓடிவிடவேண்டும் போல இருந்தது.. அவன் பார்க்கும் பார்வையை அவளால் தாள முடியவில்லை..

"அண்ணி என்னன்னு நினைச்சிருப்பாங்க..?"

"வேற என்னத்தை நினைச்சிருப்பாங்க.. நீ விடிய விடிய பர்ஸ்ட் நைட்டைக் கொண்டாடினேன்னு நினைச்சிருப்பாங்க.."

"ச்சீ..!"

இவன் வெட்கம் கெட்டவன் என்று லஜ்ஜையுடன் முகம் சிவந்தாள் சசிரேகா.. கூச்சமில்லாமல் எப்படிப் பேசுகிறான்..?

"என்னத்த 'ச்சீ..?' இப்படிச் சொல்கிறவதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே என் அக்கா குளிச்சுட்டுக் கிளம்பச் சொன்னதும் கட்டிலையே ஏக்கமா பார்த்து வைச்ச.."

"அது.. அது.. எனக்கு தூக்கம் தூக்கம் இருக்கு.. அதனால பார்த்து வைச்சேன்.."

"அது அக்காவுக்குத் தெரியுமா..?"

"கடவுளே..! அதனாலதான் அவங்க உங்க ரெண்டு பேரையும் வேற வழியில்லாம தொந்தரவு பண்ண வேண்டியிருக்குங்கிற மாதிரி சங்கடப்பட்டாங்களா..?"

"இப்பவாவது உன் மரமண்டையில இந்த விசயம் ஏறுச்சே.."

"கடவுளே..! கோவிலுக்குப் போயிட்டு வந்த பின்னாலே நீ தொந்தரவில்லாம கருணாகரனோட பேசிக்கிட்டு இருக்கலாம்ன்னு அதனாலதான் சொன்னாங்களா..?"

"புரிஞ்சாச் சரி.."

"கடவுளே..! அதனாலதான் இங்கே நிற்கச் சங்கடப் பட்டுக்கிட்டு அந்த ஓட்டம் ஓடினாங்களா..?"

"ஓட வைச்சுட்டியில்ல.. கெட்டிக்காரிடி நீ.."

"கடவுளே..!"

சசிரேகா மேலும் எதையோ சொல்லப் போக கருணாகரன்.. "உஷ்ஷ்...!" என்று ஆள்காட்டி விரலை வாயில் வைத்து அவளை அடக்கினான்..

"இன்னும் எத்தனை தடவைதான் கடவுளைக் கூப்பிடுவ..? அவருக்கு என்ன வேற வேலை கெட்டியே இல்லையா..? அவருக்கு இருக்கும்மா ஆயிரம் பஞ்சாயத்து.. அதனால வாயை மூடிக்கிட்டு குளிக்க ஓடு.."

'இவன் என்ன என்னை விரட்டறது..?'

அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.. குளித்து விட்டு வந்தவளிடம் மயில் கழுத்து கலரில் காபிக்கொட்டை கலர் பார்டர் கொண்ட கெட்டி ஜரிகைப் புடவையை நீட்டினாள் கவிதா.. கூடவே வைர அட்டிகை, தொங்கட்டான், வளையல்கள்.

"அண்ணி..?" சசிரேகா மறுக்கப் போனாள்..

"இந்த நகைகளையெல்லாம் என் தம்பி பெண்டாட்டிக்குன்னு நான் பார்த்துப் பார்த்து வாங்கி வைச்சிருக்கேன்ம்மா.. உன் அண்ணியோட அன்புப் பரிசு.. மறுக்காம போட்டுக்க.." பாசத்தில் விலங்கிட்டாள் கவிதா.

மறுக்க வழியில்லாமல் போய் விட்டதில் வேறு வழியின்றி நகைகளை வாங்கி அணிந்து கொண்டாள் சசிரேகா.. தழையத் தழைய காஞ்சிபுரப்பட்டும்.. தலை நிறைய முல்லைச் சரமும்.. வைர நகைகளுமாக மாடியிலிருந்து இறங்கி வந்தவளைப் பார்த்த வத்சலா ஆச்சரியத்துடன்..

"வாவ்.." என்றாள்..

அதை கருணாகரனின் கண்கள் பிரதிபலித்தன.. காரில் ஏறிய போது அவளுடன் அவன் வேண்டுமென்றே

உராய்கிறானோ என்று சந்தேகப்பட்டாள் சசிரேகா..

என்னதான் இடம் பற்றாக்குறையாக இருந்தாலும் இப்படியா ஒருவன் அவள் மடிமீது சரிந்து கொண்டு வருவான்..?

அப்படி அவன் செய்கிறான் என்று மற்றவர்களிடம் கூறி நியாயம் கேட்கவும் முடியாது என்பதினால் பல்லைக் கடித்துக் கொண்டு ஒடுங்க முயன்றாள்.. முடியவில்லை.. மாறாக அவள் மனதில் மோகம் வந்து ஒன்றிக் கொண்டது..

விலக நினைத்தவள் விலக மனமின்றி அவனது ஸ்பரிசத்தில் குளிர் காய முயன்றாள்.. ஒடுங்க முயன்றவள் அதை மறந்து அவன் பக்கமாக ஒன்றிக் கொண்டாள்..

17

தீபாதரனை வெளிச்சத்தில் அம்மனின் வைர மூக்குத்தி ஒளிர்ந்தது.. பச்சை வண்ணப்பட்டு உடுத்தி மரகதப் பதுமை போல வீற்றிருந்தாள் அம்பிகை.. அவளது அருள் பாலிக்கும் விழிகள் கருணையுடன் சசிரேகாவைப் பார்த்து 'கலங்காதே மகளே..!' என்று சொல்வதைப் போல உணர்ந்தாள் சசிரேகா..

தீபாதரனையின் கற்பூர ஒளியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டவள் நெற்றியில் குங்கும் பிரசாதத்தை இட்டுக் கொண்டாள்..

"டோட்டலா மாறித் தெரியறடி சசி.." என்றாள் வத்சலா..

அவர்கள் பிரகாரத்தைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார்கள்.. சற்றுத் தொலைவில் உறவினர் களுடன் பேசிக் கொண்டிருந்த கருணாகரனைத் திரும்பிப் பார்த்தவள்..

"ரியலி ஹி இஸ் எ ஹீரோ சசி..!" என்றும் சொன்னாள்..

சசிரேகா பேசவில்லை.. மௌனமாக கருணாகரனைப் பார்த்தாள்.. பட்டுவேட்டி சட்டையுடன் அவன் ஒரு கதாநாயகனுக்குரிய அனைத்து அம்சங்களுடன் நின்றிருந்தான்..

"இவர் உனக்கு ஹஸ்பெண்டா கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கனும் சசி.."

'எதை..? ஏற்காட்டு வீட்டையா..?'

கேட்க நினைத்த கேள்வியை கேட்க முடியாமல் வெறுமையாக சிரித்தாள் சசிரேகா.. தூரத்தில் நின்று உறவினர்களுடன் பேசியபடி அவள் முகத்தின் உணர்வுகளையே அவதானித்துக் கொண்டிருந்த கருணாகரன் என்னவென்பதைப்போல புருவங்களை உயர்த்தினான்.. சசிரேகா அவளையுமரியாமல் எதுவு மில்லை என்பதைப் போல தலையை ஆட்டினாள்..

"ஒருநாள் நைட்டுக்குள்ள பார்வையாலேயே பேசிக்கிற அளவுக்கு டெவலெப்பாகிட்டயா..? நடத்து.. நடத்து.."

வத்சலா கேலி செய்த போதுதான் அவனுடைய புருவ உயர்த்துதலுக்குத் தான் பதில் அளித்து விட்டதை உணர்ந்தாள் சசிரேகா..

'இது எப்படி..?' அவளுக்கு திகைப்பாக இருந்தது..

வீட்டுக்குத் திரும்பியவுடன் மாடியறைப் பக்கம் எட்டிப் கூடப் பார்க்காமல் வத்சலாவுடன் பேசிக் கொண்டிருந்தாள்..

"டிரெஸ் ரேன்ஜ் பண்ணிட்டு வாயேண்டி.." வத்சலா சொல்லிப் பார்த்து விட்டாள்..

சசிரேகா அசையவில்லை.. வத்சலாவை விட்டுப் பிரிய மனமில்லாமல் ஒட்டிக் கொண்டே அலைந்தவள்..

"இருக்கட்டும்டி.." என்று சொல்லி விட்டாள்..

"பெரிய மனுசன் பெண்டாட்டி..! பட்டும் வைரமுமா இருக்கனும்னுதான் நினைப்ப.."

அதற்கும் கருணாகரனைக் காரணம் காட்டினாள் வத்சலா.. அவனைத் தவிர்த்த சசிரேகாவாக அவளால் இருக்கவே முடியாதா என்ற ஆதங்கம் பொங்கியது சசிரேகாவிற்கு..

மதிய உணவுக்குப் பின்னால் வத்சலாவின் அறையிலேயே படுத்து அயர்ந்து தூங்கி விட்டாள் சசிரேகா.. மாலையில் காபி பலகாரத்துடன் வந்த கவிதா சசிரேகாவைப் பார்த்து விட்டு..

"சசி இங்கேயா தூங்கறா..?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்..

"எனக்கும் இதே எண்ணம்தாங்க.. உங்க தம்பி போல ஒரு ஹஸ்பெண்டு எனக்குக் கிடைச்சிருந்தா நான் இப்படி பிரண்டுகூட ஜோடி போட்டுக்கிட்டு சுத்திக்கிட்டு இருக்க மாட்டேன்.. பசை போட்டதைப் போல ஹஸ்பெண்டு கூட ஒட்டிக்கிட்டு சுத்தியிருப்பேன்.. இவ என்னடான்னா இங்கே தூக்கம் போட்டுக்கிட்டு இருக்கா..?" என்று சொல்லி விட்டு கவிதாவிடம் மொத்து வாங்கினாள் வத்சலா..

"என்ன பேச்சுப் பேசற..? என் தம்பியைப் பார்த்தா கண்ணு வைக்கிற..? உன்னைச் சொல்லக் கூடாது.. கட்டின புருசனை முந்தானையில முடிஞ்சு வைக்காம இங்கே இழுத்துப் போர்த்தித் தூங்கிக்கிட்டு இருக்கிற என் தம்பி பொண்டாட்டியச் சொல்லனும்.." சசியை எழுப்பினாள் கவிதா..

"டிரை பண்ணுங்க.. எழுந்திருக்கிறாளான்னு பார்ப்போம்.. நானும் அப்போப் பிடிச்சு உலுக்கறேன்.. அசைய மாட்டேங்கிறா.." காபியைக் குடிக்க ஆரம்பித்தாள் வத்சலா..

"இந்தத் தூக்கம் தூங்கறாளே.." எழுப்பிக் களைத்துப் போன கவிதா முணுமுணுத்தாள்..

"பாவம்.. நைட்டெல்லாம் கண்முழிச்சு உழைச் சிருப்பா.. டயர்டா இருக்காதா..? தூங்கட்டும் விடுங்க.." என்று வாய் விட்ட வத்சலா மறுபடியும் கவிதாவிடம் மொத்து வாங்கினாள்..

"கல்யாணம் ஆகாத பொண்ணு மாதிரியா பேசற..?"

"இதுக்கெல்லாம் கல்யாணம் ஆகியிருக்கனுமாங்க..? கேள்வி ஞானம் போதாதா..?"

"அப்பாடி..! உன் வாயை காரமங்களம் தாங்காதும்மா.."

"எனக்கும் இந்தக் கவலைதான்.. எங்கே..? நேத்து நைட்டே இந்தக் காரமங்களத்தைக் காப்பாத்திப் புடலாம்ன்னு சென்னைக்கு டிரெயின் ஏறப் பார்த்தேன்.. ஆபிசர் விடலை.. இன்னைக்குப் பத்திரமா காரில அனுப்பி வைக்கிறதாச் சொன்னாரு.. சொன்ன வார்த்தையை காத்தோட விட்டுட்டு குலதெய்வம் கோவிலுக்கு சாமி கும்பிட அழைச்சுக்கிட்டுப் போயிட்டாரு.. இன்னைக்கு நைட் டிரெயினில கிளம்பிரலாம்ன்னு பார்த்தா அதுக்கும் 'தடா' போட்டுட்டீங்க.. இனி நாளைக்குத்தான் போயாகனும்.."

"எங்ககூட இருக்கிறதுக்கு இத்தனை அலுப்பா..? எங்களுக்காக இல்லைன்னாலும் இங்க தூங்கிக்கிட்டு இருக்கிற உன் சிநேகிதியோட முகத்துக்காக இரும்மா.."

"ஏங்க.. சிநேகியோட ஹஸ்பெண்ட் முகத்துக் கென்னங்க குறைச்சல்..? அவர் முகத்துக்காக நான் இருந்தால் ஆகாதா..?"

"உன்னை.."

கவிதா கையிலிருந்த பித்தளைச் சொம்பினால் இன்னும் இரண்டு மொத்துக்களை வழங்கி விட்டுப் போய் விட்டாள்.. மாலை மயங்கி இருள் பரவும் நேரத்தில் விழித்துக் கொண்ட சசிரேகா அவசரமாக எழுந்து உட்கார்ந்தாள்.. கவிதா கொடுத்து விட்டுச் சென்றிருந்த பலகாரத்தை மொக்கியபடி அறையில் டிவி பார்த்துக் கொண்டிருந்த வத்சலாவிடம் பாய்ந்தாள்..

"ஏண்டி குரங்கே என்னை எழுப்பலை..?"

"லுக் சசி..! இந்தக் குரங்குன்னு கூப்பிடற வேலையையெல்லாம் சென்னையோட மறந்துரு... காரமங்களத்தில இப்படிக் கூப்பிட்டு வைக்காதே.. தப்பித் தவறி இந்தப் பக்கமா உன் ஹஸ்பெண்டு வந்துட்டா என்னோட இமேஜ் என்னாகிறது..?"

"உன் மண்ணாங்கட்டி இமேஜைத் தூக்கிக் குப்பையில் போடு.."

"அதென்ன அப்படிச் சொல்லிட்ட..? இமேஜ் முக்கியம்மா.. உன் ஹஸ்பெண்ட் முன்னாடி நான் கெத்துக் காண்பிக்க வேணாமா..?"

"அவர்கிட்ட நீ எதுக்காக பில்ட்-அப் பண்ணனும்..?"

"எல்லாம் ஒரு இதுக்காகத்தான்.."

"நீ உருப்பட மாட்டேடி.."

சசிரேகா அவசரமாக முகம் கழுவி.. தலைவாரி பின்னலிட்டு கவிதாவைத் தேடிப் போனாள்.. பூஜையறைக்குள் இருந்த கவிதா சசிரேகாவைக் கண்டதும் பரிவுடன் புன்னகைத்து..

"சரியான நேரத்துக்கு வந்துட்ட.... சாமிக்கு விளக்கேத்தும்மா.." என்றாள்..

இருட்டும் வரை உறங்கி விட்ட குற்ற உணர்வு அகன்றவளாக நிம்மதியுடன் சுவாமிகளுக்கு விளக்கேற்றி வழிபட்டாள் சசிரேகா.. குத்துவிளக்கின் ஒளியைத் தொட்டுக் கண்களில் ஒற்றியபின் பெண்கள் இருவரும் பூஜையறையை விட்டு வெளியே வந்தார்கள்..

"கருணாவுக்கு காபி பலகரம் கொடுத்திட்டேன்.. நீ சாப்பிடு.."

டைனிங் ஹாலுக்கு அவளை அழைத்துப் போனாள் கவிதா.. தாய்ப்பசுவைத் தொடரும் கன்றைப் போல அவளைத் தொடர்ந்து போன சசிரேகாவுக்கு சூடான காபி உள்ளே இறங்கியதும் தெம்பாக இருந்தது..

"ஸாரி அண்ணி.."

"எதுக்கு..?"

"ரொம்ப நேரம் தூங்கிட்டேன்.."

"அதனால என்ன..?"

மயிலிறகாய் மனதை வருடும் வார்த்தைகள்.. இதமான புன்சிரிப்பு.. கருணையைப் பொழியும் பார்வை..

'யார் இவள்..? தேவதையா..?'

சசிரேகாவின் மனம் பொங்கியது.. அன்பு காட்ட யாருமில்லாத அநாதைச் சிறுமியாக வளர்ந்தவளுக்கு கவிதாவின் தாயன்பு உயிர்பபை அளித்தது..

"கருணா என்ன செய்கிறான்னு பார்த்திட்டு வாம்மா.."

நாசுக்காக சசிரேகா கருணாகரனைத் தேடிச் செல்லாததை உணர்த்தினாள் கவிதா.. உதட்டைக் கடித்தபடி மாடிக்குப் போனாள் சசிரேகா.. அறையில் கருணாகரன் இல்லை..

'எங்கே போயிருப்பான்..?'

அவன் எங்கே போயிருந்தாலும் அறையில் அவனில்லை என்பதே அவளுக்கு விடுதலையுணர்வை அளித்தது.. தன் போக்கில்..

"சிட்டுக் குருவிக்கென்ன..

கட்டுப்பாடு..?

தென்றலே..! உனக்கெது

சொந்த வீடு..?"

என்று பாடியபடி உடை மாற்ற ஆரம்பித்தாள்.. பட்டுச் சேலையிலிருந்து மைசூர் கிரேப் சேலைக்கு மாறியவள் சேலையை மடித்தபடி திரும்பிப் பார்த்தாள்.. அங்கே கைகளை முன்னால் மடித்துக் கட்டியபடி நின்றிருந்த கருணாகரனைக் கண்டதும் மடிக்க ஆரம்பத்திருந்த புடவையை நழுவ விட்டாள்..

'இவன் இங்கேதான் இருந்தானா..?'

அவள் பாடிய பாடலை அவன் கேட்டுக் கொண்டிருந்ததில் அவளுக்கு யாதொரு கவலையும் இல்லை.. கூடவே அவள் சேலையையும் மாற்றிக் கொண்டிருந்தாளே..

'பார்த்திருப்பானோ..'

அவளால் நினைக்கக் கூட முடியவில்லை..

"தென்றலுக்கு வேணும்ன்னா சொந்தவீடு இல்லாம இருக்கலாம்.. உனக்கு இருக்கு.. அதை நினைவில் வை.. கட்டுப்பாடில்லாம பறந்துக்கிட்டு இருக்க நீ சிட்டுக் குருவியில்லை.. இந்தக் கருணாகரனோட பெண்டாட்டி.." அவன் அழுத்தமாக பேசினான்..

'பாட்டுப் பாடினாக் கூடத் தப்பா..?' அவளுக்கு சுள்ளென்று கோபம் வந்து விட்டது..

"இதெல்லாம் இன்னைக்குப் புதுசா வந்த அடையாளங்க.. முந்தாநாள் வரைக்கும் எனக்குன்னு வீடுமில்ல.. கட்டுப் படுத்தவும் யாருமில்ல.." என்று படபடத்தாள்..

"நேத்துக் கதை நேத்தோடு.."

அவன் நிதானமாக அவளருகில் வந்தான்.. சசிரேகா பதட்டத்துடன் பின்னால் நகர்ந்தாள்.. அவன் நெருங்கியதில் அவள் சுவரில் சாய்ந்து நின்றுவிட அவளது தோள்களின் பக்கம் இரண்டு கைகளையும் ஊன்றி அவளை சிறை பிடித்தவன் அவளது விழிகளுக்குள் ஊடுறுவிப் பார்த்தான்.. அதில் தெரிந்த மிரட்சியில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன..

"நீ பேரழகின்னு உன்னைக் கட்டிக்கனும்னு நினைக்கலை.."

உதட்டை வளைத்து மடித்து அலட்சியமாக அவன் சொல்லிய விதத்தில் அவள் காயப்பட்டாள்..

"நானும் பேரழகின்னு என்னைச் சொல்லிக்கலை.. அங்கேதான் ஏற்காட்டு வீட்டைக் காட்டி ஆசை வார்த்தை சொல்லி என் கழுத்தில தாலியைக் கட்டி சிறை வைச்சிருக்காங்க.." என்றாள்..

"இது சிறையா..?" கண்கள் இடுங்க அவன் கேட்டான்..

"பின்னே இல்லையா..?"

"இந்தச்சிறையிலிருந்து தப்பித்து எங்கே போகனும்னு நினைக்கிற..?"

"சென்னைக்குப் போகனும்னு நினைக்கிறேன்.."

"அங்கேதானே அந்த பிரவீன் இருக்கான்.."

"அங்கேதான் என்னோட வேலையும் எனக்கான அடையாளமும் இருக்கு.."

"ஓ.."

அவன் குனிந்தான்.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பத்தை அவளது முகம் உணர்ந்தது.. அவனது மீசையின் முடிகள் அவளது கன்னத்தில் உரசியதில் அவளுக்குள் மோகத்தீ பற்றிக் கொண்டது..

'வேண்டாம் கடவுளே..!' அவள் மனம் கெஞ்சியது..

'மோகத்தைக் கொன்று விடு.. இல்லாவிட்டால் இந்த மோகத்தீயில் நான் விழுந்து எரிந்து சாம்பலாகி விடுவேன்.. உருத்தெரியாமல் போய் விடுவேன்.. என்னைக் காப்பாற்று..'

மோகத்தின் கனல் தாங்காமல் அவள் மறுகினாள்.. உருகினாள்.. அவனிடம் தோற்றுப் போய் விடுவோமோ என்று அஞ்சினாள்..

அதை உணர்ந்தவனைப் போல அவளது முகத்தோடு முகம் பதித்தவன்.. தொய்ந்து நின்றவளின் காதருகே ரகசியக் குரலில்..

"நீ பேரழகிதாண்டி.." என்றான்..

சசிரேகா எங்கோ போய் கொண்டிருந்தாள்.. ஆழ்ந்த மயக்க நிலையில் அமிழ்ந்து கொண்டிருந்தாள்.. அவன் பேசுவது கிணற்றுக்குள் இருந்து பேசுவதைப் போல அவளது காதினில் விழுந்தது..

"உனக்காக எதையும் செய்யலாம்.. உன் கழுத்தில் தாலியைக் கட்ட எந்த ஆசை வார்த்தையை வேண்டும்ன்னாலும் சொல்லலாம்.. அதைத்தான் நான் செய்தேன்.. இதில எந்த வில்லத்தனமும் இருக்கிறதா எனக்குத் தோணல.."

சசிரேகாவின் புத்தியில் அவன் சொன்னது உறைத்ததும் அவள் மோகத்திலிருந்து விடுபட்டவளாக அவனைத் தள்ளினாள்.. இலகுவாக அவளது தள்ளுதலை புறக்கணித்து அவள்மீது சரிந்தவனிடமிருந்து விடுபட முயன்றாள்..

அவளது போராட்டத்திற்கு அவசியமில்லாமல் அவனே அவளை விடுவித்து விலகி நின்றான்.. அவள் முகத்தில் படிந்த ஏமாற்றத்தின் சாயலை அவன் இனம் கண்டு கொள்வானோ என்ற அச்சத்துடன் அவள் முகம் திருப்ப.. அவன் மெதுவாக கேட்டான்..

"நான் பேரழகன் இல்லைதாண்டி.. ஆனா.. அந்த பிரவின் என்னை விடப் பேரழகனா..?"

'இவன் இதை விடவே மாட்டானா..?'

அவள் அவனையே வெறித்தாள்.. அவன் மீதான மோகத்தின் மென்னியைப் பிடித்துக் கொன்று

புதைத்து விட வேண்டும் போல ஆவேசம் அவளுக்குள் உண்டானது..

"ஆமாம்.." என்றாள்..

அவன் முகத்தில் ரௌத்ரம் தோன்றியது.. அது அவளுக்கு உவப்பாக இருந்தது.. அவன் அவள்மீது மறுபடியும் சரிந்தான்.. இந்தச் சரிதல் மோகத்தினால் வந்ததில்லை என்பது சசிரேகாவுக்குப் புரிந்தது..

அதுகோபத்தினால் வந்தது.. அவன் மீதான மோகத்தின் மென்னியைப் பிடிக்க அவள் நினைத்தால்.. அவனோ அவளின் மென்னியைப் பிடித்துக் கொல்ல ஆசை கொண்டிருந்தான்.. அவள் கழுத்தில் பதித்த அவன் விரல்களை விலக்க முனையாமல் அசையாமல் அவன் கைகளுக்குள் கழுத்தைக் கொடுத்தபடி அவள் நின்றிருந்தாள்..

கருணாகரனின் விரல்கள் சசிரேகாவின் கழுத்தில் ஆழப் புதைய ஆரம்பித்தன.. சசிரேகாவின் மூச்சுத் திணறினாலும் அவள் பிடிவாதமாக அப்படியே நின்றாள்..

"ச்சை.."

கருணாகரன் கரை கடந்த ரௌத்ரத்துடன் அவளைப் பிடித்துத் தள்ளினான்.. கட்டிலில் விழுந்தாள் சசி..

"அப்படி என்கிட்ட இல்லாத எந்தப் பேரழகுடி அவன்கிட்ட இருக்குது..?"

அவன் கேட்டுக் கொண்டிருந்தபோதே அறைக் கதவு தட்டப்பட்டது.. அவளை முறைத்தபடி கதவைத் திறந்தான்.. கதவுக்கு வெளியே நின்றிருந்த வத்சலா கட்டிலில் சுருண்டு கிடந்த சசிரேகாவைக் கண்டதும்..

"பூஜை வேளைக் கரடியாய் வந்துட்டேனா ஆபிசர்..?" என்றபடி திரும்பிப் போகப் போனாள்..

"இருடி.." அவசரமாக கட்டிலை விட்டுக் குதித்து வத்சலாவின் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள் சசிரேகா..

'தப்பிக்கப் பார்க்கிறா..' கருணாகரன் அவளை உறுத்துப் பார்த்தான்..

அவள் அவன் பக்கம் திரும்வேயில்லை.. வத்சலாவிடம் தாழ்ந்த குரலில் எதையோ கேட்டுக் கொண்டிருந்தாள்..

"உன் ஹஸ்பெண்ட்கிட்டக் கேட்டியாடி.." என்று வத்சலா கேட்க..

"எதைக் கேட்கச் சொல்கிறிங்க..?" என்று புருவங்களை உயர்த்தினான் கருணாகரன்..

"அது வந்து ஆபிசர்.. உங்க வொய்ப் ஆபிசில் போட்டது போட்டபடி விட்டுட்டு வந்துட்டா.. எங்க லேடிஸ் ஹாஸ்டலிலும் அதே கதைதான்.."

"அதுக்கு..?"

"நாளைக்கு நான் கிளம்பறப்ப என்கூட இவளும் வரேன்னு சொல்றா ஆபிசர்.. இவ சொல்றதிலயும் நியாயம் இருக்கில்ல.."

"என்ன நியாயத்தைக் கண்டுட்டிங்க..?"

"வேலைக்கு லீவ் கொடுக்கனும்.. இவளோட அங்குசாமி பெரியப்பா அழைப்பு விடுத்ததும் ஜஸ்ட் ஒன் வீக் லீவைப் போட்டுட்டு ஒரு பெட்டியில நாலைஞ்சு

செட் டிரெஸ்களை அள்ளிப் போட்டுக்கிட்டு கிளம்பி வந்துட்டா.. புராப்பரா எதையும் செய்யலை.."

"அதுக்கு அவசியமில்லை.."

"உங்களுக்குத் தெரியாது ஆபிசர்.."

"எனக்குத் தெரிந்த வரைக்கும் போதும்ங்க.. இவ இனிமே வேலைக்குத் திரும்பப் போறதில்லை.. ரெஸிக்னேசன் லெட்டரை போஸ்டில் அனுப்பிக்கட்டும்.. அப்புறம் லேடிஸ் ஹாஸ்டலில இவளுக்கு மேரேஜ் ஆகிருச்சுங்கிற விவரத்தை நீங்களே சொல்லிருங்க.. பணம் தேவைப்பட்டா உங்க அக்கவுண்டில கிரெடிட் பண்றேன்.."

"அதெல்லாம் தேவைப்படாது ஆபிசர்.. இவளோட அட்வான்ஸ் பணமிருக்கே.. அவங்கதான் மீதிப் பணத்தை இவளுக்கு செட்டில் பண்ணனும்.."

"வேறென்ன..?"

"இவளோட டிரெஸ்ஸஸ், திங்க்ஸ்ன்னு இருக்குதே.. அதையெல்லாம் இவ எடுத்துக்கிட்டு வர வேணாமா..? எனக்குக்கூட இவ நாளைக்கு சென்னைக்கு வந்துட்டு வர்றதுதான் பெட்டர்ன்னு தோணுது.."

"எனக்குத் தோணலை.. இவளோட டிரஸ்களை பெட்டியில் அடுக்கி உங்க பொறுப்பில் வைச்சிருங்க.. திங்ஸை நீங்க யூஸ் பண்ணிக்கங்க.. நான் பிஸினெஸ் விசயமா சென்னைக்கு வர்றப்ப உங்ககிட்ட இருக்கிற பெட்டியை வாங்கிட்டு வந்து கொடுக்கறேன்.. மத்தபடி இவளுக்குத்

தேவையான டிரஸ்ஸை நான் வாங்கி குமிச்சு வைச்சிருக்கேன்.. அதை உடுத்திக்கிட்டாப் போதும்.."

"ஆனாலும் ஆபிசர்.. நீங்க இவளை இப்படி அடை காக்கக் கூடாது.. ரெண்டு நாளைக்கு சென்னைப்பக்கம் அனுப்பி வைச்சா குறைஞ்சா போயிருவீங்க..?"

"குறைஞ்சுதான் போயிருவேன்.."

கருணாகரன் முறைத்த முறைப்பில் அவன் வத்சலாவை ஏதாவது சொல்லி விடப் போகிறான் என்று பயந்து போனாள் சசிரேகா..

"வாடி.. கீழே போகலாம்.." என்று வத்சலாவை கைபிடியாய் பிடித்து இழுத்துக் கொண்டு கீழே விரைந்து விட்டாள்..

வத்சலா எதையும் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளவில்லை.. மாறாக கருணாகரன் சசிரேகாவைச் சுற்றிச்சுற்றி வருகிறான் என்று தோழியை கேலி செய்து சிரித்தாள்.. கள்ளமில்லா அவளின் சிரிப்பில் சசிரேகாவின் மனம் வலித்தது.. வத்சலா இப்படியே நினைத்துக் கொண்டிருக்கட்டும் என்று அவள் வேண்டிக் கொண்டாள்..

'இவளுக்கு உண்மை தெரியக் கூடாது.. அதை இவ தாங்கிக்கவே மாட்டா..'

"வத்சலா.. சாப்பிட வாம்மா.."

இரவு உணவுக்கு அழைக்க வந்த கவிதா வத்சலாவின் அறையில் சசிரேகாவும் இருப்பதைப் பார்த்து விட்டு..

"நீ இங்கே என்னம்மா பண்ற..?" என்றாள்..

"இல்லைண்ணி.. சும்மா பேசிக்கிட்டு இருந்தேன்.." சசிரேகா தடுமாறினாள்..

"என்னங்க இது ஓவரா இருக்கு..?" வத்சலாவுக்கு கடுப்பாகி விட்டது..

"நேத்துக் காலையில இருந்துதான் இவ உங்க வீட்டு மருமகள்.. அதுக்கு முன்னாடியிருந்தே என்னோட பிரண்டு..

என்னவோ இவ எனக்கு யாரோ மாதிரி அண்ட விடாம விரட்டறிங்க.."

"அதுக்கில்லைம்மா.. கல்யாணம் ஆன பின்னால ஒரு பொண்ணு புருசன் பக்கத்திலதான் இருக்கனும்.. சிநேகிதி கூடவே இருந்தா ஊர், உலகம் வித்தியாசமா பேசும்.."

நாசுக்காய் கவிதா சொல்ல வந்ததை சொல்லி விட்டாள்.. அதற்காக கருணாகரனைத் தேடிப் போக வேண்டுமா என்று சசிரேகாவின் மனம் முரண்டியது.. அவளுக்கு அந்த சிரமத்தைக் கொடுக்காமல் கருணாகரன் கீழே இறங்கி வந்து விட்டான்..

"இதோ ஆபிசர் வந்தாச்சு.. இனியாவது சசி என் பக்கத்தில இருக்கலாமில்ல..? என்ன ஆபிசர் சார்.. நீங்களே இதுக்கு ஒரு நியாயத்தைச் சொல்லுங்க.." வத்சலா கருணாகரனை கூப்பிட அவன் அருகே வந்தான்..

அவனுடைய கூர்மையான பார்வை சசிரேகாவைத் துளைப்பதைப் போல பார்த்ததில் அவள் நடுங்கிப் போனாள்..

"என்ன நியாயத்தைச் சொல்லனும்..?"

"என்னோட பிரண்ட் என் பக்கத்திலதான் இருக்கனும்னு நான் சொல்றேன்.. இல்லே.. அவளோட ஹஸ்பெண்ட் பக்கத்திலதான் இருக்கனும்னு உங்க

அக்கா சொல்கிறாங்க.. இது சரியா ஆபிசர்..?"

"சரிதான்.."

அவன் நிதானமாக சொன்னான்.. இதைத்தான் சொல்வான் என்பதை அனுமானித்து வைத்திருந்த சசிரேகா..

"வாடி சாப்பிடப் போகலாம்.." என்று தோழியை இழுத்துக் கொண்டு போய் விட்டாள்..

இரவு உணவின் போது சசிரேகா தலையை நிமிரவில்லை.. அவளைத் துளைத்தெடுக்கும் கருணாகரனின் பார்வையைச் சந்திக்க அவளுக்கு பயமாக இருந்தது..

சாப்பிட்டு முடிந்ததும் வத்சலாவுடன் தோட்டத்துப் பக்கமாக நழுவி விட்டாள்.. அந்தக் கதை, இந்தக் கதை, ஆபிஸ் கதை என்று அவள் தேடித்தேடி கதை பேசியதில் வத்சலாவும் ஈர்க்கப்பட்டு கதை பேசுவதில் ஆழ்ந்து விட்டாள்..

"அப்படித்தான் அன்னைக்கு ஒருநாள் இந்த ஜார்ஜ் பிரவின்கிட்ட வசமா மாட்டிக்கிட்டான்.."

கதை பேசும் உற்சாகத்தில் வத்சலா எதையோ சொல்ல ஆரம்பிக்க சசிக்கு 'திக்' கென்று இருந்தது..

'இப்பப் போயி அந்த பிரவின் பேரை எதுக்கு இவ இழுக்கிறா..'

"உஷ்ஷ்.."

அவள் அடக்கிக் கொண்டிருந்த போதே..

"அப்புறம் என்னாச்சு..?" என்று கேட்டபடி அங்கே வந்து நின்றான் கருணாகரன்..

"எவ்வளவோ ஆச்சு ஆபிசர்.. பிரவின் மாட்டு மாட்டுன்னு ஜார்ஜை மாட்டிட்டான்ல்ல.." உற்சாகமாக சொன்னாள் வத்சலா..

"கிழிஞ்சது போ.." வாய்விட்டு முணுமுணுத்தபடி தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டாள் சசிரேகா..

"ஓ..! அந்த பிரவின் பெரிய சூரன்தான்.." கருணாகரன் ஏகத்துக்கும் பாராட்டியபோது சசிரேகாவின் அடிவயிறு ஜில்லிட்டது..

'இவன் எதையோ சொல்லப் போறான்..'

அவள் பயந்ததைப் போலதான் நடந்தது.. கருணாகரனின் தீர்க்கமான பார்வை சசிரேகாவின் வெளுத்த முகத்தையே வட்டமிட்டது..

"ஆக.. இத்தனை நேரமும் சிநேகிதக ரெண்டு பேரும் அந்த பிரவீனோட சூரத்தனத்தைப் பற்றித்தான் பேசிக்கிட்டு இருந்தீங்களா..?"

'நினைச்சேன்..' சசிரேகா துயரப் பெருமூச்சு விட்டாள்..

இல்லையென்று சொன்னாலும் அவன் நம்பப் போவதில்லை என்பதில் அவள் மனம் கனத்தது..

அவனே ஏமாற்றுக்காரன்.. அவளுடைய அம்மா அப்பா வாழ்ந்த வீட்டை அங்குசாமிக்கு தாரை வார்த்துக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டவன்.. அப்படிப்பட்டவன் அவளைப் பற்றி எதையோ நினைத்துப் பேசிவிட்டுப் போகட்டுமே என்று எளிதாக விட்டுவிட அவளால் முடியவில்லையே.. அது ஏன்..?

"வத்சலா.. குளிருகிற மாதிரி இருக்கு.. வீட்டுக்குள் போகலாமா..?" சசி ஒரு எட்டு வைத்தாள்..

"இவ்வளவு நேரமும் வராத குளிர் இப்ப வந்திருச்சா..?" கருணாகரனின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது..

"அடடா.. இதுக்குக் கூடக் குற்றம் சொல்வீங்களா..? அப்ப அவளுக்குக் குளிரலை.. இப்பக் குளிருது.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க..?" வத்சலா சசிரேகாவின் சார்பாக வாதிட்டாள்..

"ஒன்னும் சொல்லலை.. உங்களைப் பக்கத்தில வைச்சுக்கிட்டு உங்க பிரண்டை ஒரு வார்த்தை சொல்லிர முடியுமா..?"

அவன் இலகுவாக பேசிச் சிரித்ததும் வத்சலா கோபத்தை மறந்து அவனுடன் சகஜமாக பேச ஆரம்பித்து விட்டாள்.

'பாவம்.. வெளுத்ததெல்லாம் பால்ன்னு நினைக்கிற கல்மிசமில்லாத மனசு..' சசிரேகா தோழியை நினைத்து நெகிழ்ந்தாள்..

ஒருவழியாக அரட்டைக் கச்சேரியை முடித்துக் கொண்ட வத்சலா.. "ஹாவ்.." என்று விரல் கொடுக்கி கொட்டாவி விட்டு விட்டு..

"சசி.. வாடி தூங்கப் போகலாம்.." என்றாள்..

'ஆஹா..' தப்பித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்து விட்டதே என்று சசிரேகாவும் உற்சாகமாக தலையை ஆட்டியபடி வத்சலாவுடன் கிளம்பிவிட்டாள்..

கருணாகரனை கடக்கப் போன போது அவனது இரும்புக்கை சசிரேகாவின் மணிக்கட்டை அழுந்தப் பிடித்து நிறுத்தியது..

'சரியான இரும்புக்கை மாயாவி..!' வலியில் துடித்துப் போனாள் சசிரேகா..

"கெடுத்தீங்களே காரியத்தை.. இவளை உங்க கூட தூங்க வான்னு கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டா என் கதி என்னாகிறது..?"

வரிசைப்பற்கள் தெரிய அவன் சிரித்ததில் சசிரேகாவே மயங்கி விட்டாள்.. வத்சலாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்..

"இப்படிச் சிரிச்சு மயக்கினீங்கன்னா என் பிரண்டு என்ன ஆவான்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தீங்களா ஆபிசர்.. குட் நைட் சசி.. பார்த்துப் பத்திரமா இருந்துக்க.. உன் ஹஸ்பெண்ட் ரொம்பப் பொல்லாதவரா இருக்கார்.." என்று சிரித்தபடி போய் விட்டாள்..

'இவன் பொல்லாதவன்தான்..'

வத்சலாவின் பின்னால் போக முடியாமல் அவள் சென்ற திசையைப் பார்த்தபடி ஏக்கத்துடன் நின்று விட்டாள் சசிரேகா..

அவளது மணிக்கட்டு வலித்தது.. இரும்புப் பிடியை விடுவிக்காமல் அவளை அருகே இழுத்த கருணாகரன்..

"உன் பிரண்டு என்னைப் பொல்லாதவன்னு சொல்லிட்டுப் போறாளே.. நான் பொல்லாதவன்னா நல்லவன் யாருடி..? அந்த பிரவினா..?" என்று கேட்டான்..

"இதை என்கிட்ட ஏன் கேக்கறிங்க..? சொன்னவ அவ.. அவகிட்டயே கேட்டிருக்க வேண்டியதுதானே..?" கையை விடுவிக்க முயன்றபடி சொன்னாள் சசிரேகா..

"சொன்னது அவதான்.. கேட்டுக்கிட்டவ நீதானே..? அதனால கேள்வியையும் உன்கிட்டத்தான் கேட்கனும்.." தனது உடும்புப் பிடியைத் தளர்த்தாமல் பேசினான் கருணாகரன்..

'இது வேலைக்கு ஆகாது...'

சசிரேகா மௌனித்து விட்டாள்.. பேசினால் பேச்சுத்தான் வளரும்.. மௌனமாக இருந்து விட்டால் அவனால் என்ன செய்ய முடியும்..? தனக்குத்தானே வாய் வலிக்கப் பேசிக் கொள்ளட்டும என்ற வன்மத்துடன் உதட்டைக் கடித்தபடி வைராக்கியமாக வாயை மூடிக் கொண்டாள் சசிரேகா..

"ஏய்ய்.."

கருணாகரன் அவளை அதட்டிக் கொண்டிருந்த போது..

"கருணா.." என்ற கவிதாவின் குரல் கேட்டது..

"அக்கா வருது.. ஒழுங்கா முகத்தை வைச்சுக்க.."

சசிரேகாவை எச்சரித்து விட்டு இயல்பாக முகத்தை வைத்துக் கொண்டு..

"என்னக்கா..?" என்றான் கருணகரன்..

"தூங்கப் போங்கப்பா.. நேரமாச்சில்ல.." கவிதா அறிவுறுத்தினாள்..

கருணாகரன் மாடிக்குப் போக.. சசிரேகா மௌனமாக அவனைத் தொடர்ந்தாள்.. அவன் கதவைத் தாழிட்டு விட்டு வந்த போது கட்டிலின் ஒரு ஓரமாக சுருண்டு படுத்து உறங்கிப் போயிருந்தாள்..

'நாளைக்கு இருக்குடி உனக்கு..'

அவன் கருவி விட்டு கண்களை மூடித் தூங்க முயன்றான்.. திடிரென்று அவன்மீது மலர்க்கரம் ஒன்று வந்து விழுந்தது.. திரும்பிப் பார்த்தான்.. தூக்கக் கலக்கத்தில் புரண்டு படுத்திருந்த சசிரேகா அவன்மீது கையைப் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்..

19

ஒரு பூமாலை போல அவன் கழுத்தைச் சுற்றி வளைத்திருந்தது சசிரேகாவின் கரம்.. வெகு அருகாமையில் தெரிந்த அவள் முகத்தில் இருந்த கள்ளமற்ற தன்மை அவனை வசீகரித்தது.. அவளது தோள் மீது தவழ்ந்திருந்த முல்லைச் சரத்தின் நறுமணம் அவன் மனதை மயக்கிக் கிறங்கடித்தது.. சீரான அவளுடைய மூச்சுக்காற்று அவனுடைய மீசையில் பட்டு மோகக் கனலை மூட்டி விட யத்தனித்தது..

குவிந்திருந்த அவளது குவளை இதழ்களின் மீது விரல் கொண்டு கோடிழுத்தான் கருணாகரன்.. தூக்கம் கலையாமல் அவள் மெல்லச் சிணுங்கி விட்டு இன்னும் கொஞ்சம் புரண்டு அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு தூங்க ஆரம்பித்தாள்..

மோக வெள்ளத்தில் மூச்சுத் திணற ஆரம்பித் திருந்தது கருணாகரனுக்கு.. புதுக் கணவனுக்கு இதைவிட சோதனை இருக்க முடியுமா..? தள்ளி வைக்க நினைக்கும் மனைவி தள்ளிப் படுக்காமல் ஒட்டிக் கொண்டு படுத்தால் கணவனாகப்பட்டவனின் கதி என்னாவது..?

அவன்மீது படிந்திருந்த அவளது தேகத்தின் ஸ்பரிசத்தில் அவனது வைராக்கியம் ஆட்டம் கண்டு கொண்டிருந்தது.. ஆனானப்பட்ட விசுவாமித்திரரே ஆட்டம்கண்டு போன மோக களத்தில் கருணாகரனால் பந்து வீச முடியவில்லை.. அவளுக்கும் அவனுக்குமான போராட்டத்தை மறந்து அவளுக்கும் அவனுக்குமான உறவுமுறையைப் பற்றி அவன் நினைக்க ஆரம்பித்தான்..

புரண்டு படுத்ததினால் சேலைக்குள் இருந்த திருமாங்கல்யக்கயிறு வெளிவந்து அவன் முகத்தின் மீது படிந்து இவள் உன் மனைவி என்று அறிவுறுத்திக் கொண்டிருந்தது.. அவனோடு ஒட்டியிருந்த அவளின் உடலின் அசைவுகளில் அவனது மோகம் கிளர்ந்து எழுந்தது..

கருணாகரனின் கால் உயர்ந்து அவளது காலின் மீது படிந்தும் அவள் உறக்கம் கலையாமல் அவனுடன் ஒன்றிக் கொண்டிருந்தாள்.. அவனுடைய முகத்தோடு உரசிக் கொண்டிருந்த அவள் முகத்தை தாகத்துடன் பார்த்த கருணாகரன் அவளது பிறை நெற்றியில் சிறு முத்தம் பதித்தான்.. அவளிடம் அசைவில்லை..

மெதுவாக அவனது இதழ்கள் கீழே இறங்கி அவள் கன்னத்தில் முத்தமிட்டன.. தூக்கக் கலக்கத்தில் அவள் முகத்தை அசைத்தாள்.. ஆழப் பதிந்திருந்த இதழ்களின் ஸ்பரிசத்தை உணராமல் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்து போனாள்..

தடைகற்ற பயணத்தை மேற் கொண்ட அவனுடைய இதழ்கள் அவளுடைய இதழ்களின் மீது புதைந்த போது அவள் கண் விழித்து விட்டாள்.. விழித்தவளின் பார்வையில் தாபத்துடன் அவள் முகத்தோடு முகம் பதித்திருந்த கருணாகரனின் முகம் தெரிந்ததில் அரண்டு போனாள்.. அவளது இதழ்களின் மீது இதழ்களைப் பதித்திருந்த அவனுடைய ஆழமான முத்தத்தை அப்போதுதான் அவள் உணர்ந்தாள்..

விலக முடியாத சூழல்.. அவனது வலிமையான கரங்கள் அவளைத் தழுவியிருந்தன.. தேக்கு மரம் போன்ற கால்கள் அவளது கால்களின் மீது விழுந்து சிறை பிடித்திருந்தன.. விட்டுவிடச் சொல்ல வேண்டுமானால் வாய் அசைய வேண்டும்.. அதையும் அவன் சிறை பிடித்திருந்ததில் அவளால் அசையக் கூட முடியவில்லை..

சசிரேகாவின் அனைத்துப் புலன்களும் விழித்துக் கொண்டதில் அவள் உடலில் ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டன.. அவன் தொட்ட இடங்கள் தீயாக தகிக்க.. அந்தத் தீயின் ஜ்வாலையை அணைக்க அவன் அணைத்திருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள்..

முன்னேறிய அவன் கைகளை விலக்கப் பிரயத்தனப் பட்டாள்.. வெகு எளிதாக அதை அவன் முறியடித்தான்.. அவன் மீதான அவளுடைய மோகமே அவளுக்கு

மிகப் பெரும் எதிரியாக இருந்த போது எப்படி அவள் வெல்வாள்..?

'இது உள்ளிருந்து கொல்லும் வியாதி..'

மோகத்தை அவள் திட்டினாள்.. அந்த நோயைத் தீர்க்கும் மருந்து அவளைத் தழுவிக் கொண்டிருக்கிறது.. அவள் மௌனமாக இருந்தால் நோயிலிருந்து அவளுக்கு மீட்சி கிடைத்து விடும்..

அவளால் மௌனமாக இருக்க முடியுமா..?

தாபத்துடன் இயங்கிக் கொண்டிருந்த கருணாகரனை தனது முழு பலத்தையும் ஒன்று திரட்டி விலக்கித் தள்ளினாள் சசிரேகா.. அவன் லேசாக விலகியதில் கிடைத்த சிறு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கட்டிலின் மறுபக்கமாக இறங்கி பால்கனிக்கு ஓடிக் கதவை வெளிப்புறமாக தாழிட்டு விட்டாள்..

"சட்.."

தீர்க்க முடியாத தாகத்துடன் பால்கனி கதவை ஓங்கி உதைத்தான் கருணாகரன்.. அதில் சசிரேகாவின் உடல் நடுங்கியது.. வெளியில் இருந்த மழை காலக் குளிர் காற்றில் நிற்க முடியாமல் கதவின் மீது சரிந்து அவள் ஒடுங்கி உட்கார்ந்தாள்.. குளிராக இருந்தது.. சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.. அதையும் மீறி ஊசிக் குளிர் உடலைத் தாக்கியது.. வெடவெடத்தபடி சுருண்டு படுத்தாள்.. ஊதல் காற்றின் வேகம்..

"ஸ்ஸ்ஸ்ஸ்.." என்று காதில் பாய்ந்ததில் அவளுக்குப் பயமாக இருந்தது..

தோட்டத்தில் ஆடிய மரங்களின் நிழலாட்ட அசைவுகள் அவள் நெஞ்சத்தில் திகிலை உற்பத்தி செய்தன..

சின்ன அசைவுக்கும் சசிரேகா நடுங்கினாள்.. சிறிய சப்தமும் அவளுக்குள் பயத்தை ஊற்றிக் கொண்டிருந்தது.

"காக்க காக்க..

கனகவேல் காக்க..

நோக்க நோக்க

நொடியினில் நோக்க.."

வாய் தன்னிச்சையாய் கந்தர் சஷ்டி கவசத்தை உச்சரித்தன.. காற்று வழுத்தது.. மரங்கள் பேயாட்டம் ஆடியதில்..

"அம்மா.." என்று சசிரேகா அரற்றினாள்..

அங்குசாமியின் வீட்டிலாவது அவளுக்கு பாதுகாப்பாக ஒன்றிக் கொள்ள சமையலறை இருந்தது... இந்த வீட்டில் அதுகூட அவளுக்குக் கிடைக்கவில்லையே.

கந்தர் சஷ்டி கவசத்தை சொல்லி முடித்து துர்கா தேவியை ஆராதிக்க ஆரம்பித்தாள்..

"துர்க்கையம்மனை துதித்தால் போதும்..

துன்பம் பறந்தோடும்..

சகலமும் காக்கும் தாயே..! அவளை

தரிசனம் செய்தால் போதும்..

சகல நன்மையும் கூடும்..

சகல தீமையும் ஓடும்.."

கண்களை இறுக மூடிப் பாராயணம் செய்து கொண்டிருந்தவளின் காதில் இடிச் சப்தம் கேட்டது.. மிச்சம் மீதியிருந்த தைரியமும் காற்றாக பறக்க.. அவள் அழுக ஆரம்பித்து விட்டாள்..

"ஜெய ஜெய தேவி..!

ஜெய ஜெய தேவி..!

துர்கா தேவி சரணம்..!

ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி

துர்கா தேவி சரணம்..!"

வேண்டியபடி சுருண்டிருந்தவளின் முகத்தில் மழைச் சாரல் ஓங்கி அடித்ததில் கண் திறந்தாள்.. இடியும், மின்னலுமாக மழை ஊற்ற ஆரம்பித்திருந்தது.. என்னதான் சசிரேகா கதவோடு கதவாக ஒண்டியிருந்தாலும் மழையின் வேகம் அவளை தொப்பல் தொப்பலாக நனைத்து விட்டது..

மழையின் குளிருடன் மழையில் நனைந்த உடைகளின் ஈரம் தரும் குளிரும் சேர்ந்து கொண்டதில் சசி கோழிக்குஞ்சைப் போல வெடவெடத்தாள்.. ஒன்றிக் கொள்ள உலர்ந்த சிறகுகளைப் போன்ற மழைநீர் அண்டாத இடம் கிடைக்காதா என்று ஏங்கினாள்..

"டமால்.."

எங்கோ தொலை தூரத்தின் இடி முழக்கத்தில்...

"அர்ஜூனா காப்பாத்து.." என்று கதறியபடி காதுகளைப் பொத்திக் கொண்டாள்..

காக்க வந்த கரங்களாக அவளது தோளில் கதகதப்பான கரம் விழுந்தது.. ரோமங்கள் அடர்ந்த வலிமையான அந்தக் கரத்தின் ஸ்பரிசத்தில் அரண்டு போய் அலற முனைந்தவளின் வாயைப் பொத்தினான் கருணாகரன்..

'இவன் எப்படி வந்தான்..?'

மிரண்டு விழித்தாள் சசிரேகா.. சொட்டச் சொட்ட நனைந்திருந்தவன் பால்கனியின் பக்கவாட்டிலிருந்த தண்ணீர் வடிய கட்டப்பட்டிருந்த சிமிண்ட் குழாயைப் பிடித்து பால்கனிக்குள் குதித்திருந்தான்..

'இந்தக் குழாய் எங்கேயிருந்து வருது..?'

அண்ணாந்து பார்த்தாள் சசி.. மொட்டை மாடியிலிருந்து வந்த அந்த சிமிண்ட் குழாய் மழை நீரில் குளித்துக் கொண்டிருந்தது..

'இதைப் பிடிச்சா இறங்கி வந்தான்..?'

அவள் நடுங்கிப் போனாள்.. வழுக்கு மரம் போல மழை நீரில் பளபளத்த சிமிண்ட் குழாய் அவளை அச்சுறுத்தியது.. அதைப் பிடித்து இறங்க அசாத்திய தைரியமும், நெஞ்சுரமும் இருக்க வேண்டும்..

'இவனுக்குத்தான் அது ரெண்டும் இருக்குதே..'

எரிச்சல் போல சிலாகித்தது அவள் மனது..

'சிமிண்ட் குழாயைப் பற்றி இறங்கியவனின் கை ஒரு நொடி வழுக்கியிருந்தாலும் என்ன ஆகியிருக்கும்..?' அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.. நெஞ்சம் வெடித்து விடும் போல இருந்தது..

ஒரு கையால் அவள் வாயைப் பொத்தியிருந்தவன் மறு கையால் பால்கனியின் கதவைத் திறந்து அவளை உள்ளே தள்ளி உள்ளே வந்து கதவைத் தாழ் போட்டான்..

'அப்பாடி..'

ஆசுவாசப் பெருமூச்சு வந்தாலும்.. அவன் பக்கத்தில் வந்து விடுவானே என்ற பதட்டத்தில் வேறு எங்கே ஓடி ஒளிந்து கொள்வது என்று அவசரமாக அவள் துழாவினாள்..

"எரிச்சலைக் கிளப்பாம பாத்ரூமுக்குள்ள போய் துணியை மாத்திக்கிட்டு வா.. உன் சேலையில இருக்கிற ஈரத்தில இந்த ரூமை கழுவிக்கிட்டு நிக்காத.. ஏற்கனெவே சில்லுன்னு இருக்கு.."

அவன் விரட்டினான்..

'உன்னாலதானேடா எனக்கு இந்த அவதி..?'

அவள் பொறுமிக் கொண்டே பாத்ரூமுக்குப் போய் ஈர உடைகளைக் களைந்து டவலால் உடம்பு துவட்டி உலர்ந்த நைட்டிக்கு மாறி.. ஈரத்தலையை டவலால் சுற்றிக் கொண்டு பாத்ரூமை விட்டு வெளியே வந்தாள்..

உடைமாற்றும் அறையின் ஓரமாக அவன் உடுத்தியிருந்த ஈர உடைகளை களைந்து போட்டு விட்டு கைலிக்கு மாறிக் கொண்டிருந்தான்..

அவன் அங்கே இருப்பான் என்று தெரியாமல் வெளியே வந்து விட்டவள் அவனது வெற்று மார்பில் மயங்கி நின்று விட்டாள்..

சிவந்து விட்ட அவள் முகத்தை உறுத்துப் பார்த்தபடி உடலைத் துவட்டிக் கொண்டவனின் ஈரம் படிந்த தலைமுடி அவன் நெற்றியில் படிந்திருந்தது.. அதில் வெளிப்பட்ட கவர்ச்சியில் அவள் மனம் பலவீனமானது.. அலை பாய்ந்த அவள் பார்வையை உற்றுப் பார்த்தவனின் முகம் இறுகிப் போயிருந்தது..

உடை மாற்றும் அறையின் மூலையில் கிடந்த அவனுடைய ஈரத் துணிகளை குனிந்து எடுக்கப் போனாள் சசி..

"வேண்டாம்.." வறண்ட குரலில் அவன் தடுத்து விட்டான்..

"பாத்ரூமில் அலசிப் போட்டு விடுகிறேனே.." அவள் தடுமாறினாள்..

"தேவையில்லை.. நானே அலசிப் போட்டுக்குவேன்.. என் கவலை உனக்கு வேண்டாம்.. போய் தூங்கு.." கடின முகத்துடன் அவன் சொன்னான்..

அவனுடைய புறக்கணிப்பு அவளுக்கு வருத்தத்தைத் தந்தது.. சற்று முன் அவள் அனுபவித்த தனிமையான மழைச்சூழல் நினைவுக்கு வந்ததில் உடல் நடுங்கினாள்..

இப்போது பாதுகாப்பாக அறைக்குள் நின்று கொண்டிருப்பது யாரால்..? அவனால்தானே..

நன்றியுடன் அவனைப் பார்த்தவளை எவரோ போல

'யார் நீ..?' என்று பார்த்து வைத்தான் அவன்..

"என்னால்தானே நீங்க நனைஞ்சிட்டீங்க.." அவள் மேலும் சொல்ல முனைந்த போது தலையை ஆட்டி மறுத்துவிட்டான் கருணாகரன்..

"நான் உனக்காக நனையலை.. எனக்காக நனைஞ்சேன்.."

"இல்லையில்லை.. மொட்டைமாடியில இருந்து குழாயைப் பிடிச்சு வழுக்கிற மழைத் தண்ணியில ரிஸ்க் எடுத்து

இறங்கி பால்கனியில குதிச்சீங்களே.. நீங்க மட்டும் வரலைன்னா..?"

அவள் உடல் நடுங்கியது.. அவன் அவளை இமைக்காமல் பார்த்த பார்வையில் தெரிந்த குற்றச்சாட்டில் அவள் ஊமையானாள்..

"அப்படி உயிரைப் பணயம் வைத்து கொட்டற மழையில வழுக்கு மரத்தைப் பிடிச்சு இறங்கறதைப் போல சிமிண்டு குழாயைப் பிடிச்சு இறங்க வைச்சது யாரு..?"

"நான்.. நான்.. நான்.."

வார்த்தைகள் வராமல் அவள் திக்கித் திணறினாள்.. என்னவென்று விளக்கம் சொல்லுவாள்..? அறைக்குள் இருந்தால் உன்னிடம் நான் தோற்று விடுவேனென்று பயமாக இருந்தது.. என்னைக் கொன்று தின்ற மோகத்தீயின் ஜ்வாலையிலிருந்து தப்பிக்க என்னால் முடியவில்லை.. மோகத்தைக் கொன்று விடும் சக்தியும் எனக்கில்லை.. உன்னிடம் என்னைத் தோற்று விடுவேன் என்ற பயத்தில் பால்கனிக்கு ஓடிவிட்டேன் என்று சொல்ல முடியாமல் தத்தளித்தாள்..

"மழையடிக்குது.. இடி இடிக்குதுன்னா பால்கனிக் கதவைத் திறந்துகிட்டு உள்ளே வர்றதுக்கு என்ன..? அதை விட்டுட்டு கந்தர்சஷ்டி கவசத்தில ஆரம்பிச்சு துர்கா தேவி பாமாலை வரைக்கும் பால்கனியில உக்காந்து பாடிக்கிட்டு இருக்கியே.. மழைச்சத்தத்தில உன் பாட்டு யார் காதிலயும் விழுகல.. மழை குறைஞ்சு யாராவது உன் பாட்டுச் சத்தத்தைக் கேட்டுட்டு பால்கனிப் பக்கம் அண்ணாந்து பாத்திருந்தா என்ன ஆகியிருக்கும்..?"

கருணாகரனின் கடுமையில் அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு தலை கவிழ்ந்தாள்.. சில மணித் துளிகளுக்கு முன்னால் தாபத்துடன் அவளைப் பார்த்த கருணாகரனின் முகம், இப்போது கோபத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது.. அவன் முகத்தில் தெரிந்த உக்கிரத்தில் அவள் குற்றஉணர்வு கொண்டாள்.. அவன் முகம் பார்க்க முடியாமல் நிலம் பார்த்தபடி இருந்தாள்..

"ப்ளீஸ் ஆபிசர்.. சசியும் என்கூட சென்னைக்கு வரட்டுமே.."

வத்சலா கெஞ்சினாள்.. கிளம்பும் வரை அந்தப் பேச்சையே எடுக்காமல் வளைய வந்து கொண்டிருந்தவள் காரில் ஏறப் போகும் போது அவளையும் மறந்து..

"சசி..! என்னடி மசமசன்னு நின்னுக்கிட்டு இருக்க..? ஏறு.." என்று சொல்லி விட்டாள்..

"வத்சலா..!"

சசிரேகா கண்கலங்கிய போதுதான் அவளுக்கு திருமணமாகிவிட்டது... அவள் வத்சலாவுடன் சென்னைக்குத் திரும்பப் போவதில்லை.. வத்சலா மட்டும் தான் தனியாகப் போகப் போகிறாள் என்ற உண்மையே வத்சலாவுக்கு உறைத்தது..

"சசி..!"

வத்சலா சசிரேகாவைக் கட்டிக் கொண்டாள்.. தோழிகள் இருவரும் கண்ணீர் விட்டதில் கவிதா நெகிழ்ந்து போனாள்..

"எப்படி வாயடிக்கிற பொண்ணு.. இப்படி அழுதுகிட்டு நிற்குதே.. ஒன்னாப் பழகின சிநேகிதி.. ஒட்டுப்புல் போல ஒட்டிக்கிட்டே அலைஞ்சிட்டு, இப்ப விட்டுப் பிரிஞ்சு போகனும்ங்கிறப்ப மனசு தாங்குமா..?"

முந்தானை சேலையில் அவள் கண்களைத் துடைத்துக் கொண்டபடி சொன்னாள்.. கருணாகரன் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் உணர்வுகள் துடைக்கப்பட்ட கரும்பாறை முகத்துடன் வத்சலாவைப் பார்த்து..

"நட்பைக் கொண்டாடினது போதும்ங்க.. நீங்க அழுகிறதுமில்லாம வீட்டில இருக்கிறவங்களையும் அழுக வைக்கறிங்களே.. எப்படி..? சென்னைக்கு இன்னைக்குப்

போறிங்களா.. இல்லே.. நாளைக்குப் போறிங்களா..?" என்று கேட்டான்..

"அதுசரி.." மூக்கை உறிஞ்சியபடி கைக்குட்டையைத் தேடி எடுத்த வத்சலா.. அதில் முகம் துடைத்தபடி..

"முந்தாநாள் நைட் டிரெயினுக்கு கிளம்பினவளை நேத்துக் காலையிலே காரில அனுப்பி வைக்கிறேன்னு சொல்லி நிறுத்தி வைச்சீங்க.. ஓகேன்னு நேத்துக் கிளம்பினா.. இவ குலதெய்வம் கோவிலுக்கு பொங்கல் வைக்கப் போறேன்.. கூடவாடின்னு சொல்லி நிறுத்தி வைச்சிட்டா.. இன்னைக்கும் கிளம்பலைன்னா அவ்வளவு தான்.. என் வேலை ஆட்டம் கண்டிரும்.." என்று சொன்னாள்..

'வேலை..!' சசிரேகா பெருமூச்சு விட்டாள்..

கருணாகரனின் கூரிய பார்வையில் உதட்டைக் கடித்துக் கொண்டவளுக்கு வத்சலாவுடன் கிளம்ப முடியவில்லையே என்று ஏக்கமாக இருந்தது.. கருணாகரனின் நுண்ணிய பார்வை அவளை அளந்து கொண்டிருப்பதை அவளுடைய உள்ளுணர்வு உணர்த்தியதில் அந்த ஏக்கத்தை வெளிக்காட்டி விடாமல் தன்னைக் கட்டுப்படுத்தியபடி அவள் நின்றிருந்தாள்..

"சசி.. நீயும் வாயேண்டி.."

வத்சலா வற்புறுத்த ஆரம்பித்து விட்டாள்.. கவிதாவுக்கு அவள் மனம் புரிந்ததினால் இதமாக எடுத்துச் சொல்லி அவளைக் கிளப்பி விட முயன்றாள்.. வத்சலா பிடிவாதமாக அடம் பிடித்து கருணாகரனிடம் கெஞ்ச ஆரம்பித்து விட்டாள்..

"ஆபிசர், ஆபிசர், எப்படியும் சசி அவளோட டிரஸ்ஸை எடுத்துக்க சென்னை வரனும்தானே.. அதை இப்பவே வரச் சொல்லுங்க ஆபிசர்.. அவளும் நானுமா கிளம்பி வந்தோம்.. இப்ப அவ இல்லாம நான் மட்டும் கிளம்பிப் போகனும்னா என் மனசுக்கு பாரமா இருக்கு ஆபிசர்.."

"வத்சலா.." சசிரேகா அழுதுவிட.. கவிதா யோசித்தாள்..

"கருணா.."

தாழ்ந்த குரலில் அவள் தம்பியை அழைத்து ஏதோ சொன்னாள்.. அவன் தலையை ஆட்டி மறுத்துப் பேசினான்.. அவள் சமாதானம் செய்வதைப் போல பேசியதில் உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் யோசித்தான்..

"பாவம்டா.. சின்னப் பொண்ணு.."

கவிதாவின் பேச்சுக்குப் பலன் இருந்தது.. மாடிக்குப் போனவன் கையில் பெட்டியுடன் திரும்பி வந்தபோது எங்கேயோ வெளியில் போகப் போகிறான் என்றுதான் சசிரேகா நினைத்தாள்.. காரின் டிக்கியில் அவன் பெட்டியை வைத்து விட்டு டிரைவரை விலகச் சொல்லி விட்டு காரில் ஏறிய போது..

'இவன் எதுக்கு டிரைவர் சீட்டில் உட்காருகிறான்..? ஒருவேளை வத்சலாவை சென்னையில் விட்டுவிட்டு

வர இவனே போகிறானோ..' என்றுதான் அவள் யோசித்தாள்..

அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

'இந்த வத்சலா சும்மாவே இவனைக் கண்டா ஜொள்ளு விடுவா.. சென்னை வரைக்கும் இவகூட தனியா ஜர்ன் பண்ணினா பார்வையிலேயே விழுங்கி விட மாட்டாளா..?'

டென்சன் தாங்காமல் சசிரேகா நகம் கடிக்க ஆரம்பிக்க..

"காருக்குள் ஏறு.." என்று அதட்டினான் கருணாகரன்..

"நானா..?" விழி விரித்தாள் சசிரேகா..

"நீயேதான்.. உன் பிரண்டு சொல்றதிலயும் ஓர் அர்த்தமிருக்கு.. சென்னைக்குப் போயி.. உன் வேலையை ரிசைன் பண்ணிட்டு லேடிஸ் ஹாஸ்டல் ரூமை வெகேட் பண்ணிட்டு உன் பெட்டியை எடுத்துக்கிட்டு வந்துரலாம்.. வா.."

கருணாகரன் சொன்ன மறுநொடியில் காருக்குள் ஏறி விட்டாள் சசிரேகா.. வத்சலாவுடன் அவளும் சென்னைக்குப்

போகப் போகிறாள் என்ற குதூகலத்தில் கவிதாவிடம் சொல்லிக் கொள்ளக் கூட அவள் மறந்து விட்டதில் கருணாகரனின் புருவங்கள் சுருங்கின..

"அக்காகிட்ட சொல்லிக்கனும்ங்கிற வளமை கூட உனக்குத் தெரியாதா..?" கடினமான குரலில் கேட்டான்..

"ஸாரி அண்ணி.." பதறிப் போனவளாக காரை விட்டு இறங்கி விட்டாள் சசிரேகா..

"அடடா.. இதுக்குப் போயி இம்புட்டுப் பதட்டமா..? கருணா.. தாயில்லாப் பொண்ண இப்படியாடா அதட்டுவ..?"

கவிதா தம்பியை அதட்டினாள்.. 'தாயில்லாப் பெண்' என்ற அந்த வார்த்தையில் கருணாகரனின் முகத்தில் வந்த இளக்கத்தில்..

'இவனுக்கு இரக்கப்படக் கூடத் தெரியுமா..?' என்று அதிசயப் பட்டுப் போனாள் சசிரேகா..

"போயிட்டு வரேன் அண்ணி.."

"தங்கமா போயிட்டு வாம்மா.."

சசிரேகாவின் கன்னம் தொட்டு செல்லம் கொஞ்சி வழி அனுப்பி வைத்தாள் கவிதா.. காரில் ஏறப் போகும் போது திரும்பிப் பார்த்த சசிரேகா..

"தேங்கஸ் அண்ணி.." என்று கண்கள் பனிக்கச் சொன்னாள்..

"உன் பிரண்டு உன் கூடவே கிளம்பி வர்றா.. இனிமே கண்ணைக் கசக்காம கிளம்பிப் போவதான..?" கவிதா விளையாட்டாக வத்சலாவின் காதைப் பிடித்துத் திருகினாள்..

"வலிக்குதுங்க.."

பொய்யாக அலறிய வத்சலா.. அந்த வீட்டிலிருந்த அனைவருக்கும் டாட்டா சொல்லி விட்டு காரில் ஏறி உட்கார்ந்தாள்..

கார் கிளம்பிப் பறந்தது.. பின் சீட்டில் வாகாக சாய்ந்து கொண்ட வத்சலா..

"தேங்க்ஸ் ஆபிசர்.." என்றாள்..

"எதுக்கு.." திரும்பாமல் கேட்டான் கருணாகரன்..

"என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து என் பிரண்டைக் கூப்பிட்டுக்கிட்டு வர்றதுக்கு.."

"உங்க வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவளோடு நான் கிளம்பி வரல.. என் அக்கா வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்துத்தான் கிளம்பி வந்தேன்.."

கருணாகரன் பட்டென்று பதில் சொன்னதில் வத்சலா முகம் வாடிப் போவாளோ என்று பயந்தாள் சசிரேகா.. அப்படியேதும் நடக்கவில்லை.. கருணாகரன் சொன்னதை ஒரு ஜோக்காக எடுத்துக் கொண்டு..

"ஹா..ஹா.. அப்படியா ஆபிசர்..?" என்று சிரித்து மகிழ்ந்தாள் வத்சலா..

'இவ இருக்காளே..' சசிரேகா தலையை ஆட்டி வத்சலாவின் சுபாவத்தை ரசித்தபடி நிம்மதியானாள்..

'இருந்தாலும் இவன் இப்படி முகத்தில அடிக்கிறதைப் போல பேசியிருக்க வேணாம்..'

காரை ஓட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்தாள்.. கரும் பாறையில் செதுக்கியதைப் போன்ற தோற்றம்.. புருவச் சுளிப்பு.. அந்தப் புருவச் சுளிப்பை விரல்களால்

நீவி விட வேண்டும் போன்ற துடிப்பை அடக்கிக் கொண்டாள்..

முதல்நாளின் மழையிரவில் அவன் அழுத்தம் திருத்தமாக சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்து துயரத்தைத் தந்தன..

"பயத்தில நடுங்கிச் செத்தாலும் சாவ.. ஆனா பால்கனிக் கதவைத் திறந்து ரூமுக்குள்ள வரமாட்ட.. அப்படித்தான..? ஏண்டி..? உள்ளே இருக்கிறவன் உன் புருசன்தானே..

உன்னைத் தொட்டவனும் உன் புருசன்தானே.. புருசன்கிட்டயிருந்து தப்பிக்க நினைக்கிற பெண்டாட்டி இந்த உலகத்திலேயே நீ ஒருத்திதாண்டி.. ஏன்..? உன் புருசனா அந்த பிரவின் இல்லைன்னுதானே பால்கனிக்கு ஓடின..?"

சசிரேகாவின் காதுகளில் அமிலத்தை ஊற்றினான் கருணாகரன்.. அவள் காதுகளைப் பொத்திக் கொண்டாள்.. வெளியே கேட்ட இடிச்சப்தம் இப்போது அவளை அச்சுறுத்தவில்லை..

"இந்த அளவுக்கு நீ போன பின்னால இனி நானா உன்னைத் தொட மாட்டேன்.. உன் மேல எனக்கிருந்த மோகத்தீ அணைஞ்சு போயிருச்சு.. உன் மனசு எவனோ ஒரு பிரவீனை நினைச்சுக்கிட்டு இருக்கிறப்ப.. உன்கூட வாழ நினைக்கிறதே பாவம்.. என்ன பண்ணித் தொலைக்கிறது.. உன் கழுத்தில தாலியைக் கட்டித் தொலைச்சிட்டேன்.. புருசன் பெண்டாட்டி வேசத்தைக் கட்டித்தான் ஆகனும்.. மத்தவங்க முன்னாடி காட்டற சொந்தத்த இந்தத் தனிரூமில காட்ட மாட்டேன்.. உன் பக்கம் கூடத் திரும்ப மாட்டேன்.. உன் கற்பைக் காப்பாத்திக்க பால்கனிக்கு ஓடாம படுத்துத் தூங்கு.."

சொன்னவனும் தூங்கவில்லை.. கேட்டுக் கொண்டவளும் தூங்கவில்லை.. இரவு முழுவதும் தூங்காமல் ஒருவருக்கொருவர் முதுகு காட்டியபடி பொழுதை ஓட்டினார்கள்.. விடிந்தவுடன் முதல் ஆளாக கருணாகரன் வெளியே போய்விட்டான்.. அவன் இல்லாத தனிமையில் அழுது தீர்த்தாள் சசிரேகா..

இப்போது கற்சிலை போல அசைவில்லாமல் அவன் காரோட்டிக் கொண்டிருக்கிறானே.. இரண்டு தினங்களுக்கு முன்னால் அவளை கொட்டும் மழையில் நின்றுவிட்ட ரயிலில் இருந்து அன்னவாசலுக்கு கூப்பிட்டுக் கொண்டு வந்தானே.. அப்போது இப்படியா இருந்தான்..?

நொடிக்கொருமுறை அவளைப் பார்த்த கள்ளப் பார்வைகளின் நினைவில் அவனைப் பார்த்தாள் சசிரேகா..

சுளித்த புருவங்களுடன் அவன் ரோட்டைப் பார்த்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. அவனைப் பார்வையிட அவனுக்குத் தோதாக இருந்த முன்பக்க கண்ணாடியில் முகம் பார்த்தாள்.. அவன் முகம் தெரிந்தது.. ஆனால்.. அவள் முகத்தை அவன் பார்க்கவில்லை..

"என்னடி.. பதில் சொல்ல மாட்டேங்கிற..?"

வத்சலா தோளைத் தட்டியதில் திருதிருத்த சசிரேகா..

"என்னடி கேட்ட..?" என்று கேட்டாள்..

"சரியாப் போச்சு போ.. இவ்வளவு நேரமும் நான் பேசியதை நீ கவனிக்கவே இல்லையா..? எனக்கு நானே பேசிக்கிட்டு இருந்தேனா..? என்னைப் பைத்தியம் போல புலம்ப வைச்சிட்டியில்ல.. உன்னை.."

"நான் 'ஊம்' கொட்டறேனான்னு கவனிச்சுட்டு நீ பேசியிருக்கனும்.. கவனிக்காதது உன் தப்பு.."

"அந்தர் பல்டி அடிச்சிருவியே.. யாரு நீ..?"

"அதையும் நீயே சொல்லிரு.."

"கருணாகரனோட பெண்டாட்டியாச்சே.. கெட்டிக் காரியத்தான இருப்ப.. நான்தான் கேணை போல.. பினாத்திக்கிட்டு இருக்கேன்.."

"தெரிஞ்சாச் சரி.."

வத்சலாவுடனான உரையாடல் சசிரேகாவை துயரத்திலிருந்து மீட்டது.. தோழியுடன் அரட்டை யடித்தபடி பயணம் செய்ததில் கருணாகரனின் பாரா முகத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடிந்தது..

வழியில் அவன் மதிய உணவுக்காக காரை நிறுத்தினான்.. மாலையில் காபி டிபன் சாப்பிட காரை நிறுத்தினான்.. எதிலும் குறைவைக்கவில்லை.. செய்கின்ற அத்தனை செயல்களையும் சசிரேகாவின் முகத்தைப் பார்க்காமல் செய்து முடித்தான்.. இரவு நெருங்கும் போது சென்னையில்

கார் நுழைந்தது.. லேடிஸ் ஹாஸ்டல் வாசலில் கார் நின்ற போது சசிரேகா இறங்கப் போனாள்..

"நாம நாளைக்கு வந்து ரூமை வெகேட் பண்ணிக்கலாமே.." கருணாகரன் அவள் முகம் பார்க்காமல் சொன்னான்..

"வத்சலாவுடன் ரூம் வரைக்கும் போய் விட்டுவிட்டு வந்து விடுகிறேனே.."

சசிரேகா தயக்கத்துடன் இறைஞ்சுவதைப் போல கேட்டாள்.. அவன் போசாமல் இருந்ததில்..

"மௌனம் சம்மதத்துக்கு அறிகுறிடி சசி.." என்று அவளை இழுத்துக் கொண்டு இறங்கினாள் வத்சலா..

'இவன் பெர்மிசன் கொடுக்கலையே..' அடித்துக் கொண்டது சசிரேகாவின் மனம்..

"பை.. ஆபிசர்.."

வத்சலா கருணாகரனுக்கு கையாட்டிவிட்டு சசியின் கையோடு கை கோர்த்தபடி நடந்தாள்.. வரவேற்பறையைக் கடந்து திரும்பியபோது சசிரேகா திரும்பிப் பார்த்தாள்.. காரிலிருந்து இறங்கி அதில் சாய்ந்து நின்று கொண்டிருந்தவனின் சிவந்த கண்கள் அவளை அச்சுருத்தின..

'திரும்பி விடலாமா..?'

அவள் நினைத்ததை செயல்படுத்துவதற்குள் ஹாஸ்டலில் இருந்த தோழிகள் சூழ்ந்து கொண்டார்கள்..

"மணமகளே.. மருமகளே வா..வா.." என்று ஆரம்பித்து அவர்கள் பண்ணிய கலாட்டாவில் சசிரேகாவால் உடனடியாக திரும்ப முடியவில்லை..

ஒருவழியாக வத்சலாவிடமும், தோழிகளிடமும் விடைபெற்றுக் கொண்டு அவள் காருக்கு ஓடி வந்த போது..

"நான் உன் டிரைவரில்லை.." என்று அவன் வெடித்தான்..

# 21

சசிரேகாவின் முகம் கன்றிப் போனது.. அது அவள் தங்கியிருந்த லேடிஸ் ஹாஸ்டல்.. வாசலில் நின்று கொண்டிருந்த வாட்ச்மேன் முதல்.. தோட்டத்தில் நடந்தபடி அவர்களின் ஜோடிப் பொருத்தத்தை சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்த பெண்கள் வரை எல்லோருக்கும் அவளைத் தெரியும்.. அவளது கணவனைப் பார்க்கும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பவர்களின் காதில் அவனது கேள்வி விழுந்து வைத்தால் அவளைப் பற்றி என்ன நினைப்பார்கள்..? அவளுக்கென்று ஒரு மரியாதை இல்லையா..? அவன் தாலி கட்டி விட்டான் என்பதற்காக அவளது அனைத்து மரியாதைகளையும் அவள் குழி தோண்டிப் புதைத்து விட வேண்டுமா..?

இன்னும் அவன் பேசியிருப்பான்.. அதற்குள்..

"என்னடி சசி..? ஆபிசர் சார் என்ன சொல்லுகிறார்..?" என்று கேட்டபடி வத்சலா வந்து விட்டாள்..

"நத்திங்.." சசி சிரிக்க முயன்றாள்..

"வரலைன்னா விட்டிரு.. எதுக்காக சிரிப்பைப் பிடித்து இம்சை பண்ற..?" இலகுவாகப் பேசிய வத்சலாவின் மீது சசிக்குப் பொறாமையாக இருந்தது..

'இவளைப் போல ஏன் என்னால் கேசுவலா இருக்க முடியலை..?'

அதற்கெல்லாம் கொடுப்பினை இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா.. வத்சலாவுக்கு பெற்றோர் இருக்கிறார்கள்.. கூடப் பிறந்த அண்ணன் இருக்கிறான்.. அவளை உயிருக்குயிராய் காதலிக்கும் காதலன் இருக்கிறான்..

சசிரேகாவுக்கென்று யார் இருக்கிறார்கள்..?

சின்னஞ்சிறு வயதில் பெற்றோர்களை இழந்து உறவினரின் வீட்டில் அகதியாக.. ஒண்டியிருந்தவள் அவள்..

நல்ல துணிமணிகள் கிடைக்காமல்.. வீட்டில் மீந்து போகும் பழைய சோற்றையுண்டு வளர்ந்தவள் அவள்.. அவளை அவர்கள் படிக்க அனுமதித்ததே பெரிய விசயம்.. அவளுடைய திருமணம் யாருடன் எப்போது நடக்கப் போகிறது என்பதைக் கூட அறிந்து கொள்ளும் உரிமையில்லாத அடிமை அவள்..

அவளுக்குப் போய் வத்சலாவைப் போல இலகுவான மனம் எப்படி இருக்கும்..?

மலைபோன்ற பாரங்களைச் சுமக்கும் பாரமான மனதுதானே இருக்கும்..?

"ஸாரி ஆபிசர்..! உங்க காதல் பெண்டாட்டியை ஒரு செகண்ட்கூட பிரிஞ்சிருக்காம அடை காத்தீங்க.. நான் இவ்வளவு நேரம் பிரிச்சு வைச்சிட்டேன்.. சசி அப்பவே வர்றேன்னுதான் சொன்னா.. ஆனா பாருங்க.. இவளோட கல்யாண விசயம் தெரிஞ்சு ஹாஸ்டல் வார்டனும் மத்த பிரண்ட்ஸீம் இவளைப் பார்க்க வந்துட்டாங்க.. அத்தனை பேரோட கேள்விகளுக்கும் பதிலைச் சொல்லிட்டு கிளம்பி வர்றதுக்கு லேட்டாகிருச்சு.."

சசியின் விழிகள் கேட்டுக் கொண்டாயா என்று கருணாகரனைப் பார்த்துக் கேட்டன.. அவன் தோள்களைக் குலுக்கி விட்டு எதுவும் நடக்காததைப் போல காரில் ஏறினான்..

"வரேன் வத்சலா.." சசியின் தொண்டை அடைத்தது.

"நாளைக்கு பார்ப்போம் சசி.. உன்னோட டிரஸ்ஸை யெல்லாம் பெட்டியில அடுக்கி ரெடியா வைச்சிடறேன்.." வத்சலா சமாதானம் சொன்னாள்..

"நாளைக்கும் வரனுமா..? ஏன்..? இப்பவே பெட்டியைத் தூக்கிட்டு வர வேண்டியதுதானே.." கருணாகரன் எரிந்து விழுந்தான்..

"அது சட்டு புட்டுன்னு முடிகிற வேலையில்லை ஆபிசர்.. குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும்.. ஹாஸ்டல் ரூமை வெகேட் பண்ணறதுக்கு வார்டன்கிட்டச்

சொல்லனும்.. அங்கேயும் ஃபார்மாலிட்டிஸ் இருக்கு.. அவ்வளவு நேரமும் உங்களை வெயிட் பண்ண வைக்க முடியுமா..?"

வத்சலாவின் கேள்வியில் எரிச்சல் அதிகமான கருணாகரன் காரைக் கிளப்பினான்..

"ஏறிக்கடி.. இல்லேன்னா விட்டுட்டுப் போயிடப் போறாரு.." வத்சலா கேலியாக சொன்னாள்..

'நீ கேலியா சொன்னாலும் அதுதான் உண்மை வத்சலா..' கனத்த மனதுடன் காரில் ஏறினாள் சசிரேகா..

கார் பறந்தது.. ஒரு ஸ்டார் ஹோட்டலின் வளாகத்துக்குள் நுழைந்தது.. ஏற்கனெவே போனில் ரூமைபுக் பண்ணியிருந்ததால் வரவேற்பறையில் விசயத்தை சொல்லி சாவியை வாங்கிக் கொண்டு நடந்தான் கருணாகரன்.. ஏறக்குறைய அவன் பின்னால் ஓடினாள் சசிரேகா..

ஆடம்பரமான அறையில் பெட்டியைத் தூக்கிப் போட்டுவிட்டு அவன் குளியலறைக்குள் புகுந்து விட்டான்.. அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்த சசிரேகாவுக்கு அலுப்பாக இருந்தது.. வெந்நீரில் குளித்தால் தேவலையென்று நினைத்துக் கொண்டாள்..

கருணாகரன் வந்ததும் இவள் நைட்டியுடன் குளிக்கப் போய் விட்டாள்.. வெந்நீர் குளியளில் அலுப்புக் குறைவதைப் போல இருந்தது.. ரோஜா வண்ண நைட்டியுடன் முடியைப் பிரித்துப் போட்டபடி குளியலறையை விட்டு வெளியே வந்தாள்..

அவர்களுக்கான இரவு உணவை போனில் சொல்லிக் கொண்டிருந்த கருணாகரனின் பார்வை அவள் மேல் படிந்தது.. அவளை ஊன்றிப் பார்த்தவனின் பார்வையில் அவள் முகம் சிவந்தாள்.. அதை மறைக்க முகத்தை டவலால் துடைத்தபடி கண்ணாடியின் முன்னால் போய் நின்று விட்டாள்..

தோகை போல விரிந்திருந்த கூந்தலைத் தளரப் பின்னி.. நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டை ஒற்றி அவள் திரும்பிய போது அவன் கால்மேல் கால் போட்டு சோபாவில் தோரணையாக சாய்ந்து அவளையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்..

'எதுக்காக இப்படிப் பார்க்கிறான்..'

அவளுக்கு லஜ்ஜையாக இருந்தது.. அவனுக்கு முதுகு காட்டி உட்கார்ந்தவள் டீப்பாயில் கிடந்த மாத, வார இதழ்களில் ஒன்றை எடுத்துப் பிரித்துப் படிப்பதைப் போல பாவனை செய்ய ஆரம்பித்தாள்..

'இன்னும் அவன் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கானா..?' அவள் மனம் குறுகுறுத்தது..

அதை அறிய வேண்டுமானால் அவனைப் பார்க்க வேண்டும்.. அவள் அவனைப் பார்ப்பதை அவன் பார்த்து தொலைத்து விட்டால் வம்பு வந்து சேரும்..

'எதுக்கு வம்பு..?' அவள் திரும்பவில்லை..

அறைக்கதவு தட்டப்பட்டது.. கருணாகரன் கதவைத் திறந்தான்.. அவன் ஆர்டர் செய்திருந்த உணவு வகைகளை வைத்து விட்டு ஹோட்டலின் பணியாள் சென்று விட்டான்..

"சாப்பிட வான்னு அழைக்கனுமா..?"

அவன் குரலில் அவசரமாக கையிலிருந்த புத்தகத்தை டீப்பாயில் வைத்து விட்டு அவள் திரும்பினாள்..

"எனக்கு ரெண்டு இட்லி போதும்.."

"இது ஸ்டார் ஹோட்டல்.. இடத்துக்குத் தகுந்தபடி தான் சாப்பாடும் இருக்கும்.. இங்கே இருக்கிறதில எது வேணுமோ அதை எடுத்துச் சாப்பிடு.. முட்டாள் மாதிரி பேத்தாதே.."

அவனுக்கு எதிரே இருந்த சோபாவை அவன் சுட்டிக் காட்டியதில் அவள் தயக்கத்துடன் உட்கார்ந்தாள்.. ஊடே இருந்த இன்னொரு டீப்பாயின் மீது உணவு வகைகள்

இருந்த தட்டுக்கள் பரத்தி வைக்கப் பட்டிருந்தன.. எதை எடுத்துக் கொள்வது என்று அவளுக்கு குழப்பமாக இருந்தது.. அவனே அவள் பக்கமாக சில தட்டுக்களை நகர்த்தி விட்டான்..

"இதையெல்லாம் உனக்காக ஆர்டர் பண்ணினேன்.. சாப்பிடு.."

அவளுடைய பதிலுக்கு காத்திருக்காமல் அவன் பக்கமாக இருந்த தட்டுக்களை அவன் காலி பண்ண ஆரம்பத்ததில் சசிரேகா மெதுவாக ஒரு தட்டை கையில் எடுத்தாள்.. சாப்பிட ஆரம்பித்தாள்.. உணவு ருசியாக இருந்தது.. வயிறு பசியாக இருந்தது.. அடுத்த சில நிமிடங்களில் அவளுக்கென்று அவன் கைகாட்டிய தட்டுகள் காலியாகி விட.. அவன் ஜாடையாக அவளைப் பார்த்தான்..

'பாவம்.. பசியோட இருந்திருக்கா..' அவனுக்கு இரக்கமாக இருந்தது..

கடைசியாக காபி கப்பை கையில் எடுத்துக் கொண்டவளிடம்..

"பசிச்சதுன்னா சொல்ல மாட்டியா..?" என்று கடிந்து கொண்டான்..

காபியை உறிஞ்சியபடி அவனை மேல் பார்வை பார்த்தவளின் விழிகளில்..

'இவன் என்ன கேட்டகிரி..?' என்ற குழப்பம் தெரிந்தது..

"என்னைப் புரிஞ்சுக்கிறது சுலபம்தாண்டி.. என்ன.. புரிஞ்சுக்கனும்ங்கிற தேடல் உன்கிட்ட இருக்கணும்.. அதுதான் இல்லையே.." அவன் நிதானமாக சொன்னான்..

"தெரிஞ்சவரை போதும்.." அவள் காபிக் கப்பை வைத்துவிட்டு நிமிர்ந்து அவன் முகத்தை நேருக்கு நேர் பார்த்தாள்..

"ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்க அவளின் சம்மதத்தைக் கேட்கனும்.. அவளும் மனுஷிதான்.. அவளுக்கும் ஓர் மனமிருக்கும்ங்கிற நினைப்

பிருந்திருக்கனும்.. உங்ககிட்ட அது சுத்தமா இல்லையே.. என்னைக் கல்யாணம் பண்ணிக்க என் சம்மதம்

எதுக்குன்னு நீங்க நினைச்சிட்டிங்க.. இவளோட பெரியப்பாவுக்கு இவ அடிமைதானே.. அந்தப் பெரியப்பாவுக்கு சொத்துத்தரேன்னு சொல்லிட்டா இவ கழுத்தைப் பிடிச்சு நம்ம காலடியில தள்ளிருவாருன்னு கணக்குப் போட்டுக் காய் நகர்த்தி ஜெயிச்சுட்டிங்க.. உங்களுக்கு உரிமையில்லாத எனக்கு மட்டும் உரிமையான என்னோட அப்பாஅம்மா வாழ்ந்த வீட்டை என்னிடம் இருந்து பறித்து என் பெயரிப்பாவுக்கு தாரை வார்த்துக் குடுப்பேன்னு வாக்குக் குடுத்திருக்கீங்க.. இத்தனைக்கும் மேலா இன்னொருத்தனைக் காதலிச்சுட்டு.. அந்தக் காதலை தியாகம் பண்ணிட்டு பெரியப்பா கை காட்டற ஆளுக்கு கழுத்தை நீட்டப் போகிறவ.. வழியில காரில் உங்களுடன் காதல் செய்ததா என்னைப் பத்தின உயர்வான அபிப்ராயங்களைச் சொன்னீங்க.. ஆயுசுக்கும் இது போதும்.. இதுக்கும் மேலே உங்களைப் புரிஞ்சுக்கிட்டா நான் என்னாவேன்னு எனக்கே தெரியலை.."

சசிரேகா பேசப்பேச.. அவனது முகம் மாறியது.. புருவங்கள் சுருங்க யோசனையுடன் அவளைப் பார்த்தவனைப் பார்க்காமல் காரமங்களத்தில் படுப்பதைப் போலக் கட்டிலின் ஓரமாக சுருண்டு படுத்தவள் அசதியுடன் தூங்கிப் போனாள்..

மறுநாள் காலையில் அவள் கண் விழித்த போது அறையில் அவன் இல்லை.. கட்டிலின் ஓரமாக ஒரு பேப்பர் இருந்தது.. அது பறந்து விடாமலிருக்க வைக்கப் பட்டிருந்த புத்தகத்தைத் தள்ளி விட்டு பேப்பரை எடுத்தாள் சசிரேகா..

'ஜிம்முக்குப் போகிறேன்.. போனில் ரூம் சர்வீஸைக் கூப்பிட்டு காபியை ஆர்டர் பண்ணிக் குடித்து விடு.. டிபன் சாப்பிட நான் வந்து விடுவேன்..' என்று பேப்பரில் எழுதியிருந்தது..

'என்ன மாதிரியான கணவன் இவன்..?'

புரியாத போதிலும் அவளுக்காக அவன் காட்டிய அக்கறை அவளுக்குப் புதிதாகவும் இதமாகவும் இருந்தது.. அவளுக்காக யோசிக்கவும் ஒருவன் இருக்கிறான் என்ற நினைவே அவளுக்கு சக்தியைக் கொடுத்ததில் அவள் புத்துணர்வாக உணர்ந்தாள்..

அந்தப் புத்துணர்வுடன் போனை எடுத்து ரூம் சர்வீஸை அழைத்து காபி ஆர்டர் பண்ணிவிட்டு குளியலறைக்குள் முகம் கழுவப் போனாள்.. பல் துலக்கி, முகம் கழுவி அவள் வந்தபோது காபியும் வந்திருந்தது. டிவியை உயிர்ப்பித்து அன்றைய செய்திகளைப் பார்த்தபடி அவள் காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தபோது கருணாகரன் வந்து விட்டான்..

"குட் மார்னிங்.. நல்லாத் தூங்கினியா..?"

அவனது இயல்பான விசாரிப்புக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள்..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள்..

அவன் கண்டு கொள்ளாமல் விசிலடித்தபடி குளியலறைக்குள் போகப் போனான்.. அதற்குள் அவன் பார்க்கவில்லையென்ற நினைவில் அவள் கள்ளத்தனமாக அவனைப் பார்த்து வைத்தாள்.. இறுக்கிப் பிடித்த டி சர்ட்டில் உருண்டு திரண்டிருந்த அவனது புஜங்கள் கவர்ச்சியாக தெரிந்ததில் அவள் மனம் சலனப்பட்டது.. போதாக்குறைக்கு தொடை தெரியும் பெர்முடாஸீடன் அவன் அவளை மயக்கி வைத்தான்..

'இப்படியா டிரஸ் பண்ணிக்குவான்..?' அவள் முகம் சிவந்தது..

"ஜிம்முக்கு போக இப்படித்தான் டிரஸ் பண்ணிக்கனும்.."

குளியலறைக்குள் போகப் போனவன் நின்று பதில் சொன்னதில் அவள் அரண்டு போனவளாக காபிக் கப்புக்குள் கவிழ்ந்து கொண்டாள்..

ஓரச் சிரிப்புடன் அவன் குளிக்கப் போய் விட்டான்.. வெளியே வந்தவன் பெர்முடாசும்.. வெற்று மார்புமாக இருந்ததில்..

'இவன் ஒரு முடிவோடதான் இருக்கான்..' என்று உதட்டைக் கடித்தபடி அவளுக்கான மாற்றுடையை எடுக்கப் பெட்டியைத் திறப்பதைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சசிரேகா..

அவளைப் பார்த்தபடி அவன் வெற்றுடம்பைத் துடைத்துவிட்டு நிறுத்தி நிதானமாக உடல் முழுவதும் பவுடரை அபிசேகம் பண்ணிக்கொண்டிருந்ததில் அவளது கைவிரல்கள் நடுங்கின.. ஆண்மை ததும்பும் அவன் மார்பில் ஒன்றியிருந்த தருணங்கள் நினைவுக்கு வந்து அவளை இம்சித்தன.. அவள் மனதில் மோகத்தீ பற்றிக் கொண்டது.. அதைக் கொன்று புதைக்கும் திராணி மெல்ல மெல்ல அவளிடமிருந்து விடைபெற்று விடுமோ என்று அவள் பயந்தாள்..

'நானா உன்னைத் தொட மாட்டேன்..'

அவனது அழுத்தமான குரல் அவள் காதில் ஒலித்தது.. அவளாக அவனைத் தொட்டு விடச் செய்து விடும் முடிவோடு அவன் இருக்கிறானோ என்ற பயத்துடன் அவள் அவசரமாக குளியலறைக்குள் ஓடிவிட்டாள்..

குளித்து முடித்து ஒரு பிரிண்டட் சில்க் சேலையை உடுத்தி வெளி வந்தவளை பேண்ட் சர்ட்டுடன் இருந்தவன் ஏற இறங்க பார்த்து வைத்தான்..

அவனுடைய ஒரு மார்க்கப் பார்வையில் மனம் சலனப் பட்டாலும்..

'அப்பாடி.. முழு டிரஸ்ஸீடன் இருக்கிறான்..' என்று அவள் ஆசுவாசப் பெருமூச்சை விட்டாள்..

காலை டிபனையும் பார்த்துப் பார்த்து ஆர்டர் பண்ணிச் சாப்பிட வைத்தவனின் குறுகுறுவென்ற பார்வையில் ஏதோவொரு செய்தியிருந்தது..

'என்னவா இருக்கும்..?'

யோசித்து யோசித்து தலை குழம்பியதுதான் மிச்சம்.. அவளுக்கு விடை கிடைக்கவில்லை.. அவன் மனதில் என்ன இருக்கிறதென்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது, அவனாகச் சொன்னால்தான் உண்டு என்பதை உணர்ந்து வைத்திருந்தவள்..

'சரியான கல்லுளி மங்கன்..!' என்று அவனை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்..

அவள் வேலை செய்த கம்பெனிக்கு அழைத்துக் கொண்டு போனான்.. அவள் ராஜினாமாக் கடிதத்தை கொடுத்து விட்டு வரும் வரைக்கும் வரவேற்பறையில் காத்திருந்தான்.. அவள் வந்ததும்..

"போகலாமா..?" என்று எழுந்து கொண்டவன்..

"அந்த பிரவின் இங்கேதான் வேலை செய்கிறானா..?" என்று விசாரித்து வைத்தான்..

அவள் எரிச்சலுடன் முறைத்ததும் தோள்களைக் குலுக்கியவன்..

"கேட்கனும்னு தோணிச்சு.. கேட்டேன்.." என்றான்.

"இதைப் போல நான் கேட்கனும்னு நினைக்கிறதை யெல்லாம் கேட்டா நீங்க தாங்க மாட்டிங்க.." அவள் சூடாக பதில் சொன்னாள்..

"ஆஹா..! நீ கேட்காத ஆளுதான்.. பேசா மடந்தைதான்.. கேட்கிறதுக்கு எதையும் மிச்சம் வைத்திருக்கியா என்ன..? வாடி.."

இலகுவாக பேசிவிட்டு காரைக் கிளப்பியவனை முறைத்தவளுக்கு லேசாக சிரிப்பு வந்தது.. காட்டிக் கொள்ளாமல் சாலையைப் பார்ப்பதைப் போல பாவனை செய்தாள்.. லேடிஸ் ஹாஸ்டலுக்குச் சென்று ரூமைக் காலி செய்து விட்டு அவளுடைய பெட்டியை எடுத்துக் கொண்டாள்.. வத்சலா கார் வரைக்கும் வந்து டாட்டா சொல்லி வழியனுப்பி வைத்தாள்..

"இன்னைக்கோடு உன் சென்னை வாழ்க்கைக்கு குட்பை சொல்லிட்ட.. இதை மனசில வைச்சுக்க.."

கண்டிப்புடன் அவன் சொன்னபோது அவள் கண்கலங்க பேசாமல் இருந்தாள்..

22

வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த தோட்டத்தில் வட்ட வடிவ மேஜைகளும் அதைச் சுற்றி நாற்காலிகளும் இடைவெளி விட்டுப் போடப் பட்டிருந்தன.. அவற்றில் உட்கார்ந்திருந்த இளஞ்ஜோடிகள் சுற்றுப் புறத்தை மறந்தவர்களாக.. ஒருவர் முகத்தை ஒருவர் ஆழமாக பார்த்தபடி ரகசியக் குரலில் அவர்களுக்கு மட்டும் கேட்கும்படி எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்.. இனிமையான அந்தச் சூழல் சசிரேகாவின் மனதில் இதமான ஓர் துயரத்தைத் தோற்றுவித்தது.. எதிரே உட்கார்ந்திருந்த கருணாகரனை அடிப்பார்வையில் பார்த்தாள்..

அவன் அழகாக, கம்பீரமாக, அவள் மனதை ஈர்க்கும் வகையில் இருந்தான்.. மனதை ஈர்த்தும் வைத்தான்..

'இருந்தும் என்ன பயன்..?'

அவள் கண்ணீரை விழுங்கிக் கொண்டாள்.. வேலையை விட்டாயிற்று.. லேடிஸ் ஹாஸ்டலையும் துறந்தாயிற்று.. இனி சென்னையில் அவளுக்கான வேலையுமில்லை.. அவளுக்கென்ற தனித்த அடையாளமு மில்லை.. மறுநாள் காலையில் அவள் காரமங்களத்திற்கு கிளம்பியாக வேண்டும்.. அங்கு அவள் கருணாகரனின் மனைவியாக அடையாளம் காணப்படுவாள்..

கனத்த மனதுடன் ஹோட்டலுக்குள் நுழைந்த போது.. வரவேற்பறையில் இருந்த பெண்..

"நீங்க கார்டனில் நடக்கிற டின்னருக்குப் போகலையா..?" என்று வியப்புடன் கேட்டு வைத்தாள்..

"எனி திங்க் ஸ்பெசல்..?" கருணாகரன் புருவங்களை உயர்த்தினான்..

"யெஸ் சார்.. புதிதா கல்யாணமான ஜோடிகள் மட்டும் கலந்துக்கிற டின்னர் இது.. நீங்க புதிதா கல்யாணமான கப்புள்தானே..?"

"யெஸ்.. யெஸ்.. நாங்களும் கலந்துக்கிறோம்.."

ஒரு பேச்சுக்குக்கூட நாமும் கலந்து கொள்வோமா என்று அவளிடம் கேட்காமல் கருணாகரன் தோட்டத்தை நோக்கி நடக்க.. 'போடா' என்று ரூமுக்குப் போய் விடலாமா என்று யோசித்தாள் சசிரேகா..

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரிசப்சனிஸ்டின் பார்வையில் அப்படிச் செய்ய முடியாமல் கருணாகரனைப் பின் தொடர்ந்தாள்..

ஜோடி, ஜோடியாக அமர்ந்திருந்தவர்களின் மத்தியில் காலியாக இருந்த டேபிளின் முன்னாலிருந்த சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்த கருணாகரன் அவளைப் பார்த்தான்..

அவன் பார்வையில் அவள் உட்கார வேண்டுமாம்..

'என்னை என்னன்னு நினைச்சுக்கிட்டான்.. பார்வையிலேயே ஆர்டர் போடுகிறானாமா..?' அவள் பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்தாள்..

"ஆர்டர் ப்ளீஸ்.."

மெனு கார்டுடன் பேரர் வந்தான்.. இங்கேயும் ஆர்டர்தானா என்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா.. மெனுகார்டை வாங்கிப் புரட்டியவன் ஆர்டர் பண்ணி

விட்டு அவளை அமர்த்தலாகப் பார்த்து புருவங்களை உயர்த்தினான்..

'அடேங்கப்பா..'

அவள் என்னவென்று கேட்காமல் அவனைப் போலவே புருவங்களை உயர்த்தி வைத்ததில் அவன் கண்களில் மின்னல் வந்தது..

தோட்டத்தின் ஓரமாக மேடை இருந்தது.. அங்கே கூடியிருந்த ஜோடிகள் ஆட விரும்பினால் அங்கே வந்து ஆடலாம்.. பாட விரும்புகிறவர்கள் பாடலாம் என்று அறிவுப்பு செய்யப்பட்டது.. பல ஜோடிகள் எழுந்து சென்று விருப்பமான பாடலை ஒலிபரப்ப விட்டு ஆடி விட்டு வந்தார்கள்.. சிலர் பாடினார்கள்.. கருணாகரன் அதை ஆழ்ந்து ரசித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.. சசிரேகாவுக்கும் அந்தச் சூழல் பிடித்துத்தான் இருந்தது.. கனத்த மனதை லேசாக்கும் சக்தி அந்த ஆடலுக்கும் பாடலுக்கும் இப்பதைப் போல அவள் உணர்ந்தாள்..

இதமான குளிர் காற்றும்.. மங்கலான மெழுகு வர்த்தியின் வெளிச்சமும்.. எதிரே அமர்ந்திருந்தவனின் ஆண்மை ததும்பும் ஆகர்ஷிக்கும் தோற்றமும்

அவளை மோகத்தீயின் ஜ்வாலைக்குள் தள்ளி விட்டன.. மேஜையின் அடியில் நீண்டிருந்த அவனுடைய பாதங்கள் இயல்பாக அவள் பாதங்களின் மீது பட்டதில் அவள் தவித்துப் போனாள்.. அவளுக்கான உணவு வகைகளின் தட்டுக்களை அவள் பக்கம் நகர்த்திய அவனது விரல்களின் உராய்வில் அவன் கையில் முகத்தைப் புதைத்து விட வேண்டும் போல அவள் துடித்துப் போனாள்.. அருகிலிருந்த ஜோடிகளின் நெருக்கத்தைப் பார்த்த போது.. இவன் என் கணவன்தானே.. எனக்குப் பிடித்தமானவன் தானே.. ஏன் நான் விலகி நிற்க வேண்டும் என்ற தாபம் அவளை ஆட்கொண்டு அலைக்கழித்தது..

"அருமையான பாட்டு.."

அவன் ரசித்துக் கேட்ட பாட்டை அவள் மிகவும் ரசித்துக் கேட்பாள்.. அவளுக்குப் பிடித்த எல்லாமும் அவனுக்கும் பிடித்திருந்ததில் அவளது மனம் அசைந்தது..

அவளையும் அவனையும் ஏகாந்தமாக உணர வைத்து பிணைய வைத்த அந்த மழை நாளின் இரவுப் பயணத்தை

அவள் நினைத்துக் கொண்டாள்.. அந்த நாளில் நிலை கொள்ள அவள் மனம் விரும்பியது..

"யுவர் டர்ன் ப்ளீஸ்.."

மேடையில் இருந்தவர் கருணாகரனை கை நீட்டி அழைக்க அவன் எழுந்து நின்று சசிரேகாவைப் பார்த்து..

"நாம போய்த்தான் ஆகனும்.. மத்தவங்கள்ளாம் அவங்களுக்கு தெரிந்ததை செய்துட்டு வந்திருக்கிறப்ப நாமளும் ஏதாவது செய்தாகனும்.." என்றான்..

"என்ன செய்கிறதாம்..?"

கண்ணுக்கு முன்னால் கட்டழகனாக நிற்கும் கணவனுடன் கூட முடியாத எரிச்சலுடன் கேட்டாள் சசிரேகா..

"ஏதோ ஒன்னு.. அங்கே போய் யோசிக்கலாம்.. வா.."

அவன் பிடிவாதமாக கை நீட்டியதில் வேறு வழியில்லாமல் அவன் கைமீது தன் கையை வைத்து எழுந்தாள் சசிரேகா..

அவன்தான் அவளை அவனாகத் தொட மாட்டான் என்று சொல்லியிருக்கிறானே..

மேடையில் ஏறியவர்களிடம் மைக் தரப்பட்டது.. அவன் டூயட் பாடலைப் பாடுவான் என்று எதிர்பார்த்திருந்த சசிரேகா.. அவன் அவளையே பார்த்தபடி..

"ஒருமாலை இளவெயில் நேரம்..

அழகான இலையுதிர் காலம்..

சற்றுத் தொலைவினில்..

அவள் முகம் பார்த்தேன்..

அங்கே தொலைந்தவன் நானே.."

என்று பாட ஆரம்பித்தவுடன் ஏமாற்றமடைந்தாள்..

'இவன் பாட்டில கூட என்னைச் சேர்த்துக்க மாட்டானா..?'

ஏக்கப்பட்டுப் போனது அவள் மனது.. பாடி முடித்தவன் அவளிடம் மைக்கை நீட்டியதும் அவனையே பருகுவதைப் போலப் பார்த்தபடி அதை வாங்கிக் கொண்டு பாட ஆரம்பித்தாள்..

"எனக்குப் பிடித்த பாடல்..

அது உனக்கும் பிடிக்குமே..

உன் மனது போகும் வழியை

எந்தன் மனது அறியுமே..

என்னை பிடித்த நிலவு..

அது உன்னைப் பிடிக்குமே..

காதல் நோய்க்கு மருந்து தந்து

நோயைக் கூட்டுமே..

உதிர்வதென்ன பூக்களா..?

மனது வளர்த்த சோலையில்

காதல் பூக்கள் உதிருமா..?"

அங்கிருந்த அத்தனை ஜோடிகளும் ரகசியப் பேச்சுக்களைத் தவிர்த்து நிசப்தமாகி விட்டார்கள்.. அழகான ஒரு குளத்தில் மலர்கள் விழுந்தால் எழும்பும் நீரலைகளின் அசைவுகள் எழுப்பும் அமைதி நிரம்பிய சங்கீதமாக அவளது பாடல் அந்த மேடையில் ஒலித்துக் கொண்டிருந்தது.. அவளையே பார்த்தபடி கைகளைக் கட்டியபடி நின்றிருந்த கருணாகரனின் தோற்றம் அவளைக் காந்தம் போல கவர்ந்து இழுத்தது.. அவன்மீது ஏற்படும் மோகத்தின் ஜ்வாலையின் தகிப்பைத் தாங்க முடியாமல் அவள் தடுமாறினாள்..

"மெல்ல நெருங்கும் போது

நீ தூரப் போகிறாய்..

விட்டு விலகிடும் போது

நீ நெருங்கி வருகிறாய்..

காதலின் திருவிழா

கண்களில் நடக்குதே..

குழந்தையைப் போலவே

இதயமும் தொலையுதே..

வானத்தில் பறக்கிறேன்..

மோகத்தில் மிதக்கிறேன்..

காதலில் நானும் ஓர்

காத்தாடி ஆகிறேன்.."

மோகத்துடன் அவள் பாடப்பாட அவன் கண்களில் மின்னல் கீற்றுக்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.. அவன் மீதான மோகத்தை விழிகளில் உணர்த்தியபடி நின்றிருந்தவளைக் கட்டி அணைத்து ஏனடி பைத்தியமே மருகுகிறாய்..? உன் மோகத்தீயை அணைக்க நானில்லையா..? கணவனின் துணையோடுதானே, காமனை வென்றாக வேண்டும் என்ற பாடலை நீ கேட்டதில்லையா..? என்று கேட்க வேண்டும் போல அவனுக்குள் ஆவேசம் கிளர்ந்தது..

மெதுவான தூறல் விழ ஆரம்பித்தது.. சசிரேகாவின் பாடலில் கட்டுண்டிருந்தவர்கள் எழுந்து கொள்ளாமல் சாரலை ரசித்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.. ஒரு மயிலிறகின் மன வருடலை பாடலில் உணர்த்தியபடி பாடலைத் தொடர்ந்தாள் சசிரேகா..

"வெள்ளிக் கம்பிகளைப் போல

ஒரு தூறல் போடுதோ..

விண்ணும் மண்ணும் வந்துசேர

அது பாலம் போடுதோ..

நீர்துளி தீண்டினால்

நீ தொடும் ஞாபகம்..

நீ தொட்ட இடமெல்லாம்

வீணையின் தேன்ஸ்வரம்..

ஆயிரம் அருவியாய்

அன்பிலே அணைக்கிறாய்..

மேகம் போல் எனக்குள்ளே

மோகம் வளர்த்து கலைக்கிறாய்.."

கருணாகரனைப் பார்த்தபடி பாடிய அவள் கண்களில்தான் எத்தனை மோகம்..! மோகத்தீயின் ஜ்வாலையில் அவள் நடுங்குவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. அருகிலிருந்தும் தொலைவி லிருப்பதைப் போல தொடுவானாய் அவள் நினைக்கும் கணவனை காதலுடன் தழுவ முடியாத அவளது துயரத்தை அந்தப் பாடலில் அவள் பிரதிபலித்தாள்.. அவள் துயரம் தீர்க்க அவளது மோகத்தைத் தீர்க்க வேண்டுமென்ற வேகம் அவனுக்குள் பிறந்தது.. வெல்ல முடியாத மோகத்தீயுடன் போராடும் மனைவியின் மறுகலை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை..

இவ்வுலகில் மோகத்தை வென்றவரென்று எவருமில்லை.. அப்படி மோகத்தை துறக்க வேண்டு மானால் அவர் ஆசா பாசங்களை வென்று துறந்த சித்தராகவோ, புத்தராகவோ இருக்க வேண்டும்..

'அச்சமில்லை.. அச்சமில்லை..

அச்சமென்பதில்லையே..'

என்று பாடிய அஞ்சா நெஞ்சன் பாரதி கூட மோகத்தீயில் வாடிய போது அதை வெல்ல இயலாமல்..

'மோகத்தைக் கொன்று விடு- அல்லால்

என் மூச்சை நிறுத்தி விடு..'

என்றுதான் பாடி வைத்திருக்கிறான்..

உணர்வு பூர்வமானவர்களின் மனதில் எளிதில் பற்றிக் கொள்ளும் தீ.. மோகத்தீ..!

முண்டாசுக் கவிஞனை மட்டும் அது சும்மா விட்டு விடுமா..? பற்றிக் கொண்ட மோகத்தீயில்.. சுற்றி வளைத்த மோகத்தீயில் அவனே மூச்சுத் திணறிப் போனபோது மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா..?

அழகான தேவதையின் எழிலோடு.. மாசு மறுவற்ற சருமத்தின் பொழிவோடு.. களங்கமில்லா மனதை பிரதி பலிக்கும் தேவதை முகத்தோடு மேடையில் நின்று பார்வையில் மயங்கிப் போனவளிடம் அவன் மயங்கிப் போனான்.. அவன் கை நீட்ட.. அவன் விரல்களை அவள் உடனுக்குடனாக பற்றிக் கொண்ட வேகத்தில் அவன் கிளர்ந்தான்.. அவனைத் தொட்ட அவளது விரல்களை இறுக்கிப் பிடித்து பிணைந்தன அவன் விரல்கள்..

சசிரேகாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அவனது வலிமையான கரத்துக்குள் அவளது கரத்தை வைத்து விட்டதை அவள் உணர்ந்தாள்.. அவள் விரல்களை அழுத்திப் பிடித்த அவன் விரல்களின் ஸ்பரிசத்தில் அவள் நடுங்கினாள்..

இருவரும் கை கோர்த்தபடி மேடையை விட்டு இறங்கினார்கள்.. மெல்லிய கைதட்டலுக்கு நன்றி சொல்லும் விதமாக லேசாக தலையை அசைத்தபடி ஹோட்டலை நோக்கி நடந்தார்கள்.. அவளது விரல்களை அழுத்தி நீவிய அவனது செய்கையில் அவளுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தன.. கையை உறுவிக் கொள்ள முயன்றாள்.. முடியவில்லை.. வரவேற்பறையைக் கடந்து லிப்டிற்குள் நுழைந்த பின்பும் அவன் கையை விடாததில்..

"கையை விடுங்க.." என்று பலவீனமாக முணுமுணுத்தாள்..

"கட்டின பெண்டாட்டியை கை விடாதவன்டி இந்த கருணாகரன்.." அவன் பிடி இறுகியது..

ஒரு கையில் இரும்புப் பிடியாக அவளைப் பிடித்தபடி மறுகையில் மீசையை முறுக்கியவனின் கம்பீரத்தில் அவள்

வசீகரிக்கப் பட்டாள்.. எதிர்ப்பை மறந்து அவன் முகத்தை ஆவலுடன் அவள் பார்த்து வைத்ததில் அவன் அவளையே பார்த்து வைத்தான்..

சசிரேகாவின் முகம் சிவந்தது.. லிப்டை விட்டு வெளியேறி நீண்ட காரிடாரில் நடந்து அவர்களின் அறையைத் திறந்து உள்ளே சென்று கதவை மூடித் தாழிட்ட பின்னாலும் அவன் அவள் கையை விடவேயில்லை..

"நான் டிரஸ் சேன்ஜ் பண்ணனும்.."

"பண்ணு.."

"கையை விட்டாத்தானே நான் டிரஸ் மாத்த முடியும்.."

"கை விட முடியாதுன்னு அப்பவே சொல்லிட்டேன்."

"இது அநியாயம்.."

"எனக்கு இதுதாண்டி நியாயம்.."

அவன் அவள் கையைப் பிடித்துச் சுண்டியிழுத்தான்.. அவள் சுழன்று வந்து அவன் மார்பில் மோதி சரிந்தாள்.. மேலே சாய்ந்தவளை இறுக்கிப் பிடித்து, இடுப்பில் கை கொடுத்து, வளைத்துத் தூக்கி கட்டிலை நெருங்கினான்.. அவள் மீதிருந்த கையை விலக்காமல் கட்டிலில் அவளைக் கிடத்தி மேலே சரிந்து.. படர்ந்து.. பரவினான்..

'ஹோ' வென்று எழுந்த ஆசைப் பெருங்கடலின் அலையில் சசிரேகா அடித்துச் செல்லப்பட்டாள்.. பற்றிக் கொண்ட மோகத்தீயின் ஜ்வாலையை அவன் அணைக்க முற்பட்டபோது.. அவள் கொஞ்சம் கொஞ்சமாக தன்னை அவனிடம் இழந்து கொண்டிருந்தாள்..

'இவன் வில்லனில்லை.. ஹீரோ..' அவள் மனம் பலவீனமாக முறைத்தது..

"என்னைத் தொட மாட்டேன்னு சொன்னீங்க.. இதுதான் சொன்ன சொல்லை நீங்க காப்பாத்தற லட்சணமா..?" அவனைச் சாடினாள்..

"உன்னை நானாத் தொட மாட்டேன்னுதான் சொன்னேன்.. நீ தொட்டா உன்னை விட மாட்டேன்டி.."

அதற்கு மேல் அவன் பேசவில்லை.. அவளையும் பேச விடவில்லை..

23

மோகத்தை அவள் கொல்லவில்லை.. அதனுடன் சமரசம் செய்து அதை கருணாகரனின் துணையோடு வென்று விட்டாள்.. அவனுடன் போராடிய அவளது போராட்டத்தை சிறு மழலையின் செய்கை போல சிரிப்புடன் வெகு இலகுவாக அவன் முறியடித்து அவளை ஆண்டு விட்டான்.. இறுக்கமான அவன் அணைப்பும்.. இதழோர முத்தங்களும்.. செவியோரம் அவன் பேசிய ரகசியப் பேச்சுக்களும்.. புரியாத ஓர் உலகத்திற்குள் அவளை அழைத்துச் சென்றன.. அவன் திறந்து விட்ட

பல கதவுகள் உணர்த்திய அனுபவங்களில் அவள் நிராயுதபாணியாகி அவனிடம் சரணடைந்து விட்டாள்..

காலையில் அவள் கண்விழித்த போது.. அவன் அவளை சிறைபிடிப்பதைப் போல இறுக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.. அவள் மீதிருந்த வலிமையான கையையும், காலையும் அகற்ற முடியாமல் அவன் முகம் பார்த்தாள்.. ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.. அவன் கன்னத்தில் அவள் நெற்றியில் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் பொட்டு ஒட்டியிருந்தது..

சசிரேகாவின் முகம் சிவந்தது..

'இப்படியே இவன் ரூம் சர்வீஸைக் கூப்பிட்டு வைச்சான்னா என்ன செய்யறது..?'

வெட்கத்துடன் அவன் கன்னத்திலிருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்தாள்.. அவனது மீசையின் முடி அவள் விரல்களில்

பட்டது.. முதல்நாள் இரவில் அவன் மீசையை முறுக்கியதை நினைத்துப் பார்த்தவளுக்கு சுகமாக இருந்தது..

'இவனா என்னைத் தொடலையாம்..'

தோற்று விட்ட உணர்வு வந்தது.. தோல்வி இனிப்பது எப்படியென்று புரியாமல் அவள் திகைத்தாள்..

அவன் பேசிய பேச்சுக்களுக்கும்.. இழைத்திருக்கும் துரோகத்திற்கும்.. அவனுடைய நிழலைக்கூட அவள் திரும்பிப் பார்த்திருக்கக் கூடாது.. அப்படித்தானே அவள் வைராக்கியம் வைத்திருந்தாள்..? இப்போது என்ன நடந்திருக்கிறது..? மிக எளிதாக அவனிடம் தோற்றுப் போயிருக்கிறாள்..

"ரொம்பவும் யோசிக்காதே.."

திடிரென்று கேட்ட அவன் குரலில் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

'தூங்கிக்கிட்டு இருந்தானே..'

அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.. அவன் கண்களை மூடி உறங்குவதைப் போல்தான் படுத்திருந்தான்.. ஆனால் இதழ்களில் குறுஞ்சிரிப்பிருந்தது..

"கள்ளச் சிரிப்பு..!" வாய் விட்டுச் சொல்லி விட்டாள்.

"ஆமாண்டி.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" அவன் கண் விழித்தான்.. முரட்டுத்தனமாய் அவளை இழுத்துக் கொண்டான்.. விடுவிக்க வெகு நேரம் எடுத்துக் கொண்டான்.. விடுபட்டவுடன் வெட்கிச் சிவந்த முகத்துடன் அவள் குளியலறைக்குள் தஞ்சம் புகுந்து விட்டாள்.. வெந்நீர் குழாயைத் திறந்து விட்டு ஷவரின்

கீழ் நின்ற பின்னாலும் சற்று முன் நடந்த நிகழ்விலேயே அவள் மனம் நிலைத்திருந்தது.. இரவின் நிகழ்வுகள் நினைவலைகள்..! சற்றுமுன் நடந்தது..!

அவளின் முகச் சிகப்பு அடங்க வெகு நேரமானது.. குளித்து உடைமாற்றி அவள் வெளியே வந்தபோது அவன் காலைக்

காபியுடன் செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.. அவளைக் கண்டதும் புருவங்களை உயர்த்தி..

"காபி குடிக்கலை..?" என்று எதுவுமே நடக்காததைப் போலக் கேட்டு வைத்தான்..

அவளால் அவன் முகம் பார்த்துப் பேச முடியவில்லை.. பெட்டியை அடுக்குபவள் போல சிவந்த முகத்தைத் திருப்பிக் கொண்டு..

"வேண்டாம்.." என்று முணுமுணுத்தாள்..

அவளை ஆழ்ந்து பார்த்துவிட்டு அவன் குளிக்கப் போய் விட்டான்..

'அப்பாடி..' என்றிருந்தது அவளுக்கு..

அறைக்குள் அவனில்லை என்ற விடுதலை யுணர்வுடன் ஈரமுடியை விரித்து விட்டபடி அறையை ஒட்டியிருந்த பால்கனியில் போய் நின்றாள்.. அங்கிருந்து பார்த்த போது சென்னை மாநகரம் அழகாக தெரிந்தது.. தோட்டத்திற்கு அடுத்திருந்த நீச்சல் குளத்தின் பளிங்குக் கல் பதிக்கப்பட்ட கரையில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலிகளிலும்.. நிழல் குடைகளின் கீழிருந்த நாற்காலிகளிலும் கையில் குளிர்பானத்தோடு சிலர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. அது போன்ற அறையில் தங்கியிருப்பதை அவளால் நம்ப முடிய வில்லை.. கருணாகரன் கட்டிய தாலி அவள் கழுத்தில் ஏறியவுடன் அவளது வாழ்க்கையே மாறிவிட்டதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

'பணக்காரர்களின் உலகமே தனிதான்..'

யோசித்துக் கொண்டிருந்தவளின் வயிற்றில் சூடான கரங்கள் படிந்தன.. அவளது முதுப்புறத்தில் கருணா கரனின் உடல் ஒட்டிக் கொள்ள அவனோடு அவளை இறுக்கிக் கொண்டு அவள் கூந்தலில் அவன் முகம் புதைத்து முகர்ந்தான்..

"ம்ஹா..! செண்பகப் பாண்டியனுக்கு ஏண்டி சந்தேகம் வராது..?"

"என்ன சந்தேகம்..?" அவள் விடுபட முயன்றபடி கேட்டாள்..

"பெண்டாட்டியின் கூந்தலில் வரும் வாசனையைப் பற்றிய சந்தேகம்..! இப்படி மணத்தா எந்தப் புருசன்தான் பெண்டாட்டிகிட்ட மயங்க மாட்டான்..? ம்ம்ம்..? மயில் தோகையைப் போல உன் கூந்தல் இருக்குடி.. மயக்கற மோகினிடி நீ.."

அவன் தாகத்துடன் அவளது பின்னங்கழுத்தில் சூடான முத்தத்தைக் கொடுத்தான்.. கிளர்ந்த உணர்வுகளுடன் அவள் போராடினாள்..

"நானாத் தொடலை.. நீதான் தொட்டேங்கிற தெல்லாம் வெறும் கதையா..?" என்று சினந்தாள்..

"ஹை..! தப்பிக்க எப்படியெல்லாம் யோசிக்கிறடி என் பெண்டாட்டி..! முதல் 'டச்' என்னோடதா இருக்காதுன்னு தான் நான் சொன்னேன்.. ஒவ்வொரு தடவையும் நீ 'டச்' பண்ணாம நானா 'டச்' பண்ண மாட்டேன்னு சொல்லலை.. முதல்ல தொட்டது நீதான்.. தொட்டவளை நான் விடறதாயில்லை.. அதனால இப்படித் தப்பிக்க நினைக்கிறதையெல்லாம் விட்டுவிடு.."

"நல்ல கதையாய் இருக்கே..? கையைப் பிடின்னு கையை நீட்டினது நீங்க.. நீட்டின கையைத் தொட்டவுடன் இறுக்கிப் பிடிச்சுக்கிட்டதும் நீங்க.. இது அழுகுணி ஆட்டம்.. நான் ஏற்றுக்க மாட்டேன்.."

"நான் கையை நீட்டினா விரல் தொட மாட்டேன்னு நீ தள்ளி நிற்க வேண்டியதுதான..? உன்னை யாரு என் கைமேல உன் கையை வைக்கச் சொன்னது..?"

அவன் மடக்கியதில் திணறிப் போனாள் சசி.. கருணாகரனின் அணைப்பில் சுகம் கண்டவளைத் திருப்பி அவள் முகத்தோடு முகம் வைத்து விழிகளுக்குள் அவன் பார்த்தபோது அவளால் பேச முடியவில்லை..

"ஏண்டி..? என்னைப் பிடிக்கலையா..?"

ஆழ்ந்த குரலில் அவன் கேட்டபோது அவளது மனம் அதிர்ந்தது.. அவனை அவளுக்குப் பிடிக்காதா..? அவனை மட்டும்தான் அவளுக்குப் பிடிக்கும் என்பதை அவன் அறிவானா..?

விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்தவளை அணைத்து அவள் முடி கோதி விட்டான் கருணாகரன்.

"முட்டாள்..! என்னை முந்திக்கிட்டு ஒருத்தன் உன்னைக் காதலிச்சிருக்கான்.. உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பிக் கேட்டிருக்கிறான்.. நீ அவனை உன்னோட பெரியப்பாகிட்டப் பேசச் சொல்லி அனுப்பியிருக்கிறன்னு கேள்விப் பட்டவுடன் எனக்குக் கோபம் வராதா..? பொறாமை வராதா..? எனக்கே எனக்குன்னு நான் நினைச்சுக்கிட்டிருந்தவ.. விடிஞ்சா என்னோட மணமேடையில உட்கார்ந்து நான் கட்டற தாலியை கழுத்தில வாங்கிக்கப் போறவங்கிற உரிமை உணர்வில நானிருக்கிறப்ப அந்த பிரவின் பத்திக் கேள்விப் பட்டவுடன் ஆத்திரம் வந்திருச்சுடி.. இதெல்லாம் ஆம்பளைகளுக்கே இருக்கிற அடிப்படை கோபம்.. பொறாமை.."

"நீங்க அதிகமா பேசினீங்க.."

"மன்னிச்சிரு.. போதுமா..?"

இலகுவாக கேட்டவனின் முகத்தை ஆச்சரியத்துடன் பார்த்தாள் சசிரேகா.. கருணாகரனா மன்னிப்புக் கேட்பது..?

'இவனுக்கு மன்னிப்புக் கேட்கக்கூடத் தெரியுமா..?'

"பெண்டாட்டியோட காலைக் கூடப் பிடிக்கலாம்.. தப்பில்லை.."

அவன் கண்களைச் சிமிட்டினான்.. அவள் முகத்தில் வெட்கம் வந்து அமர்ந்து கொண்டது.. மனக் கிலேசத்தில் பாதி குறைந்தவளாக அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள்..

"இப்பத்தான் நீ என் பெண்டாட்டிங்கிறதை புரூவ் பண்ற.."

கருணாகரனின் குரலில் திருப்தி இருந்தது.. அவளுடன் சுகித்திருந்த பொழுதில் அவன் பேசிய ரகசியப் பேச்சுக்களில் கூட அப்படியொரு திருப்தியை அவள் உணரவில்லை..

காலை உணவுக்குப் பின்னால் சசிரேகா பெட்டியில் துணிகளை அடுக்க முற்பட்டாள்..

"இப்ப எதுக்கு அதை நோண்டற..?" விச்ராந்தியாய் கட்டிலில் புரண்ட கருணாகரன் தலையணையை எடுத்துப் போட்டு அதில் கையூன்றிப் படுத்து அவளைப் பார்த்து புருவங்களை உயர்த்தினான்..

"என்ன இப்படிக் கேட்கறிங்க..?"

"எப்படிக் கேட்கிறேன்..?"

"நாம வந்த வேலைதான் முடிஞ்சிருச்சே.."

"எந்த வேலை..?"

அவன் கண்சிமிட்டியதில் அவள் முகம் சிவந்தாள்.. அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் வெட்கம் பிடுங்கித் தின்றது.. தலையைக் குனிந்து கொண்டாள்.. மனைவியின் வெட்கத்தில் அவன் உல்லாசம் கொண்டு விசில் அடித்தான்.. அவள் ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தபடி..

"ஊருக்குக் கிளம்ப வேணாமா..?" என்று கேட்டாள்.

"கிளம்பனும்.. ஆனா இப்ப இல்லை.."

"என்ன..?"

ஆச்சரியமாகக் கேட்டவளின் முக பாவத்தை அவன் ரசித்தான்..

"எதுக்கு மொச்சைக் கொட்டைக் கண்ணை இப்படி விரிக்கிற..?"

"இப்ப ஊருக்குக் கிளம்பலைன்னா எப்பக் கிளம்பறோம்..? சாயங்காலம் கிளம்பறோமா..?"

"இல்லை.."

"நாளைக்கு..?"

"ஊஹீம்.."

"எப்பத்தான் கிளம்பப் போறோம்..?"

"ஒரு வாரம் கழிச்சு.."

"ஒருவாரம் கழிச்சா..? அது வரைக்கும்..?"

"இங்கேதான் இருக்கப் போறோம்.."

"இங்கேயா..?"

பெட்டியில் துணிகளை அடுக்க மறந்து அவள் மீண்டும் விழி விரிக்க.. அவன் உரக்கச் சிரித்தான்..

"ஏண்டி..?"

"நிறைய செலவாகாதா..?"

"ஆகட்டும்.. உன் புருசன் பணக்காரன் தான்டி.."

"அதுக்கில்லைங்க.."

"எதுக்கில்லை..? இங்கே நாம தங்கப் போறோம்ன்னா தங்கப் போறோம்தான்.. நீ பெட்டியை விட்டுட்டு இங்கே வா.."

ஏஸியின் குளிருக்கு அவன் போர்வையானான்.. காரமங்களத்தில் இல்லையென்ற சுதந்திர உணர்வில் அவர்கள் நினைத்த நேரத்தில் சாப்பிட்டார்கள்.. நினைத்த நேரத்தில் தூங்கினார்கள்.. மாலை வேளைகளில் மனைவியுடன் ஊர் சுற்றினான் கருணாகரன்..

சசிரேகா பார்த்த சென்னைதான் அது... கருணாகரனோடு சுற்றும் போது வேறு முகம் காட்டியது.. மெரினாக் கடற்கரையும் சில ஷாப்பிங் மால்களும் மட்டுமே சசிரேகா அறிந்த இடங்கள்.. கருணாகரன் ஊரைச் சுற்றிக் காட்டியபோது இந்தச் சிங்காரச் சென்னையிலா நாம்

வேலை பார்த்தோம் என்று அதிசயப்பட்டுப் போனாள் அவள்..

"என்னத்தடி இங்க வேலை பார்த்த..? எங்கே கூப்பிட்டுக்கிட்டுப் போனாலும் 'ஆ'ன்னு முழிச்சுக்கிட்டுப் பார்க்கிற..?" கருணாகரன் அவளை கிண்டல் செய்தான்..

"வேலை பார்த்து சம்பளம் வாங்க ஆரம்பிச்ச பின்னாலதான் நல்ல துணிகளையே நான் வாங்கிக்க முடிஞ்சது.. அதுக்கப்புறம் லேடிஸ் ஹாஸ்டல் பீஸ், என் டிரான்ஸ்போர்ட் செலவு.. மீதமிருந்த பணத்தை பேங்கில் போட்டுச் சேர்த்துக்கிட்டு வர்றேன்.. பணத்தோட அருமை எனக்குத் தெரியும்.. வத்சலா நிறைய செலவளிப்பா.. ஊர் சுத்துவா.. நான் ஜாயின் பண்ணிக்க மாட்டேன்.. அதுக்கெல்லாம் வேற செட்டைப் பிடிச்சு வைச்சிருக்கா.. நல்ல சாப்பாடு, துணி.. இதெல்லாம் என் வாழ்க்கையில கிடைக்குமான்னு நான் சின்ன வயசில ஏக்கப்படுவேன்.. பழைய சோறு.. மட்டமான துணி.. அதுவும் வருசத்துக்கு ஒன்னுதான் கிடைக்கும்.. சமையல் ரூமில கிழிஞ்ச பாயிலதான் படுத்துத் தூங்குவேன்.. கட்டில் மெத்தையெல்லாம் நான் வேலைக்குப் போக ஆரம்பிச்ச பின்னாடி கிடைச்சதுதான்.. இப்படிப்பட்டவ கையில பணம் கிடைச்சா அதைப் பொத்தி வைச்சு செலவளிக்க நினைப்பாளா.. இல்லை.. மனம் போன போக்கில செலவளிக்க நினைப்பாளா..?" சசிரேகா கேட்டாள்..

கருணாகரனிடமிருந்து பதில் வரவில்லை.. நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.. அவன் முகம் மாறி கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன.. சசிரேகாவுக்கு என்னவோ போல ஆகி விட்டது.. அவளது துயரத்தை அவன் மனதில் ஏற்றி விட்டாளா..?

முட்டுக்காட்டில் அவர்கள் போட்டிங் போய் கொண்டிருந்தார்கள்.. அந்தி வெயில் தண்ணீரில் பட்டு அவர்கள் மீதும் படிந்தது.. படகை கரையை நோக்கித் திருப்பினான் கருணாகரன்..

"ஐ ஆம் ஸாரி.." வருத்தத்துடன் சொன்னாள் சசிரேகா..

"எதுக்கு ஸாரி கேட்கிற..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

"உங்க மூடை ஸ்பாயில் பண்ணிட்டேன்.."

"அடிதாண்டி வாங்கப் போற.. நீ கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்த காலத்தில நான் சொகுசா வாழ்ந்துக்கிட்டு இருந்தேன் பாரு.. அதை நினைச்சாத்தான் வருத்தமா இருக்கு.. உன்னை அப்பவே மீட்டிருக்கனும் சசி.."

"என்ன..?"

'இவன் என்ன சொல்கிறான்..?' சசிரேகாவுக்குப் புரியவில்லை..

படகு கரைக்குத் திரும்பியது.. கருணாகரன் வேறு பேச்சிற்குத் தாவி விட்டான்.. அவர்கள் மாயாஜாலுக்குள் பிரவேசித்தார்கள்.. சுற்றிப் பார்த்து விட்டு படம் பார்க்கலாம் என்று சசிரேகா கேட்டுக் கொண்டதால் அதைச் சுற்றி வந்தார்கள்.. ஐஸ்கிரிம் வேண்டும் என்று சசி கை காட்டினாள்.. சின்னப பெண்ணாடி நீ என்று கேலி செய்தபடி ஐஸ்கிரிம் வாங்கித் தந்தான் கருணாகரன்.. அதைச் சுவைத்தபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்த சசிரேகா.. திடிரென்று..

"நீங்க முதன் முதலா எப்ப என்னைப் பார்த்தீங்க..?" என்று கேட்டு வைத்தாள்..

"நீ பிறந்தப்பவே பார்த்துட்டேன்.." என்றான் அவன்..

"என்ன..?"

"ஹா..ஹா.."

அவன் கண்சிமிட்டியதும் அவன் விளையாடுகிறான் என்று புரிந்து கொண்டாள் சசி.. மெல்ல கோபத்துடன் அவனை அடித்தாள்..

"ஹப்பா.. வாயைத் திறந்தா பொய்தான்.."

"ஆமாம்.. பொய்தான்.."

அவள் விழிகளுக்குள் பார்த்தபடி சொன்னான் கருணாகரன்.. அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் திகைத்துப் போனாள் சசி..

'அடிக்கடி இப்படிப் பார்த்து வைக்கிறானே.. என்னவா இருக்கும்..?' அவள் மனம் குறுகுறுத்தது.. அவனிடம் கேட்டபோது..

"ஒன்றுமில்லையே.." என்று தோள் குலுக்கினான்..

"இல்லை.. நான் பார்த்தேன்.." பிடிவாதமாக அவள் கேட்டாள்..

"உனக்கு மன பிரமைடி.." என்று சொல்லி விட்டான் கருணாகரன்..

படம் பார்க்கலாம் என்று அவர்கள் நகர்ந்த போது..

"மிஸ்டர் கருணாகரன்.." என்று யாரோ ஒருவர் அழைத்தார்.. திரும்பிப் பார்த்த கருணாகரன்..

"தெரிஞ்சவர்டி.. ரெண்டு வார்த்தை பேசிட்டு வந்திடறேன்.. நீ வேடிக்கை பாத்துக்கிட்டு இரு.." என்று சொல்லி விட்டுப் போனான்..

சசிரேகா அங்கிருந்த கடைகளைப் பார்த்தபடி நடந்தாள்.. அவள் பின்னாலேயே யாரோ தொடர்வதைப் போல இருந்தது.. உள்ளுணர்வின் உறுத்தலில் யாரென்று பார்த்தாள்..

"கடைசியில புளியங்கொம்பா பிடிச்சிட்ட போல.. கொழுத்த பணக்காரனா இருக்கான்.. ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டிருக்கான்.. பணத்தை தண்ணியா செலவளிக் கிறான்.. இப்படி ஒருத்தன கணக்குப் பண்ணி கையில வைச்சிருக்கிற திமிரிலதான் அன்னைக்கு என்னை வேண்டாம்ன்னு தூக்கி எறிஞ்சியா..?" என்று கேட்டபடி அங்கே நின்றிருந்தான் பிரவீன்..

"ச்சீ.." அருவெறுப்பில் முகம் சுளித்தாள் சசிரேகா..

"இப்படித்தானே அன்னைக்கும் முகம் சுளிச்ச..? உன்னைக் கல்யாணம் பண்ணி உன் கொட்டத்தை அடக்கனும்னு நினைச்சேன்.. தப்பிச்சிட்ட.."

"உன்புத்தி இப்படித்தானே யோசிக்கும்..? உன்னை மாதிரியான ஆளை கல்யாணம் பண்ணிக்கிறதுக்குப்

பதிலா தண்டவாளத்தில தலையைக் கொடுத்திரலாம்.. எனக்குத்தான் உன்னைப் பிடிக்கலைன்னு உனக்குத் தெள்ளத் தெளிவா தெரியுமே.. அப்புறமும் என்ன அலுவலுக்கு என் பெரியப்பாகிட்டப் பெண் கேட்டுப் போன..?" வெறுப்புடன் முகம் சுளித்தாள் சசிரேகா..

அதைக்கண்ட பிரவீனின் முகம் படுபயங்கரமாக மாறிவிட்டது..

# 24

பிரவீனின் முகத்தைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்வாள் சசிரேகா.. அப்படியாவது அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டு அவன் விலகிவிட மாட்டானா என்ற எண்ணம் அவளுக்கு.. அந்த முகம் திருப்புதல் பிரவினின் ஈகோவை சீண்டி விடும்.. இவளுக்கெல்லாம் இவ்வளவு திமிரா என்று அவன் கொதித்துப் போய்விடுவான்.. அவளுடைய கொட்டத்தை அடக்காமல் விடக்கூடாது என்று கருவுவான்..

அப்படிப்பட்டவனின் முகத்துக்கு நேரே பட்ட வர்த்தனமாக உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்குப் பதிலாக தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து விடலாம் என்று சசிரேகா சொன்னால் அவனுக்கு எப்படியிருக்கும்..?

"உன்னைப் பத்தின அத்தனை புள்ளி விவரமும் எனக்கு அத்துபடி.. உனக்கு அடைக்கலம் கொடுத்து சோறு போட்டு வளர்த்த அங்குசாமி பெரியப்பா.. பணத்தத் தூக்கிப்

போட்டா உன்னைத் தூக்கிட்டுப் போகச் சொல்லி கையைக் காட்டி விடுவான்னு கணக்குப் போட்டுத்தான் போனேன்.. அதுக்குள்ளதான் நீ இவனை கணக்குப் பண்ணித் தப்பிச்சிட்டயே.."

பேசிக்கொண்டே போனான் பிரவின்.. விட்டால் இன்னம் கொஞ்சம் பேசித் தள்ளியிருப்பான்.. அதற்குள் அவன் முதுகில் ஓங்கி ஒர் அடி விழுந்தது.. அடியின் வேகத்தில் தள்ளாடி அவன் விழுந்தான்.. அவன் முகத்துக்கு நேரே ஆள்காட்டி விரலை உயர்த்தி எச்சரித்தான் கருணாகரன்.. அவன் முகம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது..

"யாரைப் பார்த்து 'வா, போ'ன்னு கை நீட்டிப் பேசிக்கிட்டு இருக்க..? வகுந்துடுவேண்டா நாயே..! என் பெண்டாட்டிகிட்ட நின்று பேசக்கூட நீ யோசிக்கனும்.. பயம் பத்தில்லாம இந்த அளவுக்கு பேசிக்கிட்டு இருக்க..? பொலி போட்டிருவேன்.. இவ உன்கிட்டயிருந்து தப்பிச்சதப் பத்தி அப்புறமா பேசிக்கலாம்.. இப்ப நீ என்கிட்ட இருந்து எப்படித் தப்பிக்கறேன்னு நானும் பார்க்கிறேன்.."

கருணாகரன் விட்ட உதையில் அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு பந்து போல சுருண்டு துடித்தான் பிரவின்..

"தெரியாம பேசிட்டேன்.. விட்டு விடுங்க.." என்று கெஞ்சினான்..

"ஒழுங்காப் பேசிப்பழகு.. இல்லேன்னா நீ இருக்கிற இடத்துக்குத் தேடி வந்து உன்னை அடிப்பேன்.. எல்லா இடத்திலயும் எனக்கு ஆள்கள் இருக்காங்க.. செல்வாக்கும் இருக்கு.. தொலைச்சுக் கட்டிருவேன்.. ஓடியே போயிரு.." கடுமையாக எச்சரித்தபின்தான் அவனை போக விட்டான் கருணாகரன்..

படம் பார்க்க மனமில்லாமல் ஹோட்டலுக்குத் திரும்பி விடலாம் என்று சொல்லி விட்டாள் சசிரேகா.. கருணாகரனும் அதை மறுக்கவில்லை.. அறைக்குள் வந்தவுடன் அவன் மார்பில் சாய்ந்தவள் அடக்கி வைத்திருந்த துயரத்தையெல்லாம் வெளியில் கொட்டி "ஹோ.." வென்று அழுது தீர்த்து விட்டாள்..

"சசி.." அவளை இழுத்து அணைத்து இறுக்கிக் கொண்டான் கருணாகரன்.. அவன் கண்களும் கலங்கிச் சிவந்திருந்தன..

"எப்படியெல்லாம் பேசினான்.." பொருமினாள் சசிரேகா..

"நான் சோற்றுக்கு வழியில்லாம அங்குசாமி பெரியப்பா வீட்டிலே வளர்ந்தேனாம்.. சொல்லிக் காட்டறான்.. என்னைப் பெத்தவங்க உயிரோட இருந்திருந்தா எனக்கு இந்த நிலைமை வந்திருக்குமா..?"

"சசி.."

"எங்கப்பா வசதியானவர்ங்க.. என்னை இளவரசியைப் போல வளர்த்தார்.. எங்கம்மா என்னை இடுப்பிலேயே தூக்கி வைச்சிருப்பாங்க.. கீழே இறக்கி விட்டதில்லை.. என்னை அநாதையா விட்டுட்டுப் போகப் போறோம்ன்னுதான் எங்கம்மா அப்படித் தரையில விடாம என்னை வளர்த்தாங்களா..?"

சசியின் கண்ணீரில் கரைந்து போனான் கருணாகரன்.. கண்ணீரில் நனைந்திருந்த மனைவியின் முகத்தைத் துடைத்து.. கலைந்திருந்த அவளின்

கூந்தலை சீர் செய்து.. ஆதுரத்துடன் மடியில் சாய்த்துக் கொண்டான்.. அவன் மடியை தாயின் மடியாக உணர்ந்தாள் சசிரேகா..

"உனக்கு உங்க அம்மான்னா ரொம்பப் பிடிக்கும் போல.."

"ம்ம்ம்.. அப்பாவையும் ரொம்பப் பிடிக்கும்தான்.. ஆனா அம்மா எப்பவுமே ஸ்பெசல்தானே..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"அப்பா பெரியப்பாவோட குடும்பத்து மேலே பாசமா இருப்பார்.. அம்மா எதனாலோ அதை கண்ட்ரோல் பண்ணனும்னு நினைச்சாங்க.. இதைப் பத்தின வாக்கு வாதங்கள் சின்ன வயசில நான் கேட்டதா நினைவு.."

"பெண்களுக்கு எப்பவுமே நுட்ப உணர்வு அதிகம் சசி.. உன் அம்மாவுக்கு உன் பெரியப்பாவோட குணத்தைப் பத்தி

தெரிஞ்சிருக்கலாம்.."

"அப்படித்தான் தோணுது.. என்ன சொல்லி என்ன பண்ண..? எங்கப்பா என்னை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டார்.. கட்டிக் காப்பாத்த அம்மா துணைக்கு

நிற்காம அப்பா கூடவே போயிட்டாங்க.. என்னைக் காப்பாத்த என் தாய்மாமன் வந்தாராம்.. அங்குசாமி பெரியப்பா அதுக்கு விடலையாம்.."

சொல்லிக் கொண்டே வந்தவள் அவனிடம் அசைவில்லாமல் போனதில் அண்ணாந்து அவன் முகத்தை கேள்வியாக பார்த்தாள்.. அவனது இமைகள் துடித்துக் கொண்டிருந்தன..

"ஒன்னுமில்லை.. நீ சொன்னதை யோசிச்சுக்கிட்டு இருந்தேன்.. உன்னோட தாய் மாமனைப் பத்தி நீ நினைச்சுப் பார்ப்பியா சசி..?"

"எத்தனையோ நாள் நினைச்சிருக்கேன்.. அங்குசாமி பெரியப்பா வீட்டில என்னை அடிமையை விடக் கேவலமா நடத்துவாங்க.. எத்தனையோ நாள் எனக்குப் பழைய சோறு கூட கிடைக்காமல் போயிருக்கு.. அப்பல்லாம் நான் என்னோட தாய் மாமாவ நினைச்சுத்தான் அழுதிருக்கேன்.."

"சசி.." கருணாகரனின் குரல் கரகரத்தது.. இரண்டு சொட்டுக் கண்ணீர் அவளது உச்சந்தலையில் விழுந்து நனைத்ததில் அவள்..

"அழுகறிங்களா..?" என்று அவன் முகம் பார்த்தாள்..

"ஆம்பளைக அழுக மாட்டாங்கன்னு யாருடி சொன்னது..?" அவன் அவளை மார்போடு அணைத்துக் கொண்டான்..

பேச முடியாத பேச்சுத் தேவைப்படாத மௌனம் அங்கே நிறைந்திருந்தது.. கிளர்ச்சிகளற்ற.. தூண்டுதல் தேவைப்படாத நெருக்கம் அவர்களுக்குள் நிலவியது.. காதலுமற்ற.. காமமுற்ற தோழமையுடன் அவர்கள் பேசிக் கொண்டார்கள்..

இதுபோன்ற தருணங்கள் சுகமானவை.. வாழ்க்கைத் துணை என்பது கட்டிலைச் சார்ந்தது மட்டுமல்ல என்று உணர்த்துபவை.. சசி மனம் விட்டுப் பேசினாள்.. அதை ஒரு வார்த்தை கூட விடாமல் கூர்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்டான் கருணாகரன்..

மனதிலிருக்கும் பாரத்தை இறக்கி வைக்கும் போது.. அதன் மதிப்புத் தெரிந்தவரிடம் இறக்கி வைக்க வேண்டும்.. அப்போதுதான் இறக்கி வைப்பவரின் பாரம் உண்மையிலேயே குறையும்.. இல்லையென்றால் பாரம் அதிகமாகி விடும்..

"ஏன் சசி.."

கருணாகரனின் பீடிகையே அவன் முக்கியமாக எதையோ கேட்கப் போகிறான் என்பதை உணர்த்தியதில்.

"என்னங்க..?" என்றாள் சசி..

"உனக்குத்தான் அந்த பிரவினைப் பிடிக்காதே.. அதை அவன் முகத்துக்கு நேரா சொல்லியிருக்கையே.. அதை ஏன் என்கிட்டச் சொல்லலை.. நீ அவனை விரும்பினயோன்னு நான் நினைச்சிட்டேனில்ல.. இல்லேன்னு ஏண்டி நீ மறுக்கலை..?"

சசி கசப்புடன் சிரித்தாள்.. கருணாகரனின் மனம் வேதனைப்பட்டது.. அவனைத் தவிர வேறு யாரையும் நினைக்காதவளை அவன் எப்படியெல்லாம் பேசி விட்டான்..?

"இல்லேன்னு நான் மறுத்தாமட்டும் நீங்க கேட்டுக்கிட்டு இருப்பீங்களா..? உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால நான் பொய் சொல்றேன்னு நினைக்கலாமில்ல..? அதை என்னால தாங்கிக்க முடியாது.."

"பொய்யா..? நீ பொய் சொல்வியா..? சேச்சே.. அப்படி உன்னை நினைப்பேனாடி..? உன் முன்னாடிதான் வத்சலா சொன்னாப்புல.. நீயும் அதை மறுக்கலை.."

"என்னன்னு..?"

"அந்த பிரவீன் உன் காதலன்னு.."

"அவ அப்படித்தான் பினாத்திக்கிட்டு இருப்பா.. மனுசங்களை பணத்தை வைச்சு எடை போடக் கூடாது.. குணத்தை வைச்சு எடை போடனும்.. அவன் குணம் கெட்டவன்.. வத்சலாவுக்கு அது புரியாது.. அவன் பணக்காரன், அப்படி, இப்படின்னு என்னை ஃபோர்ஸ் பண்ணுவா.."

"ஓ.."

கருணாகரன் மனம் தெளிந்தவனாக மனைவியை அணைத்துக் கொண்டான்.. அவனது அணைப்புக்குள் அடங்கிய சசிரேகாவின் மனதில் எல்லையற்ற அமைதி நிலவியது.. அது அவள் மனதில் என்றுமே பிரவினுக்கு இடம் இருந்ததில்லை என்பதை கருணாகரன் புரிந்து கொண்டான் என்பதில் வந்த நிம்மதி..

'ஆனாலும்..' அவள் மனம் சிணுங்கியது..

"என்னடி..?"

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த கருணாகரன் அவளது கன்னத்தில் விரலால் கோடு போட்டு இழுத்தபடி கேட்டான்..

"என்ன.. என்ன..?" என்றாள் அவள்..

"உன் மனசில என்னன்னு கேட்கிறேன்.."

"என் மனசிலயா..? எதுவுமில்லையே.."

"உனக்குப் பொய் சொல்லவராதுடி.. மனசில இருக்கறதைக் காட்டற பளிங்கு முகம்.. உன் முகம்.. ஏதோ இருக்கு.. அது என்னன்னு சொல்லு.."

"அது.. அது வந்து.."

சசிரேகா தயங்கினாள்.. கண்களை மூடித் திறந்தவளின் முகத்தில் தீர்மானம் வந்தது.. கேட்டு விட வேண்டும் என்ற

முடிவுடன்..

"நீங்களும் எனக்கு அநியாயம்தானே பண்ணியிருக் கீங்க..? பிரவீன் சொன்னதைப் போல அங்குசாமி பெரியப்பாகிட்ட அன்னவாசல் சொத்தையும் ஏற்காட்டு வீட்டையும் தூக்கிப் போட்டிங்க.. அவரும் என்னைத் தூக்கிட்டுப் போகச் சொல்லி உங்ககிட்டச் சொல்லிட்டாரு.. நீங்களும் என் கழுத்தில தாலியைக் கட்டி என்னைத் தூக்கிட்டு வந்திட்டீங்க.. பிரவின் செய்ய நினைச்சதைத் தானே நீங்களும் செய்திருக்கீங்க..? அவன் என்னை எப்படி எடை போட்டானோ.. அப்படித்தானே நீங்களும் என்னை எடை போட்டுட்டீங்க..? ஆக.. இந்த சசிரேகா அங்குசாமி பெரியப்பாவின் வீட்டில வளர்ந்த ஒரு அடிமை.. அவரிடம் விலைபேசி தூக்கிட்டு வந்திரலாம்.. இதுதானே உங்க ரெண்டு பேரோட கணக்கு..? இது என்னை கௌரவப் படுத்துமா..?"

சசிரேகா குமுறி விட்டாள்.. கருணாகரன் யோசனையுடன் அவளையே பார்த்தான்.. மனைவியின் இதயத்தில் ஏற்பட்டிருக்கும் வலியை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. எப்பேற்பட்ட வலி அது..! நெஞ்சில் தைத்த நெருஞ்சி முள்ளின் வலியல்லவா அது..? அதைப் பிடுங்கி எறியா விட்டால் வாழ்நாள் முழுவது அந்த நெருஞ்சிமுள் அவள் மனதை நிரடிக் கொண்டிருக்காதா..?

"சசி..! முள்ளை முள்ளால்தான் எடுத்தாகனும்.. அதை வார்த்தைகளில் சொல்லி புரிய வைக்க முடியாது.. கிளம்பு.."

"எங்கே..? காரமங்களத்துக்கா..?"

"இல்லை.. ஆத்தூருக்கு.."

"அங்கே யார் இருக்காங்க..?"

"நம்ம சொந்தக்காரங்க.. வா.. போகலாம்.."

சசிரேகா அதற்கு மேலும் கேள்வி கேட்காமல் அவனுடன் கிளம்பினாள்.. காரில் போகும் போதும் சரி.. வழியில் சாப்பிட இறங்கிய போதும் சரி.. கருணாகரன் ஆத்தூரில்

இருக்கும் உறவுக்காரர் யார் என்று சொல்ல வேயில்லை.. வேறு எதையெதையோ பேசிக் கொண்டு வந்தான்.. பிற்பகல் தாண்டிய வேளையில் ஆத்தூருக்குள் கார் நுழைந்தது.. பல தெருக்களைத் தாண்டிய பின்னர்.. விஸ்தாரமான வீதியில் இருந்த பெரிய பங்களாவின் முன்னால் நின்றது.. ஒரு புறம் பிரம்மாண்டமான திருமண மண்டபமும்.. இன்னொரு புறம் சினிமாத் தியேட்டருமாக இருந்த அந்த பங்களாவின் செக்யூரிட்டி கருணாகரனின் காரைக் கண்டதும் சல்யூட் அடித்து கேட்டைத் திறந்து விட்டான்..

பிரதான சாலையிலிருந்து வீட்டின் போர்டிகோ வரை நீண்டு சென்ற சாலையின் இருபக்கமும் தோட்டம் இருந்தது..

"வீடு அழகா இருக்கு.. யாரோட வீடு.." ஆவலுடன் கேட்டாள் சசி..

"இந்த வீடு மட்டும்தான் அழகா..? ரெண்டு பக்கமும் இருக்கிற கல்யாண மண்டபமும், சினிமாத் தியேட்டரும் அழகாய் இல்லையா..?" கருணாகரன் சிரித்தான்..

"அழகா இருக்கே.. பர்ட்டிகுலரா இந்தக் கேள்வியைக் கேட்கறிங்களே.. ஏன்..?" வியப்புடன் கேட்டாள் சசிரேகா.

"அது ரெண்டும் இந்த வீட்டில இருக்கிறவங்களைச் சேர்ந்ததுதான்.. அது போக பெட்ரோல் பங்க் இருக்கு.. ஆத்தோரமா தென்னந்தோப்பு இருக்கு.. ஆத்தூர் கடைவீதியிலே ஜவுளிக்கடை இருக்கு.. பார்னிச்சர் மார்ட் இருக்கு.." அடுக்கினான் அவன்..

"அடேங்கப்பா.. பெரிய பணக்காரங்க போல.." என்றாள் சசி..

கருணாகரன் அவளைப் பார்த்த பார்வையில் ஏதோ செய்தியிருக்க..

"இப்படியேதான் அடிக்கடி பார்த்து வைக்கறிங்க.." என்று அலுத்துக் கொண்டாள்..

"எப்படிப் பார்க்கிறேன்..?"

"புதிர் போடறதைப் போலப் பார்க்கறிங்க.."

"புதிரை விடுவிக்கத்தானே இங்கே கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கேன்.."

ஓடி வந்த வேலையாள்களிடம் கார் சாவியைக் கொடுத்துவிட்டு சசிரேகாவுடன் படியேறினான் கருணாகரன்.. அகன்ற வழவழப்பான தூண்களுடன் ஜமீன் மாளிகை போல அந்த வீடு இருந்தது.. அவனைக் கண்டதும் வேலையாள்கள் ஓடி வந்ததைப் பார்த்த சசிரேகா.. அவன் அடிக்கடி அங்கே வந்து போகிறவன் போல என்று நினைத்துக் கொண்டாள்..

"வாம்மா.."

மங்கல ஆரத்தியுடன் அவளை வரவேற்றாள் ஒரு பெண்மணி.. அச்சு அசப்பில கருணாகரனையும், கவிதாவையும் போல ஜாடையில் இருந்தாள்.. கவிதாவின் காருண்யப் பார்வை அப்படியே அவளிடம் இருந்தது.. பார்த்ததும் கையெடுத்துக் கும்பிடத் தோன்றும் அம்பிகையின் அருள் வடிவாக கருணாகரனுக்கும் சசிரேகாவிற்கும் ஆரத்தி எடுத்து வீட்டிற்குள் அழைத்துக் கொண்டாள்..

"யாரு வந்திருக்கிறாங்க கயல்விழி.."

உள்ளே சப்தம் கேட்டது.. கயல்விழி சிரித்தபடி குரல் கொடுத்தாள்..

"யாரு வந்திருக்கிறாங்கன்னு வந்து பாருங்க.."

கயல்விழியின் குரல் கேட்டு வந்தவர் ஆஜானு பாகுவாக கருணாகரனின் கம்பீரத்தோடு நடுவயதைத் தாண்டியவராய் இருந்தார்.. தூய்மையான வெள்ளை வேட்டி, சட்டையில் இருந்தவர்..

"கருணா.." என்று பாசத்துடன் கைவிரித்தார்..

"அப்பா.." கருணாகரன் அவர் கைகளுக்குள் புகுந்து கொண்டான்..

'அப்பாவா..? அப்படின்னா இவங்க கருணாவோட அம்மாவா..?' திகைத்து விழித்தாள் சசிரேகா..

கயல்விழியின் பார்வை 'ஆம்' என்றது..

"உங்க மருமகளை அழைத்துக்கிட்டு வந்திருக் கேன்ப்பா.."

கருணாகரன் சசிரேகாவைக் காட்டினான்.. அவளைப் பார்த்தவரின் உதடுகள் துடித்தன.. கண்கள் கலங்கிச் சிவந்தன..

"அம்மாடி..!" நாத்தழுதழுக்க அழைத்தார்..

"உன் தாய்மாமனான தயாளனைப் பார்க்க இத்தனை வருசங்களைத் தாண்டி வந்திருக்கியா என் தங்கமே..!"

சசிரேகாவினால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை.. அவள் கேட்பது உண்மையா..? எதிரில் நிற்பவர் அவளுடைய அம்மாவின் அண்ணனா..?

பதறி நகர்ந்த விழிகள் ஹாலின் சுவரில் மாட்டப் பட்டிருந்த பெரிய புகைப்படங்களைப் பார்த்தன.. அந்தப் புகைப்படங்களில் சசிரேகாவைப் பெற்றவர்களான ரங்கசாமியும் தாரிணியும் மாலையுடன் சிரித்துக் கொண்டிருந்தார்கள்..

"உயிருக்குயிரா வளர்த்த ஒரே தங்கைம்மா.. என் தாரிணி.. படிக்கப் போனவ ரங்கசாமியைக் காதலிச்சுக் கல்யாணமும் பண்ணிக்கிட்டா.. என்னால அதைத் தாங்க முடியலை.. கோபப் பட்டேன்.. அவளும் கோபப்பட்டு உன் வீட்டு வாசலை மிதிக்க மாட்டேன்னு சொல்லிட்டு போயிட்டா.. தள்ளி நின்னு அவளைக் கவனிச்சேன்.. நீ பிறந்தப்ப உன்னைப் பார்க்க கருணாகரனோட வந்திருந்தேன்.. உங்கம்மா என் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டேன்னு சொல்லிட்டா.."

என்னை முதன் முதலாக எப்போது பார்த்தாய் என்ற சசிரேகாவின் கேள்விக்கு.. நீ பிறந்த போதே பார்த்து விட்டேன் என்று ஏன் கருணாகரன் சொன்னான்.. என்பது அப்போது சசிக்குப் புரிந்தது..

"ரங்கசாமி தாரிணியை நல்லபடியா கவனிச்சுக் கிட்டான்.. உன்னையும் நல்லாத்தான் வளர்த்தான்.. என்னோட கோபம் பறந்திருச்சு.. உங்கப்பா அம்மா கூட சமாதானமாப் போகனும்னு இடையில இருந்த சொந்தக்காரங்க மூலமாக தூது விட்டேன்... என் தங்கையோட மனசில இருந்த கோபம் படிப்படியா குறைஞ்சுக்கிட்டே வந்தது.. ஒருநாள் என் தங்கை எனக்குப் போன் பண்ணி.. குடும்பத்தோட என் வீட்டுக்கு விருந்து சாப்பிட வா அண்ணா.. நம்ம ரெண்டு குடும்பமும் ஒன்னாகிரலாம்ன்னு சொன்னா.. நானும் என் தங்கை எனக்குத் திரும்பக் கிடைச்சிட்டான்னு ஏற்காட்டுக்கு குடும்பத்தோட கிளம்பி ஓடினேன்.. அங்கே என் தங்கை இருந்தா.. அவ உயிர்தான் இல்லை.."

"மாமா.."

சசிரேகா பொங்கி அழுதாள்.. அவள் தாயை தாயினும் சாலப்பரிந்து நேசித்த, நேசிக்கும் ஒரு ஜீவனைக் கண்டு விட்ட சொந்தத்துடன் கண்ணீர் விட்டு அழுதாள்.. தயாளன் தங்கை மகளைத் தன் தோளில் தாங்கிக் கொண்டார்..

"உன் அப்பாவோட உன் அம்மாவும் போயிட்டா.. என் தங்கை கடைசி வரைக்கும் என்கிட்ட முகம் பார்த்துப் பேசாமலே போயிட்டா.. இந்த வீட்டோட வாசல் படியை மிதிக்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போனவ கடைசி வரைக்கும் இந்த வீட்டின் வாசல் படியை மிதிக்கவே இல்லை.."

"மாமா.."

"என் தங்கையோட மக நீ.. அவளோட ரத்தம்.. வாரிசு.. உன்னைக் கைப்பற்றி இந்த வீட்டுக்கு கொண்டு வந்துடனும்னு நான் போராடினேன்ம்மா.. அந்த அங்குசாமி ஜெயிச்சுட்டான்.. வருசா வருசம் குடும்பத்தோட ஏற்காட்டில டேரா போட்டு ரங்கசாமியோட சம்பாத்தியத்த உறிஞ்சிப் பிழைச்சதை ஒட்டுறவா காரணம் காட்டிட்டான்.. தள்ளி நின்னு தங்கச்சிக்காக மறுகின என்னை யாரோ ஒருத்தனாக்கிட்டான்.. பஞ்சாயத்துப் பண்ணக் கூடின அக்கம் பக்கத்து ஆளுகளுக்கு அவனை அடையாளம்

தெரிந்திருந்தது.. என்னை தங்கச்சியை தள்ளி வைச்சிட்ட கிராதகனா சொல்லிட்டாங்க.."

"மாமா.."

"நான் விடலைம்மா.. கோர்ட்டுக்குப் போனேன்.. சாட்சிகள் அவனுக்குச் சாதகமா இருந்தாங்க.. ரங்கசாமியோட நண்பர்கள் எல்லோருமே அங்குசாமியைத் தான் உன்னோட பெரியப்பாங்கிற உறவு முறையில தெரியும்.. நான் உன்னோட தாய்மாமன்னு யாருக்குமே தெரியாதுன்னு சொல்லிட்டாங்க.. இவ்வளவு ஏன்..? கோர்ட்டில கூட்டத்தோடு கூட்டமா என்னையும், அங்குசாமியையும் நிறுத்தி வைச்சு அடையாளம் காட்டச் சொல்லி சின்னப் பிள்ளையான உன்கிட்டச் சொன்னாங்க.. நீ அங்குசாமியை பெரியப்பான்னு அடையாளம் காட்டின.. தாய்மாமனான என்னை உனக்கு அடையாளம் தெரியாமலே போயிருச்சு.. மாமான்னா யாருன்னு தெரியாதுன்னு நீயே சொல்லிட்டம்மா.."

"எனக்குத் தெரியலையே மாமா.. தெரிஞ்சிருந்தா என் தலையிலே நானே நெருப்பை அள்ளிக் கொட்டிக் கிட்டு இருப்பேனா..?"

"அப்படிச் சொல்லாதேடாம்மா.. உனக்கு என்னை எப்படிம்மா அடையாளம் தெரியும்..? ஒருநாள் ஒரு பொழுதாவது ஒரு தாய்மாமனா லட்சணமா சீர்வரிசையோட உன் வீட்டுக்கு வந்து நின்னிருப்பேனா..? அப்படி வந்து நின்னு.. உன் அம்மா உன்னைக் கூப்பிட்டு என்னைக் காட்டி.. இவர்தான் என் கூடப்பிறந்த அண்ணன் சசி.. உன்னோட தாய்மாமன்னு அடையாளம் சொல்லியிருந்தா நீயும் இவன்தான் என் தாய்மாமன்னு கோர்ட்டில் என்னை அடையாளம் காட்டியிருப்ப.. உன் மேல என்னடா குற்றமிருக்கு..?"

"உங்க மேலயும் குற்றம் இல்லையே மாமா.."

சசிரேகாவின் வார்த்தைகளில் நெகிழ்ந்து போனார் தயாளன்.. தங்கை மகளின் முடி கோதி கயல்விழியைப் பார்த்து..

"என் தங்கம் பேசறதைக் கேட்டியா கயல்..?" என்று மகிழ்ந்து போனார்..

"தாரிணியின் ரத்தம்.. எப்படிங்க பேசும்..?" பாசத்துடன் சொன்னாள் கயல்விழி..

"கோர்ட்டில் அங்குசாமி ஜெயிச்சுட்டாலும்.. வேற ஒரு வகையில அவனுக்கு நான் விலங்கு போட்டுட்டேன்.. என் தங்கை காதலிச்ச காரணத்துக்காக நான் விலக்கி வைச்சிருந்தாலும் என் தங்கை போன பின்னால அவளோட மகளுக்கு நானும் ஓர் கார்டியன்ங்கிற உத்தரவை வாங்கிட்டேன்.. என் தங்கை மகளோட படிப்புக்கோ பாதுகாவலுக்கோ தடை ஏற்பட்டதுன்னா உடனடியா என் தங்கை மகளை என் வசம் ஒப்படைச்சுரனும்னு கோர்ட் தீர்ப்பு சொல்லிருச்சு.. அதோட.. ஏற்காட்டு வீட்டை நீ மேஜரான பின்னால உன் வசம் ஒப்படைக்கனும்னும்.. அதுவரைக்கும் அந்த வீடு கோர்ட்டின் பொறுப்பில்தான் இருக்கும்ன்னும்.. அந்த வீட்டோட வாடகைப் பணத்தை உன் பேரில பேங்கில கட்டிக்கிட்டு வரனும்னு கோர்ட்டு உத்தரவு போட்டுச்சு.. அன்னவாசலில ரங்கசாமி யோட பங்குச் சொத்துக்கள்ல வர்ற வருமானத்தை உன்னை வளர்க்கிறதுக்கான செலவுத் தொகையா அங்குசாமி சொன்னதினால அந்தச் சொத்து அவனோட மேற்பார்வையிலும், ஏற்காட்டு வீடு என்னோட மேற் பார்வையிலும் இருக்கனும்னு கோர்ட் சொல்லிருச்சு.. அங்குசாமியால ஏற்காட்டு வீட்டையும் கைப்பற்ற முடியலை.. உன் படிப்பையும் நிறுத்த முடியலை.."

சசிரேகாவுக்கான தனது போராட்டத்தை தயாளன் விவரிக்க விவரிக்க சசிரேகா கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்..

அவளுக்காக போராட அவளது தாய்மாமன் துணிந்து நின்றிருக்கா விட்டால் அவள் என்ன கதிக்கு ஆளாகியிருப்பாள்..

"நீங்க மட்டும் போராடலைன்னா.. என்னோட கதி..?"

அவள் விம்மியபோது கல்யவிழி பதறிப் போனவளாக மருமகளின் வாயைப் பொத்தி அப்பேச்சைத் தடுத்தாள்..

"இவர் போராடாம எப்படி இருப்பார்..? உன் மாமாவுக்கு இருக்கிற செல்வாக்குக்கு அந்த அங்குசாமிய எப்பவோ அந்தல சிந்தலயா ஆக்கி விட்டிருப்பார்.. நீ அவன் பொறுப்பில அகப்பட்டிருந்த.. உன்னை அங்கேயிருந்து விடுவிக்காம எதையும் செய்ய முடியாதுன்னு பொறுமையா காத்துக்கிட்டு இருந்தார்.."

மருமகளின் கண்ணீரைத் துடைத்து விட்டு அவளை சோபாவில் அமர வைத்தாள் கயல்விழி.. கருணாகரனை பார்வையிலே அதட்டி மருமகளின் பக்கத்தில் அமரச் சொன்னாள்.. அவளது கண்ணசைவில் பாலும், பழமும் வந்தன.. அதை டீப்பாயில் வைக்கச் சொல்லிவிட்டு..

"முதலில் பூஜை ரூமில விளக்கை ஏத்தி விடம்மா.." என்று அன்புடன் மருமகளை அழைத்துக் கொண்டு போனாள்..

'இது என் வீடா..?'

நம்ப முடியாத பிரமிப்புடன் விளக்கை ஏற்றினாள் சசிரேகா.. விளக்கின் ஒளியில் தெரிந்த கடவுள்களின் திருவுருவங்கள் அவளை ரட்சிப்பதைப் போல அனுகிரகத்துடன் அவளை ஆசிர்வதித்தன..

'நீங்க எப்போதும் என்னுடனே இருந்திருக்கீங்க.. இது தெரியாத முட்டாளா நான் மருகிக்கிட்டு இருந்திருக்கேன்.. நன்றி தெய்வங்களே..!'

மனமார கடவுள்களுக்கு நன்றி கூறினாள் சசிரேகா..

மகனுக்கும், மருமகளுக்கும் பால், பழம் கொடுத்து உண்ணச் சொன்னாள் கயல்விழி.. அருகேயிருந்த சோபாவில் உட்கார்ந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த தயாளனின் முகத்தில்தான் எத்தனை நிறைவு..!

அது தங்கையின் மகளை அங்குசாமியின் பிடியிலிருந்து விடுவித்து அவரின் குடும்பத்திற்குள் கொண்டுவந்து விட்ட

நிறைவு..!

"இது ஒருநாள்.. ரெண்டு நாளில போட்ட திட்டமில்லம்மா.. வருசக்கணக்கா நாங்க போட்டதிட்டம்.. தாரிணி போன பின்னால நீ அங்குசாமியோட பொறுப்பில வளர ஆரம்பிச்ச.. கருணா அப்ப காலேஜில படிச்சுக்கிட்டு இருந்தான்.. படிப்பை முடிச்சவனை காரமங்களத்தில பிஸினெஸை ஆரம்பிக்கச் சொன்னேன்.. எங்கிருந்தோ வந்த இளம்வயது தொழிலதிபனா.. புதுப் பணக்காரனா.. கருணா காரமங்களத்தில காலை ஊண்டினான்.. அப்பாம்மா ஃபாரின்ல இருக்காங்கன்னு கதை சொன்னான்.. கவிதாவும், தியாகராஜனும் கருணாகூட இருந்தாங்க.. ஹாஸ்டலில தங்கிப் படிச்சுக்கிட்டு இருந்த கருணாவை அங்குசாமி பார்த்ததேயில்ல.. கருணா பிஸினெஸ் பண்ண ஆரம்பிச்சான்.. முதலில் ஜவுளிக்கடை.. அடுத்து பர்னிச்சர் மார்ட்.. அதற்கடுத்து சூப்பர் மார்க்கெட்ன்னு இவன் தொழிலை விரிவு பண்ணப் பண்ண அந்த சுத்து வட்டாரத்தில இவனோட செல்வாக்கு கூட ஆரம்பிச்சுச்சு.. ரொம்பச் சீக்கிரத்திலேயே காரமங்களத்தில பெரிய மனிதனா உயர்ந்து நின்னுட்டான்.."

தயாளனைப் பற்றிய விவரங்களை வெளிப் படுத்தாமல் சுய முகவரியை மாற்றி காரமங்களத்தின் புதுப் பணக்காரனாக கருணாகரன் அடையாளம் காணப்பட்ட கதையைச் சொல்ல ஆரம்பித்தார் தயாளன்..

"எங்களோட இலக்கு நீ மட்டும்தான்.. உன்னை அங்குசாமியிடமிருந்து மீட்கனும்னா இரண்டு வழிகளில் தான் மீட்டாகனும்.. ஒன்னு, நீ மேஜராகிற வரைக்கும் காத்திருந்து.. உன்னைப் பார்த்து விசயங்களை தெளிவு படுத்தி அங்குசாமியின் பிடியிலிருந்து விடுபட்டு வெளியே வர வைக்கனும்.. அது முடியுமான்னு எங்களுக்குச் சந்தேகமா இருந்தது.. என்னை உனக்குத் தெரியாது.. கோர்ட்டில என்னை அடையாளம் காட்ட முடியாத நீ.. எந்த அளவுக்கு என் பேச்சை நம்புவேன்னு எங்களுக்கு யோசனையாக இருந்தது.."

இந்த அளவுக்கு அவளுக்காக ஒரு குடும்பமே யோசித்ததா..? தான் அநாதையென்று மருகிக் கொண்டிருந்த சசிரேகா விழி கலங்க சுவரில் மாட்டப் பட்டிருந்த தாயின் புகைப்படத்தைப் பார்த்தாள்..

'அம்மா..! உன் பிறந்தவீடு இத்தனை பாசமுள்ளதா..!'

"இரண்டாவது வழிதான் உகந்ததுன்னு எங்க மனசுக்கு பட்டுச்சு.. அது கருணாவுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணி எங்க வீட்டின் மருமகளா ஆக்கிக்கிற வழி.. இதுதான் நிரந்தரமா உன்னை எங்களோட சேர்த்து வைக்கும்ன்னு நான் நினைச்சேன்.. கருணாவும் கேட்டுக்கிட்டான்.."

'ஆக.. என்னோட அத்தான்.. அத்தை மகளைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்காகத்தான் காரமங்களத்தோட புதுப் பணக்காரனா மாறியிருக்கார்..'

சசி விழிகளையுயர்த்தி கருணாகரனைப் பார்த்தாள்.. அவன் மற்றவர்கள் அறியாதவண்ணம் கண் சிமிட்டினான். சசிக்கு வியர்த்து விட்டது.. பக்கத்தில் அத்தையும், மாமாவும் இருக்கிறார்கள் என்ற நினைவில் அவசரம் அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

'கள்ளன்..'

ஓரக் கண்ணால் அந்தக் கள்வனைப் பார்த்தபோது அவன் நமட்டுச் சிரிப்பைச் சிந்திக் கொண்டிருந்தான்..

"உன் கல்யாண விசயத்தில அங்குசாமி கவனமாக இருப்பான்னு எங்களுக்குத் தெரியும்.. கோர்ட்டுக்கு பயந்து உன்னைப் படிக்க விட்டவனுக்கு நீ புத்திசாலித்தனமா படிச்சு வேலை தேடிக்கிட்டது பெருத்த அதிர்ச்சியா இருந்தது.. உன்னைப் போல படிச்சு வேலை பார்க்கிற ஒருத்தன் உன்னைப் பெண் கேட்டு வந்திட்டா என்ன செய்கிறதுன்னு யோசிக்க ஆரம்பிச்சுட்டான்.. படிச்சவன் சும்மா இருக்க மாட்டான்.. உன்னோட சொத்து நிலவரங்களைப் பத்தி தூண்டித் துருவி விசாரிக்க ஆரம்பிச்சிருவான்.. அதுக்கு விடக் கூடாதுன்னு அங்குசாமி

நினைச்சான்.. அநாதைக் கழுதைக்கு சோறு போட்டு வளர்த்தேன்.. அந்த நன்றிக் கடனைக் கழிக்க நான் கை நீட்டற மாப்பிள்ளைக்கு அவ கழுத்தை நீட்டித்தான் ஆகனும்னு அவனுக்கு நெருக்கமானவங்ககிட்ட அவன் அடிக்கடி சொல்லுவானாம்.."

'நான் அனாதைக் கழுதையா..?' சசிக்கு அழுகை வந்துவிட்டது..

"இப்ப எதுக்காக அழுகற..?" கருணாகரன் கண்டித்தான்..

"அவன் சொல்லிட்டா நீ அநாதையாகிருவியா..? உனக்காக ஊர், உறவை மறந்து காரமங்களத்தில புதுப் பணக்காரனா அவதாரமெடுத்தேனே.. நான் உன் கண்ணுக்குத் தெரியலையா..? அதுக்காக என்னை அனுப்பி வைத்த என் அப்பாம்மா உன் கண்ணுக்குத் தெரியலையா..? இல்லை.. தம்பிக்காகன்னு என் அக்கா தன் புருசனோட காரமங்களத்தில எனக்குத் துணையா இருக்க வந்துச்சே.. அது உன் கண்ணுக்குத் தெரியலையா..? ஆள், அம்பு, படைபலம்ன்னு நீ ஸ்ட்ராங்கான உறவோடு இருக்கிற ஆளுடி.. அவன்தான் அநாதை.."

'ஆமாமில்ல..' சசிரேகாவின் அழுகை நின்றுவிட்டது.

"எங்களுக்கு என்ன செய்கிறதுன்னு தெரியலை.." தயாளன் தொடர்ந்தான்..

"கருணா பெண் கேட்டா நிச்சயமா அங்குச்சாமி சரின்னு சொல்லி உன்னைக் கட்டிக் கொடுத்திர மாட்டான்.. படிச்ச மாப்பிள்ளைக்கே பயப்படறவன்.. கருணாவைப் போல படிப்பும் பணமும் சேர்ந்த புதுப்பணக்காரனுக்கு உன்னைக் கட்டிக் கொடுக்க எப்படிச் சம்மதிப்பான்..?"

'சம்மதிக்கத்தான் மாட்டார்..' சசிரேகா தலையை அசைத்தாள்..

"இதுக்கு இடையில் உன்கூட வேலை பார்த்த ஒருவன் உன்னைப் பெண் கேட்டு வந்திட்டான் போல.."

'பிரவினைச் சொல்கிறார்..'

சசி கருணாகரனைப் பார்த்தாள்.. அவன் இமை மூடித்திறந்து ஆமாம் என்பதைப் போல சமிக்ஞை செய்தான்..

"அங்குசாமி அலறிட்டான்.. அவசரமாக உனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சான்.. அப்பத்தான் அங்குசாமியோட ஒன்னுவிட்ட மச்சினனான பொன்னுசாமி உன்னைப் பொண்ணு கேட்டிருக்கான்.."

"அவனா..?" சசியின் விழிகள் பயத்தில் மிரண்டு விழித்தன..

அந்தப் பொன்னுச்சாமி மழைக்குக்கூட பள்ளிக் கூடத்தின் பக்கம் ஒதுங்கி அறியாதவன்.. குடி, குட்டியென்று அனைத்துப் பழக்கங்களும் உள்ளவன்.. குடியிருக்க ஓர் கூரை வீடு மட்டுமே உண்டு.. அதுவும் காற்றடித்தால் பறந்து விடும்.. பெருங்கொண்ட ஆள்களின் கைத்தடியாக வேலை செய்து.. கிடைக்கும் பணத்தைக் குடித்து கும்மாளமிட்டு அழிப்பவன்..

அவன் பெண் கேட்டதைக் கேட்டுக் கொண்டு அங்குசாமி பெரியப்பா சும்மா இருந்தாரா..?

"சரின்னு சொல்லிட்டானாம் அங்குசாமி.." என்றார் தயாளன்..

"என்னது..?" சசி நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்..

விடிந்தால் திருமணம் என்று அவளுக்குப் போன் வந்து புறப்பட்டு வந்தாளே.. காத்திருந்த மண மேடையில் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியது பொன்னுசாமியாக இருந்திருந்தால் அவள் என்னவாகி இருப்பாள்..?

"மாமா.." சசி மயக்கம் போட்டு விட்டாள்..

"சசி.. சசி.."

அவள் முகத்தில் தண்ணீரை அடித்து எழுப்பி உட்கார வைத்தார்கள்..

"அம்மாடி..! அந்தக் கதிக்கு ஆளாக விட்டிரு வேனாம்மா..? உன் மாமன் மகன் உனக்காகத்தானே காரமங்களத்தில காலை ஊண்டியிருக்கான்..? அங்குசாமியை கருணா கண்காணிச்சுக் கிட்டிருந்தான்.. பொன்னுச்சாமிக்கு உன்னைக் கட்டிக்கொடுக்கப் போகிறதா அங்குசாமி சொல்லிக்கிட்டு அலையறதைக் கேள்விப் பட்டதும் அங்குசாமியை மடக்கிட்டான்.."

'அதுக்காகத்தான் நாய்க்கு எழும்பைத் தூக்கிப் போடுவதைப் போல.. ஏற்காட்டு வீட்டை அங்குசாமி பெரியப்பாவுக்கு தூக்கிப் போட்டாரா..?' நன்றியுடன் கணவனை பார்த்தாள் சசிரேகா.. கருணாகரனின் கண்கள் மின்னின..

"ஏற்காட்டு வீட்டில எங்களுக்கு ஒரு பத்திரம் கிடைச்சிருந்தது.. அந்தப் பத்திரத்தில அன்னவாசலிலே இருக்கிற பூர்விக நிலங்களில அங்குசாமியோட பங்கு மொத்தத்தையும் ரங்கசாமி பேரில அவன் கிரயம் பண்ணிக் கொடுத்துட்டதா பதிவாகியிருந்தது.. அந்தக் கிரயப் பத்திரத்தத் தேடி அவன் ஏற்காட்டு வீட்டுக்கு வந்தானாம்.. வீட்டைத் தான் வாடகைக்கு விட்டாச்சே.. குடியிருந்தவங்க வீட்டில எந்தப் பத்திரத்தையும் பார்க்கலைன்னு சொல்லிட்டாங்களாம்.. அந்தப் பத்திரம் எங்க கையில இருக்குன்னு அவனுக்குத் தெரியாது.. எங்கேயோ தொலைஞ்சிருச்சு போலன்னு நிம்மதியா அன்னவாசலுக்கு திரும்பிட்டான்.. கருணா அந்தப் பத்திரத்தோட அவன் முன்னால போயி நின்னதும் ஆடிப் போயிட்டானாம்.. அன்னவாசல் சொத்து அவனுக்கு நிலைக்கனும்னா உன்னைக் கருணாவுக்கு கட்டிக் கொடுக்கனும்னு கருணா கண்டிசன் போட்டிருக்கான்.. அங்குசாமி சரின்னு சொல்லி உன்னை கருணாவுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டான்.." தயாளன் கதை சொல்லி முடித்தார்..

"இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்..?" அப்போதும் பயம் அகலாமல் மிரண்டு விழித்தாள் சசிரேகா..

"ம்ம்ம்.. உன்னை வீடு புகுந்து தூக்கிட்டு வந்து தாலி கட்டியிருப்பேண்டி.. போதுமா..?"

கருணாகரன் அதட்டியதும் தயாளனும், கயல்விழியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.. சசியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.. உயிர்ப்பு நிரம்பிய அந்த வீட்டையும்.. அந்தச் சூழலையும் அவள் நேசித்தாள்.. அந்த வீட்டின் மருமகள் அவள்.. அதைவிட அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

"அன்னவாசல் சொத்தைப் பற்றி என்னைக்குமே நான் நினைச்சதில்லை மாமா.. ஏற்காடு வீடு..? அது அம்மாவும், அப்பாவும் வாழ்ந்த வீடாச்சே.." சசியின் குரல் தழதழத்தது.

"வீடில்லம்மா.. கோவில்..!" உருக்கமாக சொன்னார் தயாளன்..

"என்னைக் காப்பாத்தறதுக்காக அந்த வீட்டை நாம பறிகொடுக்கப் போகிறோமே மாமா.. அதான் கஷ்டமா இருக்கு.."

"பறிகொடுக்கப் போகிறோமா..? யார் சொன்னது..?" கம்பீரமாக கேட்டான் கருணாகரன்..

சசி புரியாமல் விழித்தாள்.. தயாளன் மீசையை வருடியபடி மர்மமாக சிரித்தார்.. கயல்விழி கனிவுடன் மருமகளை அணைத்துக் கொண்டாள்..

"பொய்மையும் வாய்மையிடத்துன்னு வள்ளுவரே சொல்லியிருக்காரும்மா.."

"அத்தை.."

"கருணா அங்குசாமிகிட்ட பத்திரத்த நீட்டினானே.. அது அசல் பத்திரமில்ல.. போலிப் பத்திரம்.. அதை அங்குசாமிக்கே விட்டுக் கொடுத்திரதாச் சொன்னான்.. அந்த மனுசனும் வாங்கி வைச்சுக்கிட்டாப்புல.. கருணா கொடுத்தது ஒரிஜினல் பத்திரமில்லையே.. இதில கருணாவும் வாக்குத் தவறல.. அங்குசாமிக்கும் அன்னவாசல் சொத்து கிடைக்கல.." கயல்விழி விவரிக்க..

"இது எப்படியிருக்கு..? ஹா..ஹா.." என்று சூப்பர் ஸ்டாரைப் போலக் கேட்டு ஸ்டைல் காட்டினான் கருணாகரன்..

"ஏற்காடு வீடு..?"

"ஏற்காட்டு வீட்டை எழுதி தரச் சொல்லிக் கேட்டான்.. பார்ப்போம்ன்னுதான் சொன்னேன்.. எழுதித் தரச் சொல்றேன்னு சொல்லலையே.. பார்ப்போம்ங்கிறதுக்கு ஆயிரம் அர்த்தம் இருக்குடி.. என் அத்தை மகளைக் கல்யாணம் பண்ணி என் வீட்டில கொண்டு போய் பத்திரமா சேர்த்திட்ட பின்னாலே உன்னை ஒரு கை பார்ப்போம்ங்கிற அர்த்தத்திலதான் அதைச் சொன்னேன்.. அங்குசாமி வேறு விதமாப் புரிஞ்சுக்கிட்டா என்ன பண்றது..? ம்ம்ம்..?"

கருணாகரன் புருவங்களை உயர்த்திய போது சசிக்கு சிரிப்புத்தான் வந்தது.. அவள் மனதிலிருந்த அத்தனை பாரங்களும் இறங்கிப் போனவளாக அவள் மனம் விட்டுச் சிரித்தாள்..

"பாவம் மாமா.. எனக்கு ஏற்காடு வீடு மட்டும் இருந்தாப் போதும்.. அந்த வீட்டில எங்கப்பாம்மாவோட மூச்சுக்காற்று நிறைஞ்சிருக்கு.. அன்னவாசல் சொத்து வேணாம்.. அதை அங்குசாமி பெரியப்பாவுக்கே கொடுத்துருங்க.." என்றாள் சசிரேகா..

"ஊஹீம்.. அது சரிவராது.. அன்னவாசல் சொத்து மொத்தத்தையும் உன் அப்பா பெயருக்கு கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்து அறுபது லட்சரூபாய் பணத்தைக் கொள்ளையடிச்சதைப் போலப் பிடுங்கிக்கிட்டுப் போயிருக்கான் அந்த அங்குசாமி.. அந்தப் பணத்தில காரமங்களத்தில அவன் வாங்கிப் போட்டிருக்கிற வீட்டோட மதிப்பு இப்ப மூணுகோடி ரூபாயைத் தாண்டுதாம்.. அந்த வீட்டோட மதிப்புல ஆறுல ஒருபங்கு கூட அன்னவாசல் சொத்துக்கு வராது.. அவன் ஒன்னும் ரோட்டில இல்லைம்மா.. காரமங்களத்தில இருக்கிற வீட்டை வித்தா அவன் கோடிஸ்வரன்.. அந்த வீட்டை வாங்கினது அவனோட சொந்தப் பணத்தில இல்லம்மா.. உன் அப்பா வன்பாடு பட்டுச் சம்பாதிச்ச பணத்தில வாங்கினது..

ஏமாறுகிறதுக்கும் ஒர் அளவு இருக்கனும்.. அவ்வளவு செய்த தம்பியோட மகளை தன் வீட்டில அகதியைப் போல வாழ வைத்தவனுக்குப் பாவம் பார்க்கக் கூடாது.. அதை உன் அப்பாவோட ஆன்மாவும் ஏற்றுக்காது.. உன் அப்பாவோட சொத்தை நீதான் ஆண்டு அனுபவிக்கனும் மருமகளே..! அப்பத்தான் உன் அப்பாவோட ஆத்மா சாந்தியடையும்.."

தயாளன் சொல்லச் சொல்ல.. அது சரியென்றே சசிரேகாவின் மனதுக்குப் பட்டது..

"இத்தனை நாளும் காற்றில் கரைஞ்சு நின்னு நீ படற பாட்டைப் பார்த்து உன் அப்பாம்மாவோட ஆத்மாக்கள் எப்படியெல்லாம் துடிதுடித்ததோ.. கூடப்பிறந்த அண்ணனை நம்பின உங்கப்பாவுக்கு உன்னோட பெரியப்பா துரோகம் பண்ணிட்டான்.. அவனுக்குப் போய் சொத்தை விட்டுக் கொடுக்கிறதா..? அதை உன் அப்பா ஏத்துக்க மாட்டார்ம்மா..?"

சசிரேகாவின் மனதில் உறுதி வந்தது.. அவளும் கருணாகரனும் ஆத்தூரில் ஒரு வாரம் தங்கியிருந்து விட்டு காரமங்களத்திற்கு கிளம்பினார்கள்..

"நீங்க முன்னாடி போங்க.. நாங்க பின்னாடியே வர்றோம்.." என்று சொல்லி அனுப்பி வைத்தார் தயாளன்..

சசிரேகாவையும் கருணாகரனையும் மறுவீட்டு விருந்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று அங்குசாமியும் பானுகீதாவும் காரமங்களத்திற்கு வந்து நின்றார்கள்.. அந்தச் சாக்கில் ஏற்காட்டு வீட்டை சசியிடமிருந்து எழுதி வாங்கி விட வேண்டுமென்பது அவர்களின் திட்டம்.. அதை கருணாகரனுக்கும் அறிவித்திருந்தார்கள்..

"அதுக்கென்ன..? செய்திட்டாப் போச்சு.. நீங்க அன்னவாசலில இருக்கிற பெரிய மனுசங்களைக் கூப்பிட்டுக்கிட்டு வாங்க.. நாங்க பொண்ணு வீட்டுக்காரங் களுக்கு காரமங்களத்தில விருந்து வைக்கனும்.. இது எங்க பக்கத்து முறை.." என்று சொல்லியிருந்தான் கருணாகரன்..

அதன்படி மறுவீட்டு விருந்துக்கு அழைக்கிறேன் பேர்வழியென்று கருணாகரனின் வீட்டு விருந்தை உண்ண அன்னவாசலில் இருந்த பெரிய மனிதர்களை அழைத்து வந்திருந்தார் அங்குசாமி.. விருந்தில் காரமங்களத்தின் பெரிய மனிதர்களும் கலந்து கொண்டார்கள்.. விருந்து முடிந்த பின்னால் மறுவீட்டு விருந்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது..

"அது எங்க வீடாச்சே.. அங்கேயா மறுவீட்டு விருந்தைக் கொடுக்கப் போறிங்க.." என்று நிதானமாக கேட்டு வைத்தான் கருணாகரன்..

"என்னது..?" அங்குசாமி அலறினார்..

கருணாகரன் பத்திரத்தைத் தூக்கிப் போட்டான்.. அது ஒரிஜினல் பத்திரம்.. அதில் தெள்ளத் தெளிவாக அன்னவாசலின் வீடு முதற்கொண்டு அனைத்துச் சொத்திலும் அங்குசாமிக்கு இருந்த பங்கை ரங்கசாமிக்கு கிரயம் பண்ணிக் கொடுத்திருந்தார் அங்குசாமி..

"அன்னவாசலின் பெரிய மனசங்க இதைப் படிச்சுப் பாருங்க.. எல்லாச் சொத்தையும் என் மாமனாருக்கு இவர் வித்திட்டார்.. இப்ப அன்னவாசல் சொத்து முழுமைக்கும் சொந்தக்காரி என் பெண்டாட்டிதான்.. இவருக்கு உரிமையில்லாத வீட்டில இவர் மறுவீட்டு விருந்தைக் கொடுத்தா என்னோட அப்பா அதை ஏத்துக்க மாட்டார்.." என்றான் கருணாகரன்..

பத்திரத்தைப் படித்துப் பார்த்த காரமங்களத்தின் பெரிய மனிதர்களும்.. அன்னவாசலின் பெரிய மனிதர்களும்.. ஒரு மனதாக கருணாகரன் சொல்வதை ஏற்றுக் கொண்டார்கள்..

"இதென்னப்பா அங்கு..? அத்தனை சொத்துக் களையும் உன் தம்பிக்கு கிரயம் பண்ணிக் கொடுத்துட்டு அதைப்பத்தி மூச்சே விடாம இத்தனை நாளா இருந்திருக்கயே..? உனக்கு உரிமை இல்லாத சொத்தையா இத்தனை வருசமா சொந்தம் கொண்டாடியிருக்க..?"

அங்குசாமியின் தகிடுதத்தங்களை அறிந்த இரண்டு ஊர்களின் பெரிய மனிதர்களும் கேள்வி கேட்ட போது அவர் முகத்தில் ஈயாடவில்லை..

"உங்க அப்பா ஃபாரின்ல இருந்து வந்திட்டாரா..?" ஒருவர் விசாரித்தார்..

"இல்லைங்க.. பக்கத்தில இருக்கிற ஆத்தூரில இருந்துதான் வந்திருக்கார்.." அமர்த்தலாகச் சொல்லி விட்டு..

"அப்பா.." என்று அழைத்தான் கருணாகரன்..

"வணக்கம்.."

கை குவித்தபடி வந்த தயாளனைக் கண்டதும் அங்குசாமியின் முகம் வெளுத்து விட்டது..

"நீ..நீ..நீ.." கருணாகரனைப் பார்த்து தந்தியடித்தார்.

"நான் தயாளனின் மகன் கருணாகரன்.. சசிரேகாவின் தாய்மாமனின் மகன்.. என்னிடம்தான் நீங்க சசிரேகாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் பேரம் பேசினீங்க.."

அங்கிருந்தவர்களின் முன்னால் அங்குசாமி போட்ட நிபந்தனைகளை பிட்டுப்பிட்டு வைத்தான் கருணாகரன்.. வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏறியதில் மென்று விழுங்கிய அங்குசாமி..

"நீ ஏற்காட்டு வீட்டை எழுதித் தரச் சொல்றேன்னு ஒப்புக்கிட்டு இப்ப ஏமாத்துகிறவன்தானே.." என்று பாய்ந்தார்..

"இல்லவே இல்லை.. ஏற்காட்டு வீட்டை எழுதி வைக்க சசிகிட்டச் சொல்லச் சொல்லி நீங்க கேட்டுக் கிட்டிங்க.. பார்ப்போம்ன்னுதான் நான் சொன்னேன்.. நான் சொன்ன பார்ப்போம்ங்கிறதுக்கான அர்த்தம் இதுதான்.." என்றான் கருணாகரன்..

"போலிப் பத்திரத்தக் கொடுத்து ஏமாத்தினதுக்கு என்ன சொல்லப் போற..?"

"பத்திரத்தக் கொடுத்திடறேன்னு சொன்னேன்.. கொடுத்துட்டேன்.. ஒரிஜினல் பத்திரத்தைக் கொடுத்திட றேன்னு சொல்லலையே.. கையில வாங்கின பத்திரம் ஒரிஜினலா இல்லை அசலான்னு நீங்கள்ல செக் பண்ணியிருக்கனும்..?"

அதற்கு மேலும் கேள்வி கேட்க முடியாமல் அடங்கிப் போனாலும் அன்னவாசல் சொத்தையாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று மல்லுக்கட்டினார் அங்குசாமி.

"இத்தனை நாளா ஆண்டு அனுபவிச்ச பூமிய விட்டுப் போன்னு சொன்னா எப்படிப் போறது..?"

"காலிருக்கில்ல..? நடந்து போறது.."

"அது எங்கப்பாவோட பூர்விகச் சொத்து.."

"உங்க ஒருத்தருக்கு மட்டும் உடந்தைப்பட்ட சொத்தில்ல.. உங்க தம்பிக்கும் உடந்தைப் பட்ட சொத்துதான் அது.. உங்க பங்கை உங்க தம்பிக்கு கிரயம் பண்ணிக் கொடுத்தது நீங்கதான்.."

"எல்லாத்தையும் பிடுங்கிக்கிட்டா வயதுக்கு வந்த இரண்டு பெண்பிள்ளைகளோடயும் பெண்டாட்டியோடயும் நடுத்தெருவில நிற்கிறதா..?"

"ஏன் நடுத்தெருவில நிற்கனும்..? காரமங்களத்தில வாங்கிப் போட்டிருக்கிற வீட்டுக்குப் போக வேண்டியது தானே..? அன்னவாசல் சொத்தை வித்து வந்த அறுபது லட்ச ரூபாயில நீங்க வாங்கிப் போட்ட வீட்டோட மதிப்பு இப்ப மூணுகோடி ரூபாயாமே.."

கருணாகரன் போட்டு உடைத்ததில் வாயை மூடிக் கொண்டு ஓடி விட்டார் அங்குசாமி.. அடுத்த சில நாள்களில் அவர் அன்னவாசலை விட்டு வெளியேறி வேறு ஊருக்கு குடி பெயர்ந்து விட்டதாக காற்றில் தவழ்ந்து வந்த செய்தி சொன்னது..

"காரமங்களத்து வீட்டை வித்து வந்த பணத்தில அங்கே ஒன்னுக்கு நாலா வீடுகளை வாங்கிப் போட்டிருக் காராம்..

பேங்கில வேற பணம் போட்டு வைச்சிருக்காராம்.. வட்டிப்பணம், வாடகைப் பணம்ன்னு கொகுசாத்தான் வாழறாராம்.. ம்ம்ம்.. எங்கே போனாலும் அங்குசாமிக்குன்னு ஒரு காத்து காத்திருந்து அடிக்கத்தான் செய்யுது.." என்று வியந்து போனான் கருணாகரன்..

குடும்பத்துடன் ஏற்காட்டு வீட்டிற்குப் போனாள் சசிரேகா.. வீட்டின் ஒவ்வொரு அங்கலத்திலும் ஒளிந்திருந்த கதைகளை அவள் சொல்லச் சொல்ல கண்களில் நீர் மல்கக் கேட்டுக் கொண்டார் தயாளன்..

எந்த அன்னவாசல் வீட்டில் அகதியாக சசிரேகா வளர்ந்தாளோ.. அந்த அன்னவாசல் வீட்டின் உரிமைக் காரியாக மகாராணியாக ஆனாள்.. அங்கும் அவளுக்குச் சொல்வதற்கான கதைகள் இருந்தன.. கருணாகரன் அதட்டி பழைய நினைவுகளின் புதை குழியிலிருந்து அவளை மீட்டான்..

காரமங்களத்திற்கு அவர்கள் திரும்பினார்கள்.. அன்றைய இரவில் புதுப்பொலிவுடன் நெருங்கிய மனைவியை மோகத்துடன் ஆட்கொண்டான் கருணாகரன்.. மனதில் இருந்த அனைத்து சிணுங்கல்களும் மறைந்து விட்ட நிலையில் அந்த மோகத்திற்குதாகத்துடன் ஈடு கொடுத்தாள் சசிரேகா..

மோகத்தைக் கொன்று விடு என்று அதை வெல்ல முடியாதவர்கள்தான் சொல்வார்கள்.. மோகத்தை ஏன் கொல்ல வேண்டும்..? அதை வென்று காட்டி வாழ்ந்து காட்டலாமே..

- முற்றும் -